வெளியீடு 19-2-1988 Issued 19-2-198

2472

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 9, 1987-தொகுதி 38-எண் 1
Thursday, the 9th April 1987-Volume 38-No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat Fort St. George,**
**Madras-600 009**

விலை ரூ.3.00 காசுகள்) [Price Rs-3 00 pai

D
V211,31 N87
N87.38.1

136517
சென்னை-600 009.

உள்ளடக்கம்.

9-4-1987

பக்கங்கள்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் .. .. .. .. iii
Personnel of the Government of Tamil Nadu vi

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. vii—viii

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) .. .. ix—xvii

1. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. 1—43

2. தகவல் கோரல்—

ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது குறித்து .. 43—44

3. கவன ஈர்ப்பு—

(அ) செங்கற்பட்டு கூட்டுறவு வங்கியில் நடந்துள்ள மோசடி .. .. .. 44—49

(ஆ) வேதாரண்யம் பகுதியில் உப்பு விலை வீழ்ச்சியால் பாதிப்பு .. .. 49—51

(இ) கோயம்புத்தூரிலுள்ள வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியர்களின் கோரிக்கைகள் .. .. .. .. 51—55

(ஈ) கோட்டூர்—நந்தனம் இணைப்புப் பால வேலைகள் .. .. .. 55—58

(உ) சேலம் மாவட்டம் காடையாம்பட்டி ஒன்றியத்திலுள்ள சில கிராமங்களுக்கு மின்கம்பிகள் இழுத்தல் .. .. 59—62

| | பக்கங்கள் |
|---|---|
| 4. வரவு-செலவுத் திட்டம், 1987–88, வாக்கெடுப்பு — (தொடர்ச்சி) | |
| கோரிக்கை எண் : 35—நுகர் பொருள் வழங்கல் | 62—147 |
| மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் .. | |
| *திரு. ஆர். எஸ். ஆறுமுகம் .. .. | 62—68 |
| திரு. க. நரசிம்மபல்லவன் .. .. | 68—73 |
| திரு. சோ. மா. இராமச்சந்திரன் .. | 73—82 |
| திரு. மு. ஆறுமுகம் .. .. .. | 82—96 |
| திரு. வி. பி. சிந்தன் .. .. .. | 96—107 |
| *திரு. ஏ. தங்கராசு .. .. .. | 107—114 |
| திரு. கே. சுப்பராயன் .. .. .. | 114—121 |
| டாக்டர் கே. சமரசம் .. .. | 121—126 |
| திரு. எஸ். என். இராமசாமி .. .. | 126—130 |
| திரு. வி. தங்கவேலு .. . | 130—137 |
| 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஆவணங்கள் .. . | 147 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

ஆளுநர்—திரு. சுந்தர்லால் குரானா. 2972

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

| | | |
|---|---|---|
| 1. | முதலமைச்சர் .. .. | மாண்புமிகு டாக்டர் எம். இராமச்சந்திரன். |
| 2. | நிதி அமைச்சர் .. .. | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். |
| 3. | உணவு அமைச்சர் .. | மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். |
| 4. | தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. க. இராசாராம். |
| 5. | மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம். |
| 6. | கல்வி மற்றும் சட்ட அமைச்சர். | மாண்புமிகு திரு. சி. பொன்னையன். |
| 7. | போக்குவரத்துத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. சு. முத்துசாமி. |
| 8. | வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு. |
| 9. | சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன். |
| 10. | மதிய உணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன். |
| 11. | வணிக வரித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. த. இராமசாமி. |
| 12. | ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எ. அருணாசலம். |
| 13. | பொதுப் பணித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே.கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன். |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR—THIRU SUNDAR LAL KHURANA.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | |
|---|---|
| 1. The Chief Minister .. .. | Hon. Dr. M. G. Ramachandran |
| 2. The Minister for Finance .. | Hon. Dr. V. R. Nedunchezhian. |
| 3. The Minister for Food .. | Hon. Thiru S. Ramachandran. |
| 4. The Minister for Industries and Agriculture. | Hon. Thiru K. Rajaram. |
| 5. The Minister for Health .. | Hon. Thiru P. U. Shanmugam. |
| 6. The Minister for Education and Law. | Hon. Thiru C. Ponnaiyan. |
| 7. The Minister for Transport .. | Hon. Thiru S. Muthusamy. |
| 8. The Minister for Housing and Handlooms. | Hon. Thiru S. Thirunavukkarasu. |
| 9. The Minister for Tourism, Prohibition and Electricity. | Hon. Thiru V. V. Swaminathan. |
| 10. The Minister for Noon Meal, Social Welfare and Khadi. | Hon. Thiru R. Soundararajan. |
| 11. The Minister for Commercial Taxes. | Hon. Thiru T. Ramasamy. |
| 12. The Minister for Adi Dravidar Welfare. | Hon. Thiru A. Arunachalam. |
| 13. The Minister for Public Works. | Hon. Thiru K. K. S. S. R. Ramachandran. |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு திரு பி. எச். பாண்டியன்.

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. மா. சின்னராசு.
டாக்டர் கே. சமரசம்.
திரு. கே. குப்புசாமி.
திரு. செ. செம்மலை.
திரு. டி. ஆர். வேங்கடரமணன்.

செயலாளர்.

திரு சி. கு. இராமசாமி.

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்

(அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| பள்ளிகொண்ட பெருமாள், திரு. பெ. பி.ஏ., பி.எல். | கூடுதல் செயலாளர். |
| பத்மநாப நம்பியார், திரு. பி.எம். பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர். |
| சீனிவாசன், திரு சா. பி. எஸ்ஸி. .. | முதுநிலை குழு அலுவலர் |
| சீதாராமன், திரு. வெ. பி.காம்., பி.ஜி.எல். .. | துணைச் செயலாளர். |
| டில்லிதுரை, திரு. த. ப. பி.எஸ்ஸி., பி.எல். .. | துணைச் செயலாளர். |
| ஜானகிராமன், திரு. செ. சு. பி.ஏ., பி.எல். .. | துணைச் செயலாளர். |
| சீனிவாசன், திரு. கு.அ. பி.ஏ. .. | குழு அலுவலர். |
| இராமச்சந்திரன், திரு. ஆர்.கே. பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| கனகசபாபதி, திரு. பெ.ச. பி.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர். |
| கேசவராம், திரு. எஸ். .. பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| சந்திரசேகரன், திரு. ஆர். பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி. பி.எஸ்ஸி., பி.எல். .. | சார்புச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ. பி.ஏ., பி.ஜி. எல். .. | சார்புச் செயலாளர். |
| தியாகராஜன், திரு. கே. பி.ஏ., பி. எல். .. | சார்புச் செயலாளர். |
| பாலகிருஷ்ணன், திரு. பா. பி.காம். .. | சார்புச் செயலாளர். |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே. பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| ஜான், திரு. வ. சா. பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |

| | | |
|---|---|---|
| ஜேக்கப் ஆர்தர், திரு. டி. பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர். |
| ஜோசப், திரு. மா. கு. பி.ஏ. | .. | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| சுவாமிநாதன், திரு. ச. எம்.ஏ. | .. | தலைமை நிருபர் (குழுக்கள்) |
| நம்பி ஐயங்கார், திரு. எஸ். | .. | தலைமை நிருபர் (பேரவை) |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி)

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர் (2) |
|---|---|---|
| **அ** | | |
| 1 அண்ணாதாசன், திரு. எம். | .. | திருவரம்பூர். |
| 2 அப்துல் சமத், திரு. ஆ. கா. அ. | | திருவல்லிக்கேணி. |
| 3 அப்துல் மஜீத், திரு. எச். | .. | வாணியம்பாடி. |
| 4 அரங்கநாயகம், திரு. செ. | .. | தொண்டாமுத்தூர். |
| 5 அரிக்குமார், திரு. இரா. | .. | பேரணமல்லூர். |
| 6 அருணாசலம், திரு. இரா. | .. | நாமக்கல் (செ. வ.). |
| 7 அருணாசலம், திரு. எ. | .. | வரகூர் (செ.வ.). |
| 8 அன்பழகன், திரு. கே. | .. | ஓமலூர். |
| 9 அன்பழகன், திரு. தி. | .. | நாட்ராம்பள்ளி. |
| 10 அன்பழகன், திரு. பொ. | .. | இளையான்குடி. |
| **ஆ** | | |
| 11 ஆண்டி அம்பலம், திரு. மெ. | .. | நத்தம். |
| 12 ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி, திரு. | | ஆண்டிமடம். |
| 13 ஆறுமுகம், திரு. அ. | .. | வந்தவாசி. |
| 14 ஆறுமுகம், திரு. எச். ஜி. | .. | பென்னாகரம். |
| 15 ஆறுமுகம், திரு. ஆர். எஸ். | .. | ஒட்டபிடாரம் (செ.வ.). |
| 16 ஆறுமுகம், திரு. எ.எஸ்.ஏ. | .. | விருதுநகர். |
| 17 ஆறுமுகம், திரு. மு. | .. | சேலம்-2. |
| 18 ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜி. | .. | பூந்தமல்லி. |
| 19 ஆனந்தன், திரு. மு. | .. | உளுந்தூர்பேட்டை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும் (1) | | தொகுதியின் பெயர் (2) |
|---|---|---|
| | இ | |
| 20 இரகுபதி, திரு. கோ. | .. | காட்பாடி. |
| 21 இரத்தினம், திரு. எம்.வி. | .. | பொள்ளாச்சி. |
| 22 இரத்தினவேலு, திரு. செ. | .. | முசிறி. |
| 23 இராசமாணிக்கம், திரு. ஆர். | | அரூர் (செ.வ.) |
| 24 இராசமாணிக்கம், திரு. எல்ல. | | தாம்பரம். |
| 25 இராசரத்தினம், திரு. எப்.எம். | | கொளச்சல். |
| 26 இராசரத்தினம், திரு. எம். | .. | விழுப்புரம். |
| 27 இராசாங்கம், திரு. மு. | .. | திருவிடைமருதூர். |
| 28 இராசாம்பாள், திருமதி தா. | | தலைவாசல் (செ.வ.). |
| 29 இராசாராம், திரு. க. | .. | மனமரத்துப்பட்டி. |
| 30 இராசாராமன், திரு. எஸ். | .. | பாபநாசம். |
| 31 இராசேந்திரன், திரு. எஸ்.என். | | தூத்துக்குடி. |
| 32 இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி.. | .. | ஆண்டிப்பட்டி. |
| 33 இராமச்சந்திரன், திரு. கே.எஸ்.எம். | .. | போடிநாயக்கனூர். |
| 34 இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | .. | சாத்தூர். |
| 35 இராமச்சந்திரன், திரு. ச. | .. | பண்ருட்டி. |
| 36 இராமச்சந்திரன், திரு. சோ.மா. | | அண்ணாநகர் |
| 37 இராமச்சந்திரன், திரு. ப. த. | | பட்டுக்கோட்டை. |
| 38 இராமசாமி, திரு. எஸ்.என். | .. | சாத்தான்குளம். |
| 39 இராமசாமி, திரு. த. | .. | இராமநாதபுரம். |
| 40 இராமலிங்கம், டாக்டர் கே. பி. | | ராசிபுரம். |
| 41 இளங்கோவன், திரு. ஈ.வே.கி.ச. | | சத்தியமங்கலம். |
| | ஈ | |
| 42 ஈஸ்வரன், திரு. ஆர். | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.). |
| | உ | |
| 43 உச்சி, திரு. கே. | .. | கூடலூர். |
| 44 உத்திராபதி, திரு. பொ. | .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| | எ | |
| 45 எத்திராசன், திரு. கி. | .. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | க | |
| 46 கணபதி, திரு. கே. ஆர் | .. | சிதம்பரம். |
| 47 கதிர்வேலு, திரு. மா. | .. | ராணிப்பேட்டை. |
| 48 கந்தசாமி, திரு. கா. வே. | .. | கிணத்துக்கடவு. |
| 49 கந்தசாமி, திரு. பி. .. | .. | பொங்கலூர். |
| 50 கல்லன், திரு. கே. .. | .. | உதகமண்டலம். |
| 51 கலிதீர்த்தான், திரு. சோ. | .. | சங்கராபுரம். |
| 52 காளிமுத்து, டாக்டர் கா. | .. | மதுரை கிழக்கு. |
| 53 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | .. | ஆயிரம் விளக்கு. |
| 54 கிருஷ்ணசாமி, திரு. வி. இரா. | | அணைக்கட்டு. |
| 55 கிருஷ்ணமூர்த்தி, திரு. சி. | .. | கும்பகோணம். |
| 56 கிருஷ்ணராஜ், திரு. ஜி. | .. | சேலம்-1. |
| 57 குப்புசாமி, திரு. கே. .. | .. | ஒட்டன்சத்திரம். |
| 58 குப்புசாமி, திரு. வே. | .. | செய்யாறு. |
| 59 குமரகுருபர ராமநாதன், திரு. ச. | | விளாத்திகுளம். |
| 60 குமரி அனந்தன், திரு. | .. | ராதாபுரம். |
| 61 குமாரதாஸ், டாக்டர் தே. | .. | கிள்ளியூர். |
| 62 கோமதி சீனிவாசன், திருமதி | .. | வலங்கைமான் (செ.வ.). |
| 63 கோவிந்தசாமி, திரு. ஆர். | .. | குடியாத்தம். |
| 64 கோவிந்தசாமி, திரு. ச. | .. | எடப்பாடி. |
| 65 கோவேந்தன், திரு. எம். ஆர்... | | பேராவூரணி. |
| | ச | |
| 66 சங்கரலிங்கம், திரு. ச. | .. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.). |
| 67 சண்முகம், திரு. இரா. | .. | திருத்தணி. |
| 68 சண்முகம், திரு. என். | .. | சோளிங்கர். |
| 69 சண்முகம், திரு. ப. உ. | .. | மேல்மலையனூர். |
| 70 சண்முகையா பாண்டியன், திரு. எம். | | ஆலங்குளம். |
| 71 சந்திரசேகரன், திரு. ஆ. | .. | சோழவந்தான். |
| 72 சந்திரசேகர், திரு. மு. | .. | மூலனூர். |
| 73 சம்சுல் ஆலம், திரு. வி. எஸ். டி. | | பாளையங்கோட்டை. |
| 74 சமரசம், டாக்டர் கே. | .. | காவேரிப்பட்டினம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| | ச—தொடர்ச்சி |
| 75 சரோஜா திருமதி. இரா. .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.). |
| 76 சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம் (செ.வ.). |
| 77 சித்தன், திரு. என்.எஸ்.வி. .. | திருமங்கலம். |
| 78 சிந்தன், திரு. வி.பி. .. .. | வில்லிவாக்கம். |
| 79 சிவக்குமார், திரு. ஆ. .. | சமயநல்லூர் (செ.வ.). |
| 80 சிவக்குமார், திரு. எம். .. | கூனூர் (செ.வ.). |
| 81 சிவஞானம், திரு. ந. .. .. | திருவோணம். |
| 82 சிவப்பிரகாசம், திரு. சி. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.). |
| 83 சிவராமன், திரு. எஸ். .. | சின்னசேலம். |
| 84 சிவராஜ், திரு. சு. .. .. | ரிஷிவந்தியம். |
| 85 சின்னக்குழந்தை, திரு. மு. .. | ஆரணி. |
| 86 சின்னசாமி, திரு. வே. கு. .. | பவானிசாகர். |
| 87 சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி. |
| 88 சின்னராசு, திரு. மா. .. | மேட்டுப்பாளையம். |
| 89 சுந்தரதாஸ், திரு. மா. .. | விளவன்கோடு. |
| 90 சுப்பராயன், திரு. கே. .. | திருப்பூர். |
| 91 சுப்பிரமணிய ஆதித்தன், திரு. எஸ். ஆர். | திருச்செந்தூர். |
| 92 சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை. |
| 93 சுப்பிரமணியன், திரு. வி. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 94 சுப்புராயர், திரு. சி. .. .. | கம்பம். |
| 95 சுவாமிநாதன், திரு. வி. வி. .. | புவனகிரி. |
| 96 செங்காளியப்பன், திரு. ஆர். | சிங்காநல்லூர். |
| 97 செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிபாளையம். |
| 98 செங்கோட்டையன், திரு. பெ. | கபிலர்மலை. |
| 99 செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம். |
| 100 செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.). |
| 101 செல்லப்பா, திரு. வி. கோ. .. | கடலூர். |
| 102 சேகர், திரு. கே. பி. கே. .. | பொன்னேரி (செ.வ.). |
| 103 சொர்ணலிங்கம், திரு. கா. .. | திருவாடானை. |
| 104 சோலைராசு, திரு. க. .. | மருங்காபுரி. |
| 105 சௌந்திரராஜன், திரு. ஆர். .. | ஸ்ரீரங்கம். |
| 106 சௌரிராஜன், டாக்டர் கே. | தியாகராயநகர். |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| | ஞ |
| 107 ஞானசுந்தரம், திரு. சா. .. | மன்னார்குடி. |
| | ட |
| 108 டேனியல்ராஜ், திரு. எஸ். .. | ஸ்ரீவைகுண்டம். |
| | த |
| 109 தங்கமணி, திரு. மு. .. | மாயூரம். |
| 110 தங்கமணி, திரு. கே. எம். .. | திண்டிவனம். |
| 111 தங்கராசு, திரு. ஏ. .. .. | குறிஞ்சிப்பாடி. |
| 112 தங்கராசு, திரு. செ. .. | மங்களூர் (செ.வ.). |
| 113 தங்கவேல்ராஜ், திரு. பி.எம். | கிருஷ்ணராயபுரம் (செ. வ.). |
| 114 தங்கவேலு, திரு. வி. .. | வால்பாறை (செ. வ.). |
| 115 தமிழ்மணி, திரு. .. .. | திருப்போரூர் (செ.வ.). |
| 116 தமிழரசன், திரு. கு. .. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 117 தனபால், திரு. ப. .. | சங்கரி (செ. வ.). |
| 118 தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 119 தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாசலம். |
| 120 திருஞானம், திரு. பி. ஆர். | ஏற்காடு (ஆ.வா.). |
| 121 திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி. |
| 122 திருமலைச்சாமிக் கவுண்டர், திரு. சு. | உடுமலைப்பேட்டை. |
| 123 தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. | மொரப்பூர். |
| 124 தீர்த்தராமன், திரு. ப. .. | பாலக்கோடு. |
| 125 துரை அன்பரசன், திரு. .. | நெல்லிக்குப்பம். |
| 126 துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. | தஞ்சாவூர். |
| 127 துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு. |
| 128 துரைசாமி, திரு. சைதை சா. | சைதாப்பேட்டை. |
| 129 துரைராசு, திரு. எஸ். பி. | காரைக்குடி. |
| 130 துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 131 தெய்வநாயகம், திரு. எ. .. | மதுரை சென்ட்ரல். |
| 132 தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| **ந** | | |
| 133 | நடராசன், திரு. ஆ. | பேரூர். |
| 134 | நரசிம்மபல்லவன், திரு. க. | உத்திரமேரூர். |
| 135 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு. |
| 136 | நல்லமுத்து, டாக்டர் க. | பெரம்பலூர் (செ.வ.). |
| 137 | நல்லுசாமி, திரு. என். | திருச்சிராப்பள்ளி-2. |
| 138 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர். |
| 139 | நாராயணன், திரு. பு. கோ. | பவானி. |
| 140 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | ஆத்தூர். |
| **ப** | | |
| 141 | பஞ்சவர்ணம், திரு. வி. எஸ். | அருப்புக்கோட்டை |
| 142 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 143 | பரமசிவம், திரு. பா. ந. | பல்லடம். |
| 144 | பழனி, திரு. த. | ஆற்காடு. |
| 145 | பழனிச்சாமி, திரு. கா. செ. | காங்கேயம். |
| 146 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர். |
| 147 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி. |
| 148 | பாண்டுரங்கன், திரு. மு. | கலசப்பாக்கம். |
| 149 | பாப்பா சுப்பிரமணியன், திரு. | குத்தாலம். |
| 150 | பாரதி, திரு. ஜி. கே. ஜெ. | திருவொற்றியூர். |
| 151 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.). |
| 152 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி. |
| 153 | பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி. |
| 154 | பாலச்சந்திரன், திரு. வை. | பத்மநாபபுரம். |
| 155 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.). |
| 156 | பாலசுப்பிரமணியன், திரு. எஸ். | அம்பாசமுத்திரம். |
| 157 | பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர் வி. பி. | வேடசந்தூர். |
| 158 | பாலாஜி, திரு. கே. | காஞ்சீபுரம். |
| 159 | பாலுச்சாமி, திரு. ஏ. | பரமக்குடி (செ.வ.). |
| 160 | பாலுசாமி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ.வ.). |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| **ப—தொடர்ச்சி.** | | |
| 161 | பிரணவநாதன், திரு. அ. | கடலாடி. |
| 162 | பிரேம்குமார், திரு. ஆ. | திண்டுக்கல். |
| 163 | புருசோத்தமன், திரு. எஸ். | அரியலூர். |
| 164 | புஷ்பராசு, திரு. த. | திருமயம். |
| 165 | பெரியசாமி, திரு. அ. | தாராபுரம் (செ.வ.). |
| 166 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம். |
| 167 | பெருமாள், திரு. தெ. | கடையநல்லூர். |
| 168 | பெருமாள் பிள்ளை, திரு. கோ. | கன்னியாகுமரி. |
| 169 | பொன் முத்துராமலிங்கம், திரு. | மதுரை (மேற்கு). |
| 170 | பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | பழனி (செ.வ.). |
| 171 | பொன்னுசாமி, டாக்டர் அ. | பெருந்துறை. |
| 172 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு. |
| **ம** | | |
| 173 | மணவாளன், திரு. எஸ். பி. | திருப்பத்தூர். |
| 174 | மணிமாறன், திரு. மா. | நன்னிலம் (செ.வ.). |
| 175 | மலர்மன்னன், திரு. அ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 176 | மனோகரன், திரு. கி. | புரசைவாக்கம். |
| 177 | மனோகரன், திரு. தி. நா. கோ. அ. | திருநாவலூர். |
| 178 | மாசிலாமணி, டாக்டர். ந. | ஜெயங்கொண்டான். |
| 179 | மாதவன், திரு. செ. | திருப்பத்தூர். |
| 180 | மாதையன், திரு. யு. பி. | அந்தியூர் (செ.வ.). |
| 181 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 182 | மாரிமுத்து, திரு. மு. | திருப்பரங்குன்றம். |
| 183 | மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 184 | முகம்மது கனி, திரு. ஜே. | புதுக்கோட்டை. |
| 185 | முகம்மது சலீம், டாக்டர் த. | பெரியகுளம். |
| 186 | முசிறிபுத்தன், திரு. பி. | குளித்தலை. |
| 187 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு. |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987 ஏப்ரல் 9, வியாழக்கிழமை.

பங்குனி 26, அட்சய—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது".

தான் பெற்ற உணவைப் பலரோடும் பகுத்து உண்ணும் பழக்கம் உடையவனைப் பசி என்று கூறப்படும் தீய நோய் அணுகுதல் இல்லை.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### நாகப்பட்டினம், வேதாரண்யம் மற்றும் அரியலூர் பகுதிகளில் பெட்ரோல் ஊற்று.

346—(* வினா எண் 2644) **திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம், வேதாரண்யம், அரியலூர் ஆகிய பகுதிகளில் எரிவாயுக் கமிஷன் சோதனை நடத்தியதில் அப்பகுதியில் பெட்ரோல் ஊற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (ஆ) தமிழ்நாட்டில் எண்ணெய் எரிவாயுக் கமிஷன் நாகப்பட்டினம், வேதாரண்யம், அரியலூர் ஆகிய பகுதிகளில் ஆய்வு நடத்தியதில் பெட்ரோல் ஊற்றுக்கள் காணப் படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

[1987 ஏப்ரல் 9

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம், வேதாரண்யம் அருகே எரிவாயுக் கமிஷன் சோதனை நடத்தி பெட்ரோல் ஊற்றுகள் நிலப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் கடற் பகுதியிலும் பெட்ரோல் ஊற்று இருப்பதாகவும், எரி வாயு இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே, பம்பாய் மாதிரி ஒட்டுமொத்தமாக, குழாய்கள் மூலமாக, பெரிய அளவில் பெட்ரோல் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? எத்தனை கிணறுகள் பெட்ரோல் ஊற்றுக்காகத் தோண்டப்படுகின்றன? அதிகக் கிணறுகள் மேற்படி இடங்களில் தோண்டுவதற்கு மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இந்த எண்ணெய் எரிவாயுக் கமிஷன் பெட்ரோல் கண்டு பிடிப்பதற்காகப் பல்வேறு இடங்களிலே ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறது. அதிலே அந்தப் பகுதியில் 25,000 சதுர கிலோ மீட்டர் கொண்ட கடற்கரைப் பகுதியிலும் 23,000 சதுர கிலோ மீட்டர் கொண்ட தொலைக் கடல் பகுதியிலும் பெட்ரோல் ஆய்வு தற்போது நடத்தப்பட்டு வருகிறது. தற்போது தொலைக் கடலில் 11 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன. மேலும், ஆய்வு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழ்நாட்டு எல்லைப் பகுதியில், நமது நிலத்தில் பெட்ரோல் கிடைப்பதால், எப்படி நிலக்கரி நெய்வேலியில் கிடைக்கும்போது நமக்குப் பங்கு கிடைக்குமோ அதே மாதிரி, இதிலும் அதிக அளவு ஒரு தொகை நமது மாநிலத்திற்குக் கிடைப்பதற்கு மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, பெட்ரோல் மத்திய சர்க்கார் பட்டியலிலே இருக்கிறது. பழுப்பு நிலக்கரி தான் நம்முடைய பட்டியலிலே இருக்கிறது. அதிலே வேண்டுமானால் உரிமை கேட்பதிலே நியாயம் இருக்கலாம். பெட்ரோலை மத்திய அரசு வைத்துக் கொண்டு எல்லோருக்கும் பங்கிட்டுத் தருகிற காரியத்தை அவர்கள்தான் செய்து வருகிறார்கள்.



1987 ஏப்ரல் 9]

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்திற்கு அருகில் பூலாமேடு என்ற கிராமத்தில் பெட்ரோல் ஊற்று கண்டு பிடிக்கப்பட்டு வேலை நடைபெற்று வருவது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா என நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, தற்போது காரைக்கால், கோவில்களப்பால், நரிமணம் ஆகிய இடங்களிலும் பரங்கிப்பேட்டைக்கு அருகிலே உள்ள இடத்திலும் வேலை நடந்து வருகிறது. சிதம்பரத்தைப் பற்றி அம்மையார் அவர்கள் கேட்கிறார்கள். சிதம்பரத்தைப் பற்றிய குறிப்பு தற்போது என்னிடத்திலே இல்லை.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் தாலுகாவிலேதான் அமைச்சர் சொன்ன இந்த 3 பகுதிகளிலும் பரவலாகவே எண்ணெய்க் கிணறுகளை அதிகமாகத் தோண்டு வதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று இன்ஜினீயர்களும் மற்றவர்களும் குறிப்பிடுகிறார்கள். 11 கிணறுகள் தோண்டப் பட்டதில் இப்பொழுது எண்ணெய் வருவதாகத் தெரியவில்லை. எண்ணெய் வருவதுண்டா? எத்தனை கிணறுகளில் எண்ணெய் கிடைக்கிறது? எந்த அளவுக்குக் கிடைக்கிறது? மேலும் இது நம் தமிழ்நாட்டுக்குக் கிடைக்கக் கூடிய பொக்கிஷமாக இருக்கிறது. அது மத்திய அரசினுடைய கண்ட்ரோலில் இருந்தாலுங்கூட, நாமும் அதில் பலன் பெற வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால், இந்த வேலைகள் நடப்பதைப் பற்றி நம் அரசாங்கத்தின் சார்பில் எந்த அமைச்சரும் இதுவரையிலும் போய் பார்க்க வில்லையென்று எனக்கு செய்தி கிடைத்திருக்கிறது. அது உண்மையா? அல்லது, இந்த அமைச்சராவது போய் பார்த்த துண்டா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, நாங்கள் போய் பார்க்கவில்லையென்பது உண்மைதான், அதிலே ஒன்றும் சந்தேகம் கிடையாது. அதிலே மத்திய அரசு ஏறக்குறைய 26 ஆழ் குழாய்க் கிணறுகளைத் தோண்டியிருக் கிறது. அதிலே 18 கிணறுகள் நல்லபடி வந்திருக்கின்றன, நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. அதிலே 12 ஆயிரம் லிட்டர் கச்சா எண்ணெய் எடுக்கப்பட்டு சென்னையில் உள்ள சுத்திகரிப்பு ஆலைக்கு லாரிகள் மூலம் கொண்டுசெல்லப்பட்டு பரிசோதிக்கப்பட்டிருக்கிறது. 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில்

இந்த வேலைகளைச் செய்ய உலக வங்கி நிதியுதவியோடு அதிக மான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறது. அது மட்டுமல்ல, வ.உ.சி. மாவட்டத்தில் திருச்செந்தூர் பகுதியிலே புன்னக்காயல் என்ற இடத்திலே எரிவாயு காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருக் கிறது. விரைவாக அந்தப் பகுதியிலும் ஆய்வுகளை மேற் கொள்ள வேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்தியிருக்கிறது.

**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் பகுதியிலே பொன்னேரியில் இந்திய எரிவாயுக் கமிஷன் ஆராய்ச்சி செய்ததில் பழுப்பு நிலக்கரி தட்டுப்படுவதாகத் தெரிகிறதே அதுபற்றிய தகவல் இந்த அரசிற்கு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி எண்ணெய், எரி வாயுவைப் பற்றியது, பழுப்பு நிலக்கரியைப் பற்றி தகவல் வேண்டு மானால் தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் பல பகுதிகளிலே எரிவாயு, பெட்ரோலியம் கிடைக்கக் கூடிய முறையிலே அதற்கான சோதனைகளை செய்துகொண்டிருக்கிறார்கள். சோதனைகள் மத்திய, மாநில சர்க்கார்களின் கூட்டு முறையில் நடைபெறு கிறதா? அல்லது மத்திய சர்க்கார் தனியாக நடத்துகிறதா? அதிலே ஏதாவது இடர்பாடு இருக்கிறதா? அந்த சோதனைகள் மூலம் கிடைக்கக்கூடிய பொருள்களை மாநில சர்க்காருக்குத் தருவதற்கு ஏதாவது இடையூறு இருக்கிறதா? அந்தப் பொருள்களை மத்திய சர்க்காரே எடுத்துக் கொள்ளுமா? மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும் அதிலே உள்ள உடன்பாடு என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல இடங்களில் எரிவாயு என்று சொல்லக்கூடிய வாயு கிடைக்கிறது என்று தெரிவிக்கப் படுகிறது. எண்ணெய் வளத்தைப் பொறுத்த வரையில் பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் 1957 ஆம் ஆண்டு காவிரி எண்ணெய் வளம்பற்றி பூமி ஆய்வு அதிகாரிகளிடமிருந்து தெரிந்து நாட்டிற்கு அதைத் தெரிவித்தார்கள். அதிலிருந்து இந்த அரசு இந்திய அரசிற்கு எழுதி தமிழகத்திலே இருக்கிற எண்ணெய்



வளத்தை எடுக்கும்படி கேட்டுக்கொண்டே இருக்கிறது. எரிவாயுக் கமிஷன் என்பது மத்திய அரசின் ஆளுகைக்குட் பட்டது. அவர்களே ஆய்வை நடத்துகின்ற உரிமை பெற்றிருக் கிறார்கள். மாநில அரசு அதைப் போய் பார்க்கலாமே தவிர அதிலே ஈடுபடுவதற்கு வழியில்லை.

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதியிலே திருவில்லாடு என்ற ஊரிலே ஒரு பெட்ரோல் ஊற்று அதிவேகமாக வந்து கொண் டிருக்கிறது. நான் அதைப்பற்றி அமைச்சர் அவர்களிடத்தி லேயும் சொல்லியிருக்கிறேன். அந்த இடத்திலே எரிவாயுக் கமிஷன் ஆய்வு செய்ய என்ன நடவடிக்கையை எடுத்திருக் கிறார்கள்?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல் எரிவாயு எங்கெங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் ஆய்வுநடத்த வேண்டுமென்று மத்திய அரசோடு தொடர்புகொண்டிருக்கிறோம். எரிவாயுக் கமிஷனிடத்திலேதான் எங்கெங்கே எரிவாயு இருக் கிறது, எண்ணெய் இருக்கிறது என்று கண்டுபிடிப்பதற்கு இயந்திரங்கள் எல்லாம் இருக்கின்றன. தற்போது ரஷ்யா நாட்டோடு கலந்து பேசி எண்ணெய் வளத்தைக் கண்டுபிடிப்பதில் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

**திரு. வே. இரா. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற எண்ணெய் வளத்தின் அடிப்படையில் நாகப்பட்டினத்திலும் வேதாரண்யத்திலும் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளை அமைப்பதற்கு மத்திய அரசிடம் மாநில அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி, வேதாரண்யம் பகுதிகளிலே எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளை ஏற்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை தமிழக அரசு மத்திய அரசிடம் வைத்து கேட்டுக்கொண்டிருக்கிறது.

[1987 ஏப்ரல் 9

(முற்பகல் 10-10)

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை சம்பந்தமான பிரச்சினையில் ஒரு விளக்கத்தை நான் அமைச்சர் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது இந்திய எரிவாயுக் கமிஷனுடைய ஆராய்ச்சிக்கு உலக வங்கியினுடைய உதவி வேண்டுமென்று மத்திய அரசுக்கு தமிழக அரசு பரிந்துரை செய்திருக்கிறது என்று சொன்னார்கள். இந்திய எரிவாயுக் கமிஷனும் மத்திய அரசும் பல ஆண்டுகளாக எரிவாயு, எண்ணெய் வளக் கண்டுபிடிப்புகளிலே உலக வங்கி போன்ற அமைப்புகள் எந்தவித உதவியும் செய்யாததினாலே நிதியாதாரத்தில் அவர்களுக்குப் பங்கு கொடுக்கக்கூடாது என்ற முடிவை எடுத்துள்ளது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? தெரிந்த பிறகும் கூட, இல்லை, அந்த முடிவை மாற்றவேண்டும் என்பது தான் அமைச்சருடைய கொள்கையா? எண்ணெய் வளங்களைக் கண்டு பிடிக்கப் பல ஆண்டுகளாக மத்திய அரசு எடுத்த முயற்சிகளுக்கு உலக வங்கி, ஐ.எம்.எஃப் போன்ற நிதி நிறுவனங்களும் அமெரிக்காவும் எந்த உதவியும் செய்யவில்லையென்ற காரணத்திற்காக ரஷ்யா, ருமேனியா போன்ற சோஷலிஸ்ட் நாடுகளுடைய உதவியை நாடித்தான் இப்பொழுது இந்த முன்னேற்றத்தைக் காண முடிகிறது. அதற்குப் பிறகு Oil and Natural Gas Commission -ம் மத்திய அரசும் இந்த அமைப்புகளுக்கு உலக வங்கியினுடைய நிதிக்கு இடம் இல்லை, அவர்களுக்குப் பங்கு கொடுக்கக்கூடாது என்று முடிவெடுத்தது அமைச்சருக்குத் தெரியுமா? அமைச்சர் குறிப்பிடும் போது, தமிழக அரசு, மத்திய அரசுக்கு உலக வங்கியினுடைய உதவி வேண்டுமென்று கடிதம் எழுதியதாகக் குறிப்பிட்டார்கள். அந்தத் தொகை எப்படியாவது கிடைக்க வேண்டும் என்கிற காரணத்தால் நீங்கள் எழுதினீர்களா? அல்லது, அந்தக் கொள்கையை மாற்ற வேண்டுமென்பது உங்களுடைய கருத்தா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, நான் கொள்கைப் பிரச்சினைக்குள்ளே போகவில்லை; காரியம் நடக்க வேண்டுமென்பதிலேதான் எங்களுக்கு மிகுந்த அக்கறை இருக்கிறது. ஏன் என்றால், கொள்கைப் பிரச்சினையிலே முடிவெடுக்க வேண்டியது மத்திய அரசுதான். அவர்கள்தான் சில



1987 ஏப்ரல் 9]

வேளைகளில் உலக வங்கியிடமிருந்து கேட்கிறார்கள்; ரஷ்யா போன்ற நாடுகளிடமிருந்து சில வேளைகளில் உதவி கேட்கிறார்கள்; அல்லது ஐக்கிய நாடுகள் அமைப்பு போன்றவற்றிடமிருந்து உதவிகளைக் கேட்கிறார்கள். எங்கெங்கோ உதவிகளைக் கேட்கிறார்கள். அந்த வேலைகள் எல்லாம் அவர்களைச் சார்ந்தது. அதோடு இந்த எண்ணெய் கிடைக்கிற வேலை அவர்களைச் சார்ந்தது. நமக்கிருக்கிற அக்கறை எல்லாம் தமிழ்நாட்டிலே இருக்கிற எண்ணெய் வளம் மேலே வர வேண்டும், அதன் மூலமாகத் தமிழ்நாடு பொருளாதார ரீதியிலே மேம்பாடு அடைய வேண்டுமென்பதுதான்.

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொல்லும்போது, இதுவரையிலே நரிமணத்திலே எண்ணெய் எடுக்கப்பட்டதை மாநில அமைச்சர்கள் யாரும் சென்று பார்க்கவில்லையென்று குறிப்பிட்டார்கள். இனிமேலாவது சென்று பார்ப்பார்களா? இந்தத் தமிழகத்திலே, இதுவரையில் நடைபெற்ற ஆராய்ச்சிகளிலே நரிமணத்திலேதான் எண்ணெய் எடுக்கப்பட்டு தினசரி சென்னைக்கு வருகிறது. அதோடு, அங்கே எரி வாயுவும் வீணாக எரிந்து போகிறது. அதைப் பயன்படுத்துவதற்கான முயற்சியை எடுப்பதோடு, அந்த எண்ணெயை அங்கேயே வைத்து, நாகையில் சுத்திகரிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன், ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நாகப்பட்டினம் அல்லது தூத்துக்குடியிலே நிறுவப்பட வேண்டுமென்கிற கருத்தை மத்திய அரசுக்கு மாநில அரசு தெரிவித்து இருக்கிறது. நான் நரிமணத்தைப் போய் நேரிலே பார்க்கவில்லையே தவிர, அதிலே நடைபெறுகிற வேலைகள் பற்றிய செய்திகளை, அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலமாக நாங்கள் அறிந்து கொண்டுதான் வருகிறோம்.

[1987 ஏப்ரல் 9

**திரு. கே. ஆர். கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் தாலுகா புவனகிரி தொகுதிக்கு அருகிலுள்ள உடையூர் கிராமத்தில் எரிவாயுக் கமிஷனால் கண்டு பிடிக்கப்பட்ட எண்ணெயை ருமேனிய நிபுணர்கள் உதவியுடன் சோதனை செய்து பார்த்ததில் வியாபார ரீதியாக இலாபம் தருவதாகவும் அதற்காக குளோபல் டெண்டர் விட்டதாகவும் சொல்லப்பட்டது; மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களும் அந்த இடத்தைச் சென்று பார்த்திருக்கிறார்கள். ஆகவே மைய அரசிடம் சொல்லி துரிதமாக நடவடிக்கை எடுத்து எண்ணெய் எடுப்பதற்கு மாநில அரசு முன்வருமா? அதோடு எடுக்கின்ற எண்ணெயில் மாநில அரசுக்குப் பங்கு உண்டு என்பதை உறுதிப்படுத்துமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, ஆய்வு நடத்திய இடங்களிலே சில இடங்களிலே எண்ணெய் கிடைக்கிறது. அது எக்கனாமிக்லி வயபிள்—பொருளாதார அடிப்படையில் அந்த எண்ணெய் எடுப்பது லாபகரமாக அமையுமா என்பதையெல்லாம் ஆராய்ச்சி செய்ய வேண்டியிருக்கிறது. ஆராய்ச்சி செய்த பிறகுதான் அந்த இடத்திலேயிருந்து எண்ணெய் எடுக்கிற பணியைத் தொடங்க வேண்டும். எண்ணெய் இருக்கிறது என்றால் எவ்வளவு இருக்கிறது, எத்தனை லிட்டர் இருக்கிறது, எத்தனை ஆண்டு காலத்திற்கு எடுக்க முடியும், இலாபகரமாக எடுக்க முடியுமா என்பதையெல்லாம் ஆராய்ந்த பிறகுதான் அவர்கள் அந்த வேலையிலே இறங்குகிறார்கள். ஆகவே, அந்த இடத்திலே அதிகமாக எண்ணெய் கிடைக்கிறது என்பதைக் கண்டு பிடித்த பிறகு, அதற்கான ஏற்பாடுகளை மைய அரசு செய்யும் என்று மாநில அரசு நம்புகிறது.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் கடலோரப் பகுதியிலே கிடைக்கிற எண்ணெய், குறிப்பாக, நரிமணத்திலே கிடைத்திருக்கிற எண்ணெய் நல்ல தரமான எண்ணெய் என்று பரவலாகச் சொல்லப்படுகிறது. அது பற்றிய விவரம் என்ன என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். சமீபத்திலே, சென்னையிலே பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி அளித்த இந்தியாவிலுள்ள சோவியத் தூதர் அவர்கள் தமிழ் நாட்டில் பெரும் அளவு இருக்கிற எண்ணெய் வளங்களைக் கண்டு பிடிப்பதிலும், சேகரிப்பதிலும் சோவியத் யூனியன்



1987 ஏப்ரல் 9]

தன்னுடைய நுட்ப அறிவைத் தரத் தயாராக இருக்கிறது என்று அறிவித்து இருக்கிறார்கள். எனவே, சோவியத் யூனியனுடைய பசுந்துபட்ட அறிவை தமிழ்நாட்டின் எண்ணெய் வளத்தை மேலும் கண்டறிவதற்குப் பயன்படுத்தும் முயற்சிகளை, மத்திய அரசோடு தொடர்புகொண்டு மாநில அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அந்த எண்ணெயை, சென்னையிலே இருக்கிற ஆலையில் சுத்திகரித்து பார்த்த பிறகு, அதனுடைய தலைவர் அவர்கள் அந்த எண்ணெய் நல்லபடி இருக்கிறது, உயர்ந்த ரகமாக இருக்கிறது என்ற கருத்தை என்னிடத்திலே சொல்லி இருக்கிறார்கள். எதிர்பாராத வகையில் சோவியத் தூதுவரை சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றேன். அவர்களுடன் பேசியதில் அவர்கள் மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அது அநேகமாக வெற்றிகரமாக நடைபெறும் என்று நம்புகிறேன்.

**திரு. க. நரசிம்மபல்லவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பெட்ரோல் ஊற்றுக்கள் மூலம் கிடைக்கின்ற எண்ணெயின் மூலம் தமிழ்நாட்டுக்கு எந்தெந்த வகையில் பலன் கிடைக்கிறது? தென்னாற்காடு மாவட்டத்தில் பண்ருட்டி தொகுதியிலுள்ள வடக்குத்து கிராமத்தில் பெட்ரோல் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளதால் அதைக் கண்டு பிடிக்கின்ற வகையில் வெளிநாட்டு குழு வந்து தங்கி ஆய்வு செய்துள்ளதாகத் தெரிய வருகிறதே, அந்த வகையில் எந்தெந்த கிராமங்களில் அது குறித்து, ஆய்வு செய்யப்பட்டுள்ளது? அதனால் தமிழ்நாட்டுக்குக் கிடைத்த பலன் எவை, எவை?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றிய குறிப்பு இப்போது என்னிடத்தில் இல்லை, தனிக் கேள்வி போடவும்.

[1987 ஏப்ரல் 9

**திரு. ந. சிவஞானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் அருகில் கிட்டத்தட்ட 11 கிணறுகள் தோண்டப்பட்டதாக இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தவகையில் கச்சா எண்ணெய் எத்தனை கிணறுகளிலிருந்து எடுத்தார்கள்? விஷ வாயு மூடப்பட்ட கிணறுகள் எத்தனை?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரி கிணறுகளைத் தோண்டும்போது முதலில் எரி வாயுதான் வரும். பிறகு எண்ணெய் கிடைக்கும். அதுபற்றிய சரியான குறிப்பு இப்போது என்னிடத்தில் இல்லை. ஆனால் ஏற்கெனவே எடுக்கப்பட்ட எண்ணெய் இங்கே சுத்திகரிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். ஆனால் அந்த எண்ணெய் தரமானதாக, உயர்ந்ததாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல் கேள்வி முடிவடைய, உங்களைத் திருப்திப்படுத்த 17 நிமிடம் ஆகியிருக்கிறது.

### பாலாற்றுக் குடிநீர் விஸ்தரிப்புத் திட்டம்.

***347—(* வினா எண் 2889)*** **திரு. எல்ல. இராசமாணிக்கம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலாற்றிலிருந்து குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தை குரோம்பேட்டைக்கு அருகில் உள்ள லட்சுமிபுரத்திற்கும் விரிவுபடுத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது குடிதண்ணீர் வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ) : திருநீர்மலை பேரூராட்சியைச் சேர்ந்த லட்சுமிபுரம் குடியிருப்புக்கு ஆலந்தூர்—பல்லவபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு தற்போது இல்லை. ஆயினும், லட்சுமிபுரத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க விரிவானதொரு திட்டத்தை ஆய்வு செய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.



1987 ஏப்ரல் 9]

**திரு. எல்ல. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த லட்சுமிபுரம் என்பது திருநீர்மலை பேரூராட்சிக்கு உட்பட்ட ஒரு குன்றின் மீது அமைந்துள்ள பகுதியாதலால் அங்கே கிணறுகள் எடுத்தாலும் தண்ணீர் வருவதில்லை. ஆழ் குழாய் போட்டாலும் தண்ணீர் கிடைப்பதில்லை. இந்த நிலையில் அந்தப் பகுதியில் வாழ்கின்ற சுமார் 4000 மக்கள் தண்ணீர் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டிலிருந்தே, உடனடியாக அவர்களுக்குக் குடிநீர் கொடுக்க அரசு நிரந்தர நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல லட்சுமிபுரம் பகுதியில் வாழ்கின்ற மக்கள் தொகை 4,500. அங்கு ஒரு மினி மோட்டார் பொருத்தப்பட்ட ஆழ் குழாய்க் கிணறு, திறந்த கிணறு ஒன்று, ஆக இரண்டு கிணறுகள் மூலமும் அதோடு 4 மார்க்—2 கைப் பம்பு பொருத்தப்பட்ட குழாய்கள் மூலமும் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இருந்தாலும் அந்த மக்களுக்கு தண்ணீர் போதவில்லை என்பதை அரசு அறிந்து அவர்களுக்காக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க விரிவானதொரு திட்டத்தைக் கொண்டுவர அரசு உத்தேசித்துள்ளது.

**திரு. எல்ல இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பம்மலில் உள்ள அண்ணா நகர் மற்றும் ஸ்டேட் பாங்க் காலனி வரை மக்களுக்கு பலனளிக்கும் ஆலந்தூர்—பல்லாவரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை பொழிச்சலூர் ஊராட்சிக்கும், அதற்கு அருகேயுள்ள கவுல்பஜார் பகுதிக்கும் விஸ்தரிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர்—பல்லாவரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் 5 லட்சம் மக்களுக்கு குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மேலும் அதைவிட அதிகமான இடங்களுக்கு விரிவாக்க தற்போது வசதி கிடையாது. அதற்கு போதுமான தண்ணீரும் கிடையாது. இருக்கிற தண்ணீர் இப்போது கொடுக்கப்படுகிற மக்களுக்குத் தான் போதுமானதாக

உள்ளபடியால் அந்தத் திட்டம் அந்த வகையில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. எனவே, அதை விரிவாக்க தற்போது வசதியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்மநாபபுரம் நகருக்குக் குடிநீர் வழங்கல்.

348—(* வினா எண் 4514) **திரு. வை. பாலசுந்திரன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் நகருக்குக் குடிநீர் வழங்க அரசிடம் புதுத்திட்டம் ஏதாகிலும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) பத்மநாபபுரம் நகராட்சிக்கு குழித்துறை ஆற்றை ஆதாரமாகக் கொண்டு புதிய குடிநீர்த் திட்டம் உருவாக்க தேவையான ஆய்வுப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குடிநீர்த் திட்டத்தை இந்த நடப்பாண்டிலேயே மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எதையாவது இந்த அரசு மேற்கொண்டிருக்கிறதா?

(பிற்பகல் 10-20).

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் நகராட்சிக்கு குழித்துறை ஆற்றை ஆதாரமாகக் கொண்டு, புதிய குடிநீர்த் திட்டம் உருவாக்க தேவையான அளவு பணிகள் நடைபெற்று வருகின்றன. அங்கே இருக்கிற நகராட்சியை, இதை ஆய்வு செய்வதற்காக 78,000 ரூபாய் பணம் கட்டச் சொல்லும்படி நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். மொத்தமாக ஏற்படுகிற செலவோடு அதையும் சேர்த்துக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறோம்.



ஊராட்சிகளில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேநீர்த் தொட்டிகள் கட்டுதல்.

349—(* வினா எண் 12093) **திரு. கோ. இரகுபதி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சிகளில் உள்ள பழைய இரும்பு மேநீர்த் தொட்டிகளை மாற்றி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேநீர்த் தொட்டிகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளில் உள்ள பழைய இரும்பு மேநீர்த் தொட்டிகளுக்குப் பதிலாக சிமெண்ட் மேநீர்த் தொட்டிகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இருந்து வருகிறது.

**திரு. கோ. இரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஊராட்சிகளுக்கு பழைய இரும்புத் தொட்டிகளை மாற்றி சிமெண்ட் தொட்டிகளாக மாற்ற திட்டமிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக அரசு ஒதுக்கிய பணம் எவ்வளவு? அது மாதிரி எத்தனை தொட்டிகள் இந்த மாநிலத்திலே இருக்கின்றன? அதோடு மட்டுமல்லாமல், என்னுடைய தொகுதியில் எத்தனை தொட்டிகள் அவ்வாறு இருக்கின்றன என்று அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, மொத்தம் 574 இரும்பு மேல்நிலைத் தொட்டிகள் இப்படிப்பட்ட முறையிலே இயங்கி வருகின்றன. ஆகவே, புதிதாக சிமெண்ட் மேல்நிலைத் தொட்டிகளை அமைக்க அரசு 5.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வடிகால் வாரியம் ஒரு செயற்குறிப்பை அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைத்துள்ளது.

**திரு. கோ. இரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு வடார்க்காடு மாவட்டத்தில் எத்தனை தொட்டிகள் இருக்கின்றன? காட்பாடி தொகுதியில் அவ்வாறு எத்தனை தொட்டிகள் இருக்கின்றன? அவை பரிசீலனையில் எடுக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 9

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, தமிழ் நாடு பூராவும் 574 இரும்புத் தொட்டிகள். காட்பாடியும், ஆற்காடும் சேரும் என்று நான் நம்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு அவைத் தலைவ ரவர்களே, இப்படிப்பட்ட பழுதுபட்ட பழைய இரும்பு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை கான்கிரீட் தொட்டிகளாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்க ளாக இருந்து கொண்டிருக்கிறது. இதுசம்பந்தமான செயற் குறிப்பு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து கடந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்பட்டு அரசின் பரிசீலனையில் வந்திருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், எங்களுடைய திருமங்கலம் பகுதியிலேகூட இதுமாதிரி பத்து மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் பழுதுபட்ட நிலையிலிருக்கின்றன. ஆகவே, இந்த ஆண்டே அவைகளை எடுத்துக்கொண்டு— ஏனென்றால் அந்த இரும்பு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கள் பழுதுபட்ட நிலையிலே இருக்கின்ற காரணத்தினாலே, இந்த ஆண்டே அவைகளை எடுத்துக் கொண்டு—அதை சிமெண்ட் கான்கிரீட் தொட்டியாக மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே மொத்தம் 574 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் தான் இரும்புத் தொட்டிகள். அவைகளைப் பூராவும் மாற்று வதற்குத்தான் 5.15 கோடி ரூபாய் செலவில் திட்டம் இடப்பட் டிருக்கிறது. இந்தத் திட்டம் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக் கிறது. அரசு விரைவிலே ஆணை பிறப்பிக்கும். ஆணை பிறப் பித்தவுடன்—இப்பொழுது இந்த வறட்சி நேரத்திலே அதை யெல்லாம் செய்துவிட முடியும் என்று நான் கருதவில்லை— தொடர்ச்சியாக இந்த ஆண்டுக்குள்ளாகச் செய்து முடிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

**திரு. கி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய இரும்பு மேல்நிலைத் தொட்டிகளை மாற்றி யமைக்கின்ற பணி இப்பொழுது பலவிடங்களில் நடந்து கொண்டிருக்கின்றன. அதிலே பலவிடங்களில் முதற்கட்டமாக டெண்டர் விடப்பட்டிருக்கிறது. ஆனால் ஒருசில இடங்களில் மேல்நிலைத் தொட்டி அமைப்பதற்கான சிமெண்ட், இரும்புக்



1987 ஏப்ரல் 9]

கம்பி போன்ற சாதனங்கள் கிடைக்காத காரணத்தால் பணி தாமதப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவைகளை விரைவாக முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே சிமெண்டுக்கும், இரும்புக்கும் எந்தக் கட்டுப்பாடும் கிடையாது. நிறையக் கிடைக்கிறது. வேறு ஏதாவது காரணங் கள் இருக்கும். அதை அறிந்து அதை நீக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

**காப்டிவ் பவர் பிளான்ட் அமைத்தல்.**

350—(*வினா எண் 12107) திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிப்காட் நிறுவனம் அகில உலக அளவில் டெண்டர் மூலம் **Captive Power Plants** **அமைக்கும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?**

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வில் உள்ளது.

**திரு. வே. இரா. ஜெயராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் நிறுவனத்தால் அகில உலக அளவில் டெண்டர் மூலம் கோரப்பட்ட அந்த கேப்டிவ் பவர் பிளான்ட்ஸ்க்கு ஆகக்கூடிய வெளிநாட்டுச் செலாவணியினுடைய அனுமதிக்கப்பட்ட தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன். இதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாட்டிற்கான காலதாமதத்தையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, ஹோசூரிலும், கும்மிடிபூண்டியிலும் ஜெனரேட்டர்களை வைப்பதற்காக இந்தத் திட்டம் போடப்பட்டது. ரூ. 14.44 கோடி செலவில் ஐந்து மெகாவாட் உற்பத்தி செய்யும் நான்கு ஜெனரேட்டர்களை நிறுவி அதன் மூலம் இருபது மெகாவாட் மின் சாரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. உலக

[1987 ஏப்ரல் 9

மார்க்கெட்டில் இதற்கான டெண்டர்கள் கோரப்பட்டபொழுது மிஷோஹிவாய் கம்பெனி, தாம் குறைந்த விலைக்குத் தருவதாக முன் வந்திருக்கிறது. அது அரசினுடைய ஆய்விலே இருக்கிறது. அது விரைவிலே முடிவு செய்யப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வே. இரா. ஜெயராமன் :** தலைவரவர்களே, அந்த ஜெனரேட்டர்களைப் பொறுத்தவரையில் Technical Evaluation Committee போடப்பட்டிருக்கிறதா? அதனுடைய அறிக்கை என்ன சொல்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, சிப்காட் நிறுவனத்தில் இருக்கிற பொறியாளர்கள் அதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள்.

### வடஆற்காடு மாவட்டம் போளூரில் காகித தொழிற்சாலை.

351—(* வினா எண் 12510) திரு. ஜெ. ராஜாபாபு : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு மாவட்டம் போளூரில் காகிதத் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் போளூரில் காகிதத் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. எஸ். பி. மணவாளன் :** தலைவரவர்களே, வடஆற்காடு மாவட்டத்தில் வேறு எங்காவது காகிதத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா? வடஆற்காடு மாவட்டத்தில் 3 சர்க்கரை ஆலைகளும், வடஆற்காடு மாவட்டத்திற்கு அருகில் இரண்டு சர்க்கரை ஆலைகளும் ஆக மொத்தம் 5 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. ஆகவே, இனிமேலாவது வடஆற்காடு மாவட்டத்தில் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 9]

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன். டிட்கோவிடம் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி ஒரு காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. அது ஆய்வில் இருக்கிறது. 5 சர்க்கரை ஆலைகள் இருந்தால் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைக்க முடியும். அந்த அடிப்படையில் இப்போது புகளூரில் அமைக்கப்பட்டு, நல்லமுறையில் நடந்து வருகிறது.

### சென்னையில் நடமாடும் நீதிமன்றங்கள்.

352—(* வினா எண். 6158) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் குடிமையியல் வழக்குகளை (Civil Offences) விசாரிக்க இரு நடமாடும் நீதிமன்றங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப் பெறும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : ஆம். இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா :** தலைவரவர்களே, இன்றைக்கு சிடி சிவில் கோர்ட் ஒரே இடத்தில் இருப்பதால் இட நெருக்கடி ஏற்பட்டு, மக்களுடைய போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது, வழக்குகள்கூட ஒருசில சீனியர் வழக்கறிஞர்களிடம் குவிந்து இருக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே ஈஸ்ட், வெஸ்ட், நார்த் சௌத் சென்ட்ரல் என்று பிரித்து அந்தந்தப் பகுதிகளில் நீதிமன்றங்களை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, உயர்நீதிமன்றத்தோடு கலந்து இதுகுறித்து தக்க நடவடிக்கை எடுக்க எற்கெனவே அரசு பரிசீலனை செய்துவருகிறது.

[1987 ஏப்ரல் 9

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ்:** தலைவரவர்களே, Prohibition Offenders கேசை விசாரிப்பதற்கு என்று 3, 4 தாலுகாக்களுக்கு ஒரு கோர்ட் இருக்கிறது. இந்த நிலையை மாற்றி அந்த அந்த தாலுகாவிலே ஒரு நீதிமன்றம் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, எந்த எந்த மாவட்டத்தில் மதுவிலக்குக் குற்றங்கள் எந்த எந்தப் பகுதியில் அதிகமாக இருக்கின்றன என்ற தகவல் கேட்கப்பட்டிருக்கிறது. அந்தத் தகவல் வந்தவுடன் குற்றங்கள் அதிகமாக இருக்கின்ற பகுதிகளில் தனி நீதி மன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

### வழக்குரைஞர்களுக்கு இயக்கம் அமைத்தல்.

353—(*வினா எண். 8670) **திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வழக்கு நடத்துநர்கள் இயக்ககம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வழக்கு நடத்துநர்கள் இயக்ககம் அமைப்பதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த இயக்ககத்தின் அமைப்புப் பணிகளை கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள தனி அலுவலர் இது சம்பந்தமான பணிகளைக் கவனித்து வருகின்றார்.

**திருமதி பா. வளர்மதி:** தலைவரவர்களே, இந்த இயக்ககம் தமிழ் நாட்டில் எந்த எந்த மாவட்டங்களில் செயல்பட்டிருக்கிறது? அரசுத் தரப்பில் போடப்படுகின்ற வழக்குகள் பெரும்பாலும் வெற்றி பெறுவதில்லை. ஆகவே, அரசு வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கு ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் ஒரு குழு அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 9]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, இந்த இயக்ககத்தைப் பொறுத்தவரையில் குற்றவியல் வழக்குகளுக்குப் போடப்பட்டிருக்கிறது. ஏ.பி.பி. 2, ஏ.பி.பி. 1 போன்ற அரசு குற்றவியல் வழக்கு நடத்துநர்கள் பல்வேறு பகுதிகளில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் அதிகாரத்திற்கு உட்பட்டு செயல்பட்டு வருகின்றனர். செப்பரேட் டைரக்டரேட் ஆஃப் பிராசிக்யூஷன் மாநில அளவிலே போடப்பட்டு, அதற்கு என்று தனி இயக்ககத்தை ஏற்படுத்துகிறபோது அவர்களுடைய பணிகளைச் செம்மையாகக் கண்காணித்து திறம்படச் செயல்படுத்த விதிகளை உருவாக்க முடியும் என்ற அடிப்படையில் அண்டை மாநிலமான கர்நாடக மாநிலத்தில் அமைக்கப்பட்டிருப்பதைப் போன்று தமிழ் நாட்டிலேயும் அமைக்கப்படுவதற்கான பணிகளைக் கவனிக்க தனி அலுவலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**திருமதி பா. வளர்மதி:** தலைவரவர்களே, அரசு வழக்கறிஞர்கள் அரசு சம்பந்தப்பட்ட வழக்குகளில் சில நேரங்களில் ஆஜராவதில்லை. ஆஜராகாத காரணத்தால் சில வழக்குகள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. அதைத் தவிர்க்க அரசு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்யக் கருதியிருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10.30]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் அரசுக்கு இல்லை. போதிய வழக்குரைஞர்கள் குற்றவியல் வழக்குகளுக்கு எல்லாம் தேவை என்று கருதித்தான் 108 additional posts of A.P.P., Grade II இரண்டாண்டுகளுக்கு முன்னால் அரசு துவக்கி இருக்கிறது. ஆகவே அந்தப் பிரச்சினை தற்போது எழவில்லை.

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டைரக்டர் ஆஃப் ப்ராசிக்யூஷன் என்று தனி அதிகாரி நியமிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். டைரக்டர் ஆஃப் ப்ராசிக்யூஷனாக யாரை நியமிப்பது? நீதிபதியையா? வழக்குரைஞரையா? அல்லது சட்டத் துறை அதிகாரிகளில் ஒருவரையா? அது பற்றி அரசு முடிவு செய்து விட்டதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 9

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட நிபுணத்துவம் பெற்ற ஒருவரை, அதாவது வழக்குரைஞர் பணியில் இருப்பவர்களில் இருந்தோ அல்லது நீதித் துறையில் இருந்தோ எடுத்து நியமிக்கலாம் என்று அரசு கருதியுள்ளது.

### தமிழகத்தில் வழக்குரைஞர்கள் நலநிதி.

354—(*வினா எண் 9273) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வழக்குரைஞர்கள் நலநிதி ஏற்படுத்தும் திட்டம் காலதாமதம் ஏற்பட காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வழக்குரைஞர்கள் நலநிதித் திட்டத்தினை விரைவில் கொண்டு வருவது குறித்து அரசு யோசித்து வருகிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குரைஞர் நல நிதி ஏற்படுத்துவதில் உள்ள காலதாமதத்தைப் போக்க வேணுடுமென்ற வகையில்தான் இந்த வினாவையே நான் போட்டு இருந்தேன். கிட்டத்தட்ட 25,000 வழக்குரைஞர்கள் இருக்கிறார்கள். அந்த வழக்குரைஞர் களுக்காக நல நிதியினை ஏற்படுத்த வேண்டும் என்ற திட்டத்தை முதலில் புரட்சித் தலைவர் அவர்களின் அரசுதான் அதிலும் குறிப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் இந்தச் சட்டமன்றத்திலே அறிவித்தார்கள். அவ்வாறு அறிவித்த பிறகு மராட்டிய மாநிலம், கேரளா போன்றவை எல்லாம் சட்டங்களைக் கொண்டு வந்தார்கள். எனவே வருகிற கூட்டத் தொடரிலேயே இந்த வழக்குரைஞர்களுக்கான நல நிதிச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற முடிவை எடுத்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?



1987 ஏப்ரல் 9]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களுக்கு இல்லாத ஒரு பிரச்சினை நமது மாநிலத்தில் உருவாகி இருக்கிறது. வழக்குரைஞர்களைப் போலவே தனியாக சுயதொழிலில் ஈடுபட்டு வருகின்ற பல்வேறு பிரிவினர் தங்களுக்கும் இதுபோன்ற நல நிதித் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை எல்லாம் தந்திருக்கிறார்கள். அதன் காரணமாக எல்லாவற்றையும் நீதித் துறை ஆய்ந்து கொண்டிருக்கிறது. நீதித்துறை எல்லாவற்றையும் ஆய்ந்து நிதிநிலைக்கேற்ப முடிவு செய்ய வேண்டும். மற்ற மாநிலங்களில் அரசினுடைய நிதியினை அதிகமாகத் தர வேண்டாத நிலைமை இருக்கிறது. நமது மாநிலத்தில் தரப்பட்டிருக்கின்ற கோரிக்கை என்னவென்றால் அரசு அந்த நிதியைத் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் அவர்கள் பணியிலிருந்து போகிறபோது 30 ஆயிரம் ரூபாய் தரவேண்டும் என்று கோருகிறார்கள். அப்படி ஆளுக்கு 30 ஆயிரம் தர வேண்டும் என்றால் அதை ஈடுகட்டுவதில் நிதிப் பற்றாக்குறை சுமையாக இருக்கும். ஆனால் அப்படி எந்த மாநிலத்திலும் நடைமுறைப்படுத்தவில்லை. எனவேதான் இவற்றை எல்லாம் ஆய்ந்து நிதிநிலைமைக்கேற்ப, மற்ற பிரிவினர் தந்திருக்கின்ற கோரிக்கைகளையும் கருத்தில் கொண்டு முடிவெடுக்க வேண்டி இருக்கிறது. அதைத்தான் நீதித்துறை ஆய்ந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஏறத்தாழ, அமைப்புகளின் கீழ் வராத மூன்றே கால் கோடி பேர்களுக்கு இன்சூரன்ஸ் திட்டத்தை மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டுகிற முறையில் இந்த அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறது. விவசாயக் கூலி வேலை செய்பவர்கள், கைவண்டி இழுக்கும் தொழிலாளர்கள், பாரம் சுமக்கும் தொழிலாளர்கள் ஆகியோரெல்லாம் இறந்துவிட்டால் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கிற வகையில் இன்சூரன்ஸ் திட்டம் நமது மாநிலத்தில் அமல் நடத்தப்பட்டு வருகிறது. வழக்குரைஞர்களிடத்திலிருந்து நிதியினைப் பெற்று, அதாவது 2 ரூபாய் என்ற அளவுக்குப் பெற்று குரூப் இன்சூரன்ஸ் செய்து, வழக்குரைஞர்கள் இறந்து விட்டால் 20,000 ரூபாய் கொடுக்கிற வகையிலும் ஓய்வு பெறுகிறபோது 20,000 ரூபாய் முதல் 50,000 வரையில் கொடுக்கிற வகையிலும் திட்டத்தை ஏற்படுத்தி அதற்கு

முழுக்க, முழுக்க வழக்குரைஞர்களிடத்திலிருந்தே பணம் வருகிற வகையில்தான் இந்தத் திட்டத்தை எல்லா மாநிலங்களிலும் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். ஆகவே நான் இங்கே ஒரு வேண்டுகோளாகவே வைக்க விரும்புகிறேன். வழக்குரைஞர் நல நிதித் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று சொன்னதே நமது அரசாங்கம்தான். நம்மைப் பார்த்து மற்றைய மாநிலங்களில் கொண்டு வந்திருக்கிறார்கள். வழக்குரைஞர்கள் சொல்வது போல் அதாவது அரசே அந்த நிதியினைக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தை ஒதுக்கியேவிடலாம். அவர்களே அதற்கு கான்ட்ரிபியூஷன் செய்கிற வகையில் இந்த நல நிதிச் சட்டத்தை உடனே கொண்டு வருவதற்கு அரசு விரைவான நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் பலவிதமான சலுகைகளைப் பெற்றுக்கொண்டு வருகிற நலிந்த பிரிவினரையும், ஒதுக்கப்பட்ட பிரிவினரையும் வழக்குரைஞர்கள் பிரிவிலே சேர்ப்பது என்பது சரியல்ல. அப்படிப் பேசுவது சரியல்ல. அது வேறு, இது வேறு. நாம்தான் இந்தியத் துணைக்கண்டத்திலேயே வழக்குரைஞர்களுக்கான நல நிதி கொண்டு வரவேண்டுமென்று முடிவு செய்து அவையிலே அறிவித்தோம். அவ்வாறு அறிவித்த பிறகு தமிழ்நாடு பார் கவுன்சில் மற்றும் வழக்குரைஞர்கள் சங்கங்கள் போன்றவை எல்லாம் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிற நிலைமையில், அவை தமிழக அரசினுடைய நிதிநிலைமைக்கு அப்பாற்பட்ட கோரிக்கைகளாக இருப்பதன் காரணத்தால், இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டி இருப்பதால்தான் தாமதம் ஏற்படுகிறது. இதைத்தான் அரசு ஆய்ந்துகொண்டு வருகிறது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல் இந்தத் திட்டத்தை இந்த அரசு முதலில் அறிவித்துவிட்டு இதற்கான ஏற்பாடுகள் எல்லாம் தீவிரமாக நடந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். அதாவது ஏனைய பல சமுதாயத்தினருக்காக எல்லாம் கூட பல புரட்சிகரமான திட்டங்களை இன்றைக்குச் செயல்படுத்திக் கொண்டிருக்கிற சூழ்நிலையில், இன்றைக்குத் தமிழக





அரசைப் பொறுத்தவரையில் * *
அரசு இந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டதாக ஒரு கருத்து இன்றைக்கு நிலவுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குற்றச்சாட்டு நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்களுக்கும் அரசுக்கும் எந்தவித கருத்து வேறுபாடும் இல்லை. வழக்கறிஞர்கள் சில அரசியல் கட்சிகளால் தூண்டி விடப்பட்டு ஒரு சில குறைகளைச் சொல்லுகிறார்கள் என்பதை வைத்துக்கொண்டு * *
என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக் கூடாது. அந்த திட்டத்தைக் கொண்டு வந்ததே அரசுதான். வழக்கறிஞராக இருக்கிற திரு. டி. ஆர். வேங்கடரமணன் அவர்களுக்கு இது புரியவில்லையே என்று எனக்கு வேதனையாக இருக்கிறது. காரணம் மற்ற மாநிலங்களிலே உள்ள அரசுகள் இதற்காக எந்த நிதியும் செலவு செய்யவில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் முழுக்க முழுக்க ஆளுக்கு ரூ. 30 ஆயிரம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வந்திருக்கிறது. அதுதான் பிரச்சினையாக இருக்கிறது. நலிந்த பிரிவினரோடு வழக்கறிஞர்களை ஒப்பிட்டு அவர்கள் ஏதோ பட்டினியால் வாடுகிறார்கள் என்பதைப் போல வழக்கறிஞர்களைப் பற்றி திரு. வேங்கடரமணன் அவர்கள் சொல்ல வேண்டாம்.

**திரு. ஆ. சந்திரசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வழக்கறிஞர்களுக்கான நலநிதி போல் வழக்கறிஞர்களுடைய கிளார்க்குகளுக்கும் நல நிதி திட்டம் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது வேண்டாம், பிறகு வழக்கறிஞர்களுடைய கிளையன்ட்டிற்கும் கேட்பீர்கள்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்படுகிறது.

[1987 ஏப்ரல் 9

**சென்னையில் உச்ச நீதிமன்றப் பிரிவு ஒன்றினை அமைத்தல்**

*355—(* வினா எண் 10034)* **திரு. மு. மாரிமுத்து மற்றும் மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)** : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உச்ச நீதிமன்றத்தின் ஒரு பிரிவு சென்னையில் அமைத்திட மத்திய அரசை வலியுறுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இந்திய உச்ச நீதிமன்றத்தின் பிரிவு ஒன்றைத் தமிழ் நாட்டில் அமைக்க வேண்டும் என்ற வேண்டுகோள் அடங்கிய செயற்குறிப்பினை மைய அரசிற்கு 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அனுப்பியது. இவ்வரசின் செயற்குறிப்பினை உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களுக்கு மைய அரசு அனுப்பியுள்ளதாகவும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் 130-வது பிரிவின்கீழ் இப்பொருள் குறித்த செயற்குறிப்பு எதும் தலைமை நீதிபதியிடமிருந்து பெறப்படவில்லை என்றும் மைய அரசின் சட்டம் மற்றும் நீதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது குறித்து மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. மு. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு குடிமகனும் குறைந்த செலவில் குறைந்த தொலைவில் நீதியை பெறுவதற்குண்டான வாய்ப்பை உருவாக்கி தரவேண்டியது ஒரு அரசினுடைய கடமை என்ற அடிப்படையில் மதுரையில் சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவை அமைப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொண்டதே அது எந்த நிலையில் உள்ளது? அதற்காக போடப்பட்ட ஜஸ்வந்த் சிங் கமிஷனும் இசைவு தெரிவித்திருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறதே அது பற்றிய விவரங்களை அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 9]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றம் அதற்கு ஏற்பு தரவில்லை. இருந்தபோதிலும் மதுரையில் ஒரு கிளையை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மைய அரசுக்கு எழுதினார்கள். ஜஸ்வந்த் சிங் கமிஷனிலும், மாநில அரசினுடைய கோரிக்கை நியாயமானது என்று அவர்கள் மைய அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறார்கள். மைய அரசு அதை ஆய்ந்து வருகிறது. விரைவில் அதற்கான ஆணை பிறப்பிக்கலாம் என்று நம்பப்படுகிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)** : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய ஒரு பிரிவை சென்னையிலே அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு அளித்து 5, 6 ஆண்டுகள் ஆகியும் கூட உச்ச நீதிமன்றம் இன்னும் அபிப்பிராயம் சொல்லவில்லையே, ஏதாவது வழக்குகள் தேக்கம் என்றால் அரசாங்கத்தின் மீது குறை சொல்லுகிற நீதிபதிகள் 6 ஆண்டுகள் மாநில அரசினுடைய கோரிக்கையைப் பற்றி கருத்து சொல்ல மறுக்கிறார்களே, ஆகவே தனியாக விசேஷ அதிகாரிகளை அனுப்பியாவது மைய அரசோடு தொடர்பு கொண்டு அந்த உச்ச நீதிமன்றத்தினுடைய கருத்தை. . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அளவுக்கு மாநில அரசு அது குறித்து கவலை உறுகிறதோ அந்த அளவுக்கு மைய அரசும் கவலை உறுகிறது. காரணம் பல பகுதிகளில் சர்க்கியூட் பெஞ்ச் ஆப் தி சுப்ரீம் கோர்ட் கொண்டு வரவேண்டும் என்று கொள்கை ரீதியாக மைய அரசு விரும்புகிறது. எப்படி மதுரையிலே ஒரு கிளையை அமைக்க சென்னை உயர்நீதிமன்றம் விருப்பம் தரவில்லையோ அதுபோல சிலபல காரணங்களினால் உச்ச நீதிமன்றமும் விருப்பம் தெரிவிக்கவில்லை. அதையேதான் மைய அரசு சுட்டிக் காட்டியிருக்கிறது. மைய அரசு அது குறித்து பிரத்தியேகமாக முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு உச்ச நீதிமன்றத்தினுடைய ஒரு பகுதி தென் மாநிலங்களிலேயே குறிப்பாக சென்னையிலே வைப்பதற்கு வாய்ப்பும் வசதியும் அவசியமும் தற்போது அதிகமாக இருக்கிறது. இடையிலே கூட சென்னை சட்டக் கல்லூரியிலே

[1987 ஏப்ரல் 9

அந்த உச்ச நீதிமன்றத்தினுடைய கிளையை வைப்பதற்கு வாய்ப்பு இருப்பதாக தகவல் வந்தது. அது எந்த நிலைமையில் இருக்கிறது? அப்படிப்பட்ட நிலை வந்தால் இப்போது இருக்கக் கூடிய சட்டக் கல்லூரியின் வளாகத்திற்குள்ளேயே செயல்படுமோ? அது பற்றி என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் மைய அரசுக்கு எழுதிய பிறகு, மைய அரசு உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி திரு. சந்திரசூட் அவர்களை சென்னைக்கு அனுப்ப, அவர் வந்து சென்னை சட்டக் கல்லூரி இடத்தை எல்லாம் பார்த்து, அது தகுந்த இடம் என்று முடிவு செய்து அதைகூட நாங்கள் மைய அரசுக்கு எழுதியிருந்தோம். ஆனால் இடையில் ஏனோ உச்ச நீதிமன்றம் முடிவெடுத்து பதில் அனுப்பாமல் இருக்கிறார்கள். இல்லையென்று அவர்கள் மறுக்கவில்லை. மத்திய அரசினுடைய சட்டத் துறை இது குறித்து ரிமெய்ண்டர் கூட உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளதாக மாநில அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது.

**கொன்றை வேந்தன்.**

**356—(வினா எண் 11247) திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறநூலாகிய கொன்றை வேந்தனின் இரண்டாம் வகுப்பு பாட-நூலில் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற வாசகம் விடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1981 ஆம் ஆண்டில் முதல் பதிப்பாக வெளியிட்ட 2 ஆம் வகுப்பு தமிழ் பாடநூலில் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற வாசகம் இடம் பெறவில்லை.

(ஆ) 1981 ஆம் ஆண்டில் முதல் பதிப்பாக வெளியிடப்பட்ட நூல் நடப்பு கல்வி ஆண்டு 1986-87 வரை மறு பதிப்பாக வந்த காரணத்தால் இன்னும் அந்த வாசகம் இடம் பெறாமல் உள்ளது.



1987 ஏப்ரல் 9]

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" விடப்பட வேறு காரணங்களில்லை. 1987-88-க்கான கல்வி ஆண்டில் இரண்டாவது வகுப்பு தமிழ் பாடநூலில் இந்த செய்யுள் இடம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற இந்த வாசகம் 1981 ஆம் ஆண்டு வெளியிட்ட இரண்டாம வகுபபு பாட புத்தகத்தில் விடப்பட்டிருக்கிறது என்று அமைச்சா அவர்கள் சொனனார்கள். 1981 ஆம் ஆண்டில் விடப்பட்டிருநதும் ஏன் அந்த ஆண்டிலோ அல்லது அடுத்த ஆண்டிலோ அதைத் திருத்தியிருக்கக் கூடாது? 1986, 1987 ஆம் ஆண்டு வரையில் ஏன் காலதாமதம் ஏற்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, தன்னாட்சி உரிமையோடு செயல்பட்ட குழு அந்த நடவடிக்கையை ஆரம்பத்தில் எடுத்தது. அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டவுடன் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. வரும் ஆண்டில் அது கட்டாயம் இடம் பெறும்.

**திரு. என்.எஸ்.வி. சித்தன்:** தலைவர் அவர்களே, அதுமாதிரியான தவறுகள் எதிர்காலத்தில் வராமல் இருப்பதற்கு ஒரு குழுவாக செயல்படுகிறது என்று சொன்னார்கள். குழுவாக செயல்பட்ட நேரத்தில் எப்படி அந்த வாசகம் விடப்பட்டது? அதற்கு தனி காரணம் ஏதும் இருக்கிறதா? எதிர்காலத்தில் இதுபோன்று விடாமல் இருப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, இது விடப்பட்டதற்கு அப்போது பொறுப்பிலேயிருந்த திரு. ம. நன்னன் அவர்கள் பிரத்யேகமான எந்த காரணமும் இல்லை. ஒட்டுமொத்தமாக 91 அடிகளில் 25 அடிகள் மட்டும் போட வேண்டுமென்று முடிவை மேற்கொண்ட காரணத்தால் அது விடப்பட்டது, உள்நோக்கம் எதுவும் இல்லையென்று அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. வே. சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலிருந்து மற்ற ஆசிரியர்களைவிட தமிழாசிரியர்கள் எப்படி தமிழ் கல்வியென்று இல்லாமல் ஒழுக்கக் கல்வியை இள

[1987 ஏப்ரல் 9

வயதிலே போதிக்கிற ஒரு பணியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. மற்ற மொழிப் பாடப்பிரிவு ஆசிரியர்களை விட, மற்ற விஞ்ஞானப் பாட ஆசிரியர்களை விட, ஒழுக்கக் கல்வியை இப்படிப்பட்ட இலக்கியங்கள், ஆத்திச்சூடி மூலம் பயிற்றுவித்து இளைஞர்களை முறைப்படுத்துகிற முக்கியமான அறப்பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள் இந்தத் தமிழாசிரியர்கள். நேற்று கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மொழிப் போராட்டத் தியாகிகளுக்கு 250 ரூபாய் கொடுக்கப்படு மென்று புரட்சித் தலைவர் அரசு அறிவித்திருக்கிறது. எனவே மற்ற ஆசிரியர்களைவிட கூடுதல் ஊதியம் பெறுகிற வகையில் இடைநிலை தமிழாசிரியர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இன்கிரிமென்ட் போன்றவைகளை கொடுத்து, அந்த ஆசிரியர் களை மற்ற ஆசிரியர்களைவிட சிறப்பான இடத்தில் அமர்த்தி பெருமைப்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு நட வடிக்கை எடுக்குமா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, ஒழுக்கப் பாடங்களை, ஒழுக்கக் கல்வியை தொடக்கப் பள்ளி அளவிலேயே அங்கே பணியாற்றுகிற ஆசிரியர்கள் மிக அக்கறை யோடு மாணவர்களுக்குப் போதிப்பது தேவைப்படுகிறது. அந்த அடிப்படையில்தான் பாடத் திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின் றன. அங்கே இடைநிலை இளநிலை பாட ஆசிரியர்களும், பிற பள்ளிகளில் தமிழாசிரியர்களும ஒழுக்க உணர்வுகளை ஊட்டும் தமிழ்ப் பாடத் திட்டங்களை சொல்லிக் கொடுக்கிற நிலையிலே இருக்கிறார்கள். இதுகுறித்து அரசுக்குக் கோரிக்கைகள் வந் திருக்கின்றன. தமிழக தமிழ் ஆசிரியர் கழகத்தின் மூலமாகவும், தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டணி மூலமாகவும் தமிழ்நாடு இடைநிலை ஆசிரியர் மன்றம் மூலமாகவும் அரசுக்கு வந்திருக்கிற அந்தக் கோரிக்கைகளை அரசு ஆய்ந்து வருகிறது. அதை அரசு ஆய்ந்து விரைவில் ஒரு நல்ல முடிவையெடுக்கும்.

**திரு. ஜி. கெ. ஜே. பாரதி:** பேரவையின் தலைநாயகர் அவர் களே, தமிழ் இலக்கியத்தின் வரலாற்று சிறப்புடைய 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற அழகான வரிகள் கடந்த நான்கு ஆண்டுகளாக மறைக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை சொன்னார்கள். ஆன்மா பிளஸ் லயம், ஆன்மா லயிக்கும் இடம் ஆலயம் என்று இலக்கியம் கூறுகிறது. இஸ்லாம் மதமாக இருந் தாலும் சரி, கிறித்துவ மதமாக இருந்தாலும் சரி, இந்து மதமாக



1987 ஏப்ரல் 9]

இருந்தாலும் சரி, சமண மதமாக இருந்தாலும் சரி. சாக்கியமாக இருந்தாலும் சரி, சன்மார்க்கமாக இருந்தாலும் சரி, கன்பியூசி யசாக இருந்தாலும் சரி, பௌத்த மதமாக இருந்தாலும் சரி இப்படி இந்த உலக மதங்கள் அத்தனையும் ஆலயங்களில் ஆன்மா லயிக்கின்றன. மதவெறி என்று இல்லாமல் ஒரு இலக்கியத்தை ஒரு தமிழன் படைத்திருக்கிறானே, அந்தத் தமிழன் படைத்திருக்கிற கொன்றை வேந்தனுடைய அழகான சொல்லைக் கொன்று இருக் கின்றதே? இப்பொழுது இருக்கிற அரசில் இவ்வாறு ஏற்பட்டிருக் கிறதே? அப்படிப்பட்ட தமிழர்களின் ஒரு சிறந்த தமிழ் இலக்கியத்தை அவர்கள் மறைப்பதற்கு காரணமாக இருந்தவரின் பெயரை இந்த அரசு வெளியிடவேண்டும் என்றோ அந்த ஆசிரியர் மீது ஏதாவது நடவடிக்கையெடுக்க வேண்டுமென்றோ சொல்ல மாட்டேன். அந்த அற்புதமான வரியை உலகத்திற்கு எல்லா மதங்களுக்கும் பொதுவாக அமையும் வகையில் ஒரு தமிழன் தான் படைக்க முடியும் என்ற நிகழ்ச்சியை எடுத்துக்காட்டிய வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழாசிரியர்களுக்கு இதுமாதிரி ஒரு நிகழ்வு ஏற்படாத வண்ணம் காப்பீர்களா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் அறிஞர்களுக்கும், வள்ளல்களுக்கும் இந்த அரசு பல்வேறு சிறப்புகளைச் செய்து வருகிறது, தொடர்ந்து செய்யும்.

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மதம் கடவுள் போன்ற பிரச்சினைகளில் அரசு தலை யிடக்கூடாது என்ற நவீன ஜனநாயகக் கருத்தை நம்முடைய அரசியல் சட்டம் வலியுறுத்துகிறது. அதற்கேற்ப, பள்ளிக் நூல்களில் மத போதனைகளை, கடவுள் உணர்வுகளை ஊட்டுகிற கருத்துக்களைத தடுக்க இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன்மீக உணர்வுகள், ஒழுக்க உணர்வுகளை வளர்க்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த அடிப்படையிலே, எந்த மதத்தினரையும் புண்படுத்தும் நோக்கம் இந்த அரசுக்கு இல்லை. அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்காது.

[1987 ஏப்ரல் 9

## திருப்பூரில் ஸ்டேடியம்.

357—(*வினா எண். 11411) **திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் ஸ்டேடியம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே வளர்ந்து வருகிற மிக முக்கியமான நகரங்களில் திருப்பூரும் ஒன்று என்ற முறையில், நீண்டகாலமாக அந்த நகரத்தின் கோரிக்கையாக இருந்து வருகிற விளையாட்டு அரங்கத்தைக் கொண்டு வருவதற்கு இனியாவது அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, விளையாட்டு கழகத்தோடு கலந்து அரசு நிதிநிலைமைக்கேற்ப இதை ஆயும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஒரு பணியை மேற்கொள்வதற்கு முன்னர், அந்தப் பணிக்கு உரிய தேவைகளை மதிப்பீடு செய்துதான் மேற்கொள்ளும் என்பது பொதுவாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிற மரபாகும். அந்த அடிப்படையில் தமிழ்நாட்டிலேயே பல்வேறு நகரங்களிலேயே குறிப்பாக திருப்பூர் நகரத்திலேதான் தேசிய அளவிலேயும் சரி, மாநில அளவிலேயும சரி, பல்வேறு துறைகளைச் சேர்ந்த விளையாட்டுப் போட்டிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எனவே அந்த நகரத்தின் தேவையை காலத்தில் உணர்ந்து, இதற்கு மிக முக்கியத் தேவை இருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டு, இந்தத் திட்டத்தை விரைவில் அறிவிக்க அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, திருப்பூருக்கு என ஒரு விளையாட்டு அரங்கம் வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்தது. ஆனால் இடப்பிரச்சினை எழுந்தது. நல்ல இடம் கிடைக்குமானால், இதை ஆய்ந்து நடவடிக்கை எடுக்கும்.



1987 ஏப்ரல் 9]

**திரு. அ. மலர்மன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பெரிய நகரங்களிலே ஸ்டேடியம் கட்டுகின்ற போது, நகரத்தினுடைய மையப் பகுதியிலே கட்டப்படாமல் ஊரின் ஒதுக்குப்புறத்திலே கட்டப்படுகிறது. உதாரணமாக, திருச்சியில் கட்டப்பட்ட விளையாட்டு அரங்கம் திருச்சி நகரத்தின் ஓரத்தில், ஒதுக்குப்புறத்திலே கட்டிய காரணத்தால் அந்த ஸ்டேடியம் பயனற்ற ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை அரசு அறியுமா? ஆகவே இனிமேல் கட்டப்படுகின்ற ஸ்டேடியங்கள் நகரத்தினுடைய மையப்பகுதியில் கட்டப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும், நகரத்தின் மையப் பகுதியிலே இருக்கிற இடப்பிரச்சினையைப் பற்றி. முடிந்த அளவிற்கு நகரப் பகுதியிலே இருக்க வேண்டும் என்பதுதான் நல்லது என அரசு கருதுகிறது. இதை அரசு கருத்தில் கொள்ளும்.

## இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி தொகுதி மாரியூரில் சாக்லெட் தொழிற்சாலை.

358—(* வினா எண். 4299) **திரு. அ. பிரணவநாதன் :** மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கடலாடித் தொகுதி மாரியூரில் 1979-ல் ஏற்பட இருந்த சாக்லெட் தொழிற்சாலை துவங்காமல் இருப்பதற்கான காரணம் என்ன?

(ஆ) எப்போது துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): கடலாடி தொகுதி மாரியூரில் தேர்ந்தெடுத்த நிலத்தை தமிழ்நாடு பனைப்பொருள் இணையத்திற்கு உரிமையாக மாற்றம் செய்ய சில காலம் ஆகும் என்று தெரிவதால், இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் அமைத்திட தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியமும், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரும் சேர்ந்து இடம் தேர்வு செய்து அவ்விடத்தில் சாக்லெட் தொழிற்சாலை உட்பட பல்வகை பொருள்களை செய்யும் பனைப்பொருள் உற்பத்தி மையம் அமைத்திட கதர் வாரியம் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது.

[1987 ஏப்ரல் 9

## குறிஞ்சிப்பாடி பெருமாள் ஏரி.

359—(* வினா எண். 5253) திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறிஞ்சிப்பாடி தொகுதியில் பெருமாள் ஏரியை தூர் எடுக்கவும், ஆழப்படுத்தவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஏ. தங்கராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறபோது இந்தக் கேள்விக்கு இடமில்லை என்று சொல்லிவிட்டார்கள். நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது எல்லாம், தென் ஆற்காட்டில் உள்ள என்னுடைய தொகுதியில் அமைந்திருக்கிற பெருமாள் ஏரியின் மூலமாக அங்கிருக்கின்ற விவசாயிகளுடைய நிலம் சுமார் 6,500 ஏக்கர் அதனால் பயன்பெற்று வருகிறது. ஆகவே அங்கேயிருக்கின்ற விவசாயிகள் பயன் பெறுகிற வகையில், மீண்டும் பரிசீலனை செய்து, இந்த ஏரியை ஆழப்படுத்தி, அங்கேயிருக்கின்ற விவசாயிகள் பயன்பெறவும், அதே சமயத்தில் அந்த ஏரியின் உள் பக்கத்தில் இருக்கிற ஆழவாரிகள் கடந்த 1975 ஆம் ஆண்டு சரிந்து போய்விட்டன. இதையும் மீண்டும் பரிசீலனை செய்து, விரைவான நடவடிக்கை எடுத்து இந்த விவசாயிகள் பயன் பெறுவதற்கான வாய்ப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏரியை ஏற்கனவே ஆழப்படுத்த முடியாமல், அதன் கரையை ஒரு அடிக்கு உயர்த்தியிருக்கிறார்கள். அதன் மூலமாக முன்பு இருந்ததைவிட 25 சதவீதம் அதிகமாகத் தண்ணீர் கொள்ளளவு கூடியிருக்கிறது. ஆகவே தற்போது வேண்டியதில்லை என்று அதிகாரிகள் முடிவு செய்திருக்கிறார்கள். ஆனால் உறுப்பினர் அதை



1987 ஏப்ரல் 9]

மறுபடியும் ஆழப்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்குரிய ஆய்வுகளை நடத்துவதற்கு வேண்டிய உத்தரவுகளை அரசாங்கம் எடுக்கும். அதேநேரத்திலே பழுதுபட்டிருக்கிற அந்தக் கால்வாய்களையெல்லாம் சீரமைப்பதற்கு வேண்டிய முயற்சிகளையும் அரசு எடுக்கும்.

**திரு. ஏ. தங்கராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் பரிசீலனை செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மிகவும் நன்றி. அதே சமயத்தில் அந்தப் பெருமாள் ஏரிக்கு வரக்கூடிய நீர் வரத்து வாய்க்கால் பரவனாறு வழியாகத்தான் பெருமாள் ஏரிக்கு வரத்து வருகிறது. பரவனாறின் இருபுறமும் கரைகள் இல்லாத காரணத்தாலே, இருபுறமும் உள்ள கிராமங்களில் உள்ள மக்கள், சுமார் 20 கிராமங்களைச் சேர்ந்தவர்கள் மழைக் காலங்களிலும் வெள்ளக்காலங்களிலும் பாதிக்கப்பட்டு வெளியேறுகிறார்கள். அதுமாத்திரமல்ல, நெய்வேலி காட்டாமணிச் செடிகளும் அந்த வாய்க்காலை அடைத்து இருக்கின்றன. ஆகவே இரண்டையும் தவிர்க்கிற வகையில் புதிதாக அணையை ஏற்படுத்தியும் அந்த நெய்வேலி காட்டாமணியை அப்புறப்படுத்துவதற்கும் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய உணர்வை நான் புரிந்து கொண்டேன். அப்படி கரைகள் பலவீனமாகவும், மோசமாகவும் இருக்கின்ற பொழுதெல்லாம் அதை ரிப்பேர் செய்வதற்கும், காட்டாமணி செடிகளையெல்லாம் அப்புறப்படுத்துவதற்கும் வேண்டிய முயற்சிகளையெல்லாம் அரசாங்கம் மேற்கொள்ளும்.

## தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியத்தில் திருமலைராஜன் ஆற்றில் ரெகுலேட்டர்.

360—(* வினா எண். 7559) **திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் குடவாசல் ஒன்றியத்தில் புதுப்பாகசாலை கிராமத்தில், திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே ரெகுலேட்டர் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடவாசல் ஒன்றியம், திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே, [illegible]யிலே ஒரு ரெகுலேட்டர் கட்டவேண்டுமென்ற கேள்வியை நான் எழுப்பி இருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இயலாது என்று அறிவித்து இருக்கிறார்கள். அதற்குக் காரணம் பாண்டிச்சேரி அரசாங்கம் அதற்கு மறுப்பு தெரிவித்திருக்கிற காரணத்தாலே அப்படி கட்டப்படவில்லை என்றும், அதைப்போல 1924 ஆம் ஆண்டு காவிரி ஒப்பந்தத்தின் பிரகாரம் கர்நாடக அரசு தமிழகத்திற்கு, தொடர்ச்சியாக தண்ணீர் தந்தால் தான், நாம் பாண்டிச்சேரி அரசுக்கு தண்ணீர் தந்தாக வேண்டும். ஆனால் கர்நாடக அரசோ நமக்கு தண்ணீர் தர மறுத்துவிட்டது. எனவே அதை கருத்தில்கொண்டு நடக்க எப்படி கர்நாடக அரசு தண்ணீர் கொடுக்க மறுக்கிறதோ அதைப்போல நாமும் பாண்டிச்சேரி அரசுக்கு தண்ணீர் தரத்தேவையில்லை. அங்கே கிட்டத்தட்ட 15 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் பாதிக்கப்படுகிற காரணத்தால் தஞ்சை மாவட்டத்தின் பெரும்பகுதி அந்த ஆற்றின் மூலமாகத்தான் விவசாயம் நடைபெறுகின்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் . . . (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் எப்படி கர்நாடக அரசாங்கம் நமக்குத் தண்ணீர் கொடுக்கவில்லையோ அதைப்போல பாண்டிச்சேரிக்கு நாம் தண்ணீர் கொடுக்க வேண்டாம் என்று சொன்னார்கள். கர்நாடக அரசு தவறு செய்வதாகச் சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கிறோம். ஆகவே அந்தத் தவறை நாமும் செய்ய வேண்டுமென்று சொன்னால், நாமும் அவர்களும் ஒன்றாகிவிடுவோம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த திட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதல் கொடுக்கவில்லை. கடைமடைப் பகுதியில் இருக்கும் விவசாயிகள் எதிர்க்கிறார்கள். பாண்டிச்சேரி அரசாங்கம் எதிர்த்துக்கொண்டிருக்கிறது. ஆனால் உறுப்பினர் சொல்கின்ற கோரிக்கையை அதிகாரிகளோடு பேசி ஏதாவது ஒரு வழி செய்ய முடிகிறதா என்பதைப் பார்க்கிறேன்.



**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதும்போல காவிரியிலே தண்ணீர் நிறைய வருமேயானால் அந்த ஆறுகளில் வருகின்ற தண்ணீர் ஹெல்ட் ஆப்' ஆகி வாய்க்கால்களின் பாசனத்துக்குச் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. இப்போது கர்நாடக அரசாங்கத்திடமிருந்து போதுமான தண்ணீர் நமக்குக் கிடைக்காத காரணத்தாலே ஆறுகளில் வருகின்ற தண்ணீர் 'ஹெல்ட் ஆப்' ஆகி வாய்க்காலிலே பாய்வது கஷ்டமாக இருக்கிறது. எனவே ஒவ்வொரு ஏரியாவிலும் ரெகுலேட்டர் கட்டி அந்தத் தண்ணீரை தேக்கி பாய்ச்சினால்தான் முறையாக வாய்க்கால்களிலே பாயும். அப்படி இல்லாமல் தாழ்வான அளவிலே தண்ணீர் வருகின்ற காரணத்தினாலே வாய்க்கால்களிலே தண்ணீர் 'ஹெல்ட்' ஆப் ஆகி பாய முடியாத காரணத்தினாலே அவ்வளவு தண்ணீரும் கடலிலே போய்ச் சேருகிறது. எனவே அதை கருத்திற்கொண்டு தஞ்சை மாவட்டத்தில் தேவையான பகுதிகளுக்கு இப்படிப்பட்ட ரெகுலேட்டர்களை கட்டித்தர அரசு முன் வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன். இதில் அதிகாரிகள் இப்படிப்பட்ட ரெகுலேட்டர்களை கட்டத் தேவை . . . (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாகக் கேளுங்கள்; அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரியிலே தண்ணீர் இப்போது அதிகமாக வருவது இல்லை. கடலுக்குச் செல்லக்கூடிய நீர்நிலையும் தற்போது இல்லை. இருந்தாலும் உறுப்பினருடைய கருத்தை நான் புரிந்துகொண்டிருக்கிறேன். அதிகாரிகளோடு பேசி ஏதாவது வழிவகை செய்ய முடியும் என்றால், அதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

[1987 ஏப்ரல் 9

### பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினத்திலுள்ள நசுவினியாறு.

361—(* வினா எண் 8643) **திரு. பி. என். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம், சேது ரோடு முகப்பில் இருந்து கடல்வரை நசுவினியாற்றை ஆழப்படுத்தி கரையைப் பலப்படுத்திட அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): சேது ரோடு முகப்பிலிருந்து கடல்வரை நசுவினியாற்றை ஆழப்படுத்த 3 லட்சத்து 88 ஆயிரத்துக்கு மதிப்பீடுகள் ஒப்பளிக்கப்பட்டு புல்டோசர் மூலமாக வேலை செய்யப்பட்டது. வனப்பகுதிகளில் வேலை செய்ய இயலவில்லை. தற்போது ஒப்புதல் பெறப்பட்டு, மரங்கள் வெட்டுவது குறித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் கோடையில் வேலை செய்து முடிக்கப்படும்.

**திரு. துரை. கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதியில் உள்ள அதிராம்பட்டினம் சேதுரோடு முகப்பில் நசுவினியாற்றில் வெள்ளக் காலத்தில் தண்ணீர் அதிகமாக வரும்போது இந்த ஆறு மேடு இட்டு இருப்பதால் கரைகள் உடைக்கப்பட்டு விடுகின்றன. அதனால் அங்குள்ள பல்வேறு கிராமங்களில் ஆண்டுதோறும் பாழடையும் நிலை ஏற்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 3 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்பீட்டில் பராமரிக்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் வன இலாகாவினுடைய பகுதியில் இந்த ஆண்டு உரிய காலத்தில் அதை செயல்படுத்தி வருகிற ஆண்டுகளில் அப்படிப்பட்ட சீர்கேடுகள் ஏற்படாத அளவுக்கு அதைச் சீர் செய்ய தடுப்பதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்?



1987 ஏப்ரல் 9]

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியது போல் வெள்ளம் வருகிற போது அந்தப் பகுதி பாதிக்கப்படுகிறது என்று அதிகாரிகள் ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அதன் அடிப்படையில் வேண்டிய துரித நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

### வடஆற்காடு மாவட்டம், அணைக்கட்டு ஒன்றியம் அரசம்பட்டு அணைத்திட்டம்.

362—(* வினா எண் 8994) **திரு. த. பழனி மற்றும் திரு. வி. இரா. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்தில் மேல் அரசம்பட்டு அணைத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

**திரு. த. பழனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்தில் மேல் அரசம்பட்டு அணைத்திட்டம் கட்டுகிற திட்டம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட திட்டம் அரசிடம் இல்லை என்று சொன்னாலும் கூட அங்கே இடை இடையே ஆற்றின் குறுக்கே செக் டாம்ஸ் கட்டுகிற திட்டம் அரசின் ஆய்வில் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்று நீர் பிடிப்பு பகுதியைப் பற்றாக்குறை படுகையாக இருப்பதால் அங்கே அணைக்கட்டுகள் கட்டுவது இல்லை என்று அரசு முடிவு செய்து இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய

அந்த கோரிக்கை அரசின் கவனத்தில் இருப்பதால் அங்கே எந்த எந்தப் பகுதியில் செக் டாம் அமைக்க முடியும் என்பதை அரசு பரிசீலிக்கும்.

**திரு. வி. இரா. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம் மிகவும் பின் தங்கிய கிராமங்கள் அடங்கிய பகுதி. அது வறண்ட பகுதி. நிலத்தடி நீர் இன்றி தொடர்ந்து பருவ மழை தவறிக்கொண்டு வருவதால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு நிலங்களை விற்று விட்டு அண்டை மாவட்டங்களுக்கு குடியேறிக்கொண்டு இருக்கிறார்கள். எனவே இந்த அணையை அரசு கட்டினால் 50 கிலோ மீட்டர் பாய்ந்து கிடக்கும் நீர் வளம். சுமார் 7,500 ஏக்கர் நிலங்களுக்கு நீர் வசதி ஏற்பட்டு விவசாயிகள் பயன் பெற வாய்ப்பு இருக்கிறது. எனவே இந்த ஆண்டே 1987-88 ஆம் ஆண்டில் அதை சேர்க்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்னது போல் பாசனத்துறைப் பணிகளை இப்போது செக்டேம் டப்பணியாக அரசின் பரிசீலனையில் இருக்கிறது. 19—6—1981 லேயே பாசனப் பணிகளில் புதிய பாசன திட்டங்கள், கட்டுமானப் பணிகள் எதுவும் மேற்கொள்ளுவதை தடுக்க அரசு முடிவு செய்து இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துக்கு இணங்க இப்போது எடுக்க முடியுமா என்ற முறையில் அதிகாரிகளிடம் சொல்லி ஆய்வு செய்ய முடியுமா என்பதை ஆராய்ந்து பார்க்கலாம்.

**நெல்லிக்குப்பம் தொகுதி, தென்பெண்ணை ஆற்றில் வெள்ளத் தடுப்புச்சுவர்.**

363—(*வினா எண். 9080) **திரு. துரை அன்பரசன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பம் தொகுதியில் தென்பெண்ணை ஆற்று கரை யோர காவனூர், அக்கடவல்லி, கள்ளிப்பட்டு ஆகிய ஊர்களை பாதுகாக்கும் நோக்குடன் கரை ஓரத்தில் வெள்ளத் தடுப்புச்சுவர் அமைத்துதர அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை. மேற்படி கிராமங்களைக் காக்கும் பொருட்டு, தென்பெண்ணையாற்றுக்கு வெள்ளக்கரை 1972-ல் அமைக்கப்பட்டுவிட்டதால் மீண்டும் அமைக்கத் தேவையில்லை.

**திரு. துரை அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற போது 1972-ல் கரைகள் சீரமைக்கப்பட்டு இருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால் என்னுடைய தொகுதியில் இருக்கின்ற தென் பெண்ணையாற்றுக் கரையில் 20 கிராமங்கள், அந்தக் கரையின் ஓரத்தில் வீடுகளைக் கட்டிக்கொண்டு மக்கள் வாழ்கின்ற பகுதிகளாக இருப்பதால் மிகவும் தாழ்ந்த அளவில் ஏறத்தாழ 1 மீட்டர் உயரம் தான் அந்த கரை இருக்கிறது. அதிகாரிகள் சென்று அங்கே ஆய்வு செய்து இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே அதிகார பெரு மக்களை அனுப்பி திரும்பவும் சென்று பார்வையிட்டு நல்ல முறையில் அந்த மக்களுக்கு வெள்ளக் காலங்களில் அந்த கரை உடைபட்டு வீடுகள் எல்லாம் பாதிக்கப்படாமல் இருக்க அவர்களுக்குப் பாதுகாப்புத் தருகின்ற வகையில் அந்த ஆற்றுக் கரையை உயர்த்தித் தருவீர்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன் தொகுதியில் நடந்த பிரச்சினையை மிகப்பெரியதாக சொன்னார்கள். அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும் என்று சொன்னார்கள். இன்னும் சொல்லவேண்டும் என்று சொன்னால், அங்கே போகிற நேரத்தில் அந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்களையும் உடன் அழைத்துச் சென்று அந்தப் பகுதியைப் பார்த்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**அம்பாசமுத்திரம் தொகுதி, விக்கிரமசிங்கபுரத்தில் அழகியன் கால்வாய்.**

364—(* வினா எண் 9669) **திரு. எஸ். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் விக்கிரமசிங்கநாத்தில் உள்ள வடக்கு கோடை மேல் அழகியன் கால்வாய் முழுவதும் சிமெண்ட் பிளேட் போடும் திட்டம் ஏதும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தலைமைப் பொறியாளரின் (ஆய்வு) ஆய்வில் உள்ளது.

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. எஸ். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆம்' என்று சொன்னதற்கு அமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனுடைய மொத்த மதிப்பீடு எவ்வளவு, எப்போது வேலை துவங்கப்படும் என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாய்க்கால்கள் மொத்தம் 11. தாமிரபரணி ஆற்றின் கீழே 8 அணைக்கட்டுகள் இருக்கின்றன. அதிலே 11 வாய்க்கால்கள் இருக்கின்றன. அதில் இது இரண்டாவது வாய்க்காலாகும். இதெல்லாம் உலக வங்கியினுடைய உதவியோடும், மைய அரசுடைய முயற்சியோடும், இதை அரசாங்கம் எடுத்து, இப்போது வேலைகளை துரிதமாக்கிக்கொண்டிருக்கிறது. அநேகமாக 1988 வாக்கில் இது முடியக் கூடிய நேரத்திலே, இதனுடைய எஸ்டிமேட்டைப் பற்றிச் சொல்லமுடியும்.





**திரு. எஸ். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி ஆற்றின் முதல் கால்வாயாக தெற்கு கோடைமேலழகியன் கால்வாயும், இரண்டாவதாக வடக்குக்கோடைமேலழகியன் கால்வாய் இருக்கின்றன. இதன் கீழ் ஏறத்தாழ 10, 15 கிலோமீட்டர் தொலைவிற்கு இந்தக் கால்வாய் சென்று, பல குக்கிராமங்களான, குறிப்பாக, திருவாலீஸ்வரன், மன்னார்கோவில், பிரம்மதேசம், சிவந்திபுரம், கோடாங்குளம் ஆகிய கிராமங்களிலுள்ள நஞ்சை நிலங்களுக்குத் தண்ணீர் செல்லவேண்டும். ஆனால் ஒரு வாரத்திற்கு மூன்று தினங்களுக்கு தண்ணீர் விடப்படுவதால் அடிக்கடி அடைத்துவிடுகிறார்கள். அப்படிப்பட்ட நேரங்களிலே கீழே உள்ள கிராமங்களுக்குத் தண்ணீர் செல்லமுடியாத காரணத்தினால், சிமெண்ட் போட்டால் தான் சீக்கிரம் அவர்களுக்குத் தண்ணீர் செல்ல வாய்ப்பிருக்கிறது. ஆகவே அதையெல்லாம் கருத்தில் கொண்டு, அமைச்சரவர்கள் இந்த ஆண்டு வேண்டிய நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, 11 வாய்க்கால்கள் இருக்கின்றன. ஒவ்வொரு வாய்க்காலும் ஏறத்தாழ 20 கிலோமீட்டருக்கு அதிகமாக இருக்கிறது. பல கோடி ரூபாய் அதற்காக செலவழிக்கவேண்டி வரும். ஆகவே தான் உலக வங்கி உதவியை நாம் நாடிக்கொண்டிருக்கிறோம். ஆகவே வேகமாக, துரிதமாக நடவடிக்கையை இந்த அரசாங்கம் மேற்கொள்ளும்.

**பாரூர் ஏரியிலிருந்து பெனுகுண்டாபுரம் ஏரிக்கு கால்வாய் வெட்டும் பணி.**

365—(*வினா எண் 12850) **திரு. டி. எம். வெங்கடாசலம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாரூர் ஏரியில் இருந்து பெனுகுண்டாபுரம் ஏரிக்கு கால்வாய் வெட்டும் பணி எப்போது முடியும்?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரூர் ஏரியிலிருந்து பெனுகுண்டாபுரம் ஏரிக்கும் கால்வாய் வெட்டும் பணி ஏப்ரல் 1987-க்குள் முடிக்கப்படும்.

[1987 ஏப்ரல் 9

**திரு. டி. எம். வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்வாய் எந்த ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டது? அதற்கு எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய மதிப்பீடு ரூ. 28½ இலட்சமாக இருக்கிறது. இந்தக் கால்வாயை வெட்டும் பணி 1987-லே முடிவதாக முடிவு செய்யப்பட்டு, 2/87-லே முடிப்பதாக இருந்தது. ஆனால் அதிலே பாறைகள் அதிகமாக இருந்த காரணத்தினால் வெடி மருந்து கிடைக்காது இருந்து அந்தச் சூழ்நிலையை கருத்தில்கொண்டு கொஞ்சம் காலதாமதமானது. இருந்தாலும் அதிகாரிகளிடம் சொல்லி, உடனடியாக 2, 3 மாத காலத்திற்குள்ளாக முடிக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது குறித்து.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்தபோது, சபாநாயகராக இருந்த திரு. செல்லபாண்டியன் அவர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப வேண்டுமென்று சொன்னால், கட்சித் தலைவர்கள் மூலமாகத் தான் எழுப்ப வேண்டுமென்று அவை முன்னவர் அவர்கள் சொன்னதாகப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அதைப் பற்றிய விளக்கத்தை நமது அவை முன்னவர் அவர்கள் தெரிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அன்று நான் தெளிவாகக் குறிப்பிட்டதை, சரியாக சில ஏடுகள் வெளியிடவில்லை. அன்றைக்கு நான் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டேன்.





இந்த சட்டதிட்ட விதிமுறைகளிலே எந்தெந்த விதிமுறைகளின் கீழ் எதை எதை எழுப்ப வேண்டுமென்று இருக்கிறது. அந்த விதிமுறைகளுக்கு உட்படாமல் சில எதிர்பாராத நடப்புகள் நாட்டிலே ஏற்படுகின்றபோது அதுபற்றிய விளக்கங்களை உடனடியாகப் பெறுகின்றபோது அதை இந்த அவையிலே எழுப்புகின்ற வாய்ப்பு ஏற்படும். Private Member Question என்ற பெயரில், திடீரென்று எழுப்ப வாய்ப்பு உள்ளது. அதையும் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பலாம் என்று ஒரு முறை ஏற்கனவே மாண்புமிகு திரு. செல்லபாண்டியன் அவர்கள் இருந்தபோது இருந்தது. இப்போதும் முன் வரிசையிலே இருக்கிற தலைவர்கள் அப்படி எழுப்பலாம் என்ற ஒரு முறை இருக்கிறது என்று குறிப்பிட்டேனே தவிர, "Point of order" என்பது எந்த உறுப்பினரும் எந்த காலத்திலும் எழுப்பலாம் என்று விதிமுறைகளில் இருக்கிறது. அதைப்பற்றி நான் குறிப்பிடவேயில்லை. ஒழுங்கு முறையை யார் வேண்டுமானாலும், எழுப்பலாம், எப்போதும் எழுப்பலாம். அதை முடிவு கட்டவேண்டியது அவைத் தலைவர் அவர்கள் தான் தவிர, இதை ஒப்புக்கொள்வதும், ஒப்புக்கொள்ளாமல் இருப்பதும், அதற்குத் தீர்ப்பு அளிப்பதும், அது பற்றிய முழு விளக்கங்களையும் அளிப்பதும் அவரைச் சார்ந்தது என்று தெளிவாக இருக்கிறது. Point of order பற்றி நான் குறிப்பிடவே இல்லை Private Member Question என்பதைப் பற்றி திடீர் திடீரென்று சில பல பிரச்சனைகள், எந்த விதிமுறைகளுக்கும் அடங்காமல் கேட்டு விடுகிறார்கள்—அதைக் கேட்பதற்கு ஒரு கட்டுப்பாடு வேண்டுமென்றுதான் நான் சொன்னேனே தவிர பாயின்ட் ஆப் ஆர்டர் பற்றி நான் பேசவே இல்லை. ஒழுங்குப் பிரச்சினையை யார் வேண்டுமானாலும் கிளப்பலாம். 234 பேர்களும் கிளப்புவதற்கு பேரவை தலைவர் அவர்களுடைய அனுமதி வேண்டும். அவருடைய அனுமதி பேரில் கிளப்ப வேண்டும். தீர்ப்பு அளிக்க வேண்டிய முழுப் பொறுப்பு அவருக்கு உண்டு. (குறுக்கீடு, கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு Point of Information கிடையாது.

## 3. கவன ஈர்ப்பு

### (அ) செங்கற்பட்டு கூட்டுறவு வங்கியில் நடந்துள்ள மோசடி.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, "செங்கல்பட்டு நகர கூட்டுறவு வங்கியில் பொதுமக்களால் அடகு வைக்கப்பட்ட தங்க நகைகள் அனைத்தும் பித்தளை நகைகளாக, வங்கி நிர்வாகம் மாற்றம் செய்துள்ளதால் அந்தப் பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

### அறிக்கை.

திரு. சி. பி. பார்த்தசாரதி என்பவர் செங்கற்பட்டு கூட்டுறவு நகர வங்கியில் 'பி' வகுப்பு உறுப்பினராக இருந்தார். இவர் 14—5—1983-ல் காலமாகிவிட்டார். இவர் செங்கற்பட்டு கூட்டுறவு நகர வங்கியில் சுமார் 100 கிராம் தங்க நகையை அடகு வைத்தார் என்றும், அந்த நகைகளை மீட்டதில் அவைகள் போலி நகைகளாக இருந்தன என்றும், அந்நகைகளை சரிபார்த்து நியாயம் வழங்க அவரின் மனைவி திருமதி செங்கநாயகி அம்மாள் 23—3—1984-ல் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு முறையிட்டார். மேற்படியார் வங்கியின் செயலர் மற்றும் தலைவரிடம் தாம் மீட்ட நகைகள் போலி நகைகளாக இருந்தன வென்று புகார் செய்ததில் மேற்படி பார்த்தசாரதியின் அடமானமுள்ள மீட்காத நகைகளையும் வங்கியினர் சரிபார்த்ததில் 5 உறுப்பினர்களின் நகைகள் போலியென கண்டுபிடிக்கப்பட்டன. மேற்படி செங்கநாயகி அம்மாளின் முறையீட்டை பரிசீலித்து வங்கியின் நடைமுறை குறித்து 1961-ம் வருடத்திய கூட்டுறவு சட்டம் பிரிவு 65-ன்கீழ் விசாரணை மேற்கொள்ளுமாறு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலக தனிப்பணியலுவலருக்கு உத்தரவு இடப்பட்டது. விசாரணையில் வங்கியின் நகை மதிப்பீட்டாளரின் உடந்தையுடன்



5 உறுப்பினர்கள் போலி நகைகள் அதாவது கவரிங் நகைகளை ஈடுகாட்டி ரூ. 14,425க்குக் கடன்பெற்று மோசடி மற்றும் கையாடல் செய்தனர் என்று கண்டுபிடிக்கப்பட்டது. அதன் விவரங்கள் கீழே தெரிவிக்கபபட்டுள்ளன.

(1) திரு. சி. பி. பார்த்தசாரதி (மேற்படி ரெங்கநாயகி அம்மாளின் கணவர்) மற்றும் செங்கற்பட்டு கூட்டுறவு நகர வங்கியில் நகை மதிப்பாளராக இருந்த திரு. கபாலி இருவரும் கவரிங் நகைகளை வங்கியில் ஈடுகாட்டி நகைக் கடன்கள் ரூ. 8,250 பெற்று வங்கியை மோசடிசெய்து கடன் தொகையை கையாடல் செய்துள்ளதாக விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2) திருவாளர்கள் எம். வாசுதேவன், ந. தென்கோவன், டி. ஆர். துளசிராமன், ஏ. பாலசுப்பிரமணியன், வங்கியின் அங்கத்தினர்கள் வங்கியின் நகை மதிப்பாளர் திரு. கபாலி உடன் சேர்ந்துகொண்டு பொன்னால் செய்யப்படாத நகைகளை வங்கியில் ஈடுகாட்டி நகைக்கடன்கள் ரூ. 6,175-க்கு பெற்று வங்கியை மோசடி செய்து கடன் தொகையைக் கையாடல் செய்து உள்ளதாக விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. இவர்கள் மீது வங்கி குற்ற நடவடிக்கை தொடர்ந்தது திரு. ஏ. பாலசுப்பிரமணியன் என்பவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் மூன்றுமாத சிறைத்தண்டனை 27—9—1985-ல் விதிக்கப்பட்டது. மற்றவர்கள் பேரிலும் வழக்கு நடைபெறுகிறது. அவர்கள் பெற்ற கடன்கள் பேரிலும் துணைப் பதிவாளர் செங்கற்பட்டு அவர்களால் டிகிரி கொடுக்கப்பட்டு நிறைவேற்று நடவடிக்கையில் உள்ளது. தொடர்புடைய வங்கி ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர். மேலும் திருமதி ரெங்கநாயகி அம்மாள் கொடுத்த புகார் மனுவின் பேரிலும் விசாரணை நடத்தப்பட்டது. திரு. சி. பி. பார்த்தசாரதி வங்கியில் 1981-ம் ஆண்டில் நகைக் கடன் ரூ. 6,500 பெற்றிருந்ததாகவும், இவர் 14—5—1983-ல் காலமாகிவிட்டதால் இவரது மனைவி திருமதி பி. ரெங்கநாயகி 9—12—1983 அன்று நகைக் கடன்களுக்காக வங்கியில் ரூ. 9,066.45 செலுத்தி அடமான நகைகளை மீட்டதாகவும் விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி நகைகளை மீட்டு சென்ற பிறகு நகைகள் கவரிங் என்று தெரிய வந்ததாகவும், 10—12—1983 அன்று வங்கியின்

மேலாளரிடமும் 12—12—1983 அன்று வங்கியின் செயலரிடமும் வாய்மொழியாகவும், 13—12—1983 அன்று வங்கித் தலைவருக்கு எழுத்து மூலமாகவும், திருமதி பி. ரெங்கநாயகி புகார் செய்துள்ளார். 13—12—1983-ம் தேதியன்றே இது தொடர்பாக செங்கற்பட்டு டவுன் காவல் நிலையத்தில், வங்கியின் நகை மதிப்பாளர் திரு. கபாலி மீது புகார் பதிவு செய்யப்பட்டது. இதன் பேரில் நகை மதிப்பாளர் திரு. கபாலி கைது செய்யப்பட்டு காவல் நிலையத்திற்குக் கொண்டு போகப்பட்டார். காவல் நிலையத்தில் மேற்படி நகை மதிப்பீட்டாளரிடம், திருமதி ரெங்கநாயகியின் தம்பி ரூ. 8,000-க்கு ஆன் டிமாண்ட் பாண்ட் (On Demand Bond) எழுதி பெற்றுக்கொண்டார். வங்கியின் நகை பாதுகாப்பு புத்தகத்தில் 9—12—1983 அன்று நகையை நல்ல முறையில் திரும்பப் பெற்றுக் கொண்டதற்கான கையெழுத்திட்டு, வங்கியிலிருந்து நகைகளைக் கொண்டு போனபிறகு 13—12—1983 அன்று எழுத்து மூலமாக திருமதி ரெங்கநாயகி புகார் செய்துள்ளார் என்றும் விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

3. திருமதி ரெங்கநாயகி வங்கியின் நகை மதிப்பாளர் திரு. இ. கபாலி பேரில் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் 16—12—1983 அன்று சட்டத்தைப் பொறுத்தமட்டில் பிழையுடையதாக இருப்பதாக தள்ளுபடி செய்யப்பட்டது. தற்போது இது தொடர்பாக செங்கற்பட்டு நகரத்தில் மக்களிடையே பதட்ட நிலை நிலவவில்லை. தற்போது நகைக்கடன்களை எவ்வித புகாரும் இன்றி செங்கற்பட்டு கூட்டுறவு நகர வங்கி வழங்கி வருகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த அவைக்குக் கொடுத்திருக்கின்ற இந்த விவர அறிக்கையிலிருந்து திருமதி ரெங்கநாயகி அம்மாள் கொடுத்த புகாரின் அடிப்படையிலேதான் இந்த நகைகள் சரிபார்க்கப்பட்டு குற்றவாளியைக் கண்டுபிடித்து குற்றம் சாட்டியிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. நான் உங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புவது ஏன் இந்த தங்க நகைகளை அவ்வப்போது குறிப்பிட்ட கால இடைவெளியிலே சரிபார்க்கின்ற ஒரு முயற்சியினை இந்த வங்கி எடுத்துக் கொள்ளவில்லை? அப்படி சரிபார்த்திருந்தால் இது முன்னாலே





கண்டுபிடிக்கப்பட்டு இருக்குமே. இந்த விவர அறிக்கையிலிருந்து நகை மதிப்பீட்டாளர்களுடன் சேர்ந்து 4, 5 பேர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. நகை மதிப்பீட்டாளர் தவிர வேறு யாராவது அந்தப் பகுதியில் உள்ள உயர் அதிகாரிகள் அல்லது வேறு யாராவது பொறுப்பிலே இருப்பவர்கள் சரி பார்த்திருப்பார்களானால் உரிய காலத்தில் கண்டுபிடிக்கப் பட்டிருக்குமே. எதிர்காலத்தில் இதுமாதிரி தவறு நிகழாமல் இருப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட மோசடி தன்மைகள் ஏற்படாமல் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை நாம் முறைப்படி எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்காகத்தான் அது உள்ளபடியே பவுன் தானா அல்லது போலியா அல்லது வேறு வகையா என்று கண்டுபிடிப்பதற்காக ஒரு நகை மதிப்பீட்டாளரை எல்லா வங்கி களிலும் நாம் வைக்கிறோம். ஏனென்றால் அதுபற்றிய விவரம் அந்த வங்கியின் முகவர்க்கோ அல்லது அங்கிருக்கின்ற மேலாள ருக்கோ, காசாளருக்கோ தெரியாது என்பதற்காகத்தான் நாம் வைக்கிறோம். அந்த நகை மதிப்பீட்டாளரே மோசடி செய்வா ரானால், அவர் சொல்வதை நம்பவேண்டிய கட்டத்தில் அவர்கள் இருக்கிறார்கள். எந்த நகையாக இருந்தாலும் அவர் மதிப்பிட்டு சொன்னதற்குப் பிறகு ஒரு பையிலே கட்டி அதை சீல் வைத்து விடுகிறார்கள். அதற்குப் பிறகு அதனுடைய சாவி 2, 3 பேர்கள் கையிலே இருக்கிறது. மறுபடியும் எடுத்துக் கொடுக்கும்பொழுது அதை சரிபார்த்து உங்களுடைய நகைதானா என்று ஒப்பிட்டுப் பார்த்து அவர்களும் கையெழுத்து போட்டபின் சரிதான் என்று வாங்கிக்கொள்கிறார்கள். இந்த அம்மையாரும் அப்படித்தான் வாங்கி இருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்கள் பார்த்த பிறகு போலி நகை என்று தெரிகின்றபோது அந்த அம்மையாருடைய கணவனும், அந்த நகை மதிப்பீட்டாளரும் சேர்ந்து அந்த மோசடி செய்து இருக்கிறார்கள் என்று தெரிய வருகின்றபோது இது கண்டுபிடிக்கப்பட்டது. இதையொட்டி வேறு சில நகை களும் இதே மாதிரி மோசடியாக வந்ததன் காரணமாக 5, 6 பேர்கள் இந்தக் குற்றச்சாட்டிற்கு உள்ளாக்கப்பட்டு பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். வழக்கும் தொடரப்பட்டு 3 மாதத் தண்டனை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட

வழக்குகளுக்கு 3 மாத தண்டனை என்பது மிகக் குறைவான தாகும். இப்படி பொது மக்களுடைய சொத்தை மோசடி செய்பவர்களுக்கு இன்னும் கடுமையான தண்டனையைத்தான் வழக்கு மன்றம் வழங்கியிருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று பொது மக்கள் நம்பி நகைகளை தருகின்றபோது அவர்களுக்கு அச்சம் ஏற்படாத அளவுக்கு இதற்குப் பாதுகாப்பு ஏற்பட வேண்டும். அந்த வகையிலேதான் இன்னும் என்னென்னவிதமான கட்டுப்பாடுகள், முறைகள் வகுக்க முடியுமோ அதை வகுத்து அந்த வைப்பை சரி படுத்த வேண்டும் என்ற அறிவுரைகள் எல்லா வங்கிகளுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன. இது பெரும்பாலான இடங்களில் ஏற்படுவதில்லை. குறிப்பிட்ட சில இடங்களில் ஏற்படுகின்ற போது, அதைக் கண்டுபிடிப்பதற்கான சூழ்நிலை ஏற்படும்போது தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

(முற்பகல் 11-10)

## (ஆ) வேதாரண்யம் பகுதியில் உப்பு விலை வீழ்ச்சியால் பாதிப்பு.

* **திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உப்பு உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் இருந்து வரும் தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் தாலுக்காவில் இருக்கும் கோடியக்காடு, வேதா ரண்யம், அகஸ்தியம்பள்ளி கிராமங்களில் திடீரென்று உப்பு விலை வீழ்ச்சி ஏற்பட்டதால், உப்பு உற்பத்தியாளர்கள் தங்கள் தொழிலை நிறுத்தப் போவதால் சுமார் இருபதாயிரம் தொழி லாளர்கள் வேலை வாய்ப்பை இழக்க நேரிடும் நிலை குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.



### அறிக்கை.

தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் பகுதியில் உப்பு விலை கீழ்க்கண்ட காரணங்களினால் வீழ்ச்சி அடைந்துள்ளது.

(1) 1985 ஆம் ஆண்டில் இப்பகுதியில் 1,45,000 டன்கள் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் 1986 ஆம் ஆண்டில் 2,36,000 டன்கள் உப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது 1985 ஆம் ஆண்டின் உற்பத்தியை விட 65 சதவீதம் அதிகமாகும்;

(2) இரயில்வே இலாகா உப்பை ஏற்றிச் செல்வதற்காக கட்டணத்தை 1—12—1986 முதல் அதிகப்படுத்தியுள்ளது. இதனால் வேதாரண்யத்திலுள்ள சிறு உற்பத்தியாளர்கள் அவதிப்படுகின்றனர்;

(3) இரயில்வேயின் உத்தரவின்படி ரேக் லோட்ஸ் (அதாவது ஒரே தடவையில் 45 வேகன்கள்) மூலமாக உப்பை எடுத்துச் செல்வதற்கு உப்பு உற்பத்தியாளர்களால் இயலாத நிலை. மேலும் சாலை வழியாக உப்பை நெடுந்தூரங்களுக்கு ஏற்றிச் செல்வதற்கு நெல் அறுவடை சமயங்களில் போதுமான லாரிகள் வாடகைக்கு கிடைக்கப் பெறாதது;

(4) மேலும், தூத்துக்குடியிலிருந்து 1983 ஆம் ஆண்டு 2,78,000 டன்கள் உப்பு ஏற்றுமதி செய்யப்பட்டது. இது 1986 ஆம் ஆண்டு, 42,000 டன்களாக குறைந்து, இதனால் தூத்துக் குடியில் உற்பத்தி செய்யப்பட்ட உப்பு உள்ளூரிலேயே விற்கப் பட்டதால் உப்பின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது.

ஆனால் இப்பிரச்சனைகளைப் பற்றி அரசுக்கு இதுவரை எந்தவித கோரிக்கையும் வரவில்லை. எனினும், இதில் உள்ள உண்மை நிலையை அறியவும், மேற்கூறிய உப்புத் தொழிலாளர் பிரச்சினைகளை ஆய்வு செய்யவும் வேதாரண்யத்தில் உள்ள உப்பு உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் அப்பகுதியிலுள்ள இரயில்வே இலாகா அதிகாரிகள், நாட்டுடைமை யாக்கப்பட்ட வங்கிகளின் பிரதிநிதிகள் மற்றும் இது சம்பந்த மானவர்களையும் அழைத்து இப்பிரச்சினைப் பற்றி விவாதிக்க உடனே ஒரு கூட்டம் நடத்தும்படி தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இந்தக் கூட்டத்தில்

ஆய்வு செய்வதன் மூலம் பெருமளவுக்கு வேதாரண்யம் பகுதியி லுள்ள உப்பு உற்பத்தியாளர்கள் நஷ்டங்கள் தீர்த்து வைக்கப் படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, இப்போது விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதிலே பல காரணங்கள் சொல்லியிருந்தாலும், அந்த உப்பை வெளி மாநிலங் களிலே ஏற்றுமதி செய்வதற்கு, நாகப்பட்டினம் துறைமுகம் மூலமாக, கப்பல் மூலமாக ஏற்றுமதி செய்வதற்கு அரசு ஏற் பாடு செய்யுமா? அத்துடன்,—ரசாயன உப்பு—மிகவும் பற்றாக் குறையாக நமது மாநிலத்திலே இருக்கிற காரணத்தால், ரசாயன உப்பைத் தயார் செய்ய, அந்தப் பகுதி உப்பு உற்பத்தியாளர் களை ஏதாவது ஊக்குவித்து, உப்பு உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, ரசாயன உப்பு உற்பத்தியில் ஏற்கெனவே இருக்கிற உற்பத்தி யாளர்கள் ஆர்வம் காட்டி வருகிறார்கள். உற்பத்தியிலும் ஈடு பட்டு வருகிறார்கள். சென்ற ஆண்டு 2 இலட்சத்து 78 ஆயிரம் டன் ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்த ஆண்டு, அது 42 ஆயிரம் டன்னாக குறைந்து போய் விட்டது. அதற்குப் பல்வேறு காரணங்கள். லாரி கிடைக்காதது ஒரு காரணம். வெளியிலே அதிக உற்பத்தியானதன் காரணமாக, விலைச் சரிவு ஏற்பட்டு விட்டது. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்களை அழைத்து, உப்பு உற்பத்தியாளர்களை எல்லாம் கூட்டி வைத்து, வேதா ரண்யம் பகுதியிலே ஏன் உப்பு வெளியிலே எடுத்துச் செல்லப் படவில்லை என்பதை ஆராயும்படி கேட்டுக்கொண்டிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

### (இ) கோயம்புத்தூரிலுள்ள வேளாண்மைப் பல்கலைக்கழக ஆசிரியர்களின் கோரிக்கைகள்.

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் பல காலம் வலியுறுத்தி வரும் பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத தால் வேலைநிறுத்தம் செய்ய முற்பட்டிருப்பது குறித்தும்,



இதனால் விவசாய ஆராய்ச்சி மற்றும் பல்கலைக்கழக மாணவர் களுக்கு ஏற்படும் பாதிப்பும் குறித்த" அவசர பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம் கீழ்க்கண்ட எட்டு கோரிக்கைகளை விடுத்துள்ளது:—

(1) மற்ற பல்கலைக் கழகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது போல, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் 1—12—1977, லிருந்து 31—12—1980 வரையில் பணியில் இருக் கின்ற உதவிப் பேராசிரியர்களுக்கு மாதச் சம்பளம் ரூபாய் 1,100 நிர்ணயிப்பது;

(2) 10—1—1979-ல் பணியில் இருக்கும் தமிழ்நாடு பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு பி.எச்டி. பட்டம் பெறுவதற்காக வேண்டி மேலும் 5 ஆண்டுக் காலம் காலக்கெடு அளிக்க வேண்டும் என்பது குறித்தும் மற்றும் 10—1—1979-க்குப் பிறகு பணியில் உள்ள தமிழ் நாடு பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு பி.எச்டி. பட்டம் பெறு வதற்காக வேண்டிய, மேலும் 5 ஆண்டுக் காலம் காலக்கெடு அளிக்க வேண்டும் என்பது குறித்தும்;

(3) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உள்ள எல்லா உதவிப் பேராசியர்களுக்கும் ஆரம்ப நிலை ஊதியமாக ரூ. 1,100 வழங்குவது குறித்து;

(4) பல்கலைக் கழக ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதை 58-லிருந்து 60-க்கு மாற்றி ஆணை பிறப்பித்தல் குறித்து;

(5) பொறியியல் இளநிலை பட்டம் தகுதியுடன் பணியில் உள்ள உதவிப் பேராசியர்களுக்கு ஊதிய உயர்வு அளித்தல்;

[திரு. மா. சின்னராசு] [1987 ஏப்ரல் 9

(6) அரசு ஆணைப்படி பல்கலைக் கழக நூலகங்களுக்கு சம்பளம் நிர்ணயிப்பது ;

(7) வாகன கடன் அளிக்க வேண்டுவது :

(8) தூரம் மற்றும் தொலை தூரத்தில் உள்ள நிலையங்களில் வேலை செய்பவர்களுக்குச் சிறப்புப்படி வழங்குவது குறித்து ;

**கோரிக்கை 1.**

1—12—1977-லிருந்து 31—12—1980 வரையில் பணியில் இருக்கின்ற உதவிப் பேராசிரியர்களுக்கு ரூ. 1,100 சம்பளம் நிர்ணயம் செய்வது பற்றிய கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

**கோரிக்கை : 2**

10—1—1979-ல் பணியில் இருக்கும் ஆசிரியர்களுக்கு பி.எச்டி பட்டம் பெறுவதற்கு வேண்டிய காலக்கெடுவை மேலும் மூன்று ஆண்டுகள் அதாவது 10—1—1987-லிருந்து 9--1--1990 வரை நீட்டித்து அரசு 6—3—1987 அன்று ஆணை பிறப்பித்துள்ளது.

3. கோரிக்கைகள் 3 முதல் 8 முடிய, பல்கலைக் கழகத்தின் ஆய்வில் உள்ளன என்று வேளாண்மைப் பல்கலைக் கழகப் பதிவாளர் கூறியுள்ளார்.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிற விளக்கத்தில் 3 முதல் 8 வரை இருக்கிற கோரிக்கைகள் பல்கலைக் கழகத்தினுடைய ஆய்விலே இருப்பதாகவும், முதல் கோரிக்கையான 1,100 ரூபாய் அடிப்படைச் சம்பளம் என்கிற கோரிக்கை அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்கள். இந்தக் கோரிக்கைகள் 1983-லிருந்து ஆசிரியர்களுடைய சங்கத்தின் மூலம் எழுப்பப்பட்டிருக்கின்றன. மிக நியாயமான முறையில் பல்கலைக் கழகத்திடமும், அரசிடமும் அவர்கள் அக்கோரிக்கையை முன்வைத்து, எந்தக் கால கட்டத்திலும் போராட்டம் என்கிற உணர்வுக்கே தள்ளப்படாமல் அவர்களுடைய நியாய உணர்வை வெளிப்படுத்தி வருகிறார்கள்.



1987 ஏப்ரல 9] [திரு. க. இராசாராம்]

ஆகவே, மற்ற பல்கலைக்கழகங்களோடு இந்தப் பல்கலைக் கழகத்தை ஒப்பிட வேண்டிய அவசியம் இல்லையென்றாலும் கூட, 750 ரூபாய் சம்பளம், ஒரு பி.எச்டி. படித்து முடித்த விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களுக்கு என்பது எந்தவிதத்திலும் நியாயத்திற்கு உட்பட்டதல்ல என்பதை உணர்ந்தும், 1,100 ரூபாய் சம்பளம் என்பது வேளாண் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு நியாயமான ஒன்று என்பதைக் கருத்திலே கொண்டும், ஏற்கனவே இந்தப் பல்கலைக்கழகம் அரசாங்கத்திற்கு இரண்டு கோடி ரூபாய் வருமானமும் சம்பாதித்துக் கொடுக்கிறது என்ற அந்த அடிப்படையிலேயும், 450-க்கும் மேற்பட்ட பேராசிரியர்களுடைய பணியிடங்கள் இந்தப் பல்கலைக்கழகத்திலே காலியாக இருக்கின்றன. வெற்றிடங்களாக இருக்கின்றன என்பதைக் கருத்திலே கொண்டும், முதல் கோரிக்கையை—ஏற்கனவே அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட சங்கத்தோடு பேசியிருக்கிறார்கள்—உடனடியாக நிறைவேற்றிக் கொடுப்பதற்கு ஆவன செய்து போராட்டத்தைத் தவிர்ப்பதற்கான முயற்சியை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, நான் ஆசிரியர்கள் சங்கத்தோடு, அவர்களை எல்லாம் இங்கே அழைத்து நேரிலே பேசியிருக்கிறேன். அவர்களுக்குத் தரப்பட வேண்டிய சம்பளம் 1,100 ரூபாய் என நிர்ணயிப்பதைப் பற்றி அரசுக்கு செய்தி அனுப்பப்பட்டிருக்கிறது. அது தற்போது ஆய்விலே இருக்கிறது. விரைவிலே நல்ல முடிவை இந்த அரசு தரும்.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்றப் பல்கலைக்கழகங்களில் போல் அல்லாமல் இந்தப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் குழுவில் பெரும்பாலும் அரசு அதிகாரிகளே இருக்கிறார்கள். ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளே அதிலே அங்கம் வகிக்கவில்லை. அதனால்தான் கோரிக்கைகளைப் பல்கலைக்கழகத்திடம் நேரடியாகச் சொல்லித் தீர்வு காண முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அரசு சம்பந்தப்பட்ட உறுப்பினர்களாக இருக்கிற அதிகாரிகளை அறிவுறுத்தி, உடனடியாகப் பல்கலைக் கழக அளவிலே அவர்களுடைய 'போர்டு ஆஃப் மானேஜ்மென்ட்'டிலே தீர்க்கக்கூடிய அனைத்து கோரிக்கைகளையும் அங்கேயே தீர்த்துக் கொள்ளவேண்டும் என்ற அறிவுரையை வழங்குமாறு

[திரு. மா. சின்னராசு] [1987 ஏப்ரல்

கேட்டுக்கொள்வதோடு மட்டுமல்லாமல் இதில் அரசின் நிதி குறைவாகத்தான் தேவைப்படுகிறது. மூன்றில் ஒரு பகுதியைத் தான் அரசு செலுத்துகிறது. மீதியை ஐ.சி.ஏ.ஆர். மற்றும் யூனிவர்சிடி கிராண்ட் கமிஷன் ஆகியவை கொடுக்கின்றன. எனவே இதைக் கருத்தில் கொண்டு இந்தக் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசு இன்தப்பற்றி நன்கு ஆய்வு செய்திருக்கிறது. ஆகவே, நியாயமான கோரிக்கைகளைக் குறித்து வெகு விரைவில் முடிவெடுக்க அரசு தயாராக இருக்கிறது. ஆசிரியர்கள் தகுதியை உயர்த்துவது பற்றி நான் ஆலோசனை செய்து தகவல் தரத் தயராக இருக்கிறேன்

## (ஈ) கோட்டூர் நந்தனம் இணைப்புப் பால வேலைகள்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கோட்டு-நந்தனம் இணைப்புப் பாலப் கட்டுகின்ற பணிகள் விரைவில் முற்றுப் பெறாமல் இருப்பதால் அப்பகுதிவாழ் மக்களுக்கு ஏற்படும் இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் பின்வரும் அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

அடையாற்றின் குறுக்கே கோட்டூர்புரம் அருகே டர்ன் புலீஸ் சாலை வழியாக அடையாறு பகுதிக்கு நேரடி போக்குவரத்து ஏற்படும் வகையில் ரூ. 74.30 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்புதல் பெற்று ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இப்பணி செயல்பட்டு வருகிறது. இப்பணி ஜூன் 1981-ல் தமிழ் நாடு கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. கூடுதலான இருவழித்தடம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கும் சேர்ந்து திருத்திய நிர்வாக ஒப்பளிப்பாக ரூ. 157 இலட்சத்திற்கு 1986 ம் ஆண்டு ஏப்ரல்



1987 ஏப்ரல் 9] [திரு. மா. சின்னராசு]

திங்களில் அளிக்கப்பட்டது. இப்பணியின் தொடக்க காலத்தில் இருந்தே பல்வேறு தவிர்க்க முடியாத காரணங்களால் சற்று தாமதமாகச் செயல்பட்டு வருகிறது. காரணங்கள் பின்வருமாறு —

1. நவம்பர் 1983 முதல் மார்ச் 1984 வரை, இதற்கு முன் இருந்திராத அளவு பெய்த மழையின் காரணமாகவும் வெள்ளத்தின் காரணமாகவும் பணி வெகுவாக பாதிக்கப்பட்டது.

2. அஸ்திவாரக் கிணறு அமைப்பில் இடையூறுகளும், மற்றும் கிணற்றில் இருந்து விஷவாயு வெளிப்பட்டமையாலும் கிணறு இறக்கும் பணியும் தடைப்பட்டது.

3. சிமெண்ட் தட்டுப்பாட்டாலும் சிறிது காலம் தடைப் பட்டது. சிமெண்ட் கலவைக்கான சுத்தமான தண்ணீர் கிடைக்காமையாலும் தாமதம் ஏற்பட்டது.

4. உத்திரம் மேல் ஏற்றும் அமைப்பு (Launching Structure) உருவாக்குவதில் தாமதம் ஏற்பட்டதால் முன் வலிவேற்றப்பட்ட கான்கிரீட் (P.S.C.) உத்திரங்களை ஏற்றும் பணி தடைப் பட்டது

தற்போது பாலத்தின் மேற்புறப் பகுதிகளுக்கான (Super structure) பணிகள் முடிவடைந்துள்ளன. 23 உத்திரங்கள் தயாரிக்கப்பட்டு அவற்றில் 10 உத்திரங்கள் முதல் கண்ணில் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. நடுக்கண்ணுக்கான 5 உத்திரங்களை நிலைப்படுத்தும் பணிகள் முடிவுற்று மீதி வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. கோட்டூர்புர பக்க அணுகுசாலை முடியும் தருவாயில் உள்ளது. நந்தனம் பகுதி அணுகுசாலைப் பணி தொடங்க உள்ளது. மேலும் 740-வது மீட்டரில் உள்ள (நந்தனம் பகுதி அணுகுசாலையில்) அமையவிருக்கும் ரூ. 2,73,765 மதிப்புள்ள சிறு பால வேலைக்கான பணியை தமிழ்நாடு கட்டுமான கழகத்திடம் ஒப்படைப்பதற்கான நியமன ஒப்பந்தத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மார்ச் 1986 வரை ரூ. 115.56 லட்சங்கள் இவ்வேலைக்காக செலவு செய்யப்பட்டுள்ளன. நடப்பாண்டில் ஜனவரி 1987 முடிய ரூ. 28.16 லட்சங்கள் செலவு செய்யப்பட்டுள்ளன,

மீதமுள்ள பணிகளையும் வேகமாக செயலாக்கம் செய்து முடிக்க எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

* **திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த விவர அறிக்கையில் 1981 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட அந்தப் பணி இன்றைக்கும் முடிவு பெறாமல் இருக்கிற நிலையை அறிய முடிகிறது. அதற்கான பல காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள், ரூ. 75 லட்சத்தில் நிர்ணயிக்கப்பட்ட அந்தப் பணி தற்போது 115 லட்சம் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பார்த்து கேட்டுக் கொள்கிறேன். சென்னை நகரத்தில் ஓடும் பல்லவன் போக்குவரத்துப் பேருந்துகள் வேகம் குறைவாக ஒவ்வொரு இடத்திலும் நின்று நின்று செல்லுவதன் காரணமாக, ஒரு இடத்தை அடைய எப்படி காலதாமதம் ஆகிறதோ அதைப் போல் அல்லாமல் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்துகள்—எப்படி நெடுஞ்சாலையில் போக்குவரத்து தொல்லைகள் பல இருந்தாலும் வேகமாகச் சென்று குறித்த நேரத்தில் செல்கின்றனவோ அதைப்போல் இந்தப் பணியை விரைவில் முடித்துத் தருவதற்கான வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் போல் வேலைகளைச் செய்ய வேண்டுமென்பதுதான் எங்களுடைய ஆசையும்கூட. ஆனாலும் வேகமாகப் போகிற நேரத்தில் எங்கேயும் இடிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்தப் பணியில் எதனால் இடையூறுகள் ஏற்பட்டன என்பதைப்பற்றி நான் ஏற்கெனவே சொன்னேன். 1983—84-ல் மிக அதிகமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால் அந்தப் பாலத்தை முடிக்க முடியாமல் தாமதம் ஏற்பட்டது. சில காரணங்களாலே தான் அந்தத் தாமதம் ஏற்பட்டிருக்கிறதே தவிர அரசாங்கம் இதில் சுணக்கம் காட்டவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து மீண்டும் வேகமாக எப்படிச் செயல்படுத்துவது என்பதைப்பற்றிய பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிவேகமான முறையில் இந்தப் பணியினை மேற்கொண்டாலும்கூட ஒரு கால அளவுக்குள் இந்தப் பணி முடிக்கப்படவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒரு வரையறை நிர்ணயித்து இவ்வளவு நாட்களுக்குள் முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டால்தான் அந்தப் பணி விரைவாக முடிவடையும் என்று நான் கருதுகிறேன். எனவே அந்தப் பணி நிறைவேறுவதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்று அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பாலம் கட்டப்படுகிற அந்த இடம் ஒரு சிரமமான இடம். மொத்தமாக எல்லா வேலைகளையும் செய்ய சரியான இடம் அங்கேயில்லை. நிறைய சிரமம் இருக்கிறது என்பதை நானே நேரில் சென்று பார்த்தேன். சட்டமன்ற உறுப்பினரும் பார்த்திருக்கிறார். எனவே அதற்கு ஒரு காலத்தைச் சரியாக நிர்ணயிக்க முடியாது இருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து சட்டமன்ற உறுப்பினரையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு அதற்கான ஏற்பாட்டைச் செய்யலாம். அதற்குப் பின்னால்தான் கால அளவை நிர்ணயிக்க முடியும்.

### (உ) சேலம் மாவட்டம் காடையாம்பட்டி ஒன்றியத்திலுள்ள சில கிராமங்களுக்கு மின்கம்பிகள் இழுத்தல்.

* **திரு. கே. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியத்திலுள்ள சேர்வராயன் மலைத் தொடரில் இருக்கும் கண்ணப்பாடி, பூமரத்தூர், வீராச்சியர் ஆகிய கிராமங்களுக்கு ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக தெரு மின் விளக்கு அமைக்க மின் லைன் கொண்டு செல்ல நிலம் சர்வே செய்யும்பொழுது வனத்துறை அதிகாரிகள் தடுத்து வருவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கையொன்றை வைக்கிறேன்:

[வி. வி. சுவாமிநாதன்] [1987 ஏப்ரல் 9

**அறிக்கை.**

காப்புக் காட்டின் வழியாக மின்கம்பி கொண்டு செல்வதற்கு 1980 ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் மத்திய அரசின் முன் அனுமதியைப் பெறவேண்டும். காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கண்ணப்பாடி, பூமரத்தூர் மற்றும் வீராச்சியூர் கிராமங்களுக்கு மின்சார லைன் கொண்டு செல்வதற்கு அனுமதி கோரி விண்ணப்பம் ஏதும் வனத்துறைக்கு வரவில்லை.

கடந்த 31—12—1986 அன்று பொம்மிடி வனவர் மற்றும் பிற பணியாளர்கள் கணவாய்ப்புதூர் காட்டினை தணிக்கை செய்து வரும்போது கண்ணப்பாடி வழியில் தெப்பக்குளம் சரகத்தில் குள்ளன் மகன் இராமசாமி மற்றும் ராமன் மகன் மாரி ஆகிய இருவரும் செடிகளை வெட்டிக் கொண்டு இருந்ததைப் பார்த்து இருவரையும் விசாரித்ததில் கண்ணப்பாடி மற்றும் கிராமங்களுக்கு மின்கம்பி இழுக்க காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தினரின் உத்தரவின் பேரில் செடிகளை வெட்டியதாகத் தெரிவித்து இருக்கின்றனர். அவர்கள் அனுமதி ஏதுமின்றி காட்டினை வெட்டி சுத்தம் செய்ததால் அவர்கள் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு நபர் ஒருவருக்கு ரூ. 25 அபராதம் வசூலிக்கப் பட்டது.

மேலும் கண்ணப்பாடி மற்றுமுள்ள கிராமங்களுக்குக் காப்புக் காட்டின் வழியாக இல்லாமல் மூருவி மற்றும் புத்தூர் கிராமங்களின் வழியாக சுற்றுவழி மூலமாக மின்சார லைன் கொண்டு செல்ல வாய்ப்பு இருக்கிறது. குற்ற நடவடிக்கை எடுத்த பிறகும் கூட இதுவரையில் எந்தத் துறையிலிருந்தும் மின்சார லைன் கொண்டு செல்ல எவ்வித விண்ணப்பமும் வரப் பெறவில்லை என வனத் துறைத் தலைவர் தெரிவித்து உள்ளார்.

**திரு. கே. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிக்கையில் சில தவறான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. சென்ற டிசம்பர் மாதம் பொம்மிடி மின் அதிகாரிகள் அந்த மலைவாழ் கிராமங்களுக்கு மின் வசதி அளிப்பது சம்பந்தமாக மதிப்பீடு செய்து சர்வே செய்யச் சென்ற போது அந்த கிராமத்து மக்களும் உடன் இருந்தார்கள்.



1987 ஏப்ரல் 9] [திரு. கே. அன்பழகன்]

அப்போது பொம்மிடி பாரஸ்ட்டர் மற்றும் வனத்துறை அதிகாரிகள் அவ்வாறு சர்வே செய்வதைக் குறுக்கிடு செய்ததாக பொது மக்கள் நேரில் வந்து முறையிட்டார்கள். என்னிடம் அதை உடனடியாக நான் சேலம் மாவட்ட வன அலுவலரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன். காப்புக் காட்டின் வழியாக மின்சார லைனைக் கொண்டு போகும்போது முறைப்படி மத்திய அரசின் அனுமதியைப் பெறலாம். திட்ட மதிப்பீடு செய்வதற்கு, சர்வே செய்வதற்கு மின்சாரத் துறை அதிகாரிகளை அனுமதிக்க வனத் துறைக்கு அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காப்புக்காடு, (Reserve Forest) வழியாக மின் கம்பி இழுத்துக்கொண்டு போக வேண்டும் என்றாலும், ரோடு போட வேண்டுமென்றாலும் முன் அனுமதியைப் பெற வேண்டும். மாநில அரசுக்கு எழுதி மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டும். வன இலாக்காவிற்கு எந்தத் துறையும் பரிந்துரை செய்யவில்லை என்று அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும், காப்புக் காட்டு வழியாக இல்லாமல் வேறு வழியாகக் கொண்டு செல்லலாம் என்ற தகவலும் தரப்பட்டிருக்கிறது. விரைவிலே வேண்டும் என்றால், காப்புக்காட்டு வழியாக அல்லாமல் மற்ற வேறு வழியாக மின் கம்பிகளை எடுத்துச் செல்லலாம்.

(முற்பகல் 11-20)

**திரு. கே. அன்பழகன்:** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து தர வேண்டும் என்று காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஏற்கெனவே கடிதம் எழுதியுள்ளார். 9—1—1987, அன்று நடைபெற்ற சேலம் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் இது குறித்துப் பிரேரணை கொண்டு வரப்பட்டு விவாதிக்கப் பட்டுள்ளது. மாவட்ட வன அலுவலரும் மத்திய அரசுக்கு அனுமதியைக் கேட்டு, கருத்துரு தயாரிக்க அதற்குத் தேவையான வரைபடங்களை ஒன்றிய ஆணையாளரிடம் கடிதம் எண் 13257/86, நாள் 1—12—1986-ல் கேட்கப்பட்டுள்ளதாக சேலம்

[திரு. கே. அன்பழகன்] [1987 ஏப்ரல் 9

மாவட்ட வன அலுவலர் தெரிவித்துள்ளார். தகவல் வரவில்லை, கோரிக்கை இந்தத் துறைக்கு வரவில்லை என்று சொல்லுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் காப்புக்காடு வழியாகத்தான் அந்தக் கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து தர முடியும் என்று பொம்முடி மின் வாரிய அதிகாரி தெரிவித்திருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மலைவாழ் கிராமங்களுக்கு மின்வசதி கொடுக்க சம்பந்தப்பட்ட மின் வாரிய, வனத்துறை அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிடுவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த தகவலின் பேரில் மின் வாரியத்தோடு தொடர்பு கொண்டு ஏற்கெனவே வனத்துறைக்கு எழுதப்பட்டிருந்தால் அதை மையஅரசுக்கு எழுதி விரைவில் மின் கம்பி எடுத்துச் செல்ல அனுமதி வழங்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

**4. வரவு-செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி.)**
**கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல்.**

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 1,54,56,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

**திரு. சோ. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,54,56,05,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."



1987 ஏப்ரல் 9]

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் நடத்தப்பட்டு வரும் பகுதி நேர கடைகளை முழு நேரக் கடைகளாக மாற்றி அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் வழங்குவதற்கு—அதில் பணிபுரியும் ஊழியர்களை முழு நேர ஊழியர்களாக மாற்றுவது சம்பந்தமான அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,54,56,05,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. சி. பழனிமுத்து :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் பல கிராமங்களில் உள்ள பொது மக்களுக்குக் குடும்ப கார்டுகள் இல்லாமலிருப்பதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,54,56,05,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

**திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தாலுக்கா, திருச்செந்தூர் தாலுக்கா ஆகியவை வறட்சியினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதால், நியாய விலைக் கடைகள் மூலம் கொடுக்கப்படும் உணவுப் பொருள் அளவை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,54,56,05,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆற்ற வேண்டிய உரையை** நூல் வடிவில் அச்சடித்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கி யுள்ளேன். அந்த உரையை நான் இங்கே ஆற்றியதாக எடுத்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துக்களை வழங்க வேண்டுகிறேன்.

* **திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் கோரிய உணவுப் பொருள்கள் வழங்கல் மானியக் கோரிக்கையின்மீது எனது கருத்துக்களை அளிக்க முன் வருகிறேன். ஆங்கிலேயர்கள் ஆண்ட காலத்தில் வெளி நாடுகளிலிருந்து தாராளமாக உணவுப் பொருள்கள் இந்த நாட்டுக்கு வந்துகொண்டிருந்தன. அவர்கள் சென்ற பிறகு உணவு உற்பத்தியைப் பெருக்க பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. மின்சாரத் திட்டங்கள், நீர்நிலைத் திட்டங்கள் ஆகியவற்றை நாம் நிறைவேற்றி, பல காரியங்களைச் செய்தோம். இப்பொழுது கடந்த 2 ஆண்டுகளாக கடும் வறட்சி இருக்கிறது. நான் அமைச்சரவர்களைப் பாராட்டுகிறேன். கொள்கை அறிக்கையை இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். கடும் வறட்சி இருந்தபோதிலும், இங்கு உணவு நிலை சீராகவே இருக்கிறது. அதற்கு நியாய விலைக் கடைகள் காரணமாக இருக்கின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டிலே கடும் வறட்சி இருக்கிறது. ஒட்டப்பிடாரத்தைப் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. தமிழ் நாட்டைப் பொறுத்தளவில் அது அலாதியானது. எங்கு வறட்சி இல்லா விட்டாலும் அங்கு வறட்சி இருக்கும். இன்றைக்கு, குடும்ப அட்டைகளுக்கு உணவுப் பொருள்களை வழங்க நியாய விலைக் கடைகள் நடந்து வருகின்றன. கிராமங்களில் 500 அட்டைகளுக்கு

* * 148—167-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்





ஒரு நியாய விலைக் கடையை ஆரம்பித்திருக்கிறார்கள். நான் கணக்கு பார்த்தேன், சராசரியாக 475 அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடை என்று இருக்கிறது. கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில், இன்னும் இதைக் குறைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்வேன். அவர்கள் எல்லாம் ஏழைகள். வேலைக்குச் செல்லக்கூடியவர்கள். காலையிலே 7 மணிக்கு வேலைக்குச் சென்றுவிட்டு, மாலை 7 மணிக்குத்தான் திரும்பி வருவார்கள். அன்போடும், பணிவோடும் கேட்டுக்கொள் கிறேன், அவர்களால் நியாய விலைக் கடைகளுக்குச் சென்று சாமான்கள் வாங்க முடியுமா ? 3 மைல், 4 மைலுக்கு அப்பாலுள்ள நியாய விலைக் கடைகளுக்குச் செல்ல முடியுமா ? வறட்சியாக உள்ள பகுதிகளில் நியாய விலைக் கடைகளில் பொருள்களை வாங்காமல் இருக்க முடியாது. சட்டங்களும், திட்டங்களும் மக்களுக்காக இருக்க வேண்டுமே தவிர, திட்டத்திற்காக மக்கள் இருக்கக்கூடாது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள் கிறேன். ஆகவே அதைத் தளர்த்தி, 300 அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடையை வறட்சியான இடங்களிலே ஏற்படுத்த முடியுமா என்று பாருங்கள். செய்ய முயலுங்கள், செய்யுங்கள் என்று அன்போடு வேண்டிக்கொள்கிறேன். கொம்பாடி, தளவாய்புரம், கந்தசாமிபுரம், கீழக்குடி ஆகிய கிராமங்களில் உள்ளவர்கள் நியாயவிலைக் கடைகளுக்குப் பல நாட்களாக சாமான்கள் வாங்கச் செல்லவில்லை. அவர்களால் போக முடிய வில்லை. அவர்களுக்குத் தனியாக கடை வேண்டாமா என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசின் இந்திய உணவுக் கழகத்திலே அதிகப்படியாக பச்சரிசி வழங்குகிறார்கள். அந்த இந்திய உணவுக் கழகத்தை நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு வருமானம் உள்ளவர்களுக்கு அரிசி இல்லை என்று வைத்திருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறவர் களெல்லாம் நிலச்சுவாந்தார்கள் அல்ல. அவர்கள் எல்லாம் நிலம் வைத்திருக்கக்கூடியவர்களா ? அவர்கள் நியாய விலைக் கடைகளில் வாங்க வேண்டுமென்று சொன்னால், எங்கேயாவது வெளிச் சந்தையில் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்லு கிறீர்களா ? எல்லோருக்கும் இலவசக் கல்வி கொடுத்தது போல, இந்த விஷயத்திலும் தாராள மனத்தோடு செய்தால் நல்லது என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஆர். எஸ். ஆறுமுகம்] [1987 ஏப்ரல் 9

மேலும் ஒன்றை ஞாபகப்படுத்துகிறேன். அரிசியைப் பற்றி இன்றைக்குப் பலர் குறை சொல்கிறார்கள். நானே பார்த்திருக்கிறேன். நண்பர் வீட்டில் சாப்பிட்டிருக்கிறேன். சாதம் போடுகிறபோதே, 'கப்' என்று வீச்சம் வரும். அந்த அளவுக்கு 'வீச்சம்' இருக்கக் காரணம் என்ன? எத்தனை நாட்களுக்கு அதை சகித்துக் கொண்டிருப்பார்கள்? அதை நீக்க வேண்டாமா?

(முற்பகல் 11-30)

அந்தக் கடமை நமக்கு இல்லையா? கொள்முதல் பண்ணுகிறபோது, நாம் இப்போது அளந்து வாங்குவதில்லை. நிறுத்துத்தான் வாங்குகிறோம். தண்ணீரிலே சிறிது நனைத்தால் எடை அதிகமாக இருக்கிறது என்று தண்ணீரிலே நனைக்கிறார்கள். அப்படியே மூட்டையில் கட்டுகிறார்கள். அதைப் பிரித்து அனுப்புகிறார்கள். அதோடு பல நாட்கள் வைத்திருந்து, அதைக் கடைகளிலே விற்பனை செய்கிறோம். அது நாற்றம் வீசாதா என்று மிகவும் அன்போடு கேட்கிறேன். இதற்கு மாற்றுவழி என்ன என்பதை தயவுசெய்து ஆலோசிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அரிசியாக வாங்கலாமா அல்லது வேறு வழி பார்க்கலாமா என்பதைப் பரிசீலிக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்து அரிசி ஒரு அட்டைக்கு 12 கிலோ என்று வைத்திருக்கிறார்கள். 25, 20, 17, 15 என்று இருந்தது இப்போது 12 கிலோவாக ஆகியிருக்கிறது. இந்த தமிழகத்திலே சிறிது அதிகமாக போடக்கூடாதா? போடுவதற்கு நீங்கள் முயற்சி எடுக்கக்கூடாதா? நமது நாடு, தமிழகம், சோறுடைய நாடு ஆயிற்றே; உணவு உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டே இருக்கிறோம். இப்போது நாட்டிலே வறட்சி இருக்கிறது. இந்த வறட்சி காலத்திலே 20 கிலோ போட முடியுமா என்பதைப் பரிசீலிக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பாமோலின் ஆயில் நியாய விலைக் கடைகளிலே கிடைப்பதில்லை. நியாய விலைக் கடையிலே போய் கேட்டால் சரியாக வருவதில்லை என்று சொல்கின்றார்கள். அங்கே நோக்கினால் வெளி மார்க்கெட்டிலே விற்கப்படுகிறதே. எங்கேயிருந்து அவர்களுக்கு வருகிறது? அதைக் கண்டுபிடிக்கவேண்டாமா?



1987 ஏப்ரல் 9] [திரு. ஆர். எஸ். ஆறுமுகம்]

அதற்கான வழிவகைகளைப் பார்க்கவேண்டாமா? அதை எப்படியாவது கண்டுபிடித்து, ஏழைகளுக்கு அதிகமாக உபயோகப்படக்கூடிய அந்தப் பொருள் கிடைக்க ஆவன செய்ய வேண்டும். அந்த சமையல் எண்ணெய்யை மற்றவர்கள் வாங்கிக்கொண்டு சென்றுவிடுகிறார்கள். இடையிலேயே போய் விடுகிறது. தடுக்க என்ன வழி என்று நீங்கள் கண்டுபிடிக்க முடியாது என்றால் வேறு யார் கண்டுபிடிக்கமுடியும் என்று கேட்கிறேன். ஸ்டோரிலேயிருந்து கடைசியிலே எங்கே போய் விடுகிறது? நியாய விலைக் கடை வரையில் வருகிறது என்ற நிலை இல்லை என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். அதைப்பற்றி கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு ஒட்டப்பிடாரம் தொகுதியில் உணவு உற்பத்தியை பெருக்குவதற்கான மார்க்கத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் காணவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இனிமேல் அங்கே புதிய நதி திட்டங்களை உண்டாக்க முடியாது. அங்கேயுள்ள குளங்களை ஆழப்படுத்தி நிலத்தடி நீர் ஏற்படுத்தினால் நல்ல சாகுபடி செய்ய வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நுகர்வோர் பாதுகாப்புக்கு நல்ல ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மாணவர்களுக்கு அதைப் பாடமாக வைத்திருக்கின்றார்கள். பாதுகாப்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கின்றார்கள். அவர்கள் உணரவேண்டும் என்றும் அவர்கள் அதைப் பற்றி நல்ல விபரங்கள் அறிய ஏற்பாடு பண்ணவேண்டும் என்றும் கருத்தரங்கு வைக்க ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். அதை எங்கும் பரவலாக வைத்து கிராம மக்களும் அது விஷயமாக உணர ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கட்டுப்பாட்டு துணிகள் விற்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஏழைகளுக்காக அந்தத் துணிகள் விற்கப்படுகின்றன. ஆனால் அவை ஏழைகளுக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை. சில இடங்களிலே கொடுக்கின்றார்கள். பல இடங்களிலே யாரோ எடுத்துக்கொண்டு போய்விடுகின்றார்கள். அதையும் நீங்கள் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கட்டுப்பாடற்ற பொருள்கள் கட்டுப்பாடுள்ள பொருள்கள் விற்கும் கடைகளில் கிடைக்கின்றன என்று சொல்கிறார்கள். அந்த

வைத்துக்கொண்டு அவர்கள் தவறு செய்கின்றார்கள். அவர்கள் எந்தெந்த பொருள்களை எல்லாம் விற்கவேண்டும் என்று ஏதாவது லிஸ்ட் கொடுத்து விட்டால் அதிலே தவறு ஏற்படாது. அவர்கள் யாரிடத்திலேயோ பேரம் பேசிக்கொண்டு தரம் குறைந்த பொருள்களை விற்பதாகக் கேள்வி. சர்க்கரை வேண்டுமானால், இதையும் (தீப்பெட்டியையும்) வாங்கிக் கொண்டு போங்கள் என்று சொல்கின்றார்கள். அந்தத் தீப்பெட்டிகளில் 40 குச்சிகள் இருந்தால் 39 குச்சிகள் எரியாமல் இருந்துவிடக் கூடாது, அதையும் கவனித்து நல்லமுறையில் அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நவீன ஆலைகளைப் பல இடங்களில் அமைக்க ஏற்பாடு செய்து கொண்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். அதற்காக அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஐக்கிய நாடுகள் சபைக்குப் போய் பெருமையோடு வந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றையதினம் உணவுத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அமைச்சரவையில் உணவுத் துறைக்கு பொறுப்பேற்றிருக்கிற காரணத்தால் வருங்காலத்திலே உணவுத் துறையிலே இருக்கிற குறைகள் எல்லாம் நீங்கும் என்கிற என்னுடைய நம்பிக்கையைத் தெரிவித்து, வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியையும் கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. க. நரசிம்ம பல்லவன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உணவுத் துறை மானிய கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதலில் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் நாடு இருக்கின்ற நிலையில் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இருப்பிடமும் அத்தியாவசியமானவை என்ற சூழ்நிலையில் அவற்றை எல்லாம் தருகின்ற விதத்திலே அந்த 3 பிரச்சினைகளையும் தீர்த்து வைத்தால்தான் அந்த அரசு ஒரு சுபீட்சமான, ஒரு நல்லாட்சி நடக்கின்றது என்பதற்கு பொருள் ஆகும். அப்படிப்பட்ட தத்துவத்தின் அடிப்படையில்தான் இன்றைய தினம் இந்தத் தமிழகத்தை ஆண்டுக்கொண்டிருக்கின்றார் எங்க





ளுடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். அந்தத் தத்துவத்தின் அடிப்படையில் இன்றைக்கு அவர்கள் தமிழகத்தின் முதல்வராக மிக நல்ல முறையில் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழையெளிய, உழைக்கின்ற பட்டாளி வர்க்கத்தினருக்காக எந்த வகையில் எல்லாம் எவ்வளவு தூரம் உதவ முடியுமோ அந்த வகையில் எல்லாம் உதவ அவர்களுக்கு இலவச வீட்டு மனைகள் வழங்குவதுபோன்ற திட்டங்களை மேற்கொண்டு வருகிறார்கள். வீட்டு மனைகளை இலவசமாக கொடுப்பதோடு மட்டுமல்லாமல் எதிர் காலத்திலே அவர்களுக்கு லட்சக்கணக்கான வீடுகளை கட்டிக் கொடுக்கக்கூடிய நல்ல பல திட்டங்களையும் வகுத்து அளித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் இன்றையதினம் இருக்கக்கூடிய சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, மேலும் நல்ல முறையிலே, இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழையெளிய மக்களுடைய, உழைக்கின்ற வர்க்கத்தினருடைய குடும்பத்திலே இருக்கக்கூடிய இளைய தலைமுறையினர் எல்லாம், குழந்தைகள் எல்லாம் வருங்காலத்தில் நல்லவர்களாக, வல்லவர்களாக வளர வேண்டும் என்பதற்காகவும், இந்த நாட்டுக்கு உகந்தவர்களாக மலர வேண்டும் என்கிற அடிப்படையிலும் பள்ளிக்கூடங்களில் எல்லாம் அவர்களுக்கு சத்துணவுத் திட்டத்தின் மூலம் நல்ல உணவை எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அளித்து வருகிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் அந்த அடிப்படையில் இலவச சத்துணவு அளிப்பதோடு கூடவே ஏழையெளிய தாய்மார்களுக்கும், ஏழை வர்க்கத்தினருக்கும் இன்றையதினம் இலவசமாக சீருடை வழங்கி அந்தத் திட்டத்துக்கு மேலும் சிறப்பு சேர்த்து மிகவும் நல்லமுறையில் செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்தியத் திருநாட்டிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு மிகவும் சிறப்பான முறையில், நியாயமான அடிப்படையில் உணவுப் பொருள்களை மக்களுக்கு வழங்குகின்ற அடிப்படையில் ஏராளமான நியாய விலைக் கடைகளைத் திறந்து

[திரு. க. நரசிம்மபல்லவன்] [1987 ஏப்ரல் 9

வைத்து அதன் மூலம் நல்லமுறையில் பொதுமக்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும், குறிப்பாக கிராமப்புறங்களில் வாழக் கூடிய மக்களுக்கும், அதிலும் குறிப்பாக கிராம மக்களை நாடிச் சென்று, அவர்களைத் தேடிச் சென்று, அவர்களுடைய இல்லங்களிலேயே உணவுப் பொருள்களை வழங்குகின்ற முறையில் இத்துறை மிகவும் சிறப்பாக இன்றையதினம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதன் காரணத்தால்தான் இன்றையதினம் அமுதம் சிறப்பு அங்காடிகள் மூலம் உணவுப் பொருள்களை நியாய விலையில், சிறப்பான முறையில், மக்களின் தேவைக்கு ஏற்றாற்போல், குடும்பக் கார்டுகள் மூலம் மிகவும் நல்ல முறையில் வழங்க முடிகிறது. இன்றைக்கு இந்தத் துறையின் மூலமாக மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் நியாயமான விலையில் சீராகவும், செம்மையாகவும் வழங்கப்படுகின்ற சூழ்நிலை இருப்பதால்தான் தமிழகம் அமைதியாக திகழ்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-40)

அந்த வகையிலே இந்த உணவுப் பொருட்களை வழங்குகின்ற தருணத்தில், புயல், வெள்ளம் போன்ற சேதாரங்கள் ஏற்பட்ட போதும் சரி அல்லது இந்தக் காலத்தில் ஏற்படுகின்ற, இப்பொழுது இருக்கின்ற வறட்சி போன்ற சூழ்நிலைகள் இருந்தாலும் சரி, இப்படிப்பட்ட சூழ்நிலைகளையெல்லாம் சமாளிக்கின்ற விதத்திலே, எந்தச் சூழ்நிலையிலேயும் திறம்பட நடத்திக் காட்டுகின்ற விதத்திலே எது எப்படியிருந்தாலும் மக்களுக்கு எந்தச் சந்தர்ப்பத்தில், எந்தக் காரியங்களை ஆற்றி, அவர்களைத் திருப்தியடையச் செய்ய வேண்டும், நேரடியாக அவர்களுக்குப் பலன்களைக் கொடுக்கின்ற விதத்தில், பணியாற்ற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையிலே, புயல், வெள்ளம் வந்தபொழுதும் சரி, சத்துணவுத் திட்டத்திற்காக இருக்கின்ற அரிசியைக்கூட கடந்த புயல், வெள்ளம் வந்த காலத்திலே அங்கேயிருக்கக்கூடிய அரிசியையெல்லாம் பயன்படுத்தி ஏழை எளிய மக்கள் உண்ணுகின்ற ஒரு திட்டத்தை, அங்கே அளித்திருக்கின்றார்கள்.



1987 ஏப்ரல் 9] [திரு. க. நரசிம்மபல்லவன்]

அதைப்போன்று, இப்பொழுது வறட்சியாக இருந்தாலும் சரி, எந்த இடத்திலேயும் சரி, விளையாது இருக்கக்கூடிய சூழ்நிலையிலேயும் சரி, நியாய விலைக் கடைகளின் மூலமாக அரிசியையும் மற்ற உணவுப் பொருட்களையும் கொடுத்து, கட்டுப்படுத்தி—அனைவருக்கும்—காலையிலிருந்து மாலை வரை உழைத்துவிட்டு 5 ரூபாய், பத்து ரூபாய் சம்பாதிக்கிறான் என்று வைத்துக்கொண்டாலும்கூட, அவன் மூன்று வேளையும் குடும்பத்தோடு உணவை வயிறார உண்ணுகின்ற அளவிற்கு நியாய விலைக் கடைகளின் மூலம் உணவுப் பொருட்களையும், மற்றப் பொருட்களையும் கொடுத்து வருவது தமிழக அரசு என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த அளவிற்கு இருக்கின்றபொழுது, கோதுமைப் பொருட்களை மட்டும் நமது தமிழ்நாட்டில் அதிகமாக விரும்பி உண்ணாத சூழ்நிலை இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. கோதுமைப் பொருட்களை அதிகமாக தமிழகம் விரும்பி, தமிழக மக்கள் விரும்பி உண்ணுவதற்கு ஏற்றவகையில் மத்திய சர்க்கார் அதை இப்பொழுது கொடுக்கின்ற விலையைவிடப் பாதிவிலைக்குக் குறைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த அடிப்படையில், தமிழக அரசுகூட பரிந்துரையை மத்திய அரசுக்குச் செய்து, இருக்கின்ற விலையை ஓரளவிற்குக் குறைத்துக் கொடுத்தால், மத்திய அரசு விரும்பிக் கொடுத்தால், அதைப் பெற்றுக்கொண்டு, இந்தத் தமிழகத்திற்கும், தமிழகத்தில் இருக்கக்கூடிய ஏழை எளிய, உழைக்கின்ற மக்கள் அந்தக் கோதுமைப் பொருட்களை அதிகமாக விரும்பி உண்ணுகின்ற ஒரு பழக்கத்தை உருவாக்கித் தரலாம் என்று நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நியாய விலைக் கடைகளில் சேல்ஸ்மேன் ஆக பணி ஆற்றுபவர்கள்ளை நல்ல முறையிலே கண்காணிக்கின்ற குழுக்களை முடிந்த அளவிற்கு ஆங்காங்கே போட்டு நல்லமுறையிலே இந்த நியாய விலைக்கடைகளைப் பயன்படுத்துவதற்கான முயற்சியை நாம் மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

(திரு. க. நரசிம்மபல்லவன்) [1987 ஏப்ரல் 9

நியாய விலைக் கடைகளுக்குக் கொடுக்க வேண்டிய உணவுப் பொருட்கள் நல்லமுறையிலே அந்த இடத்திற்குப் போய்ச் சேருகிறதா என்பதை நாம் இன்றையதினம் கண்காணிக்க வேண்டுமென்பதையும் இந்தத் தருணத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், பொதுவாக உணவுப் பொருட்கள் பொதுமக்களுக்கு எடைக் குறைவு இல்லாமல் கிடைப்பதற்காக நல்லமுறையிலே அவர்கள் அந்த உணவுப் பொருட்களைக் குறைவு இல்லாமல் மன நிறைவோடு வாங்கிச் செல்வதற்காக பாலிதீன் பைகள் மூலமாக அந்த உணவுப் பொருட்களை ஐந்து பைசா, பத்து பைசா கூட்டிக் கொடுத்தாலும், அதை எடைக் குறைவு இல்லாத வகையிலே பாலிதீன் பைகள் மூலமாகப் பொது மக்களுக்குக் கிடைக்கின்ற முறையிலே கொண்டு வர வேண்டுமென்று என்னுடைய சார்பாக இந்தக் கருத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில், உத்திரமேரூரில் உள்ள நுகர் பொருள் வாணிபக் கழக கோடவுனில் இன்றையதினம் 90 டன் எடை அதிகமாக உள்ள பொருட்களைச் சேமிப்பதற்கு உண்டான வழிவகை இருக்கிறது. மேலும் பல சேமிப்புக் கிடங்குகளைக் கட்டி வைத்திருக்கிறார்கள். அந்த இடத்திலே, அந்தத் தாலுக்காவுக்கு உரிய சத்துணவுப் பொருட்கள் அனைத்தையும், அதாவது அரிசி, மற்றுமுள்ள பாமாயில் போன்றவற்றையும் வைத்துக் கொடுப்பதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் காஞ்சிபுரத்திலேயிருந்து வருகின்றபொழுது சரியான முறையில், சரியான நேரத்தில் அந்த உணவுப் பொருட்கள் அந்தக் கிராமத்திலே இருக்கக்கூடிய சத்துணவு மையங்களுக்குச் சென்று சேர்வதற்குக் கடினமான இருக்கிறது. ஆகவே, உத்திரமேரூரில் உள்ள கோடவுனிலிருந்து சத்துணவுப் பொருட்களை அங்கே கிராமத்திலுள்ள அனைத்து மையங்களுக்கும் கொண்டு சென்று கொடுக்கின்ற ஒரு திட்டத்தை, குறிப்பாக அந்த மாறுதலை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 ஏப்ரல் 9] (திரு. க. நரசிம்மபல்லவன்)

ஒரு ஊராட்சிக்கு ஒரு அமுதம் சிறப்பங்காடி என்ற நிலைமையை மாற்றி, பொது மக்களுக்குத் தொல்லை இல்லாத அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இப்போது ஒரு கிலோ மீட்டர், 2 கிலோ மீட்டர் தூரம் நடந்துசென்று பொருள்களை வாங்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையை மாற்றி, மக்கள் தொகைக்கு ஏற்ப தொலை தூரத்தைக் குறைத்து, உழைக்கின்ற மக்கள், ஏழை எளிய மக்கள் பயன்படுகின்ற வகையில் மேலும் கூடுதலாக இந்த அமுதம் சிறப்பங்காடிகளை ஏற்படுத்த வேண்டும், விஸ்தரித்துக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தற்போது மாதம் ஒன்றுக்கு 12 கிலோ அரிசி ஒரு குடும்பத்திற்கு கொடுக்கின்ற நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி இருக்கிற சூழ்நிலைக்கு ஏற்ப ஒரு நாளைக்கு ஒரு கிலோ அரிசி வீதம் கிடைக்கின்ற வகையில், மாதம் 30 கிலோ அரிசி ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்கின்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக, குறிப்பாக அமுதம் சிறப்பங்காடிகள் மூலமாக தமிழ்நாட்டில் நல்லதொரு உணவுக் கட்டுப்பாடு நிலைமையை உருவாக்கித் தந்து, தமிழ்நாட்டில் நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்கித் தந்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசைப் பாராட்டி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. சோ. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே நுகர்வோர் மானியத்திற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1,54,56,05,000 ரூபாய் கோரியிருக்கிறார்கள். இந்த மானியத்தைக் கேட்கின்ற நேரத்தில் அவர்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒன்றைச் சொல்லியிருப்பதை பார்த்துக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் சொல்வதன் காரணமாக நான் பார்த்த நேரத்தில் குறைந்த விலையில் உணவுப்பொருள்கள் வழங்குவதற்கு 80 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குக் கீழே இந்தக் கடைகளை எல்லாம் பரிசோதிப்பதற்காக டெல்லியிலே இருந்து வந்த பாராளுமன்ற உறுப்பினர்களும், அதிகாரிகளு

டனும் அமைச்சர் அவர்களும் சென்றதாகக் குறிப்பிட்டு, எல்லாக் கடைகளும் பார்வையிடப்பட்டு, அப்படிப் பார்வையிடப்பட்டதில் எல்லாக் கடைகளும் நல்லமுறையிலே நடைபெறுவதாகக் குறிப்பிலே குறிப்பிட்டு, அதற்கு நற்சான்றும் வழங்கியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை எல்லாம் வைத்து நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். அவர்கள் கடைசியில் அதற்குப் பதில் அளிப்பார்கள் என்று கருதுகிறேன்.

ஏழை எளிய மக்களுக்காக ஒதுக்கப்படுகின்ற 80 கோடி ரூபாய் உண்மையிலேயே அந்த மக்களுக்குப் போய் சேருகின்ற நிலைமை இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். நம்முடைய சென்னை மாநகரிலே, அதுவும் ஆளும்கட்சியைச் சேர்ந்த சைதைப் பகுதிக்கு எஸ்டிமேட் கமிட்டி கடைகளை பரிசோதிப்பதற்குச் சென்றபோது, அங்கே 10, 15 கடைகளைப் பார்வையிட்டோம். பார்வையிட நாங்கள் செல்வதற்கு முன்பே அவ்விவரம் கடைகளில் இருக்கின்ற அத்தனை பேர்களுக்கும் அதிகாரிகள் மூலமாக தெரிவிக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. அப்படி இருந்தும் நாங்கள் ஒரு கடைக்குச் சென்று பார்த்தபோது அங்கே சரியான குறிப்புகள் வைக்கப்படவில்லை. ஸ்டாக் புக் சரியாக வைக்கப்படவில்லை. அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர் உட்பட நாங்கள் சென்று பார்த்தபோது வழியிலே ஒரு அம்மையார் கடலை எண்ணெய் வாங்கிக்கொண்டு போனார்கள். அந்த அம்மையாரை மடக்கி, எண்ணெய் வாங்கிய கடைக்கு அழைத்துவந்து, மீண்டும் எடை போட்டுப்பார்த்தபோது 100 கிராம் குறைவாக இருந்தது. இப்படிப் பல்வேறு தவறுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இதை எல்லாம் நான் இங்கே குறிப்பிடக் காரணம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறியிருப்பதுபோல் அல்ல என்பதைத் தெரிவிப்பதற்காகத்தான். அதிகாரிகள் நம்மை எல்லாம் ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். 80 கோடி அல்லது 100 கோடி ஏழை எளிய மக்களுக்காக ஒதுக்குகிறோம் என்றால் அது உண்மையிலேயே அந்த மக்களுக்குப் போய்ச் சேரவில்லை, வரிப் பணம்தான் வீணாக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகவே இதை இங்கே குறிப்பிடுகிறேன்.





எந்தக் கடையும் சரியாக நடைபெறவில்லை. முன் எச்சரிக்கையாகத் தெரிவித்திருந்தும், அவர்கள் எல்லாம் கமிட்டி வரும் என்று தயாராக இருந்தபோதிலும் பல குறைபாடுகளைக் கண்டுபிடிக்க முடிந்தது. இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இங்கே தற்போது மாற்றுத் தலைவராக உட்கார்ந்திருக்கின்ற அவர்களுக்கும் அது தெரியும். திருநெல்வேலியில் ஒரு ரேஷன் கடைக்குச் சென்றோம். அந்தக் கடைக்குச் சென்று குறிப்புகள் எங்கே என்று கேட்டபோது திருநெல்வேலி அல்வாவை எங்கள் கையில் கொடுக்கிறார்கள். அதற்கு என்ன பொருள் என்றால், நாங்கள் என்ன தவறு செய்தாலும் நீங்கள் கேட்காதீர்கள் என்று அவர்கள் சொல்லாமல் சொல்கிறார்கள். அதற்காகத்தான் சொல்கிறோம் எந்த அதிகாரிக்கும் சொல்லாமல் கொள்கைக் குறிப்பில் இருப்பதைப்போல—அவர்களுக்குத் தெரிந்துவிட்டால் அதை அவர்கள் மூடி மறைப்பதற்கு ஏதுவாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்தி எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 11-50)

அடுத்து இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். 80 கோடி, 90 கோடி, 100 கோடி என்று வரிப்பணத்தை நாம் வீணடிக்கிறோம் என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக விலைவாசி ஏறுவதற்கு நாமும் காரணம் என்றுதான், அதிலும் இந்த சிவில் சப்ளைஸ் தான் முக்கிய காரணம் என்று கூறி இதிலே ஒன்றிரண்டை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

ஆடிட் ரிப்போர்ட்டிலே கொடுக்கப்பட்டிருப்பதை மட்டும் நான் சொல்கிறேன். குறுவை நெல் வாங்குவதற்காக கோணிப்பைகள் வாங்குகிற ஒரு திட்டத்தை வகுத்து அதற்காக 1983—84-ஆம் ஆண்டு 30 லெட்சம் கோணிப்பைகள் வாங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது. அந்த வகையில் 30 லெட்சம் கோணிப்பைகளுக்காக டெண்டர் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதாவது

8 ரூபாய் 30 பைசா வீதம் 30 இலட்சம் கோணிகளுக்கு டெண்டர் விடப்பட்டு இருக்கிறது. அதிலே இருதரப்பாரும் ஒத்துக் கொண்டு 20 இலட்சம் கோணிப்பைகளைத்தான் பெற்றிருக்கிறார்கள். அடுத்து இரண்டு மாதங்கள் பொறுத்து அந்த 30 இலட்சத்தில் 10 இலட்சம் கோணிகளை வாங்கவேண்டும் 8 ரூபாய் 30 காசுக்கு. ஆனால் அதிகாரிகள் என்ன செய்தார்கள் என்றால் 4 இலட்சத்து 93 ஆயிரம் கோணிப்பைகளைப் பெற்றிருக்கிறார்கள். அதுவும் என்ன விலைக்கு தெரியுமா? 8 ரூபாய் 90 பைசாவுக்கு. . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் நியாய விலைக் கடைகளை நடத்துவதில் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டினார்கள். அது உண்மையில் கவனிக்கத்தக்கது. அதற்கு நாங்கள் உரிய நடவடிக்கை எடுப்போம். ஆனால் அப்படிப் பேசிக்கொண்டு வருகிறபோது ஆடிட் ரிப்போர்ட்டில் வருவதையும் எடுத்துச் சொல்கிறார்கள். ஆடிட் ரிப்போர்ட்டில் வருவது டிப்பார்ட்மென்ட்டுக்குப் போகிறது. பின்னர் மறுபடியும் சட்ட மன்றத்தில் இருக்கக்கூடிய Public Accounts Committee கேட்கிறது. அவர்களுக்குத் திருப்தி இருந்தால் அதை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். திருப்தி இல்லை என்றால் அதனை அந்த பொதுக் கணக்குக் குழு சட்டமன்றத்திற்குக் கொண்டு வருகிறது. ஆகவே அதிலே வருகின்ற Audit Objection என்பது ஒவ்வொரு துறைக்கும் வருகிறது. துரதிருஷ்டவசமாக அதை எடுத்து வைத்துக்கொண்டு பேசுவதையே ஒரு முறையாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே சபையினுடைய நேரத்தை வீணாக்கவேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். உருப்படியாக இருக்கக்கூடிய குறைகளைச் சொன்னால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்க முடியும். ஒரு Audit Objection எடுத்தால் அதற்கு Department reply தான் வாங்க முடியும். நான் எப்படி அதற்குப் பதில் சொல்ல முடியும். குறைபாடுகள் இருக்கலாம். அவை அதிகாரிகள் செய்கிற குறைகளாக இருக்கலாம். அவற்றை நிவர்த்தி செய்வது நிர்வாகத்தினுடைய கடமை. ஆனால் இந்தக் குறைகளைப் பொறுத்தவரையில்





கண்காணிப்பதற்கு வேறு வாய்ப்புகள் இருப்பதன் காரணத்தால் இந்த நேரத்தினை மற்ற காரியங்களுக்கு பயன்படுத்துவது பொருத்தமாக இருக்குமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை):** மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மா. இராமச்சந்திரன் அவர்கள் பல கமிட்டிகளிலே உறுப்பினர்களாக இருப்பவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆடிட் ரிப்போர்ட்டைப் பொறுத்தவரையில் மேல் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது. அதுபற்றி கமிட்டியிலே ஆராய்கிறோம்; தொடர் நடவடிக்கை இருக்கிறது. அவ்வாறு அதற்கு மேல் நடவடிக்கைக்கான வாய்ப்பு இருப்பதால் இங்கே மற்றவற்றைப் பேசுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். ஆடிட் ரிப்போர்ட்டை வைத்துக்கொண்டு குற்றச்சாட்டு சொல்லவேண்டியதில்லை. அந்தக் குழுக்களிலே நாமே உறுப்பினர்களாக இருக்கிறோம். அனைத்துக் கட்சியினைச் சேர்ந்தவர்களும் உறுப்பினர்களாக இருக்கிறோம். எனவே அதுகுறித்து பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதிலே இருக்கிற நிலைமைகளைக் கண்டு பிடித்து நாம்தான் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும். எனவே அந்த வகையில் மேல் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் சொல்வதுபோல் உபயோகிக்கக்கூடாது என்பதல்ல. ஆடிட் அப்ஜக்ஷன் இருந்தால் உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து துறையிலிருந்து

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 ஏப்ரல் 9

பதிலுரை வாங்குவது நல்லது. ஆடிட் அப்ஜக்ஷன் கிளப்பப் பட்டுவிட்டால் அந்தந்தத் துறையினர் பதிலுரை தநதாகவேணடும அதுபற்றிக் கவனித்துக்கொள்கின்ற வகையில் பொதுக் கணக்குக குழுவிலே எல்லா கட்சி உறுப்பினர்களும இருக்கிறார்கள். அவர்கள் கட்டாயம் கேட்டுத் தீர வேண்டும். குற்றம், குறைகள் இருந்தால் அவற்றைச் சுட்டிக்காட்டி நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன்பின்னர் அது அவைக்கும் வருகிறது. அதற் கிடையில் கேள்வியே கேட்கக்கூடாது என்று சொல்லவில்லை. அதற்காக இவ்வளவு நேரத்தை எடுத்துக்கொண்டு சொல்லி கடைசியில் ஒருமணி அல்லது இரண்டு மணி அளவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது இந்தக் குற்றச்சாட்டு களுக்கான பதில் உடனடியாகச் சொல்கின்ற அளவில் வராது. குற்றச்சாட்டுகள் மட்டும் நின்றுவிடும். பதில்கள் வராது. இவற்றை எல்லாம் கவனித்துக்கொள்வதற்கு அதாவது ஆடிட் அப்ஜக்ஷன் இருந்தால் அது குறித்துக் கவனித்துக்கொள்வதற் குக் குழுக்கள் இருக்கின்றன; அவற்றிலே அதற்கான வாய்ப்புக் களும் இருக்கின்றன. அங்கே உரிய பதில்களைச் சொல்லியே தீரவேண்டும்; குறைகள் இருந்தால் களையப்பட வேண்டும். அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருப்பதன் காரணத்தால் தான் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இதனைச் சொன் னார்களே தவிர குற்றங்களை எடுத்துக் காட்டக்கூடாது என்பதல்ல. அதைப்போன்று கேள்விகள் வருமேயானால் கட்டாயமாக பதில் சொல்லலாம். ஒரு நாள் அவகாசம் தந்தால் கூட பதில் சொல்லிவிடலாம், அல்லது இருப்பதை வைத்துக் கொண்டு கூட பதில் சொல்லிவிடலாம். குறிப்புகளைப் பார்த்து சொல்லி விடலாம். அதனால் நேரம் விரயமாகிறது; அதில் போக வேண்டாம் என்பதற்காகச் சொன்னோமே தவிர, அதையே திரும்ப ரிபீட் பண்ண வேண்டாம் என்பதற்காகச் சொன்னோமே தவிர, அதைச் சொல்லவேண்டாம் என்பது அல்ல.



1987 ஏப்ரல் 9]

திரு. கு. ரமணி: அவர் விளக்குவது புரிகிறது. எடுத்துச சொல்லக கூடாது என்று சொல்லவில்லை. அதற்கு நேரம இல்லை என்றாலும், அநத விஷயஙகள எலலாம சமபநதபபட்ட கமிட்டியிலே பரிசீலனை செய்யப்பட்டு, கேள்விகளுக்கு பதிலும் வாங்கி அங்கேயே அது முடிவிற்கு வருகிறது. அதற்குப் பிறகு தான் இங்கே அறிக்கை வைக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அப்படிக் கூட இல்லை. தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் நாம் ஒவ்வொரு துறைக் கும் மானியம் தருகிறோம். அந்தத் துறை அதை ஒழுங்காக செலவழிக்கிறதா என்று பார்ப்பதற்காக ஒவ்வொரு மாநிலத்தி லும் அக்கவுன்டண்ட் ஜெனரல் இருக்கிறார்கள். அவர்கள் முதலில் பார்த்து ஆடிட் அப்ஜெக்ஷனை எழுப்புகிறார்கள். அதற்குத் துறை பதில் தருகிறது. அது திருப்தி இல்லை என்றால் பொதுக் கணக்குக் குழுவிற்கு வருகிறது. குழுவிலே எல்லாக் கட்சி உறுப்பினர்களும் இருக்கிறார்கள். அவர்கள் அதிகாரிகளை நேரிடையாக விசாரிக்கிறார்கள். நானே மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக 67—68-ல் இருந்து பார்த்திருக்கிறேன். அதற்குப் பிறகு குழுவின் ரிப்போர்ட் இந்த அவைக்கு வருகிறது. அதை எடுத்து இன்ன திட்டத்தை துறை சரிவர செய்யவில்லை என்று பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி சொல்லியிருக்கிறது என்று எடுத்துக் காட்டினால் அதற்கு பதில் சொல்வது சுலபமாக இருக்கும். வெறும் ஆடிட் அப்ஜெக்ஷனை வைத்து சொன்னால் பதில் சொல்ல இயலாது. துறையினர் ஏராளமான காரியங் களைச் செய்கிறார்கள். குறிப்பிட்ட அந்த அப்ஜெக்ஷனைச் சொல்லுகிறபோது அதற்கு பதில் இங்கே கிடைக்காது என்பதற் காகச் சொன்னேனே தவிர வேறு அல்ல.

[1987 ஏப்ரல் 9

**திரு. கு. ரமணி:** அவர்தான் இப்போது நேரத்தை எடுத்துக் கொள்கிறார். மாற்றுத் தலைவர் அவர்களே, நீங்களும் நாங் களும் சேர்ந்து கமிட்டியிலே உட்கார்ந்து இதையெல்லாம் பார்த் திருக்கிறோம். அப்படி இந்த அவைக்கு முன்னாலே வைக்கக் கூடிய கமிட்டியின் ரிப்போர்ட்டை இதுவரையில் விவாதித்தது கிடையாது. விவாதிக்கவில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை):** அந்த கமிட்டியின் ரிப்போர்ட்டை சுட்டிக் காட்டி பேசலாம். ஆடிட் அப்ஜெக்ஷன் என்றால் பதில் கிடைக்காது என்பதற்காகச் சொல் லுகிறார். ஆடிட் அப்ஜெக்ஷனை வைத்து பேசக்கூடாது என்று அதற்குத்தான். . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, தவறு என்று கூட சொல்லவில்லை. ஆடிட் அப்ஜெக்ஷனில் இண்டிவிஜுவலாக ஒவ்வொன்றும் வரும். அதற்குப் பதில் சொல்ல முடியாது. ஏதோ எடை குறைவாக இருந்தது பார்த் தோம் என்றெல்லாம் சொன்னார்களே அது மாதிரி சொல்லலாம், ஆடிட் அப்ஜெக்ஷனில் இருக்கும் இண்டிவிஜுவல் கேஸ் எடுத்துப் பேசவேண்டாம் பதில் கிடைக்காது என்று சொன்னோம். . .

**திரு. கு. ரமணி:** நான் சொல்வதை முழுவதும் கேட்டுவிட்டு பதில் சொல்லுங்கள். பிரச்னை என்னவென்றால், ஒரு ஆடிட் அப்ஜெக்ஷன் வந்தால், ஒரு வருடம் முடிந்து அடுத்த வருடத் திற்கு கூட போய்விடுகிறது. நீங்கள் சொல்வதை இதனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** சொல்வதைப் பற்றி ஆட்சேபணை இல்லை, மாற்றுத் தலைவர் அவர்களே, சொன்னாலும் எங்களுடைய நிலைமை என்ன என்பதை இங்கே விளக்கி விட்டோம். சொல்வது பற்றி ஆட்சேபணை இல்லை.

**திரு. சோ. மா. இராமச்சந்திரன்:** மாற்றுத் தலைவர் அவர் களே, நாங்கள் சொல்வதற்குப் பதில் இருந்தால் நீங்கள் சொல்ல லாம். இல்லையென்றால் நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 9] [திரு. சோ. மா. இராமச்சந்திரன்]

(நண்பகல் 12-00)

ஆடிட் அப்ஜெக்ஷனிலே இந்த நிகழ்ச்சி மட்டும் அல்ல. இன்னொன்றும் இருக்கிறது. வேண்டுமானால் இதை இதோடு விட்டு விட்டு, அதற்குப் போகிறேன். கோணிப்பையை விட்டு விட்டு தேங்காய் எண்ணெய்க்குச் செல்கிறேன். . . மத்திய அரசு 1,050 டன்கள் தேங்காய் எண்ணெயை நமக்கு 23 ரூபாய் வீதம் போக்குவரத்துச் செலவு உள்பட வைத்து அனுப்பியிருக் கிறது. பம்பாயிலிருந்து வருவதற்கு அந்தப் போக்குவரத்துச் செலவை மத்திய அரசே ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதை ரூ. 24.55-க்கு விற்பதற்கு இந்த அரசாங்கத்திடம் அனுமதி கேட்டி ருக்கிறார்கள். அதற்கு அரசாங்கம் 23 ரூபாய் 75 காசுக்குத் தான் விற்கவேண்டுமென்று கட்டளையிட்டு இருக்கிறார்கள். இப்படிச் சொன்னவுடன் அவர்கள் எவ்வளவு விற்றிருக்கிறார்கள் என்றால் இலாபத் தொகை குறைச்சலாக இருக்கிறது என்ற காரணத்தினாலோ அல்லது வெளிமார்க்கெட்டில் அதை விற்பனை செய்யாவிட்டால் விலை அதிகமாக ஏறும், அதனால் தனக்கு ஏதாவது ஆதாயம் கிடைக்கும் என்பதற்காகவோ இப்படி செய் தார்களா என்று தெரியவில்லை. விற்றது எவ்வளவு தெரியுமா? 23 ரூபாய் 75 காசுகளுக்கு விற்பனை செய்ய வேண்டுமென்று அரசு நிர்ணயம் செய்தும் அந்த 1,050 டன்கள் தேங்காய் எண்ணெயை விற்பனை செய்யாமல் 271 டன்கள் தான் விற்பனை செய்திருக் கிறார்கள். மீதியை அங்கே ஸ்டாக் செய்ததன் காரணமாக தனியார்களிடத்தில் அதிக விலை கொடுத்து வாங்கு வதற்கு ஏதுவாகிறது; இதைக் குற்றச்சாட்டாக எதிர்க் கட்சியில் சொல்கிறோம் என்றால், அதிலே அமைச்சர் அவர்கள் ஊன்றி கவனித்து, அரசாங்கத்திற்கு உட்பட்டவர்கள் மீது ஏதாவது நடவடிக்கையெடுத்து இருக்கிறார்களா இல்லையா என்று சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதிலே

வேடிக்கை என்னவென்றால் விற்ற தேங்காய் எண்ணெய் 271 டன்கள், விற்பனை செய்யாமல் நிலுவையில் நிறுத்தப்பட்டது 776 டன்கள். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் வெளி மார்க்கெட்காரர்களுக்கும் இவர்களுக்கும் தொடர்பு இருந்து உடந்தையாக இருந்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

அதைப்போல சிமெண்ட் தொழிற்சாலையில் முன்பணம் வைப்பது நமக்கெல்லாம் தெரிந்த ஒன்று. அதை 'எர்னஸ்ட் மணி' என்று சொல்வார்கள். அதற்கு 14 சதவீதம் வட்டி தரவேண்டுமென்று டெல்லி சர்க்காரே ஆணையிட்டுள்ளது. அப்படி டெல்லி சர்க்கார் ஆணையிட்டிருந்தும் கூட தனியார் துறையில் இருக்கிற பாக்டரிகள் எல்லாம் அதைக் கொடுக்க மாட்டோம் என்று சொன்னாலும் கூட டெல்லி சர்க்கார் வற்புறுத்தலைக் காட்டியாவது இதைப் பெற்றிருக்கலாம். அதையெல்லாம் பெறாது, 15·60 கோடி ரூபாய் முன்பணமாக அரசாங்கத்தின் பணம் இருந்தும் வட்டி பெறாத காரணத்தால் நமது சர்க்கார் எவ்வளவு இழந்திருக்கிறது என்றால் 10.93 லட்சம் ரூபாய் வட்டிப் பணத்தை நாம் இழந்திருக்கிறோம். அதன் விளைவு எங்கே போய் சேர்கிறது என்றால் 80 கோடி ரூபாய் ஒதுக்குகிறோமே அதிலே தான் போய் சேர்கிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போல நியாய விலைக் கடைகள் கிராமங்களில் இருப்பதற்கு இன்ஷூரன்ஸ் செய்யப்படுகின்றன. ஏதாவது பழுதடைந்தால் நஷ்டஈடு பெறுவதற்கு ஒரு கடைக்கு 5,000 ரூபாய் அளவிற்கு இன்ஷூரன்ஸ் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு ஏதாவது பாதகம் ஏற்பட்டால் உடனடியாக இரண்டு நாட்களுக்குள் மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி, அந்த அதிகாரிகள் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளுக்குத் தெரியப்படுத்தினால், அங்கேயிருந்து அதற்குண்டான பணம் கிடைக்கும் என்றுதான் சட்டத்திலே இருக்கிறது. அதையெல்லாம் 5, 6 ஆண்டுகள் வரையில் அறிவிக்காத காரணத்தால் 5.34 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாக இங்கே தெரிவித்திருக்கிறார்கள். இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்தோ,



தெரியாமலோ இந்த நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. நான் உங்கள் மீது குற்றச்சாட்டுச் சொல்வதாகக் கருத வேண்டாம். இந்தப் பிரச்சினைகள் குறித்து மக்கள் மிகவும் கொதிப்படைந்திருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் எவ்வளவு சொன்னாலும் கடைசியில் சொல்கிற போது இந்த உணவுப் பிரச்சினையில் நாம் எவ்வளவு பின்தங்கி இருக்கிறோம், எவ்வளவு ஊழல்கள் இருக்கின்றனவென்று அவர்களும் சொல்லாமல் சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

* **திரு. மு. ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களால் இங்கே தாக்கல் செய்யப்பட்டுள்ள மானியக் கோரிக்கை எண். 35—நுகர்பொருள் வழங்கல் மீது ஒருசில கருத்துக்களைக் கூறுகிறேன். கடந்த காலத்தில் தமிழகத்தில் அரிசிக்காக மக்கள் எவ்வளவு இன்னல்களை அடைந்தார்கள் என்பதை இந்த நாடு நன்றாக அறியும். 20 ஆண்டுகளுக்கு முன்பு—அன்றைக்கு—இன்றுள்ள ஜனத்தொகையில் பாதி கூட இருக்காது, அன்றைக்கு மக்கள் தொகையும் குறைவு, தமிழகத்தினுடைய விளைச்சல் நிலத்தினுடைய அளவும் குறைவு. அப்படிப்பட்ட நிலையிலேயே மக்கள் அரிசி கிடைக்காமல் அல்லலுக்கு ஆளாக்கப்பட்டு அலைக்கழிக்கப்பட்ட நிலையை இந்த நாடு அறியும். அன்றைக்கு வாரத்திற்கு ஒருநாள் உண்ணாநோன்பு இருக்கச் சொன்னார்கள். ஏழு நாட்களும் சாப்பிட்டால் அரிசியினுடைய கையிருப்பு குறைந்துவிடும் என்று காரணம் சொல்லி, உண்ணாநோன்பு இருக்கச் சொன்னார்கள். எலிக் கறியைக் கூடச் சாப்பிடச் சொன்னார்கள். பருத்திக் கொட்டையை அன்றைக்கு பருகச் சொன்னார்கள். இப்படி கடந்த காலத்தில் இருந்த ஆட்சியாளர்கள் எவ்வளவு தூரம் இந்த உணவு நிலைமையை சமாளிக்க முடியாமல், கஷ்டப்பட்டார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒரு

காலத்தில் இந்த அரிசியால் அரசியல் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது தமிழகத்தில். ஆனால் அதற்குப் பிறகு 10 ஆண்டுக் காலமாக ஆட்சியில் இருந்தவர்கள், இந்த உணவுப் பொருளில் நிலையான கொள்கையைக் கடைப்பிடித்தார்களா என்றால், இல்லை. 1973-74 ஆம் ஆண்டில் உணவுப் பொருட்களுக்கு நாட்டிலே தட்டுப்பாடு ஏற்பட்ட நிலையில், அவைகளுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த எலிக்கறியைச் சாப்பிடச் சொன்னபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. மு. ஆறுமுகம்:** எங்கிருந்தாலும் எலிக்கறியைச் சாப்பிடச் சொல்வது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. அங்கிருந்தாலும், இங்கிருந்தாலும், எலிக்கறியை நான் சாப்பிட மாட்டேன். மாண்புமிகு உறுப்பினர் சாப்பிட்டால், அதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

**திரு. எம். செல்லமுத்து:** மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எலிக் கறியை தின்னக்கூடிய மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆட்டுக்கறியை விட உயர்வாக மதித்து, எலிக் கறியை சாப்பிடக்கூடியவர்கள் எல்லாம் இருக்கிறார்கள் என்பது கனம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமா என்று நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. மு. ஆறுமுகம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, எலிக் கறியைத்தின்பதை நான் இழிவு என்று சொல்லவில்லை. உணவை மக்களுக்கு சரிவர வழங்காமல் ஒரு ஆட்சியினுடைய அமைச்சர், எலிக்கறியைத் தின்னுங்கள் என்று சொன்னாரே என்பதற்காக இதை இடித்துச் சொன்னேனே ஒழிய, பழித்துச் சொல்லவில்லை.





**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவருக்கு பழக்கம் அவர் சொன்னார். சிலர் ஆட்டு இறைச்சியைச் சாப்பிடுகிறார்கள். இன்னும் சிலர் கோழிக் கறியைச் சாப்பிடுகிறார்கள். சிலர் கொக்கு சாப்பிடுகிறார்கள். இப்படி வகை வகையாகச் சாப்பிடுபவர்கள் இருக்கிறார்கள். அதைப்போல, வரப்பு எலி என்று சொல்வது சாப்பிடக்கூடிய ஒன்று மட்டும் அல்ல, கிடைக்க முடியாத ஒரு உணவாகவும் இருக்கிறது. அது பல வியாதிகளைப் போக்கக்கூடிய ஒன்றாக இருக்கிற காரணத்தாலே, அதைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைக் குறை கூற வில்லை என்றால், அதற்காக நான் வரவேற்பு தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. மு. ஆறுமுகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அப்போதே சொன்னேன், இழிவாகச் சொல்லவில்லை என்று. உணவிற்காக அப்படிப்பட்ட ஒரு நிலையை ஏற்படுத்தினார்கள் என்று சொன்னேன். அது சிலருக்குப் பழக்கம் என்று சொன்னார்கள். உறுப்பினருக்குப் பழக்கமாக இருந்தாலும், வழக்கமாக இருந்தாலும், அதை அவர்களே வைத்துக்கொள்ளட்டும், எங்கள் மீது திணிக்காதீர்கள்.

1973-74 ஆம் ஆண்டில் தமிழகத்தில் கடுமையான உணவுப் பஞ்சம் நிலவிய நேரத்தில், கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. தமிழகத்தினுடைய உணவு தானியங்கள், தமிழகத்தினுடைய எல்லையிலிருந்து வெளி மாநிலத்திற்குப் போகக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டு இருந்தது. ஆனால் அன்றைய ஆட்சியாளர்கள்—1973-74 ஆம் ஆண்டு—திடீரென்று தடையை நீக்கி, ஒரே நாளில் தமிழகத்திலிருந்து பல்லாயிரக்கணக்கான டன்கள் உணவு

(திரு. மு. ஆறுமுகம்) [1987 ஏப்ரல் 9

தானியங்கள் அண்டை மாநிலங்களுக்குப் போவதற்கான சூழ் நிலையை உருவாக்கி, அதன் மூலம் தமிழகத்தில் ஒரு செயற்கையான பஞ்சத்தை, தட்டுப்பாட்டை உருவாக்கினார்கள். இதை இங்கே உள்ள அனைவரும் அறிவார்கள். ஆனால் கடந்த 10 ஆண்டுக்காலத்தில், 1977 ஆம் ஆண்டு முதல் 1987 ஆம் ஆண்டு வரை . . . (குறுக்கீடு).

(பிற்பகல் 12-10)

**திரு. அ. மலர்மன்னன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * * (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சர்க்கார் உத்தரவு போட்டதை அவர் சொல்கிறார். ஆளைப்பற்றி அவர் சொல்லவில்லை, சர்க்கார் உத்தரவு போட்டதைத்தான் சொல்கிறார். இது எப்படி ஒழுங்குப் பிரச்சினையாகும்? வேண்டாம் அதை நீக்கி விடுங்கள். பதில் சொல்லும்போது உங்கள் பிரச்சினைகளை நீங்கள் சொல்லுங்கள். தனிப்பட்ட ஆளைப்பற்றி அவர் பேசவில்லை. பிரச்சினைகள் என்ன என்பதைப்பற்றி பேசினார்கள். பிரச்சினைகள் அப்படி இல்லை என்று அதற்கு நீங்கள் விளக்கம் சொல்லுங்கள். அந்தக் காலகட்டத்தில் இருந்த விலைவாசியைப்பற்றி சொன்னார்கள். இல்லையென்று பதில் சொல்லுங்கள். நான் ரெக்கார்டில் பதிய அனுமதிக்கிறேன். * * என்பதைப்பற்றியெல்லாம் பேசவேண்டாம். பிரச்சினைகளைப் பற்றிப் பேசுங்கள்; தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. மு. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு அத்தகைய ஒரு நெருக்கடி நிலைமை நாட்டிலே உணவுத் தட்டுப்பாடு நிலவியதற்குக் காரணம்

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1987 ஏப்ரல் 9]

அன்றைய ஆட்சியினுடைய முதலமைச்சர்தான் என்று இங்கே நான் பகிரங்கமாகச் சொல்ல முடியும். ஆனால் அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மக்கள், மக்காச்சோளத்தைத் தின்றார்கள். மக்கள் குச்சிக் கிழங்கையும், மரவள்ளிக் கிழங்கையும் தின்றார்கள். படி அரிசி 8.00 ரூபாய்க்கு விற்றது. பையிலே பணம் எடுத்துச்சென்று கையிலே அரிசி வாங்கக்கூடிய நிலை. இன்றைக்கு கையிலே குறைந்த காசை எடுத்துச் சென்றாலும் பையிலே உணவுப் பொருள்களை வாங்கக்கூடிய நிலை. ஏழாண்டு கால தி.மு.க. ஆட்சியில் எத்தனை பஞ்சப்பட்டினிச் சாவுகள் ஏற்பட்டன நாட்டிலே. இந்த 10 ஆண்டு கால ஆட்சியில், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் எங்காவது ஒரு பட்டினிச் சாவு ஏற்பட்டது என்று உங்களாலே நிரூபிக்க முடியுமா? இந்த 10 ஆண்டுக் காலத்தில் அரிசி விலை ஒரே நிலையாக இருக்கிறதே, எங்களுடைய ஆட்சிக் காலத்திலே அரிசியின் விலை அலை அடிக்கப்பட்டதா? அலை மோதியதா? நிலை தடுமாறியதா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே விலை ஒரே நிலையாக இருக்கிறது. இன்றைக்கு 20 கோடி ரூபாய், 80 கோடி ரூபாய், நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் வீணடிக்கப்படுகிறது, விரயமாக்கப்படுகிறது என்று சொன்னார்கள் இன்றைக்கு தமிழகத்தினுடைய தானிய விளைச்சல் 26,500 ஹெக்டேர்களில் நாம் சாதாரணமாக நெல்லைப் பயிரிடுகிறோம். ஆனால் பருவ மழை தவறக்கூடிய நேரங்களில், உணவு உற்பத்தி பாதிக்கக்கூடிய நேரத்தில் பொதுமக்கள், பொது வினியோக முறையில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் வினியோகிக்கப்படும் அரிசியை நாடுகிறார்கள். மக்களுக்கு, அரிசியை கொள்முதல் செய்து மத்திய அரசு நிர்ணயிக்கப்பட்ட விலைக்கே தமிழக நுகர் பொருள் வாணிபக் கழகம், தமிழக அரசினுடைய நேரடி முகவரான. . . .

[1987 ஏப்ரல் 9

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மலர் மன்னன் வெளியே போய் விட்டார். அவர் பேசிய பேச்சு அவைக்குறிப்பில் இருக்கிறதா? இந்த விவரம் அவைக்குத் தெரியுமா? (குறுக்கீடு) இதையும் சேர்த்து நீக்கிவிடுங்கள். * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவற்றை நீக்கி விட்டேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். எக்ஸ்பஞ்ச் செய்த பகுதியை மறுபடியும் அமைச்சர் பேசுவது சரியா (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை. * * அதைத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் நீக்கிவிட்டேன். பிரச்சினைகளைப்பற்றிப் பேசுங்கள்; தனிப் பட்டவர்களைப் பற்றி பேசாதீர்கள் என்று கூறிவிட்டேன் (குறுக்கீடு). மலர்மன்னன், குறிப்பிட்ட காலக்கட்டத்தில் ஒரு உத்தரவு போட்டு அரிசிப் பஞ்சம் ஏற்பட்டது என்பதைத்தான் அவர் சொல்கிறார். அதை இல்லையென்று மறுப்பதற்குத்தான் வாய்ப்பு கொடுத்தேன். (குறுக்கீடு) அந்தப் பகுதிகளெல்லாம் நீக்கப்பட்டுவிட்டன. நீங்கள் சொன்னதும் நீக்கப்பட்டுவிட்டது; அமைச்சர் சொன்னதும் நீக்கப்பட்டுவிட்டது. திரு. ஆறுமுகம் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. மு. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 4, 5 ஆண்டுகளாக, (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிட்டு இருக்க மாட்டேன். நான் அறையிலிருந்து கேட்டதற்குப் பிறகுதான்

---

* * மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்ற பெற்றது.



1987 ஏப்ரல் 9] (திரு. ப. உ. சண்முகம்)

இங்கே வந்தேன். வழியிலே வரும்போது என்ன நடந்தது என்பது தெரியாது. அதனால்தான் வந்து தங்களைக் கேட்டேன் அது அவைக்குறிப்பில் இருந்தால் அதுபற்றி பதில்சொல்ல வேண்டுமென்பதற்காகத்தான் சொன்னேன். அவைக்குறிப்பில் தவறான கருத்து இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் சொல் கிறேன். * * ஞாபகப்படுத்துவதற்காகச் சொன்னேன். ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த இரண்டு பகுதிகளையும் நீக்க ஆணையிடுகிறேன். தனியான ஆளைப் பற்றி சொல்கிறீர்கள் (குறுக்கீடு).

**திரு. வி. பி. சிந்தன்:** ஒரே கருத்தை இரண்டு மூன்று முறை அமைச்சர் சொல்லிக்கொண்டிருக்கிறார்; அவையின் நேரம் வீணாகவில்லையா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரியவேண்டியவர்களுக்குப் புரியும்படி சொன்னால்தான் ஆகவேண்டும். வேறு என்ன செய்வது? இரண்டு மூன்று முறை சொன்னதற்குப் பிறகுங்கூட திரு. சிந்தன் போன்றவர்களுக்கு புரியவில்லை என்றால் நான் என்ன செய்ய முடியும்? இவைகளை அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டிய அவசியமே கிடையாது. தாராளமாக இருக்கலாம். * * அவர் கேட்ட கேள்விக்கு நான் சொன்ன பதிலும் அவைக்குறிப்பில் இருப்பது நல்லது. ஏனென்றால் இந்தக் கேள்வியை . அடிக்கடி கேட்டுக்கொண்டு சிலபேர் ஒன்றும் தெரியாததைப்போல நடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் புரிய வேண்டும், விளங்க வேண்டும் என்பதற்காகத் தான் சொன்னேன் * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலில் தனிநபர் பற்றி பேசியவை நீக்கி ஆகிவிட்டது. தனி நபர் பற்றிப் பேசுவதை அனுமதிக்க ஆரம்பித்தால் அது போய்க் கொண்டே இருக்கும். ஆகவே 2 பேர் பேசியதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

---

* * மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்ற பெற்றது.

**திரு. மு. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 4, 5 ஆண்டுகளாக தொடர்ச்சியாக வரலாறு காணாத வறட்சி கடுமையாக இருக்கிறது. அதனால் நெல் உற்பத்தி, விளைச்சல் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அதேநேரத்தில் பேய் மழை, பெரு வெள்ளம் இவற்றால் பயிர்கள் சேதம், நாசம் ஏற்பட்டு இதனால் உற்பத்தி குறைவாக ஆகியிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பேசியதும், மாண்புமிகு உறுப்பினர் திரு. மலர் மன்னன் அவர்கள் பேசியதும் ஆகிய இரண்டு கருத்துக்களையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி ஆகிவிட்டது. (குறுக்கீடு) தனிப்பட்ட பிரச்சினையைப் பற்றி பேசிக் கொண்டே இருந்தால் அதற்கு முடிவு இருக்காது. சபையின் நேரமும் வீணாகும். ஆகவே இரண்டு பேர் பேசியதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) நீங்கள் தொடுவதால் தான் பிரச்சினையே வருகிறது. நீங்கள் சொன்னதை நான் சொல்கிறேன். அரசாங்கம் ஒரு உத்தரவைப் போட்டு ஒரே நாளில் அதை வாபஸ் வாங்கியதால் அரிசியில் தட்டுப்பாடு நிலை ஏற்பட்டது என்று அவர் சொன்னார். அதற்கு மறுப்பு தெரிவிப்பதாக இருந்தால் மட்டும் அதை மட்டும் நீங்கள் சொல்லலாமே ஒழிய * * என்று சொல்லுவதால் தான் பிரச்சினையே வருகிறது. அதனால்தான் அமைச்சர் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

**திரு. அ. மலர்மன்னன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பை எடுத்துப் பாருங்கள், நான் அப்படி எதுவும் பேசவில்லை.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் கேட்டுக் கொண்டு தான் இருந்தேன். தனிப்பட்ட ஆளைப் பற்றி சொல்லக்கூடாது. ஆகவே இரண்டு பேர் சொல்லியதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன்.

**திரு. மு. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப் பல்வேறு வறட்சி நிலை ஏற்பட்ட நிலையில் கூட உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு தமிழகத்தில் இல்லை. 5, 6 ஆண்டு காலத்தில் எவ்வளவு கடுமையான வறட்சி நிலவிய நேரத்தில் கூட 1977-லிருந்து 1987 வரை அரிசியின் விலை உயரவில்லை. இந்திய துணைக் கண்டத்திலேயே அரிசியின் விலை உயராத ஒரு மாநிலம் தமிழக மாநிலம் என்பதை நாம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் கண்டு கொண்டு இருக்கிறோம்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் தி.மு.க. வை சேர்ந்தவர் சொன்னார், 70 கோடி 80 கோடி ரூபாய் வீணாக்கப்பட்டு இருக்கிறது என்று. எப்படி வீணாக்கப்பட்டு இருக்கிறது என்பதை அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. காரணம் இன்றைக்கு தமிழகத்தில் கிராமங்களில் 17,207 நியாய விலைக் கடைகளும், நகரங்களில் 3,828 நியாய விலைக் கடைகளும் ஆக மொத்தம் 21,035 நியாய விலைக் கடைகளின் மூலம் இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தமிழக அரசு மக்களுக்கு ஏழை எளிய மக்களுக்கு, வறுமைக் கோட்டுக்கு கீழே இருக்கிற மக்களுக்கு சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு இன்றைக்கு அத்தியாவசிய உணவுப் பண்டங்களை அரசு அதிக விலை கொடுத்தாவது வாங்கி—மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கோபித்துக்கொள்ளக்கூடாது—மக்களுக்கு வினியோகம் செய்கிறது. மத்திய அரசிடமிருந்து அதன் தொகுப்பிலிருந்து நாம் பெறக்கூடிய அரிசிக்கு கூட இரு முறை மத்திய அரசு விலையை மாற்றி அமைத்தது. ஆனால் நாம் விலையை உயர்த்தவில்லை. ஏன் உயர்த்தவில்லை? சமுதாயத்தில் உள்ள நலிந்த பிரிவினர், ஏழை எளிய மக்கள் தலையில் அது போய் விழுந்து விடக் கூடாது என்ற நல்ல எண்ணத்தில் நாம் விலையை உயர்த்த

(திரு. மு. ஆறுமுகம்) 1987 ஏப்ரல் 9

வில்லை. குறைந்த விலைக்கே நாம் கொடுத்துக் கொண்டு வருகிறோம். இதற்காகத்தான் 70 கோடி 80 கோடி ரூபாய் தமிழக அரசு இன்றைக்கு மானியமாக ஆண்டு ஒன்றுக்கு செலவிட்டு வருகிறது. தமிழ் நாட்டில் இன்றைக்கு இருக்கக்கூடிய ஏகபோக நிறுவனமான தமிழக அரசின் நேர் முகவரான தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் திறமையாக, செம்மையாக செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அதன் காரணமாகத் தான் இன்றைக்கு லட்சோபலட்சம் டன் அரிசியை, நெல்லை கொள்முதல் செய்து இந்த ஆண்டு எத்தகைய பஞ்சமும், பட்டினியும் வராத வண்ணம் பாதுகாத்து வருகிறது. இன்றைக்கு மத்திய தொகுப்புக்கு நாம் அரிசியை நிறைய கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். ஆனால் இங்கே மழை இல்லை, விளைச்சல் இல்லை என்ற நிலை ஏற்படும் போது மத்திய அரசின் தொகுப்பிலிருந்து அரிசியை கேட்டால் கொடுக்க மறுக்கிறார்கள். அதை வாங்கிக் கொடுக்காமல் இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் * * அந்த அளவுக்கு அவர்களுடைய. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** * * என்ற வார்த்தையை நீக்குப்படி உத்திரவிடுகிறேன். காங்கிரஸ் தரப்பில் இருப்பவர்களுக்கு ஒரு வேண்டுகோள். யாராவது ஒருவர் எழுந்து பிரச்சினையை எடுத்துச் சொன்னால் அதைப்பற்றி முடிவு செய்யலாம். அப்படி நடைமுறைக்குக் கொண்டு வாருங்கள். அதை விடுத்து இப்படி எல்லோரும் எழுந்து நின்றால், இதையே எல்லா கட்சிகளும் செய்ய ஆரம்பித்தால் அது மிகவும் சிரமமாக இருக்கும்.

**திரு. மு. ஆறுமுகம்:** அவர்கள் ஒத்துழைக்கவேண்டும் என்று தான் நான் கேட்டுக்கொண்டேன். ஆக * * என்ற வார்த்தைகள் அடுக்கடுக்காக வந்துவிட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த வார்த்தைகள் வேண்டாம். 'ஒத்துழைப்பு' என்று சொல்லுங்கள்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1987 ஏப்ரல் 9]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே என்ன பிரச்சினை என்றால், இந்திய அரசு கொடுக்கிறது. 1 லட்சத்து 20 ஆயிரம் டன் அரிசியை எடுத்துக்கொள்ளுங்கள் என்று கொடுக்கிறார்கள். அது பச்சரிசி. நமக்குத் தேவை புழுங்கல் அரிசி. புழுங்கல் அரிசியை தான் நம் நாட்டில் பயன்படுத்துகிறோம். நம்மால் 30 ஆயிரம் 40 ஆயிரம் டன்னுக்கு மேல் பச்சரிசியை வினியோகம் செய்ய முடியவில்லை. ஆகவே கொடுத்தும் இருக்கிறது. மறுக்கவில்லை. எடுத்துக்கொள்ள முடியவில்லை. அது தான் பிரச்சினை வேறு அல்ல.

(பிற்பகல் 12-20)

**திரு. மு. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக மாநிலத்தின் பாமாயின் எண்ணெய் தேவையின் அளவு ஆண்டு ஒன்றுக்கு 12,000 டன்கள் என்று இங்கே வரையறுத்து இருக்கிறோம். ஆனால் மைய அரசு கொடுப்பது 5,000 டன்கள்தான். 12,000 டன்கள் தேவையான ஒரு மாநிலத்திற்கு 5,000 டன்கள் பாமாயிலை வைத்துக்கொண்டு, எப்படி மக்களுக்கு, எல்லோருக்கும் ஒரு அளவில் வழங்கமுடியும் என்பதை இன்றைக்கு நம்முடைய நண்பர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதேபோன்று தமிழக மாநிலத்தின் மண்ணெண்ணெய் தேவையின் அளவு 66,000 கிலோ லிட்டர். ஆனால் மைய அரசு கொடுப்பது 50,000 கிலோ லிட்டர் தான். இப்படி 60,000 தேவையுள்ள மாநிலத்திற்கு 50,000 கிலோ லிட்டரை வைத்துக்கொண்டு எப்படி எல்லோருக்கும் ஒரே மாதிரி ஒரே சீராக வழங்கமுடியும்? 12,000 டன்கள் பாமாயின் தேவையுள்ள மாநிலத்திற்கு மத்திய அரசு வழங்கியுள்ள 5,000 டன்கள் இங்கே கட்டுப்படியாகுமா? எப்படிப் போதும் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். ஆகவே நம்முடைய தோழமைக் கட்சியான காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எங்களோடு சேர்ந்து குரல் கொடுத்து, தமிழ் மக்களுடைய கோரிக்கையை நீங்கள் பெற்றுக் கொடுப்பதற்கு ஒத்துழைப்பை நாடுகின்றோமே தவிர, வேறு ஒன்றுமல்ல என்பதை இப்போது சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோன்று 1984 ஆம் ஆண்டில் 18,009 நியாய விலைக் கடைகளாக இருந்ததை, 1000 கார்டுகளுக்கு ஒரு கடை என்று இருந்ததைப் பிரித்து, 21,035 கடைகளாக உயர்த்தியிருக்கிறார்கள்.

**திரு. வி. தங்கவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கொடுக்கக் கூடிய 60,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயானாலும் சரி, 5,000 டன்கள் பாமாலின் ஆயிலாக இருந்தாலும் சரி, கொடுக்கக் கூடிய எந்த நுகர்பொருளானாலும், அதை விநியோகம் செய்கின்ற நேரத்தில், அது சரியாக விநியோகம் செய்யப்படவில்லை என்பது தான் என்னுடைய குற்றச்சாட்டு. நீங்கள் அதற்கு மேல் கேட்டாலும் நாங்கள் வாங்கிக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, சட்டியிலே இருந்தால் தான் அகப்பையில் வரும் என்பது தமிழ்நாட்டிலிருக்கிற பழமொழி. பாமாலின் நமக்கு அதிகமாக ஒதுக்கலாம். ஆனால் குஜராத் மாநிலத்திற்கு அதிகமாக ஒதுக்குகிறார்கள். நமக்கு ஒதுக்கவில்லை. நானும் மத்திய சர்க்காரை வலியுறுத்தி வருகிறேன். போதுமான அளவில் இறக்குமதி இல்லை என்றுதான் சொல்கிறார்கள்.

பாமாலின் ஆயிலைப் பொறுத்தவரையில், குடும்ப அட்டைதாரர்களுக்குத் தருகிறோம். அதிலே பற்றாக்குறை. வெளியிலே நிச்சயமாக வீண் விரயம் ஆவதில்லை. ஆனால் இந்திய அரசிற்கு இதில் என்ன சிக்கல் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. மு. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், நெல், அரிசி போன்ற பொருள்களை கொள்முதல் செய்வதில் முழு கவனம் செலுத்தவேண்டுமென்பதற்காக இன்றைக்கு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தக் கூடிய நியாய விலைக் கடைகளை கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு மாற்றும்படி ஆணையிட்டது. ஆனால் இந்த ஆணையை எதிர்த்து ஒரு சில தொழிற்சங்கங்கள் உயர்நீதிமன்றத்திற்கும், இன்னும் சில உச்சநீதிமன்றத்திற்கும் சென்று, தடை பெற்றிருக்கிற காரணத்தால் அதை மாற்றுவதில்



தடை ஏற்பட்டது. மாண்புமிகு அமைச்சரவர்கள் நியாய விலைக் கடைகளை நுகர்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றுவதற்கு இருக்கிற தடையினை விரைவில் விலக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதோடு, அதே நேரத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தன்னுடைய முழு கவனத்தையும் இதில் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இன்றைக்கு மாநிலத்தில் 13 நவீன அரிசி ஆலைகளை 'மாடர்ன் ரைஸ் மில்களை' நடத்திக்கொண்டிருக்கிறது. மேலும் 6 நவீன அரிசி ஆலைகளை கட்டுவதற்கு இன்றைக்கு அரசு ஆய்வு செய்து கொண்டிருப்பதாகவும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2 நவீன அரிசி ஆலைகள் கட்ட அனுமதி கொடுக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. சேலம், தர்மபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களில், ஏதாவது ஒன்றில் ஒரு ஆலையை நிறுவித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில், ஜோலார்ப்பேட்டை, நாட்றம்பள்ளி, திருப்பத்தூர், ஆரணி போன்ற இடங்களில் நவீன அரிசி ஆலையை ஏற்படுத்தித்தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அது போன்று இன்றைக்கு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் பண்ணக் கூடிய அரிசி, நெல் போன்றவற்றை வைப்பதற்கு அவர்களிடம் போதுமான கிடங்கு, கோடவுன் வசதி கிடையாது. ஓபன் ஸ்டோரேஜ் என்று சொல்லக்கூடிய அளவிற்கு அட்டிகளாகப் போட்டு வைக்கக்கூடிய நிலை தமிழ்நாட்டிலே பல மாவட்டங்களில் நிலவிக் கொண்டிருக்கிறது. ஆகவே மாநில அரசு மாநிலத்தினுடைய பல்வேறு பகுதிகளிலும் மாவட்டத் தலைநகரங்களிலும், தாலுக்கா மட்டங்களிலும் அதிகமான அளவுக்கு இந்த ஆண்டு

(திரு. மு. ஆறுமுகம்) [1987 ஏப்ரல் 9

வரவு செலவு திட்டத்தில் இல்லாவிட்டாலும் கூட அடுத்த ஆண்டாவது நிறைய கிடங்குகளை கட்டி போதுமான கையிருப்புகளை வைப்பதற்கு தகுதியான இட வசதிகளை செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் அரிசி ஆலைகளிலும், நவீன அரிசி ஆலைகளிலும் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளுக்கு போதுமான சௌகரியங்கள் இல்லாத நிலையை தான் இந்த நேரத்தில் குறிப்பிடாமல் இருக்க முடியாது. தொழிலாளர்கள், மூட்டை தூக்குகின்றவர்கள் போன்றவர்களுக்கு உணவு அருந்துவதற்கு கூட ஷெட் வசதிகள் கிடையாது. அவர்களுக்கு கழிப்பிடங்கள் வசதி கிடையாது. அவர்களுடைய சைக்கிளை நிறுத்துவதற்கு நிறுத்தி கூடங்கள் கிடையாது. குடிப்பதற்கு சில இடங்களில் போதுமான தண்ணீர் வசதி இல்லை. இம்மாதிரி மூட்டைகளை அவர்கள் சுமந்து சென்று கிடங்குகளில் 20 அடி உயரத்திற்கு அட்டிகளில் போடுகிறார்கள். அப்படி போடுகின்ற போது மூட்டை சரிந்து அந்த தொழிலாளி அமுக்கப்பட்டு உயிர் இழக்கக்கூடிய நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட மூட்டை தூக்கும் தொழிலாளிக்கு அரசு வழங்கக்கூடிய குடும்ப நல நிதி 20,000 வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய உறுப்புகளுக்கு கை, கால், இடுப்பு முறிவு ஆகிய ஊனம் ஏற்படுமேயானால் அவர்களுக்கு தகுந்த நஷ்ட ஈடு ரூ. 10,000 வழங்குவதற்கு அரசு வழிவகை செய்ய வேண்டும்.

இன்றைக்கு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தில் தொழிலாளிகள் சிறந்த முறையில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளிகளுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பு கொடுக்கக் கூடிய வகையில் இரயிலடியில் மூட்டையை ஏற்றக் கூடிய, இறக்கக்கூடிய வேலைகளிலும் அதே நேரத்தில் நவீன அரிசி ஆலைகளில் நெல்லை கிடத்துவதும், அரிசியை பிரிப்பதும், மூட்டைகளை வைப்பதும், மூட்டைகளாகத் தைப்பதும், லாரிகளிலே ஏற்றுவதும், இறக்குவதும் போன்ற அனைத்து ஏற்றுமதி, இறக்குமதி பணிகளையும் அண்ணா கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பணியா[illegible]க்கூடிய தொழிலாளி



1987 ஏப்ரல் 9] திரு. மு. ஆறுமுகம்

களுக்குத் தான் கொடுக்க வேண்டும் என்றும் இடையிலே ஏஜன்சிகள்—இடைத்தரகர்களை அனுமதித்து அதன் மூலம் தொழிலாளி வர்க்கத்தை சுரண்டுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்றும், நிரந்தரமாக தொழிலாளி வர்க்கமே தொடர்ந்து வேலை செய்வதற்கு அரசு ஆணையிடவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் 10 ஆண்டுகளாக பட்டினிச்சாவு என்பதே கேட்டிராத ஆட்சி புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி தான். 10 ஆண்டுகளாக அரிசியினுடைய விலை ஏறாமல் ஒரே நிலையாக கட்டிக் காக்கக்கூடிய அரசு புரட்சித் தலைவர் அரசு தான் என்றும் கடந்த கால ஆட்சியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது புரட்சித் தலைவர் ஆட்சி—'உணவு' பொறுத்த வரைக்கும்—பொற் கால ஆட்சியைப் படைத்துக்கொண்டிருக்கிறது என்பதை கூறிக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன்: அன்புக்குரிய துணைத் தலைவர் அவர்களே, ஒரு மிக முக்கியமான பிரச்சினையை நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். அரசியல் காழ்ப்புணர்ச்சிகளால் சில நேரங்களில் தடம் புரண்டு எங்கேயோ சென்றாலும் நாம் பேசுகின்ற விஷயம் ஒரு முக்கியமான விஷயம். இந்த பத்து ஆண்டுகளாக விலைவாசி உயர்ந்ததா இல்லையா அல்லது அதற்கு முன்னால் உள்ள 10 ஆண்டுகளில் விலைவாசி குறைந்ததா இல்லையா என்ற * * நான் போக விரும்பவில்லை. ஒரு பேருண்மையை நான் சபையின் முன்னே கொண்டுவர விரும்புகிறேன். நாள்தோறும், மணி தோறும் விலைவாசி உயர்ந்து கொண்டிருக்கிறது—அரிசியினுடைய விலை உட்பட. . .

திரு. மு. ஆறுமுகம்: துணைத் தலைவர் அவர்களே, * என்று சொல்வது முறைஅல்ல.

திரு. வி. பி. சிந்தன்: துணைத் தலைவர் அவர்களே, நான் அன்பார்லியமெண்ட்டரி வேர்டு எதுவும் உபயோகிக்க மாட்டேன் என்பதை உங்கள் மூலமாக என்னுடைய அருமை நண்பருக்கு

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(திரு. வி. பி. சிந்தன்) [1987 ஏப்ரல் 9

வாக்குறுதியாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். பேசுகின்ற பிரச்சினை முழுக்க முழுக்க மத்திய அரசினுடைய கொள்கையைப் பொறுத்த பிரச்சினை. துரதிருஷ்டவசமாக பட்ஜெட்டின் போதும், பட்ஜெட் வருவதற்கு முன்னாலேயும் நாம் எந்தெந்த பொருள்கள் அவசியமான பொருள்கள் என்று கருதுகின்றோமோ அத்தனை பொருள்களுக்கும் வரியை உயர்த்துகிறார்கள். அதை கொள்முதல் செய்து மாநிலங்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

(பிற்பகல் 12-30)

மாநிலங்கள் பொருளாதாரத் துறையிலே பின் தங்கிய நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன என்ற ஒரு நல்லுணர்வு டெல்லி ஆட்சியிடம் இல்லை. ஆகவே மாநிலங்களை இந்தத் துறையில் செயல்படுவதற்கு ஊக்குவிப்பதற்குப் பதிலாக, பல இடையூறுகளை மத்திய அரசு ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. இது இந்தப் பத்து ஆண்டுகள் மட்டும் அல்ல. இதற்கு முன்னாலுள்ள 10 ஆண்டுகளுடைய நிலைமையும் இதுதான். ஆகவே, நான் இந்த நேரத்தில் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புவது எல்லாம், இந்தக் கொள்கையை, இந்தத் தவறான கொள்கையை எதிர்த்து நீங்கள் எந்த அளவுக்கு குரல் எழுப்பப் போகிறீர்கள் என்பதுதான்.

சென்ற பிப்ரவரி 11 ஆம் தேதி மேற்கு வங்கத்தில் 14 பொருள்களுடைய, அத்தியாவசியப் பொருள்களுடைய விலையைக் குறைக்க வேண்டும் என்பதற்காக மாநிலம் தழுவிய ஒரு 'பந்த்' நடத்த வேண்டும் என்று சொல்லி, மாநில முதலமைச்சரும், மாநில அமைச்சர்களும் அறைகூவல் விட்டு, ஒரு மிகப் பெரிய இயக்கம் அங்கே நடத்தப்பட்டது. இந்தியா முழுவதும் ஒரு 'பாரத் பந்த்'—எண்ணெய் விலையைக் குறைக்கவேண்டும், அரிசி விலையைக் குறைக்க வேண்டும்; முறையான முறையில் கொள்முதல் செய்து மாநில அரசுக்குக் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஒரு 'அனைத்திந்திய பந்த்' நடைபெற்றது.



1987 ஏப்ரல் 9] (திரு. வி. பி. சிந்தன்)

நான் இதையெல்லாம் குறிப்பிடுவதற்குக் காரணம், திட்டக் கமிஷனிலேயும், முதலமைச்சர்களுடைய கூட்டத்திலேயும், பல நேரங்களில் இத்தகைய கருத்துள்ளவர்கள் Conclave நடத்துகிறார்களே, அத்தகைய Conclave களிலும், முதலமைச்சர்களை அழைத்துப் பேசுகிற அரசியல் மேடைகளிலேயும்—நம்முடைய முதலமைச்சரும், நம்முடைய தமிழக அரசும்—இந்தக் கொள்கைகளை மறுக்கிறவர்கள் நீங்கள் என்று நான் சொல்லவில்லை—ஆனால் அமைச்சர்கள் உட்பட அந்தப் பக்கத்திலே சேர்ந்து நிற்கவில்லை என்பதை வருத்தத்தோடு இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரிசி கோரி, நியாயமான விலைக்கு அரிசி வழங்க வேண்டும் என்று கோரி ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்த முதலமைச்சரை நான் பாராட்டியவன். இப்போதும் அந்த உணர்வில் பேசக் கூடியவன். ஆனால் இப்போது அந்தக் கொள்கைகள் என்ன காரணத்தினாலோ—நான் அந்த அரசியல் விளக்கத்திற்குப் போவதற்கான நேரம் இல்லை—பின் தள்ளப்பட்டு நீங்கள் தவறான ஒரு பாதையிலே சென்று கொண்டிருக்கிறீர்கள். இந்தப் பிரச்சினையை நம்மால் சமாளிக்க முடியாது.

இந்தக் கொள்கை அறிக்கையிலே போடப்பட்டிருக்கிற விலைகளையும், கணக்குகளையும்பற்றி நான் பேசவில்லை. இதை கொள்கை அறிக்கையாக எடுத்துக் கொள்ளவில்லை. சில புள்ளி விவரங்களைக் கொடுத்த ஒரு அறிக்கையாக மட்டும் நான் கருதுகிறேன். அரிசி, நல்ல அரிசி ரூ. 4.05 பைசாவுக்கு கிடைக்கிறது என்று போட்டிருக்கிறது. எங்கேயாவது அது கிடைக்கிற இடத்தை, துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எனக்குச் சொல்வாரேயானால் அந்த இடத்திற்குச் சென்று மாதத்திற்குத் தேவையான அரிசியைப் பெற்றுக்கொள்ள முயலுவேன் என்று அவருக்குப் பணிவன்போடு தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

[திரு. ஏ. தங்கராசு] [1987 ஏப்ரல் 9

கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு விலை. கோவையிலே ஒரு விலை. தமிழகம் பூராவும், இந்தியா பூராவும் ஒரு விலை வேண்டும் என்ற கொள்கைக்காக நாம் சண்டை போடவில்லையென்று சொன்னால், நான் பேசும்போது ஆத்திரப்பட்டு, கூச்சல் எழுப்பலாம்; அதை குறிப்பிலிருந்து நீக்கி விடு என்று சொல்லலாம். ஆனால் உண்மைகளை நீங்கள் எந்தக் குறிப்பிலிருந்தும் நீக்க முடியாது.

இன்றையதினம் அந்த அமைப்பைத்தான் விலைவாசிகளைக் குறைப்பதற்கான ஒரு திறமையான கருவியாக நாம் பயன்படுத்த வேண்டும். வேறு எந்த வழியும் இல்லை. ஒரு முதலாளித்துவ சமுதாயத்தில்—துரதிருஷ்டவசமாக நிலப்பிரபுக்களைப் பேணிப் பாதுகாக்கிற தனவந்தர்களைக் கோடீஸ்வரர்களாக மாற்றுகிற ஒரு கொள்கையை 1947-க்குப் பிறகு மத்திய அரசு அனுஷ்டிக்கிற காரணத்தினாலே நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக விலைவாசி உயர்ந்து கொண்டிருக்கிறது. நான் சோசலிஸ்ட் நாடுகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நான் ரஷ்யாவைப் பற்றிப் பேசவில்லை. சீனாவைப் பற்றிப் பேசவில்லை. வியட்நாம் என்று ஒரு சின்ன நாடு உண்டு. உங்களுக்குத் தெரியும். யுத்தத்தால் . . . (கூச்சல், குழப்பம்).

**திரு. மா. சுந்தரதாஸ்:** துணைத் தலைவர் அவர்களே, பணக்காரர்களைக் காப்பாற்றுகிற அரசு என்று அவர் சொல்கிறார் . . . (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது அதற்குப் பதில் சொல்லலாம். (குறுக்கீடுகள்) தவறான வார்த்தைகள் இருந்தால்தான் நீக்க முடியும். திரு. தங்கவேலு பேசவிருக்கிறார். அவர் பேசும்போது பதில் சொல்லலாம். எதிர்த்துப் பேசவேண்டும் என்றால் அவரிடம் பதில் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். திரு. சிந்தன், பேசுங்கள்.



1987 ஏப்ரல் 9]

**திரு. வி. பி. சிந்தன்:** இந்தப் பிரச்சினை மத்திய அரசினுடைய கொள்கைகளுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல என்று அவருக்குக் கருத்து இருந்தால், அவர்கள் சொல்லட்டும். நான் ஆட்சேபிக்க மாட்டேன். இது மத்திய அரசு கடைப்பிடிக்கிற, மத்தியப் பேரரசு கடைப்பிடிக்கிற கொள்கையினால்தான் இன்றைய தினம் தமிழகமும், மற்ற மாநிலங்களும் பாதிக்கப்படுகின்றன. விலைவாசி உயர்கிறது என்பது (குறுக்கீடு) கம்யூனிஸத்தைப் பற்றிப் பேசுவதற்கான மேடை அல்ல என்பதை உணர்ந்துதான் நான் பேசுகிறேன். . . (குறுக்கீடு, கூச்சல்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வெங்கடா ரெட்டி, என்ன சொல்ல வேண்டும். சொல்லுங்கள் . . . (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். . . (குறுக்கீடு). திரு. வெங்கடா ரெட்டி நான் உங்களை அனுமதித்திருக்கிறேன். நீங்கள் இங்கே பார்த்துப் பேச வேண்டும் (குறுக்கீடு). திரு. வெங்கடா ரெட்டி நான் உங்களை அனுமதித்திருக்கிறேன். அனுமதித்ததே தப்பு என்கிறீர்களா ? அதற்கு விளக்கம் சொல்லுகிறீர்களா ? (குறுக்கீடு) நீங்களும் பப்ளிக் மீட்டிங் மாதிரி அங்கேயே பார்த்துக் கொண்டு பேசினால் எப்படி ? (குறுக்கீடு) இங்கே பார்த்து பேசுங்கள். என்ன சொல்ல வேண்டும் என்று நினைக்கிறீர்கள்? சொல்லுங்கள் . . .

Thiru T. VENKATA REDDI : Mr. Deputy Speaker, Sir, the hon. Member Thiru Chintan, when he is speaking on the Budget, is imputing motives. He has been saying that from 1947 the Central Government is for the landlords and the rich people. But, the hon. Member must be aware that the Central Government has been following a socialistic policy from Pandit Nehru's period onwards and has been introducing a large number of policies for the uplift of the rural and poor people, whereas in Russia they have been deviating from the Communist principles and allowing private ownership now.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதை நீங்கள் பேசும்போது சொல்லலாமே. (குறுக்கீடு) பரவாயில்லை. அது அவருடைய கருத்து. இது உங்களுடைய கருத்து. உங்கள் கருத்துக்களை சப்ஸ்டான்ஷியேட் பண்ணி விஷயத்தை நீங்கள் சொல்லுங்கள். அவர் அவருடைய கருத்தை சப்ஸ்டான்ஷியேட் பண்ணி விளக்கட்டும். அதை விட்டுவிட்டு வார்த்தைக்கு வார்த்தை விளக்கம் கேட்டு பதில் சொல்ல வேண்டும் என்று காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்பார்க்கக் கூடாது. நீங்கள் பேசும் போது இந்த விஷயத்தையெல்லாம் சொல்லலாம் . . . (குறுக்கீடு) இது சரியில்லை.

**திரு. கு. ரமணி:** இந்தியாவில் நடக்கிற . . . (குறுக்கீடு).

**திரு. கே. சுப்பராயன்:** அதுபற்றிய விவரம் பூராவும் அவருக்குத் தெரியும் (குறுக்கீடு).

**திரு. வி. பி. சிந்தன்:** I am not yielding. I am not provoked by them. அந்த விவாதத்திற்குள் நான் செல்ல விரும்பவில்லை. நான் சொல்வதெல்லாம் வியட்நாம் என்று ஒரு நாடு உண்டு. யுத்தத்தால் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்ட ஒரு நாடு (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படி உறுப்பினர்கள் ஒரே சமயத்தில் எழுந்து பேச ஆரம்பித்தால் எப்படிச் சபையை நடத்துவது? நான் திரு. வெங்கடா ரெட்டியை அனுமதித்தேன். அவர் பேசிக் கொண்டிருக்கும்போதே அவருக்குப் பின்னால் இருந்துகொண்டு ரன்னிங் காமெண்டரி மாதிரி பேசுவது சரியாகாது. இப்படியே ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஆரம்பித்தால் சரியாக இருக்குமா? உங்கள் கட்சியிலிருந்து திரு. தங்கவேலு அவர்கள் பேச இருக்கிறார். அப்போது எவ்வளவு விஷயங்களை வேண்டுமானாலும் பேசலாம். நேரம் கேட்டுப் பேசலாம். அதைச் செய்யாமல் இப்படி ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது பின்னாலே பேசிக் கொண்டிருப்பது சரியாக இருக்காது. அது சரியான முறையல்ல.





**திரு. வி. பி. சிந்தன்:** இன்றையதினம் அங்கே ஒரு கிலோ அரிசி 36 பைசாவுக்கு நாடு முழுவதுமாக விநியோகிக்கப்படுகிறது என்று பாராளுமன்ற உறுப்பினர்கள்—காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் உள்பட—அங்கே சென்று பார்த்துவிட்டு வந்து அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையை வேண்டுமானால் நான் அடுத்த கூட்டத்தில் கொண்டுவந்து இங்கே படித்துக் காட்ட தயாராக இருக்கிறேன். அங்கே எப்படி அது சாத்தியமாகிறது? மிகப் பெரிய அளவுக்குக் கொள்முதல் திட்டத்தை நடைமுறையில் கொண்டு வருகிற காரணத்தால் இந்த நிலைமையை அவர்களால் உருவாக்க முடிகிறது. அத்தகைய கொள்முதல் திட்டத்தை இங்கே மத்திய அரசு தொடர்ந்து மறுக்கிறது. மத்திய அரசு அந்தக் கொள்முதல் திட்டத்தை ஊக்குவிப்பதற்குப் பதிலாக சர்க்கரை விலையை உயர்த்துகிறது—சர்க்கரை ஆலை அதிபர்கள் அங்கே சந்தித்தால் போதும்—பாமாலின் விலையை உயர்த்துகிறது—அங்கே சென்று சந்தித்தால் போதும்—அரிசி விலையை உயர்த்துகிறது . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது கொஞ்சம் ஸ்வீப்பிங் ஆக இருக்கிறது. Definitely it is a sweeping remark. ஸ்பெசிபிக் ஆக சொன்னால் பரவாயில்லை. உங்களுடைய கருத்தைச் சொல்ல உரிமை இருக்கிறது ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இது ஸ்வீப்பிங் ஆக இருக்கிறது.

**திரு. வி. பி. சிந்தன்:** அப்படி இரண்டு தடவை அரிசி விலையை மத்திய அரசு உயர்த்தியிருக்கிறது. ஆனால் மாநில அரசு உயர்த்தவில்லை என்று இந்த அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கூட அதைக் குறிப்பிட்டார். நான் அதைத்தான் குறிப்பிட்டேன். ஆகவே நாடு முழுவதும் கொள்முதல் செய்ய வேண்டும். பொருள்களை நியாய விலையில் வழங்க வேண்டும்.

மருந்து, துணி, பருப்பு, எண்ணெய் மற்றும் உபயோகிக்கப்படும் சமையல் எண்ணெய் உள்பட அனைத்தும் விநியோகிக்கப்பட வேண்டும். அதற்கான ஒரு பலமான இயக்கத்தை நடத்த வேண்டும். அதைத் தவிர பேச்சோ—தீர்மானங்களோ—இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே முறையில் இன்னும் ஒரு பிரச்சினையை நான் இங்கே விவாதிக்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 12.40)

இந்தக் குறிப்பிட்ட இலாக்காவினுடைய நடவடிக்கைகளைப் பற்றி நான் இங்கே பேசும்போது அந்த இலாக்காவினுடைய நடவடிக்கைகளை ஆழமான பரிசீலனைக்கு தமிழக அரசும், சட்ட மன்றமும் உள்ளாக்க வேண்டும் என்று பணிவன்போடு வேண்டிக் கொள்கிறேன். நான் அதிகாரிகளைக் குறிப்பிட்டுப் பேசும் போது அவர்கள் பதில் சொல்ல இங்கே இயலாது என்று நீங்கள் சொல்லக்கூடும். ஆனால் எடை போடுகிற பிரச்சினையிலும், அதே முறையில் அந்தப் பொருள்களினுடைய தரத்தைப் பார்த்து கொள்முதல் செய்வதிலும் ஏராளமான முறைகேடுகள் இருக்கின்றன. கார்ட் வழங்குவதில் இருந்து இலவசப் பொருள்களை வழங்குவது வரை மிகப் பெரிய முறைகேடுகள் இருக்கின்றன. என்னுடைய நேரத்தை அதற்காக நான் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. நான் மெத்த வருத்தத்தோடு சொல்லு கிறேன். பொதுக் கணக்குக் குழுவிலே இந்தப் பிரச்சினைகள் வரும்போது, நான்கு ஆண்டுகளாக மத்திய அரசின் ஆணையர், ஆடிட்டர் குறிப்பிட்ட சில தவறுகள் மீண்டும், மீண்டும் திருத்தப் படாமலே இருக்கின்றன என்பதைப் பார்த்தோம். நான் விவரங் களுக்குள்ளே போகவில்லை. இந்த இலாக்காவை முறைப் படுத்துவதற்கு உரிய கடுமையான நடவடிக்கையை எடுக்க வில்லை என்றால் நாம் எடுக்கிற முயற்சியை வெற்றிகரமாக நடத்த முடியாது.

மூன்றாவதாக நான் இங்கே ஒரு விஷயத்தை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இந்த அறிக்கையிலே, கலப்படத்தைத் தடுக்க, அதேபோல விநியோக முறையில் உள்ள முறைகேடு



களைத் தடுக்க பல ஆலோசனைகள் இங்கே சொல்லப்பட்டிருக் கின்றன. இதற்காக பல அமைப்புகளை நாங்கள் உருவாக்கி யிருக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கலப்படத்தைத் தடுப்பதற்காக 1,547 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது என்ன நடவடிக்கை என்று நான் அறிய விரும்புகிறேன். கலப்படம் செய்தவர்கள் மீது எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் சில எனக்குத் தெரியும். பத்து ரூபாய், 15 ரூபாய் அபராதத்தை போட்டு விடுகிறார்கள். இந்த அபராதத்தை போடுகிற**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை நீக்கி விடுங்கள். இது எப்படி சரியாக இருக்கும்? கற்பனையிலே நீங்கள் ஒரு ஆர்க்யூமெண்டைப் பண்ணினால் எப்படி? அந்தப் பகுதியை நீக்கிவிடுகிறேன். ** என்று சொன்ன அந்தப் பகுதியை நீக்க ஆணையிடுகிறேன். Hypothetical argument என்றால் நிறைய சொல்ல வேண்டி வரும்.

**திரு. வி. பி. சிந்தன்:** Weights and measures பற்றி, அந்த இலாக்கா நாங்கள் அடிக்கடி பழகுகிற ஒரு இலாக்கா என்பதாலே சொல்லுகிறேன். 13,957 வழக்குகள் என்று அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும் போது அந்த வழக்குகளில் எல்லாம் கொடுக்கப்பட்ட தண்டனை என்ன என்று விளக்கம் தர வேண்டும் என்று கோருவது நியாயமில்லை என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது எனக்குத் தெரியும். போய் பேசுகிறார்கள், சிற்றுண்டி அருந்துகிறார்கள், எப்படியோ திரும்ப வருகிறார்கள். ஆகவே நடவடிக்கை எடுப்பது என்பது மிகக் குறைவாக இருக்கிறது.

அது மட்டுமல்லாமல் மத்திய அரசு கொண்டு வந்துள்ள ஒரு சட்டத்தைப் பற்றி அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கன்ஸ்யூமர் புரொடெக்ஷன் ஆக்ட்—நாடாளுமன்றம் நிறை வேற்றிய இந்தச் சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அப்படி

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

நடத்தினார்களா? அதற்கான ஆக்க பூர்வமான நடவடிக்கை என்ன எடுக்கப் போகிறார்கள்? அதற்கு கால வரம்பு என்ன என்பதைச் சொல்ல முடியுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வலியுறுத்திக் கேட்க விரும்புகிறேன்.

விஜிலென்ஸ் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் இன்று விவாதிக்கக்கூடிய அத்தனை பிரச்சினைகளிலும் விஜிலென்ஸ் இல்லை என்றால் மிகையாகாது. இந்தத் துறையிலே தனவந்தர்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலை இருக்கிறது. இரண்டு உதாரணங்களைச் சொல்லுகிறேன். மத்திய அரசு நமக்குக் கொடுக்கும் பாமாயின் ஆயில் போதாது. இதற்காக அமைச்சர் அவர்களுக்கு பரிவோடு ஒத்துழைப்புக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அவர்களுடைய கோரிக்கை நியாய மானது. மண்ணெண்ணெய் கொடுப்பது போதாது. ஆகவே அதைக் கேட்கும் கோரிக்கை நியாயமானது. மண்ணெண்ணெய் தனியாரால் உற்பத்தி செய்யப்படுவதில்லை. ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன்தான் மண்ணெண்ணெய், பாமாலின் ஆயில் ஆகியவற்றை வழங்குகிறது. நமக்கு மாதந்தோறும் கிடைக்கிற, அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கிடைக்கிற மண்ணெண்ணெய், பாமாலின் ஆயில் எவ்வளவு, எந்தெந்த மாவட்டங்களுக்கு எவ்வளவு எவ்வளவு அனுப்பப் பட்டிருக்கிறது, எப்படி விநியோகிக்கப்படுகிறது என்று ஏன் இந்த அறிக்கையில் குறிப்பிடவில்லை என்பதை வருத்தத்தோடு கேட்க விரும்புகிறேன். காரணம் ஒரு பத்திரிகையில் போட்ட செய்தியை நான் படித்தேன். அந்தச் செய்தியை முழுமையாக நம்பி நான் சொல்லவில்லை. சென்னைக்கு வந்த பாமாலின் ஆயிலை பெஜவாடாவுக்குக் கொண்டு சென்று விற்றதாக சென்ற ஆண்டு செய்தி வந்ததை நான் படித்தேன். ஆகவே விநியோகத்திலே ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனிலிருந்து சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு வரக்கூடிய மண்ணெணெயைக் கை வண்டிகளிலே விநியோகம் செய்வதை ஆட்சேபிக்க வில்லை. அவர்கள் குடும்பத்தை நடத்துவதற்கான செலவினங்களுக்கு அவர்கள் அதைச் செய்யட்டும். ஆனால் தனியார் வியாபாரிகளுக்கு மொத்தமாக மண்ணெண்ணெய் வழங்கும் பழக்கத்தை ஏன் நிறுத்தக் கூடாது என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





அதுமட்டுமல்ல, ஊழியர்களைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் சொன்னபோது, நான் மேஜையைத் தட்டினேன். அவர் காதுக்கு அது கேட்டிருக்காது என்று நினைக்கிறேன். அவர் சொன்ன எல்லா கருத்துக்களையும் ஆதரிக்கிறேன். ஏறத்தாழ 8,000 ஊழியர்கள் Trainee Bills Clerk என்று போட்டு மாதம் 150 ரூபாய் ஊதியம் வழங்கப் படுகிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் நீண்ட நாட்களாக எனக்கு பழக்கம் உள்ள ஓர் அமைச்சர் என்பதால் அவரைப் பணிவோடு வேண்டிக்கொள்கிறேன். 150 ரூபாய்க்கு ஓர் ஊழியர் பணி புரிகிறார். Trainee bills clerk ஆகப் பணி புரிகிறார். 8 ஆண்டுகளாக டிரெயினியா? இந்த இலாக்காவில் சிக்கலான, காம்ப்ளிகேடட் வேலையைத் தெரிந்துகொள்வதற்கு அவருக்கு 8 ஆண்டுகளா? 8 ஆண்டுகளாக 150 ரூபாய் சம்பளம் வாங்கும் நிலைமையை மாற்ற வேண்டும்.

அதுமட்டுமல்ல, கான்ட்ராக்ட் முறையை வேலைகளுக்கு உபயோகப்படுத்துவது தடுக்கப்பட வேண்டும். நான் மீண்டும் சொல்கிறேன், மத்திய அரசுக்கு எதிரான ஒரு தெளிவான, எதிரான கொள்கையைக் கடைப்பிடித்து, தமிழகத்திற்குத் தேவையான பொருள்கள் வேண்டும் என்று கேட்கவேண்டும். நாம் பிச்சை எடுக்கவில்லை. இந்தியக் குடியரசில் தமிழகத்தில் உள்ள குடிமக்கள், தமிழகத்தில் உள்ள அரசு என்ற முறையில் மத்திய அரசு கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

அடுத்து விநியோக முறையிலே உள்ள ஒழுங்கீனங்களைப் போக்கவேண்டும். ஊழலைப் போக்க வேண்டுமென்று சொல்லவில்லை. இந்த சமுதாயத்தின் சாபக்கேடாக அது மாறியிருக்கிறது. எல்லா மாநிலங்களிலும் உள்ள நிலைமை அதுதான். இருந்தாலும் அதற்கு ஆதாரவான அதிகாரி களானாலும், ஊழியர்களானாலும், சம்பந்தப்பட்டவர்கள் யாரானாலும் அவர்கள்மீது கடுமையாக நடவடிக்கை எடுத்து, எக்ஸ்சம்ப்ளிரி பனிஷ்மென்ட் கொடுத்து, விநியோகத்தைச் சிறந்த முறையில் செய்ய முயற்சி எடுக்கவேண்டும். மேலும் கார்டுகள் விநியோகிப்பதில் உள்ள குறைபாடுகளையும் குறைக்க வேண்டும். 500 கார்டுகளுக்கு ஒரு கடை என்ற முறையிலே இதை விரிவுபடுத்தவேண்டும். இது சாத்தியம். நாம் ஏதேதோ திட்டங்களைப் பற்றிப் பேசுகிறோம். கவர்னர்

உரையில் பேசுகிறபோது 1,800 மெகா வாட் மின்சார உற்பத்தி செய்யும் திட்டத்தை காகிதத்தில் படித்தால் மட்டும் போதாது, அதற்கு ஒரு கவர்னர் தேவையா என்று நான் கேட்டதை மீண்டும் நினைவுபடுத்துகிறேன். அப்படியல்ல இது. நிச்சயமாக இந்த ஆக்கபூர்வமான திட்டத்தில் அரசு உறுதியாக நிற்கு மானால் அது சாத்தியம்.

கடைசியாக முடிப்பதற்கு முன் ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். கொள்முதல் கொள்கையிலே சற்று மாற்றம் வேண்டும். மத்திய அரசு விவசாயிகளுக்கு அதிகப்படியான தொகையைக் கொடுக்கக்கூடாது என்று வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. மாநில அரசு கேட்ட தொகையை மத்திய அரசு வழங்குவதில்லை என்பது தெரியும். இருந்தாலும் மத்திய அரசு விவசாயிகளுக்கு நியாய விலை கொடுக்கவேண்டும். நான் அன்றைய தினம் அதைப் பற்றி பேசியபோது, ஒரு சிலர் அந்தப் பக்கத்திலிருந்து என்னை விமர்சித்துச் சொன்னார்கள். நகரில் அரிசி விலையைக் குறைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள், கிராமங்களுக்குப் போய் விவசாயிகளுக்கு நெல்லுக்கு அதிக விலை தர வேண்டுமென்று சொல்லுவார்கள், இது முரண்பாடு தானே என்று சொன்னார்கள். இந்திய அரசியலிலே இது முரண்பாடு இல்லை. இந்த இரண்டையும் இணைத்துச் செய் வதுதான் சிறப்பு, இணைத்துச் செய்வதுதான் அரசியல். இந்த இரண்டையும் இணைத்துச் செயல்படுத்துவதன் மூலமாக இந்த நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய முடியும்.

அத்துடன், மாண்புமிகு அமைச்சரவர்களின் நேரடிப் பொறுப் பில் இல்லாவிட்டாலும், இதைச் செய்யவேண்டும். எவ்வளவு விரைவிலே பினாமி நிலங்களைப் பறிமுதல் செய்ய முடியுமோ, அவ்வளவு விரைவிலே செய்ய வேண்டும். 5,000 ஏக்கர் பினாமி நிலங்கள் வைத்திருப்பவர்கள் தமிழகத்தில் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் பெயரைச் சொல்லவில்லை, ஒரு பக்கத்திலிருந்து கூச்சல் எழும்பும் என்பதால். அப்படி 5,000 ஏக்கர் பினாமி நிலங்கள் வைத்திருக்கிறார்களே, அந்த பினாமி நிலங்களை தைரியமாக, துணிச்சலாக, நாட்டு மக்களின் உதவியுடன், ஆதரவுடன் எடுத்தால், கிராமப்புற ஏழைகளுக்கு இலவசமாக வழங்க முடியும். அந்த நிலங்களுக்கு நஷ்ட ஈடு ஒரு பைசா வழங்கக் கூடாது. நஷ்ட ஈடு இல்லாமல் நிலத்தை





எடுத்து, வழங்கி, அவர்களிடம் வாங்கும் சக்தி அதிகமானால், நம்முடைய கடைகளிலே எந்தப் பொருளை விற்பனைக்கு வைத்தாலும், அவை அனைத்தையும் வாங்கிவிடுகின்ற தமிழக மாக; சுபிட்சமான தமிழகமாக, ஒன்றுபட்ட பலம் வாய்ந்த இந்தியாவிலே சிறப்பான தமிழகமாக அமையும். அதற்கான கொள்கைகளை இன்றைய தினம் கடைபிடிக்க வேண்டுமென்று வலியுறுத்தி, அதிலே நான் குறிப்பிட்ட பலவீனங்களைப் போக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கோரி, அமர்கிறேன்.

(பிற்பகல் 12-50)

* திரு. ஏ. தங்கராசு : மதிப்பிற்குரிய பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் 1987-88 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை 35 நுகர்பொருள் வழங்கும் மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்தத் தமிழகத்தில் இருக்கின்ற ஏழையெளிய மக்கள் ஏற்றம் பெறுவதற்கும், பாட்டாளி மக்கள் வாய்ப்பையும் வசதியையும் பெறுவதற்கும், பின் தங்கிய சமுதாயத்தினர் வாழ்க்கையில் உயர்வதற்கும் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த வகையில் அடுத்த திட்டமாக இந்தத் திட்டம் இருக்கிறது. பாட்டாளி வர்க்கத்திற்குண்டான திட்டம் இந்த நுகர்பொருள் வாணிபக் கழகம். ஏழை எளிய மக்கள் வாய்ப்பு பெறுகின்ற வகையில் இந்தத் திட்டம் இரண்டாவது திட்டம் என்பதை நான் கோடிட் டுக் காட்ட விரும்புகிறேன்.

அதற்கு அடுத்து நெல் விலை நிர்ணயம் என்றுக்கு, ஏகபோக கொள்முதல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் பேசியிருக்கிறார்கள். * * என்று. இவை எல்லாம் அன்பார்லிமெண்டரி வேர்ட்ஸ் என்று பார்லிமெண்டிலே, பல சட்டமன்றங்களிலே தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். ஆதலால் இனிமேல் அப்படிப் பேசாமல் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் * * என்ற வார்த்தையை நீக்கிவிடுகிறேன்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு ஒரு லிமிட்டே இல்லாமல் போய்விடுமே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** என்று பலமுறை சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதற்குப் போகவில்லை என்று சொன்னார். திரு. வி. பி. சிந்தன் அவர்கள் never mentioned.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறிப்பேட்டிலே பார்த்துக்கொள்ளலாம்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையிலே எந்தவிதமான சினிக் வேர்ட்ஸ் அல்லது வேறுவிதமான வார்த்தைகள், நகைச்சுவையோடும், சரித்திரபூர்வமான கோட்டிங்ஸ் ஒன்றும் பண்ணமுடியாது போய்விடும். தயவுசெய்து . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதெல்லாம் அன்பார்லிமெண்டரி என்று முதலிலேயே சொல்லியிருக்கிறார்கள் * * என்று சொல்வதெல்லாம் அன்பார்லிமெண்டரி. நான் படிக்கிறேன். வேண்டுமென்றால் கேளுங்கள்.** (குறுக்கீடு) யாருமே சொல்ல வேண்டாம் என்கிறேன். ** என்று இல்லாமலேயே, அதே மாதிரிகூட சொல்லலாமே இங்கே. இதிலே

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



என்ன இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. ** என்ற வார்த்தை நம்மை நாமே குறைத்துக்கொள்கிற மாதிரி இருக்கிறது. அதைத் தவிர்க்கலாம் என்றுதான் சொல்கிறேன். இதிலே பிடிவாதம் தேவையில்லை.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னென்ன வார்த்தைகள் அதிலே அனுமதிக்கப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அனுமதிக்கிற வார்த்தைகளை அனுமதிக்கலாம். பாராளுமன்றத்திலே அனுமதிக்கிறதை அனுமதிக்கலாம். பாராளுமன்றத்திலே அனுமதிக்காததை நாம் அனுமதிக்காமல் இருக்கலாம்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் சுட்டிக்காட்டி சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்தவனைப் பார்த்து **சொல்பவர் என்று குறிப்பிடும்போது * * என்ற அந்த வார்த்தையை நீக்கியிருக்கிறோம். இதிலே இவ்வளவு பிடிவாதம் தேவையில்லை. * * என்ற வார்த்தை உபயோகப்படுத்தக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். வேறு மாதிரி வார்த்தை போட்டுக் கொள்ளுங்கள். ** என்று நம்மை நாமே குறிப்பிட்டு பேசிக்கொள்ளக்கூடாது. குறைத்துச் சொல்லக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் சொல்கிறார்கள். நான் அந்தமாதிரி போகவில்லை, செய்யவில்லை என்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இனிமேல் * * என்ற அந்த வார்த்தையை யாரும் பயன்படுத்த வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்களும் பயன்படுத்த மாட்டார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதை நீக்கிவிடுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஏகபோகக் கொள்முதல் செய்கிறது. தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு கடைகள் மூலமாக உணவுப் பொருள்களை வழங்க, ஏகபோக கொள்முதலை ஏற்படுத்தினார்கள். ஆனால் இந்த ஏகபோக கொள்முதல் செய்கின்ற நெல்லின் விலையை மத்திய அரசாங்கம்தான் நிர்ணயம் செய்கிறது. மத்திய அரசாங்கம் நிர்ணயம் செய்திருந்தாலும், இந்த அரசு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு விவசாயிகளுக்கு மத்திய அரசு நிர்ணயித்திருக்கின்ற விலையைவிட 35 ரூபாய்க்கு மானியமாக இடுபொருள்கள், உரங்கள் வழங்குகிறது என்பதையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் மத்திய அரசு நிர்ணயித்து இருக்கின்ற விலை ஒரு குவிண்டாலுக்கு 154 ரூபாய் என்று இந்த ஆண்டு நிர்ணயித்து இருக்கிறார்கள். ஆனால் இந்த 154 ரூபாயை விவசாயிகளுக்கு வழங்குகின்ற அதே நேரத்தில் அவர்கள் நெல்லை உற்பத்தி செய்ய ஆகிற செலவு, அவற்றுக்குக் கிடைக்கின்ற விலை இவற்றை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால் இந்த 154 ரூபாய் போதுமானதா என்று கேட்டால் நிச்சயமாகப் போதாது. ஆகவே, அதையும் உணர்ந்துதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு குவிண்டால் நெல் கொடுத்தால் அதற்கு விலையுடன் கூடவே 35 ரூபாய் மதிப்புள்ள இடுபொருளையும் வழங்கியிருக்கிறார்கள். அதற்காக, நான் ஒரு விவசாயி என்ற முறையில், அந்த விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவன் என்ற முறையில், இந்த அரசைப் பாராட்டுவதிலே மகிழ்ச்சியடைகிறேன். விவசாயிகளுக்குத் தருகின்ற இடுபொருள்கள் மூலம் அவர்கள் நன்மை அடைந்தாலும் கூட அதே நேரத்தில் நான் இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஏகபோக நெல் கொள்முதல் செய்யும் எல்லா இடங்களிலும் Mini Godown ஒன்றும், சுமார் 100 மூட்டைகள் நெல் காய வைப்பதற்கான வசதியும் இருந்தால் குறுவை சாகுபடி நெல் கொள்முதல் செய்யும்போது அங்குள்ள விவசாயிகளுக்கு மிகவும்





வசதியாக இருக்கும். இப்போது அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இன்றைக்கு விவசாயிகள் குறிப்பாக டெல்டா பகுதியில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, சிதம்பரம் தாலுக்காவாக இருந்தாலும் சரி, காட்டுமன்னார் கோவில் தாலுக்காவாக இருந்தாலும் சரி, அங்கெயெல்லாம் சுமார் 100 மூட்டைகள் நெல் காய வைப்பதற்கான வசதியை, களம் வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே குறிஞ்சிப்பாடி பிர்க்காவை மாத்திரமாவது ஏகபோக கொள்முதல் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த அரசு 1982 ஆம் ஆண்டு குடும்ப அட்டைகள் வழங்கியது. 1986 ஆம் ஆண்டு வரை அதில் காலக் கட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அந்த காலக் கட்டம் முடிவடைந்து விட்டது. அதில் மேலும் ஒரு ஆண்டு குறைத்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு புதிதாக விரிவான ஒரு கணக்கெடுப்பு நடத்தி அதன் பிறகு குடும்ப அட்டை வழங்க ஏற்பாடு செய்திருப்பதை நான் வரவேற்கிறேன். அப்படி புதிதாக குடும்ப அட்டைகள் வழங்க ஏற்பாடு செய்கிற போது, ஒவ்வொரு கிராமப் பகுதியும் புதிதாக கணக்கெடுக்கப்பட வேண்டும். கிராமப்புறங்களிலே வாழ்கிற ஏழையெளிய மக்கள், பாட்டாளி மக்கள், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள், அவர்களுக்கெல்லாம் குடும்ப அட்டைகள் வழங்க வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் எங்கெங்கு விடுபட்டிருக்கின்றனவோ அங்கே எல்லாம் சென்று, காலனிகளின் உள் பகுதிக்கு சென்று கணக்கெடுத்து குடும்பக் கார்டுகள் வழங்க வேண்டும். அது மட்டுமல்லாமல் இப்படிப்பட்ட ஏழை எளிய மக்கள் வாழ்கின்ற இடங்களில் எங்கு எல்லாம் நியாயவிலைக் கடைகள் இல்லாமல் இருக்கின்றனவோ அங்கெல்லாம் நியாயவிலைக் கடைகளை அவசியம் திறக்க அரசு ஏற்பாடு செய்யவேண்டும். முன்பு உணவுத் துறையின் பொறுப்பை ஏற்றிருந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதே அவையில் பேசும்போது ஆயிரத் திற்கு மேற்பட்ட கார்டுகள் இருக்கின்ற இடங்களில் எல்லாம் புதிதாக நியாயவிலைக் கடைகள் திறக்கப்படும் என்று சொன்னார்கள். அதுபோல 500 கார்டுகளுக்கு மேல் இருக்கிற இடங்களிலும் புதிதாக நியாயவிலைக் கடைகள் ஏற்படுத்தப்படும் என்று

சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் என்னுடைய தொகுதியில் இருக்கின்ற எல்லப்பன்பேட்டை காலனி, அயன் குறிஞ்சிப்பாடி காலனி, கன்னித் தமிழ்நாடு காலனி, கம்பளிமேடு காலனி போன்ற இடங்களில் எல்லாம் புதிய நியாய விலைக் கடைகளை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்பு உணவு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இம்மாநிலத்தில் மொத்தம் 21,035 நியாய விலைக் கடைகள் மூலமாக 119.66 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்படுகின்றன. அதுபோல கிராமப்பகுதியில் உள்ள கடைகள் 17,207 என்றும், அதற்காக வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகள் 81.72 லட்சம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதுபோல நகரப் பகுதியிலுள்ள கடைகள் 3,828 என்றும், அதற்காக வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகள் 37.94 லட்சம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வளவு விரிவான முறையில் ஏராளமான கடைகளின் மூலமாக மக்களுக்கு நியாய விலையில் அதிகப் பொருள்களை வழங்கக் கூடிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்ததற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, கூட்டுறவு சங்கங்கள் சார்பில் நடத்தப்படும் 15,931 கடைகள் மூலமும், நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் நடத்தப்படும் 5,049 கடைகள் மூலமும், தொழிற்சங்கங்கள் தோட்ட தொழிலாளர்கள் சார்பில் நடத்தப்படும் 55 கடைகள் மூலமும் இந்த அரசு மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்கி வருகிறது. ஆக, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்குகின்ற வகையில் பகுதி பகுதியாக திட்டங்களைத் தீட்டி அதற்குரிய ஏற்பாடுகளை இந்த அரசு செய்து கொண்டு வருவதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆகவே, அதற்கடுத்து அரிசி வழங்குவதைப்பற்றி எடுத்துக்கொண்டால், மாண்புமிகு நம்முடைய தமிழகத்தின் முதல்வர் அவர்கள், சாதாரண ரக அரிசி 1 ரூபாய் 75 பைசாவுக்கும், சன்ன ரகம் 2 ரூபாய் 25 பைசாவுக்கும், மிக்ச் சன்ன ரகம் 2 ரூபாய் 50 பைசாவுக்கும் என்ற வகையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்கு உண்டான வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, இந்த வகையில் இன்றைய தினம் தமிழகத்திலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட





சமுதாயமும், ஒடுக்கப்பட்ட சமுதாயமும், பின்தங்கிய சமுதாயமும், தொழிலாளர் வர்க்கமும் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த வகையில் இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகச் செயல்படுகின்ற அத்தனை அதிகாரிகளையும் நான் பாராட்டுகிறேன்.

(பிற்பகல் 1-00)

அதே சமயத்தில் இந்த அரசாங்கம் இப்படிப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருள் வழங்குவதற்கு எவ்வளவு நஷ்டத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் பார்க்கின்றபொழுது எண்பது கோடி ரூபாய்—இந்த அரசாங்கம் மக்கள் மத்தியில் செல்லக் கூடாது என்ற வகையில் அரசாங்கமே எண்பது கோடி ரூபாய் நஷ்டத்தை ஏற்றுக்கொண்டு இவ்வளவு மலிவு விலையில் உணவு தானியங்களை வழங்குகிறது என்பதை நான் பார்க்கிறபொழுது மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன், பூரிப்படைகிறேன்.

அதற்குப் பின்னாலே, இங்கே ஒரு குடும்ப அட்டைக்கு வழங்கிய சர்க்கரை, 450 கிராம். நான்கரை கிலோ என்று இருந்ததை ஐந்து கிலோ என்று உயர்த்தியிருக்கிறார். ஆகவே, ஏழை எளிய மக்களுக்கு உணவு வகைகள் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் இன்றையதினம் புரட்சித் தலைவர்கள் இந்த ஏற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நான் பார்க்கின்றபொழுது, வெளிப்படையாக மகிழ்ச்சியடைகின்றேன் என்பதையும், பூரிப்படைகிறேன் என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, இந்த நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் உணவுப் பொருட்களைக் கண்காணிப்பதற்கு ஆங்காங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களின் ஆலோசனையின் பேரில் இந்த நியாய விலைக் கடைகளைக் கண்காணிப்பதற்கும், உணவுப் பொருட்கள் நியாயமான வகையில் வழங்கப்படுவதற்கும்

[திரு. ஏ. தங்கராசு] [1987 ஏப்ரல் 9

சட்டமன்ற உறுப்பினர்களையும் கலந்து ஒரு கமிட்டியை ஏற்படுத்தி, அதற்குண்டான வாய்ப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, குறை எதுவும் இருந்தாலும், கிராமத்திலே சொல்லுவார்கள், "பூனை இருக்கிற இடத்தில்தான் எலியும் பேரன் பேத்தி எடுத்துக்கொண்டிருக்கும்" என்று, சொல்வார்கள். அந்த வகையில் குறைகள் இருந்தாலும் மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தத் துறையில் இருக்கின்ற குறைபாட்டை நிவர்த்தி செய்து மக்களுக்கு நல்ல உணவுகளையும், கட்டுப்பாடு உள்ள உணவு தானியங்கள் கிடைப்பதற்கும் உண்டான வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு இந்த வாய்ப்பைத் தந்த துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சரவர்களால் முன் வைக்கப்பட்டிருக்கின்ற தமிழகத்தில் உணவு நிலைமை என்ற கொள்கைக் குறிப்பின்மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக உணவு நிலைமை என்று சொல்கின்றபொழுது, அனைத்துத் தரப்பிலேயிருக்கின்ற பலதரப்பட்ட மக்களும், பொதுமக்களும் குறிப்பாகச் சுட்டிக் காட்டுவது, நுகர்வோர் நலன் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதைப் பற்றித்தான். இங்கே அறிக்கையிலேகூட நுகர்வோர் நலன் பாதுகாக்கப்படுவதற்கு உரிய வழிமுறைகளைப் பற்றியெல்லாம் சுருக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசும் இதுகுறித்த ஒரு சட்டத்தை இயற்றியிருக்கிறது. நான் இங்கே குறிப்பிட விரும்புவது, மனிதாபிமானத்தோடும், பாதிக்கப்படுபவர்களின் நலன்களைப்



1987 ஏப்ரல் 9] (திரு. கே. சுப்பராயன்)

பாதுகாப்பதில் ஒரு ஆவேச உணர்ச்சியோடும் இந்தப் பிரச்சினையைக் கருத வேண்டிய தவிர்க்க முடியாத அவசியம் இருக்கிறது என்பதைத்தான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையிலும் பற்றாக் குறை பொருளாதாரம் நிரந்தரமாக இருக்கக்கூடிய ஒரு அமைப்பு என்கிற முறையிலேயும், வியாபாரிகள் பொருட்களை வியாபாரம் செய்வதற்காக மக்கள் முன்னால் முனைப்பாக ஏற்பதற்குரிய வழி முறைகளில், விளம்பரத்தைத் தொடர்ச்சியாகச் செய்கின்ற நிலைமை நீடிப்பதாலும், இந்த விளம்பர மோகங்களுக்கிடையில் தரமான பொருட்களைத் தேர்ந்தெடுப்பதற்குரிய கூர்ந்த மதி பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்கின்ற ஏழ்மைப்பட்ட மக்கள் அதிகம் இருக்கின்ற காரணத்தினாலும், இந்தப் பிரச்சினை மிக அவசர, அவசியத்தோடு கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். வருகின்ற தகவல்களை முழுமையாகப் பரிசீலிப்பதற்கோ, வழங்கப்படுகின்ற பொருட்களின் தரத்தைப்பற்றிக் கூர்ந்து பார்ப்பதற்குரிய வாய்ப்பே அற்ற, ஏமாற்றுகின்றவர்களிடம் ஏமாந்து போகின்ற வாடிக்கையாளர்களாக மக்கள் இருக்கின்ற காரணத்தால், இந்த நுகர்வோர் நலன் முற்றிலும் பரிவோடும், வேகத்தோடும் பார்க்கப்பட வேண்டிய ஒரு விஷயம் என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அறிக்கையில் கூட கூறப்பட்டிருக்கிறது. என்ன கூறப்பட்டிருக்கிறது? கருத்தரங்கு நடத்துவது, கண்காட்சி நடத்துவது, கல்வி அளிப்பது என்று கூறியிருக்கிறார்கள். அவைதான் உண்மையிலேயே நுகர்வோரைப் பாதுகாக்குமா? இந்தியாவில் இன்றைக்கு இருக்கின்ற நிலைமை என்ன இந்த உணவுப் பொருள்களைப் பொறுத்தமட்டில்? இந்தியாவிலேயே கலப்படம் செய்யப்படாத பொருள் எது என்று கண்டுபிடிக்கிற காலம் இது. கலப்படம் இல்லாத பொருள் எது என்று கண்டுபிடிக்க ஆராய்ச்சி நடைபெறுகிற இன்றைய நிலையில் கோடிக்கணக்கான மக்கள், கல்வி அறிவு இல்லாத ஏழை எளிய மக்களை ஏமாற்றுகின்ற வியாபாரிகளைத் தடுக்க என்ன நடவடிக்கை இருக்கிறது? அவர்கள் கலப்படம் செய்வதைக் கருத்தரங்கிலே, கண்காட்சியிலே, கல்வி நிறுவனத்திலே சரிசெய்துவிட முடியுமா? எழுத்தறிவில்லாத ஏழை எளிய மக்களால், சாதாரண கிராமப்புற மக்களால் அவற்றைப் புரிந்துகொள்ள வாய்ப்பு இல்லை.

[திரு. கே. சுப்பராயன்] [1987 ஏப்ரல் 9

உணவுப் பண்டங்களில் பெரும்பகுதியும் கலப்படம் என்று நான் கூறவில்லை; பொறுப்புள்ள இடத்திலே இருக்கிற பொறுப்புள்ளவர்கள்தான் இப்படிக் கூறுகிறார்கள். இந்தக் கலப்படத்தை எப்படித் தடுக்கப்போகிறோம், மக்களைக் காப்பாற்றப் போகிறோம்? இதிலே பல பிரச்சினைகள் அடங்கியிருக்கின்றன. சட்டங்கள் பல இருக்கலாம்; ஆணைகள் எத்தனையோ இருக்கலாம். அதிகாரங்கள் ஏராளமாக இருக்கலாம்; யார், யார் கலப்படம் செய்கிறார்கள் என்பதைக் கண்காணிக்க பொறுப்புள்ள அதிகாரிகள் இருக்கலாம். இருந்தபோதிலும் கலப்படம் என்பது நிரந்தரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஒன்றாகத்தான் இருக்கிறது. தரமற்ற கணகாணிப்பால், தரமற்ற உணவுப் பண்டங்களால் மக்கள் அல்லல்படும் நிலை அன்றாடம் காணப்படுகிறது. அதை எல்லாம் சட்டத்தால் தடுக்க இயலவில்லை என்பது நடைமுறை அனுபவம். இரக்கமற்ற வியாபாரிகளால், கலப்படம் செய்பவர்களால் ஏற்படுகின்ற இன்னல்கள், மக்களைச் சாகடிப்பது என்பது ஒரு கொடுமையான குற்றம் என்று அரசு கூட ஏற்றுக்கொள்ளவில்லை என்று கருதுகிறேன். உணவில் கலப்படம் செய்து உயிரைப் போக்கினாலும் இரக்க சிந்தனையால் அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனையோ மிகவும் குறைவானதாக இருக்கிறது. ஹெல்மட் அணியாதவருக்குக் கொடுக்கும் தண்டனையைவிட கலப்படம் செய்கின்றவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை குறைவாக இருக்கிறது. ஆகவே, அரசின் சட்டம் எப்படி இருக்கிறது என்றால், 'நான் அடிப்பது போல் அடிப்பேன்; நீ அழுவது போல் அழு' என்று சொல்வதைப் போல அவ்வளவு 'மைல்டு அட்டாக்' ஆக இருக்கிறது. இப்படி இருந்தால் கலப்படத்தை எப்படித் தடுக்க முடியும் என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஆகவே, கலப்படத்தைத் தடுப்பதற்கு கடுமையான தண்டனை அளிக்க தகுந்தமுறையில் சட்டம் திருத்தப்படவேண்டும்; அதற்கு மாநில அரசு மத்திய அரசோடு போராட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு விஷயம். தற்போது வளர்ந்து வருகிற அல்லது வளர்க்கப்பட்டு வருகிற நுகர்வோர் பாதுகாப்பு இயக்கமும், சட்டமும் ஓரளவுக்கு மேற்பட்ட மக்களுக்குத்தான் பயன்படுகிறதே தவிர கீழ்மட்டத்தில் இருக்கிறவர்களுக்குப் பாதுகாப்பாக இல்லை; பயன்படுவதாக இல்லை. ஏனென்றால் அவர்



1987 ஏப்ரல் 9] (திரு. கே. சுப்பராயன்)

களுக்கு இப்படிப்பட்ட சட்டம் இருப்பதாகவோ இயக்கம் இருப்பதாகவோ தெரிந்துகொள்ள வாய்ப்பு இல்லை. இது சம்பந்தமாக அறிவைக் கூர்மையாக்கிக்கொள்ள அவர்களுக்கு வழியில்லை என்பதுதான் நடைமுறை உண்மை. இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைப் பற்றிய அறிக்கையில் ஒரு விஷயம் கூறப்பட்டிருக்கிறது. நுகர்பொருள் வாணிபக் கழகத்தினால் நடத்தப்படுகின்ற 5,049 நியாய விலைக் கடைகளில் ஏறத்தாழ 6,760 தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணியாளர்களை எல்லாம் கூட்டுறவுத் துறைக்கு மாற்றம் செய்து ஒரு உத்தரவு பிறப்பித்தார்கள். அந்த உத்தரவை எதிர்த்து நீதிமன்றத்திலே வழக்குத் தொடுக்கப்பட்டது; இன்னும் நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இயங்கிவந்த நியாய விலைக் கடைகளை முழுமையாக கூட்டுறவுத் துறைக்கு மாற்றுவது சரியல்ல. ஒன்றாவது வகுப்பிலே படிக்கிறவனை இரண்டாவது வகுப்பிற்கு மாற்றுவது என்றால் அது 'பாஸ்' செய்யும் முறை. ஆனால் ஒன்றாம் வகுப்பிலே படிக்கிறவனை அதற்குக் கீழே தள்ளுகிறபோது 'பாஸ்' என்று எப்படி சொல்ல முடியும்? தனியார் துறை கூட்டுறவுத் துறைக்கு வரலாம்; கூட்டுத் துறைக்கு வரலாம்; பொதுத் துறைக்கு அல்லது அரசுத் துறைக்கு வரலாம். அது முறை. ஆனால் அரசுத் துறையில் இருக்கிற நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கடைகளை கூட்டுறவுத் துறைக்கு மாற்றுவது என்பது பொருத்தமானது அல்ல; முன்னேற்றம் அல்ல; வளர்ச்சியும் அல்ல. ஆகவே, கூட்டுறவுத் துறையில் இருப்பதை அரசுத் துறைக்குக் கொண்டு வாருங்கள். அரசு நிறுவனம்தான் நுகர்பொருள் வாணிபக் கழகம்.

கடந்த காலத்தில் ஒரு கேள்வியின்போது 'சப்ளிமெண்டரி' கேட்டபோது அமைச்சரவர்கள் அதைக் கண்டுகொள்ளாமலேயே பதில் அளித்தார்கள். இப்போதும் கண்டுகொள்ளாமல் போவது நல்லதல்ல. ஆகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, தயவு செய்து இப்போது நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றுகின்றவர்களை, அந்த ஊழியர்களை கூட்டுறவுத் துறைக்கு மாற்றும் முயற்சியை அரசு மாற்றிக் கொள்ள வேண்டும்.

(திரு. கே. சுப்பராயன்) [1987 ஏப்ரல் 9

(பிற்பகல் 1-10)

அதோடு கூட்டுறவுத்துறையில் இருக்கிற பொது விநியோக முறை முழுவதையும் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு மாற்றி எல்லாக் கடைகளிலும் மளிகைச் சாமான்கள் உட்பட அனைத்து தரமான பொருட்களையும் நியாயமான விலைக்கு விற்கக்கூடிய முறையில் நிரந்தரமான கடைகளாக மாற்றுவதோடு அந்த ஊழியர்கள் அனைவரையும் நிரந்தரமாக ஆக்க வேண்டும் என்று நான் குறிப்பிட்டுக் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக அதற்கு ஒப்புக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். அங்கே பணியாற்றுகிற ஊழியர்களின் நிலைமை என்ன? 8 வருஷம், 10 வருஷமாக நிரந்தரத் தொழிலாளர்களாக இல்லாமல் தற்காலிகமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். பெரிய விஞ்ஞான மேதைகள் செய்கின்ற தொழில் அல்ல அது. நுட்பமான தொழிலும் அல்ல. எடை போடுகிற, பொருட்களைக் கட்டிக் கொடுக்கிற வேலை அது. 8 வருஷம், 10 வருஷம் பயிற்சி பெற வேண்டிய வேலையா அது? எனவே மிகச் சாதாரணமாக எடைபோட்டு வழங்குகிற, பொருட்களைக் கட்டிக் கொடுக்கிற வேலையில் இரண்டு வருஷம், மூன்று வருஷம், 8 வருஷம் என்று தற்காலிக ஊழியர்களாக வைத்துக்கொண்டிருப்பது எந்த வகையான வாதத்திலும் நியாயப்படுத்த முடியாத விஷயம் என்பதால் இந்தத் தொழிலாளர்களில் எவரும் பாதிக்காத வகையில் பொது விநியோக முறை முழுவதையும் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்கீழ் கொண்டுவர வேண்டும், அதற்காக முயற்சிக்க வேண்டும், அந்தத் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அத்தகைய நிலையை மேற்கொள்வதுதான் இன்றைய தமிழ்நாட்டினுடைய பொது விநியோக முறைக்கு பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, குறிப்பிட வேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது. இந்தத் துறைகளிலே பணியாற்றக்கூடிய கணிசி தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இதுபோல் பல துறைகளில் பணியாற்றுகிற தொழிலாளர்கள் கான்ட்ராக்ட் அடிப்படையில், அதாவது ஒப்பந்தக்கூலிகளாக பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள். இந்த



1987 ஏப்ரல் 9] [திரு. கே. சுப்பராயன்]

முறைகளைத் தயவுசெய்து அரசு கைவிடவேண்டும். சில நேரங்களில் அரசு தனக்கு வசதியான முறையில், நீதிமன்றத்தின் தீர்ப்புகளைக் காட்டுவதற்கு முயற்சிக்கிறது. இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகிறவர்களை நிரந்தரமாக்கவேண்டுமென்று உச்ச நீதிமன்றமே தீர்ப்பு கொடுத்திருந்தும் கூட இன்னும் அரசுத் துறையில் பணியாற்றுகிற தொழிலாளர்களை தற்காலிகத் தொழிலாளர்களாக வைத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்றால் நியாயத்திற்கு நீங்கள் சவால் விடுகிறீர்களா? அல்லது நியாயமான தீர்ப்பையே ஏற்றுக்கொள்வதில்லை என்கிற ஒரு ரெக்கார்டை உருவாக்குவதற்குத் தயவு செய்து முயற்சிக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மண்ணெண்ணெய், பாமாலின், சர்க்கரை, பருப்பு போன்றவை பற்றாக்குறையாகத்தான் சப்ளை செய்யப் படுகின்றன. மத்திய அரசிடத்திலும் தொடர்ந்து வலியுறுத்தி இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். மத்திய அரசிடம் நீங்கள் வலியுறுத்தவில்லை என்றால் கூட தவறுதான். அல்லது மத்திய அரசுக்கு வலியுறுத்தியும்கூட அவர்கள் தர மறுத்து விட்டார்களா? அல்லது இதற்கு மேலே வழங்குவதில்லை என்று எல்லைக்கோடு நிர்ணயித்திருக்கிறார்களா? அல்லது இந்தக் கேள்வியையே கண்டுகொள்ளாமல் இருக்கிறார்களா என்பதைப் பற்றி அரசு குறிப்பிட வேண்டும்.

அடுத்து ரேஷன் கடைகளில் வழங்குகின்ற அரிசியின் தரம் மிக, மிகக் குறைவு. இவ்வாறு அதன் தரம் மிக, மிகக் குறைவாக இருப்பதால் பெரும்பகுதி மக்கள் ரேஷன் கடை அரிசியை வாங்குவதே இல்லை. அப்படி வாங்காத நிலையில் தேங்குகிற அரிசியை வேறு பல வழிமுறைகளில் ரைஸ் மில்களுக்கு விற்றுவிடுகிற நிலைமை இருக்கிறது. அப்படி விற்கப்பட்டு வருகிற அரிசியை மீண்டும் கொள்முதலும் செய்துவிடுகின்ற நிலைமை இருக்கிறது. இப்படி சைக்கிள் செயின் மாதிரியான ஒரு சுற்று இந்த ரேஷன் கடைகளில் நிலவுகிறது என்று பொறுப்புள்ள பத்திரிகைகள் உட்பட பொறுப்பான பலதரப்பட்டவர்கள் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். அவற்றைக் குற்றச்சாட்டாக நீங்கள் எடுத்துக் கொள்ளவேண்டாம்; நானும் குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்ப

[திரு. கே. சுப்பராயன்] [1987 ஏப்ரல் 9

வில்லை. கவனத்தில் கொள்ளுங்கள். ரேஷன் அரிசியின் தரத்தைத் தயவுசெய்து கூட்டுங்கள். அந்த அரிசி வெளியே விற்கப்படுவது உண்மையா என்பதைக் கண்டறியுங்கள். விற்கப்படுகிறது என்றால் நடைமுறைகளை மாற்றுவதற்குரிய பொருத்தமான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக ஒரு விஷயத்தை அதன் முக்கியத்துவம் கருதி நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு பொறுப்புள்ள அரசு என்ற முறையிலே உங்களிடத்திலே, ஒரு பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நான் ஒன்றைச் சொல்கிறேன். கோடிக்கணக்கான மக்களின் நலன் கண்டு கொள்ளப்படாமல் இருக்கிறது. கலப்படம், தரமற்ற உணவு என்ற இந்தச் சூழ்நிலைகளுக்கு எதிராக எந்த வழிமுறைகளில் இயக்கம் நடத்துவது பொருத்தம் என்பதைக் கண்டறிய அனைத்து கட்சிகளையும், அனைத்து பொது நிறுவனங்களையும் சேர்ந்த ஒரு கூட்டு விவாதத்தை நடத்தி பொருத்தமான வழிமுறைகளை உருவாக்கி கலப்படம், தரமற்ற உணவு ஆகியவற்றுக்கு எதிராக நாம் போர் தொடுக்க வேண்டும். இந்திய அரசிலும் சரி, மாநில அரசிலும் சரி சின்னச்சின்ன குற்றங்களுக்கெல்லாம் மிகப்பெரிய அளவில் தண்டிக்கிறோமே! கலப்படம் என்பது சின்னக் குற்றம்தானா? இந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள் பல விஷயங்களில் தண்டனை கொடுக்கப்பட்டிருப்பதாக, என்ன தண்டனை? வெறும் ஃபைன்தான் தண்டனையா? பல இடங்களில் பருப்பிலே கலப்படம் செய்யப்பட்டு, அப்படி கலப்படம் செய்யப்பட்ட பருப்பை உண்ட காரணத்தால் பலர் முடமாகி, கைகால்கள் விளங்காமல் இருக்கிறார்கள் என்று பொறுப்புள்ளவர்கள் அறிக்கையாக வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களைக் கடுமையாக தண்டிக்க வேண்டும் என்கிறபோது ஜவஹர்லால் நேரு சொன்ன ஒன்று நினைவுக்கு வருகிறது. கலப்படக் குற்றவாளிகள் தூக்கில் இடப்பட வேண்டியவர்கள் என்று...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** For Food Adulteration sentence is minimum.



1987 ஏப்ரல் 9]

**திரு. கே. சுப்பராயன் :** எனவே நேரு அவர்கள் குறிப்பிட்டதை மீண்டும் குறிப்பிட்டு, அந்தக் குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டுமானால் கடுமையான தண்டனைதான் இவற்றைத் தடுக்கும். அதற்காக நான் முன்னால் சொன்னபடி பல தரப்பு மக்களையும், அமைப்புகளையும் கூட்டி விவாதித்து பிரத்தியேகமாக சட்டத்தை உருவாக்க வேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**டாக்டர் கே. சமரசம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடுமையான வறட்சியிலும் உணவுப் பிரச்னை இல்லை என்ற புரட்சியை உருவாக்கிய உணவுத் துறை, நுகர் பொருள் வழங்கு துறை ஆகியவை மீது என்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரிசிதான் அரசியலை உருவாக்குகிறது என்றெல்லாம் சொல்வார்கள். அதை உணர்ந்த காரணத்தினால்தான் இந்த ஆட்சி அந்தத் துறையில் மிகச் சிறப்பாக எல்லாவற்றையும் நிறைவேற்றியிருக்கிறது, நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதைப் பணிவோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷனை எல்லாம் கூட்டுறவுத் துறைக்கு மாற்றுவது என்பது சரியல்ல என்று சில நண்பர்கள் சொன்னார்கள். ஏதோ அரசுத் துறையிலேயிருந்து தனியார் துறைக்குப் போவது 7-வது படித்தவர்கள் 6-வதுக்குப் போவது போலச் சமம் என்றெல்லாம் பொருள்படி கருத்தைச் சொன்னார்கள். எனக்குத் தெரிந்த வரையில், இந்தத் துறை அதோடு இணைவது, பாலில் சர்க்கரை கலந்தது போல் இனிப்பான செய்தியே தவிர, வேறு அல்ல என்று நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாம் இங்கே 500 கார்டுகளுக்கு ஒரு கடை என்று வைத்திருக்கிறோம். ஆனால் மலைப் பகுதிகளிலே ஒடுக்குப்புறமாக, ஒதுக்குப்புறமாக இருக்கக்கூடியவர்களுக்கு நாம் இன்னும் அதிக வாய்ப்புக் கொடுக்கக் கூடிய முறையில் இந்தக் கடைகளை கூடுதலாக்கிச் செய்ய வேண்டும். அப்படி கூடுதலாக்க வேண்டும் என்று சொல்லுகிறபோது அதற்கு வேலையற்ற பட்டதாரிகளை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். இப்போது கூட நாம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு கடன் வழங்குகிறோம், வழங்கக் கூடிய கடன்

[டாக்டர் கே. சமரசம்] [1987 ஏப்ரல் 9

தொகையால் என்ன தொழில் நடக்கிறது, என்ன முன்னேற்றம் என்றெல்லாம் ஆராயும் போது அது மிகப்பெரிய அளவுக்கு இல்லை. ஆகவே சுய வேலை வாய்ப்புத் திட்டம் தேவை என்று சொல்லக் கூடியவர்களுக்கு நாம் கடனைக் கொடுத்து அல்லது பொருள்களைக் கொடுத்து விற்பனை செய்வதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்து கொடுக்கலாம். என்னென்ன பொருள் களைக் கொடுக்கிறோமோ அவற்றை பாக்கெட் செய்து கொடுத்து விடலாம். எல்லாவற்றையும் பாக்கெட் செய்து கொடுப்பதினால் எந்தப் பிரச்னையோ, சிக்கலோ, சங்கடமோ இல்லாமல் இருக்கும். அப்படிக் கொடுக்கும்போது கமிஷன் ரேட்டிலே 2 ரூபாய் என்றால் அந்தப் பொருளை 2.10, 2.20-க்கு மேல் விற்கக் கூடாது என்ற முறையில் டேர்ம்ஸ் கண்டிஷனை வைத்து செய் தோமானால் மக்களுக்கும் நியாய விலையில் பொருள்கள் கிடைக்கும், பட்டதாரிகளுக்கும் சுய வேலை வாய்ப்பாகும். அந்த வகையில் இந்தத் திட்டத்தை செய்ய வேண்டும். அதிலும் அவர்களுக்கு ஐடென்டிபிகேஷன் கார்டு கொடுத்து, அதிலே எல்லா விவரங்களும் பதிய வைத்து, எந்த பாங்கிலிருந்து கடன் கொடுத்தோம், எந்த இடத்திலிருந்து பொருள்கள் கொடுத்திருக் கிறோம் போன்றவற்றை எல்லாம் பதிந்திருக்கக் கூடிய வகையில், இதை செப்பனிட்டு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் ஒழுங்காக நடத்தினால் அரசுப் பணிகளுக்கு முன் உரிமை கொடுத்து எடுத்துக் கொள்ளவும் அதிலேயே வகை செய்யலாம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 1-20)

இப்போது இருக்கக் கூடியவற்றில் பல இடங்களில் நல்ல முறையில் நடந்தாலும் சில இடங்களில் கோளாறு இருக்கின்றது. உலக்கையை முழுங்குகிற கிளர்க்கிடம் உரலையே முழுங்குகிற மேனேஜர் வாய்த்தது போல சில சூப்பர்வைசர்களின் கண்காணிப்பினால்தான் சில குறைகளே ஏற்படுகிறது. தொழி லாளர்கள், ஏழைகள் ஆகியவருக்குத் தேவையான பண்டம் கிடைக்காமல் போய் விடுகிறது. ஆகவே இதை நீங்கள் பார்த்து நல்லமுறையில் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒன்பது கோடி ரூபாய் அளவில் நாம் வேலை



1987 ஏப்ரல் 9] [டாக்டர் கே. சமரசம்]

யில்லாத பட்டதாரிகளுக்கு பல்வேறு வகையில் உதவிகளைச் செய்கிறோம். அவர்களையெல்லாம் ஒரு சோஷியல் ஒர்க்கர் என்ற முறையில் அல்லது ஒரு பி.ஆர்.ஓ. என்ற முறையில் செய்து அவைகளைக் கண்காணிக்கிற வகையில், ஒழுங்குபடுத்து கிற வகையில் பார்வையிட்டு அவர்களுடைய கருத்துக்களை, உணர்வுகளைத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளலாம். இந்தத் துறை எப்படி இருக்கிறது என்பதைப் பார்வையிட்டுச் சொல்லுங்கள் என்று அவர்களைச் சொன்னால் அவர்கள் அதைப் பார்த்தது போல இருக்கும், நாம் கொடுத்த பணத்திற்கு அவர்களும் ஒரு வேலை செய்ததாக இருக்கும். அவர்கள் கற்ற கல்வியை மறக்காது இருக்கவும் உதவும். அந்தவகையில் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாட்டிலே பொருள் உண்டு. ஆனால் ஏழைகளுக்குச் செல்ல வில்லை. பதுக்கல்காரர்கள் கையில் பதுங்கிப் போய்விடுகிற காரணத்தால்தான் பொருள்கள் கிடைக்கவில்லை. இதற்கு ஒரு நல்ல சிஸ்டத்தை உருவாக்கி நல்லமுறையில் பதுக்கலை ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாம் ஒரு கடைக்கு பாமாயில் ஒப்படைக்கிறோம் என்றால் அது வெளியே வேறு இடத்தில் இருக்கிற தனியார் கடையில் கிடைக்கிறது என்றால் அந்தக் கடையின் உரிமத்தை ரத்து செய்ய வேண்டும். இன்னும் சொன்னால் ஒரு முறை ரத்து செய்ய வேண்டும். மீண்டும் அப்படிப்பட்ட சூழ்நிலை அந்தக் கடையில் இருந்தால் அவர் களுக்கு சிறை தண்டனை கூட கொடுக்கலாம் என்ற நிலை இருக்க வேண்டும். அரசாங்கத்தின் பொருள், நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இருக்க வேண்டிய பொருள் வெளியே தனியார் கடையில் விற்பனை செய்கிறார்கள் என்றால் அவர்களுக்கு சிறைத் தண்டனை கொடுத்தால் கூடத் தவறில்லை.

[டாக்டர் கே. சமரசம்] [1987 ஏப்ரல் 9

அவர்களுடைய உரிமத்தை ரத்து செய்தால் கூடத் தவறில்லை என்று நான் சொல்வேன். அந்தவகையில் ஒரு முறையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கலப்படம் என்பது உடலை அழித்து, உயிரைக் குடிக்கக்கூடிய ஒன்று. கலப்படத்திற்கு சரியான தண்டனை நிச்சயமாகத் தேவை. ஐந்து ரூபாய், பத்து ரூபாய் அபராதம் எல்லாம் கலப்படத்தைப் போக்க உதவாது. அந்தவகையில் ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நாம் வைத்திருக்கிற பொருள்களின் ஸ்டாக் நல்ல முறையில் இருக்க வேண்டும். அவற்றைப் பாதுகாப்பாக வைக்கும் வகையில் பொருள்கள் பாதுகாப்பு வசதியை தனியாகப் படுத்த வேண்டும். ஸ்டாக் வைக்கும் போது பராமரிப்பு சரியான முறையில் இல்லாத காரணத்தால் அவற்றிலிருந்து வாண்ட வருகிறது என்று புகார் வருவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மலைப்பகுதியில் பணியாற்றுகிற நியாயவிலைக் கடைப் பணியாளர்களுக்கு மலைப் படி ஊக்கத் தொகை கொடுக்கலாம். அல்லது ஏற்கனவே நான் சொன்னதைப் போல வேலையில்லாதப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கக் கூடிய வகையில் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தால் இந்தக் கடைகள் நல்ல முறையில் இயங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறன்.

நுகர்பொருள் வாணிபக் கழகத்தை நாம் என்ன காரணத்திற்காக ஏற்படுத்தினோமோ அந்த நோக்கம் நிறைவேறுகிற வகையில் செய்து, கழகம் மேலும் வளர்ச்சி அடையக் கூடிய வகையில் செய்து, மேலும் செம்மைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 9] [டாக்டர் கே. சமரசம்]

நீலகிரி மாவட்டத்தில் எப்சி.ஐ., கொடவுன் ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தி இருக்கிறது. அதனை மேலும் வற்புறுத்தி அந்த கொடவுனை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று நீலகிரி மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். மலைப் பகுதியாக இருக்கிற காரணத்தால் அதனைப் பரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அவையில் சில கருத்துக்களைப் பேசுகிற போது, எதிர்க்கட்சிகள் குற்றம் சொல்கிறபோது, கருத்துக்களைச் சொல்கிறபோது நமக்கும் அவர்களுக்கும் சில வித்யாசங்கள் உண்டு. ஒருவரைப் பார்த்து ஒருவர் சொல்கிறார், நீ எல்லோரையும் முழுங்கி விடுவாய், நீ அவர்களை காலி பண்ணி விடுவாய் என்றெல்லாம் சொல்வார்கள். இன்னொருவர் சொல்கிறபோது மற்றவரை விட உனக்கு ஆயுள் அதிகம் என்று சொல்வார். முதலில் சொல்பவர்களுக்கு பஜாரி என்று பெயர்; இரண்டாவது வகையில் சொல்பவர்களுக்கு சம்சாரி என்று பெயர், இப்படி அரசியலில் பஜாரிகள் சிலர் இருக்கிறார்கள். அரசியல் சம்சாரியாக ஆளும்கட்சி இருக்கிறதால் அதைத் தாங்கி நடவடிக்கையெடுக்க வேண்டிய நிலை இருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று அமர்கிறேன்.

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள நுகர்பொருள் மானியக் கோரிக்கையின்மீது நான் சார்ந்துள்ள இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

[திரு. எஸ். என். இராமசாமி] [1987 ஏப்ரல் 9

தமிழகத்தில் ஊராட்சி மன்றங்களுக்கு ஒரு நியாய விலைக் கடை வீதம் தற்போது நடைமுறைப்படுத்தி, நடைபெற்று வருகிறது. ஒரு ஊராட்சி மன்றத்தில், 5, 6 சிற்றூர்கள் இருந்து வருகின்றன. ஆனால், சில கிராமங்கள் 4, 5, 6 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்திருப்பதன் காரணமாக, அந்தச் சிற்றூரைச் சேர்ந்த மக்களுக்கு ரேஷன்கள் சரியான முறையில் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் அந்த கிராமத்தில் வசிக்கக் கூடியவர்கள் மிகவும் தொலை தூரம் நடந்து வந்து பொருட்களை வாங்க முடியவில்லை. அதேநேரத்தில் அவர்கள் எல்லாம் கிராமத்திலே காலையிலேயே வேலைக்குச் செல்பவர்களாக இருப்பதால், இரவு நேரத்திலே கிராமத்திற்குத் திரும்பி வரவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதன் காரணமாக அவர்கள் நியாய விலைக் கடைகளுக்குச் சென்று பொருட்களை வாங்க முடியாத நிலைமை இருந்து வருகிறது. அப்படிப்பட்ட ஊராட்சி மன்றங்களைச் சேர்ந்த கிராமங்களுக்கு, 500 கார்டுகளுக்கு ஒரு கடை என்ற அடிப்படையில் அமைத்துத்தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சில ஊராட்சிமன்றங்களைச் சேர்ந்த சிற்றூர்களிலே அதிக கார்டுகள் இல்லாமல், குறைவான கார்டுகள் இருக்கும். இதுபோன்ற கிராமங்களுக்கு இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கடைகளிலிருந்து வாரத்திற்கு ஒரு நாள், அல்லது 2 நாள் சென்று, அந்தக் கிராம மக்களுக்கு நுகர்பொருட்களை, இந்த வாணிபக் கழகம் போட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், தற்போது இந்த வாணிபக் கழகத்தின் கடைகளுக்கு கொடுக்கக்கூடிய மூட்டைகள், சுமார் 72 கிலோ எடை இருக்க வேண்டும் என்று அரசாங்கத்தின் ஆணையில் இருக்கிறது. ஆனால் எந்த மூட்டையை அளந்துபார்த்தாலும், நிறுத்துப் பார்த்தாலும், அதன் எடை 62 கிலோ தான் இருப்பதாக எல்லா இடங்களிலும் சொல்லப்படுகிறது. அதேநேரத்தில் சத்துணவுக் கூடங்களுக்குக் கொடுக்கக்கூடிய உணவுப்



1987 ஏப்ரல் 9] [திரு. எஸ். என். இராமசாமி]

பொருட்களின் எடைகளும், அளவுகளும் குறைவாக இருப்பதன் காரணமாக, அளவு குறையாத அளவிற்கு, இந்த நியாய விலைக் கடைகளுக்கு உணவுப் பொருட்களை வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, சாத்தான்குளம் தொகுதியிலும், ராதாபுரம் தொகுதியிலும், திருச்செந்தூர் தொகுதியிலும் சரியானபடி மழை இல்லாமல், வறட்சி ஏற்பட்ட காரணத்தால், அங்கு கொடுக்கப்படக்கூடிய ரேஷன் பொருட்களின் அளவை, இந்தக் கால கட்டங்களில் சிறிது அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அனேகமாக சில கிராமங்களில் வசிப்பவர்களுக்கு ரேஷன் கார்டுகள் கிடைக்காமல் உள்ளது. பழைய கார்டுகளுக்கு மாற்றாக புதிய கார்டுகளைக் கேட்டால் கூட அதையும் கொடுக்காமல், தாலுக்கா அலுவலகம் சென்று, அவர்கள் கேட்கும் போது கூட, அவர்களுக்கு இந்தக் கார்டுகள் சரியானபடி வழங்கப்பட முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே தாலுக்கா சிவில் சப்ளைஸ் அதிகாரிகளை முடுக்கிவிட்டு கிராமத்திலே உள்ள கார்டு இல்லாதவர்களுக்கு உடனடியாக கார்டு விநியோகம் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று ரேஷன் கடைகளைப் பொறுத்தவரையில், எந்த ரேஷன் கடைகளிலும் பாமாயில், மண்ணெண்ணெய் போன்றவை சரியாகக் கொடுக்கப்படவில்லை. தமிழக அரசு கிராம ஏழை மக்களுக்காக நியாய விலையில் கொடுக்கப்படும், சீனி, கோதுமை போன்ற பொருட்களை கடைகளில் இருப்பவர்கள், அவர்கள் சௌகரியத்தை மனதில் கொண்டு, இரவு நேரங்களில் கடத்தி, அதிக லாபத்திற்கு விற்பதாக கிராமங்களில் பேசப்படுகிறது. எனவே இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளவர்களை உடனடியாக விசாரணை செய்து, அவர்களுக்கு சரியான தண்டனை வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். என். இராமசாமி] [1987 ஏப்ரல் 9.

உணவுப் பொருட்கள் தாராளமாகக் கிடைப்பதற்கு, உற்பத்தி அதிகமாகக் கிடைக்கக்கூடிய ஊர்களில், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்து, இருப்பை வைப்பதோடு, அந்தப் பகுதியிலே அதைப் பாதுகாத்து வைக்கக்கூடிய குடோன்களை அமைப்பது மிகச் சிறந்ததாக இருக்கும். இதன் காரணமாக, அந்தப் பகுதிகளில் குடோன்களை அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமத்திலே இருக்கக்கூடிய விவசாயிகள், நெல் உற்பத்தி செய்து மக்களுக்கு தருகிற விவசாயக் குடும்பங்கள், இன்று முன்னோடித்தனமாக எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல், நலிவுற்று இருக்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கு குவிண்டாலுக்கு 30 ரூபாய் விதம் கூட்டித்தர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று விவசாயத்திற்குத் தேவையான உரங்களையும், பூச்சிக் கொல்லி மருந்துகளையும் நியாயமான முறையிலே, மானியத்துடன் அந்த மக்களுக்கு வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்டங்களுக்குள் நெல், அரிசி ஆகியவற்றைக் கொண்டு செல்வதில், சில பிரச்சினைகள் இருந்து வருகின்றன. கடந்த சில நாட்களாக, ராதாபுரம் தாலுக்கா, சாத்தான்குளம் தாலுக்கா ஆகிய இரண்டும் நெல்லை மாவட்டத்துடன் இருந்த நேரத்தில் சப்ளை ஆபிசர்கள் 1 இடத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். ஆனால் சிதம்பரனார் மாவட்டம் பிரிந்து, இதுநாள் வரையிலும், சப்ளை ஆபிசர் தனியாக அமைக்காமல் இருப்பதினால், சாத்தான்குளம், ராதாபுரம், நாங்குநேரி தாலுக்காவைச் சேர்ந்த மக்கள் உணவுக்காக அரிசி கொண்டு செல்ல இயலாமல் அலைந்து கொண்டு இருக்கிற நிலைமை இருந்து வருகிறது.



1987 ஏப்ரல் 9] [திரு. வி. நங்கவேலு]

(பிற்பகல் 1.30)

ஆகவே உடனடியாக வ.உ.சி. மாவட்டத்திலே ஒரு சப்ளை ஆபீசரை நியமிக்கவேண்டுமென்று கேட்பதோடு, தமிழகத்தில் உள்ள மாவட்டங்களுக்குள் நெல், அரிசி போக்குவரத்துத் தடையை நீக்க இந்த அரசு எடுத்த நடவடிக்கை பற்றியும் கேட்க விழைகிறேன். இந்த ஆண்டு இறுதிவரையிலும் உணவுத் தட்டுப் பாடு ஏற்படாத அளவிற்கு நெல், அரிசி கொள்முதல் செய்யப்பட்டு சேமிப்பில் இருக்கிறது என்கிற விவரம் சரியான ஒன்று என்றால், வணிகர்கள்மீதான 50 சதவீதம் நெல், அரிசி லெவி கொள்முதல் விதியைத் தளர்த்தி சிறிதுகாலம் நிறுத்தி வைப்பது பற்றி தயக்கம் இல்லாமல் அரசு ஆவன செய்யுமா என்பதைப் பற்றி தெரிந்து கொள்வதோடு, உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பின்படி வர்த் தகர்கள் லெவியாக வழங்கிய நெல், அரிசிக்கு நியாயமான விலை நிர்ணயித்து, வித்தியாசத் தொகையை வழங்க அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் பற்றியும், தொடர்ந்து பின்வர் வரும் பட்டங்களில் லெவி கொள்முதல் செய்யும்பொழுது நியாய விலையை நிர்ணயித்துக் கொடுக்க மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கைகள் என்ன என்பது பற்றியும் தெரிவிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் நியாயவிலைக் கடைகள் மூலம் பொருள் களைப் பெறமுடியாத சில ஊராட்சி மன்றங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். முதன்முதலாக இந்தச் சட்டமன்றத்திலே நான் எடுத்து வைத்ததைப் போல, செட்டிகுளம் ஊராட்சி மன்றப் பகுதிகளும், உடையார்குளம் ஊராட்சிமன்றப் பகுதிகளும், இடச்சிவிளை ஊராட்சிமன்றப் பகுதிகளும், வல்லகுளம் ஊராட்சிமன்றப் பகுதிகளும், புதுக்குளம் ஊராட்சி மன்றப் பகுதிகளும், முதலூர் ஊராட்சிமன்றப் பகுதிகளும், கருங்கடல் ஊராட்சி மன்றப் பகுதிகளும், இராமானுசம்புதூர் ஊராட்சிமன்றப் பகுதிகளும், வசவப்புறம் ஊராட்சிமன்றப் பகுதிகளும், மூறப்பநாடு ஊராட்சி மன்றப் பகுதிகளும் ஆகிய ஊராட்சிமன்றப் பகுதிகளில் வாழக் கூடிய மக்களுக்கு, இந்த ஊராட்சி மன்றங்கள் பெரியதாக அமைந்ததன் காரணமாக இங்கே நியாய விலைக் கடைகள் மூலமாக பொருட்கள் சரியாக வழங்கப்படாமல் இருக்கின்றன.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நியாய விலைக் கடைகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் கேட்டு, எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. வி. தங்கவேலு**: மாண்புமிகு இம்மாமன்றத்தின் மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்தில் உணவு நிலைமை கோரிக்கை எண் 35 பற்றி இந்திய தேசியக் காங்கிரஸ் இயக்கத்தின் சார்பாகப் பேச வந்திருக்கிறேன். இன்றைக்கு நம்முடைய நாட்டில் குறிப்பாக தமிழகத்தினுடைய வறட்சி நிலைமை இந்த அளவிற்குக் கொடிகட்டிப் பறந்தாலும் இன்றைக்கு மக்களுக்கு இருக்கக்கூடிய உணவுப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்கு இங்கே நாம் குழுமி இருக்கிறோம் என்று சொல்லுகிறபோது, தமிழகத்தின் உணவு நிலைமை எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கக்கூடிய சூழ் நிலையிலே இருக்கிறோம். மாண்புமிகு தமிழக முதல்வர், 4½ கோடி மக்களின் நல்ல நாயகர், காலணி தந்த காஞ்சித் தலைவனின் தம்பி; ஊருக்கு உழைக்கக்கூடியவராக இருக்கக் கூடிய நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் "என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்; ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்; ஒழுங்காய் பாடுபடு வயல்காட்டில்; உயரும் உன் புகழும் அயல்நாட்டில்" என்று சொல்லியிருக் கிறார்கள்; பாடி இருக்கிறார்கள். இன்றைக்கு ஒழுங்காகப் பாடு பட்டு, உழைத்து உழைத்து உருக்குலைந்துபோய் இருக்கக்கூடிய விவசாயிகளும், உற்பத்தியாளர்களும், நுகர்பொருள்களை உற்பத்தி செய்து தருகிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன். நுகர் பொருள்களை உற்பத்திச் செய்கிற போது உற்பத்திச் செய்யப்பட்ட அந்த நுகர் பொருள்கள், அரிசி, கம்பு, சோளம், கேழ்வரகு, மிளகாய், பருப்பு போன்ற உணவு தானியங்களைக் கொள்முதல் செய்வதற்கு நாம் என்ன செய் திருக்கிறோம் என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன். Procurement Policy என்று சொல்லக்கூடிய கொள்முதல் கொள்கை என்ன? நம்முடைய கொள்முதல் கொள்கை என்ன என்று பார்க்கிறபோது, இங்கே நாம் உற்பத்திச் செய்யக்கூடிய பொருள்களை நாம் எங்கே கொள்முதல் செய்து வைத்திருக்கிறோம்? எந்தத் தானியக் கூடங்களிலே





பாதுகாத்து வைத்திருக்கிறோம் என்று சொல்கிறபோது, இந்த கோரிக்கை எண் 35-ஐப் படிக்கிறபோது நாம் Procurement Policy என்று சொல்லக்கூடிய கொள்முதல் கொள்கைக்கு முக்கியத்துவம் தராமல் இருப்பது இங்கே வேதனைக்குரிய விஷயமாக இருக் கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டும் அல்ல, உணவுப் பொருட்களை, அதாவது மிளகாய், பருப்பு போன்றவைகள் உற்பத்தி செய்கின்ற அந்த விளைச்சல் தருகின்ற காலத்தில் குறைந்த விலைக்கு நாம் வாங்குகிறோம். குறைந்த விலைக்கு வாங்கி இந்த நுகர் பொருட்களை நாம் கிடங்கில் பாதுகாத்து வைத்து அது கிடைப்பதற்கு அரிய பொருளாக கிராக்கி உள்ள பொருளாக மாறுகிறபோது அவைகளை ஒரு சீரான விலைக்கு விற்கிறபோது இப்படிப்பட்ட விலை ஏற்றத்தைத் தடுப்பதற்கு நாம் நல்ல வழிகளில் முயற்சிகளைச் செய்யலாம். அப்படிப்பட்ட ஒரு முக்கியத்துவம் தரக்கூடிய ஒரு கொள்முதல் கொள்கைக்கு முக்கியத்துவம் தந்து அவைகள் சீரான விநியோகம் நம்முடைய நாட்டில் நடப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே நியாய விலைக் கடைகள் மொத்தம் 21 ஆயிரம் இருப்பதாகவும், அதில் கிராமப்புறங்களில் இருக்கக்கூடியவை 17 ஆயிரம் என்றும் இங்கே கூறப்பட்டு இருக்கிறது. இங்கே உள்ள தொழிலாளர்களின் நிலை என்ன என்பதை நான் கேட்க ஆசைப்படுகிறேன். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னதைப் போல 'காடு விளைஞ்சா நமக்கு என்ன மச்சான்; கழினி விளைஞ்சா நமக்கு என்ன மச்சான்; கையும் காலும் தானே மிச்சம்; கையும் காலும் தானே மிச்சம்' என்று அன்றைக்கே பட்டுக்கோட்டையார் பாடினார். அதற்கு ஏற்றாற்

[திரு. வி. தங்கவேலு] [1987 ஏப்ரல் 9

போல் இன்றைக்கு தொழிலாளர்களுடைய நிலைமை என்ன என்று பார்க்கிறபோது கூட்டுறவுத் துறையில் இங்கே தேர்தல் நடக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது.

அது மட்டும் அல்ல, எந்த நோக்கத்திற்காக இந்தக் கழகம் உருவாக்கப்பட்டது? இந்த நியாயவிலைக் கடைகளை கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒப்படைக்கவேண்டும் என்ற முயற்சியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நியாயவிலைக் கடைகளை கூட்டுறவுச் சங்கங்களோடு இணைக்கின்றபோது கிட்டத்தட்ட 30 ஆயிரம் பேர்கள் இதனால் பாதிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

அது மட்டும் அல்ல, இன்றைக்கு சில கடைகளில், இந்த நுகர் பொருட்கள் விற்பனை செய்யக்கூடிய கடைகளில் குறிப்பாக திருச்சி, கோவை, வால்பாறை போன்ற இடங்களில் இந்த அத்தியாவசியப் பொருட்களை வாங்குகிறபோது அதோடு விற்கக்கூடிய விலை உயர்ந்த பொருட்களான பேஸ்ட்டு, பிரஷ், சோப்பு போன்ற மற்ற பொருட்களையும் வாங்கவேண்டும் என்றும், இந்தப் பொருட்களை வாங்கினால்தான் அந்த அத்தியா வசியப் பொருட்களான அரிசி, பருப்பு, சர்க்கரை, கோதுமை, போன்ற பொருட்களைத் தருவோம் என்றும் சொல்லக்கூடிய ஒரு கட்டாயத்தை அங்கே இருக்கக் கூடிய அதிகாரிகள் உரு வாக்குகிறார்கள் என்று சொல்லுகிறபோது மிகவும் வேதனையாக இருக்கிறது. இந்த 30 ஆயிரம் பேர்கள் நுகர்பொருட்களை வினியோகிப்பதோடு அரசின் சலுகைகளையும் பெறக் கூடியவர் களாக இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் அந்த 30 ஆயிரம் பேர்கள் கூட்டுறவு இயக்கத்தோடு சேர்க்கப்பட்டால் அவர்கள் வேலையை இழப்பதோடு மட்டும் அல்ல, அரசு வழங்கக் கூடிய அனைத்து சலுகைகளையும் இழக்கக்கூடிய ஒரு சூழ் நிலையைப் பெற்று இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர் களைப் பாதுகாக்கிற வகையில் நல்ல திட்டங்களை இங்கே போடமுடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். கிராமப்புறங் களில் அதிக நியாய விலைக் கடைகள் இல்லை. குறிப்பாக 500 பேருக்கு ஒரு நியாய விலைக் கடை தற்போது இருக்கிறது. இதனை மாற்றி குறிப்பாக 200 பேருக்கு ஒரு நியாய விலைக்



1987 ஏப்ரல் 9] [திரு. எஸ். என். இராமசாமி]

கடை என்று உருவாக்கவேண்டும். என்னுடைய தொகுதியில் வால்பாறை போன்ற மலைத் தோட்டங்களில் இருக்கக்கூடிய மலை முகடுகளில் வாழக்கூடிய, மண்ணிலும், மழையிலும், சகதி யிலும், புழுதியிலும், சிக்கித் தவிக்கக்கூடிய அந்த மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 200 பேர்களுக்கு ஒரு நியாய விலைக் கடை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நியாயவிலைக் கடைகள் அங்கே இல்லை. அப்படி இல்லாத காரணத்தால் நீலகிரி மற்றும் ஏற்காடு மற்றும் வால் பாறை போன்ற பலயிடங்களில் அரிசி பேர ஊழல் நடப்பது அங்கே தெள்ளத் தெளிவாக அரசுக்குத் தெரிந்த நிலையில் இருக்கிறது. என்னுடைய வால்பாறை தொகுதியைப் பொறுத்த வரையில் நியாயவிலைக் கடைகள் இல்லை, கூட்டுறவுக் கடைகள் அதிகமாக இல்லை. ஒரு கிலோ அரிசி 8 ரூபாய்க்கு, 9 ரூபாய்க்கு அங்கே இருக்கக்கூடிய ஆனமலை பிளான்டார்ஸ் அசோசியேஷன் என்று சொல்லக்கூடிய ஏ.பி.ஏ.—முதலாளிகள்—நிறுவனம் கள்ளச் சந்தையில் விற்பதை, அங்கே இருக்கக்கூடிய மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு விற்பனை செய்வதை அரசு தடுத்து நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல் மக்கிப்போன அரிசியை மலையகத் தோட்டத் தொழிலாளர் களுக்குக் கொடுப்பது ஏதோ வம்சா வழி என்று சொல்லுவதைப் போல ஒரு பரம்பரைப் பண்பாடாக இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பெரியவர்களுக்கு 12½ கிலோ அரிசியும், சிறியவர் களுக்கு 4 கிலோ அரிசியும் ஆக 20 கிலோ அரிசி ஒரு மாதத் திற்குத் தருகிறார்கள். இதை மாற்றிக் கூடுதலாக ஒரு மாதத் திற்கு 30 கிலோ அரிசி தருவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோதுமையைப் பற்றி இங்கே சொல்லுகிறபோது, கோதுமை இன்றைக்கு ஒரு சத்தான உணவுப் பொருளாக இருக்கிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், நான் சார்ந்து இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மலை வாழ் நரிக் குறவர் சமுதாயத்து மக்களைப் பொறுத்தவரையில், கோதுமை தங்க நிறத்தில் இருக்கக்கூடியது என்று சொல்லுகிறபோது அவர்கள்

[திரு. வி. தங்கவேலு] [1987 எப்ரல் 9

கோதுமை என்றால் அது என்ன உலோகமா? அல்லது தங்கத்தை விட உயர்ந்த ஒரு பொருளா? என்று கேட்கக்கூடிய அளவுக்கு, கோதுமையைப் பற்றி தமிழகத்தில் இருக்கக் கூடியவர்கள் தெரிந்து கொள்ளாத அளவுக்கு இன்றைக்கு இருக்கிறார்கள். கோதுமை ஒரு சத்தான உணவு. அந்தச் சத்தான உணவைப் பற்றி இங்கே திரைப்படம் எடுத்திருக் கிறார்கள் என்று எழுதியிருக்கிறார்கள். கோதுமை சத்துணவை சாப்பிட்டால், உடம்பு முந்தாக இருக்குமென்று எடுத்துச் சொல்வதற்கு விளம்பரப்படுத்தப்பட வேண்டும், ஒடுக்கப்பட்ட சமுதாய மக்கள் மத்தியில் இந்தப் படத்தினைப் போட்டுக் காட்டி, கோதுமை உணவை எல்லோரும் சாப்பிட வழிவகை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 1.40)

சர்க்கரை என்று சொல்லும்போது ஒரு நபருக்கு 450 கிராமி லிருந்து 500 கிராம் வரையில் விநியோகம் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இது போதாது, இன்னும் கொஞ்சம் கூடுதலாக சர்க்கரை தர வேண்டும்.

அடுத்தாற்போல் மண்ணெண்ணெயைப் பற்றிச் சொல்லும் போது 60,000 கிலோ லிட்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேலும் மத்திய அரசு கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. ஆனால் இதிலே 50,000 கிலோ லிட்டர் மக்கள் பயன்படுத்தக் கூடிய அளவிலே மக்களுக்கு இப்போது விநியோகம் செய்யப் பட்டு வருகிறது. அது மட்டுமல்ல, 1986 ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையில் விநியோகம் செய்யப்பட்டு, மத்திய அரசு தந்திருக்கக்கூடிய மண்ணெண்ணெயில் செலவு செய்து, மிச்சம் கூட கிட்டத்தட்ட 9,056 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயை சேமித்து, அரசுக்கு ஒரு சேமிப்புக் கணக்கைக் காட்டியிருக் கிறார்கள் என்று சொல்கிறபோது நான் உண்மையிலேயே சந்தோஷப்படுகிறேன். கொடுத்த அந்த மண்ணெண்ணெயில் சேமிப்பைக் காட்டியிருக்கிறார்கள் என்பது செய்தியாக இருந்தாலும் விநியோகம் செய்யக் கூடிய அதிகாரிகள் இன்னும் விரைவாக இந்த உணவுப் பொருள்களை செலவு செய்வார்களே



1987 எப்ரல் 9] [திரு. வி. தங்கவேலு]

யானால், இன்னும் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கடைகளில் கொடுக்கப்படக் கூடிய பொருள் களில் அளவு இப்போது குறைந்திருக்கிறது, குறைந்திருக்கிறது என்று மீண்டும் மீண்டும் பேசிக் கொண்டு இருப்பதை விட்டு விட்டு, மேலை நாடுகளில் கொடுப்பதைப் போல், அதாவது பாலிதின் பைகளில், ஒரு லிட்டர், ½ லிட்டர், ¼ லிட்டர் என்ற அளவில் வழங்கினால், சீரான விநியோகம், சிறப்பான விநியோகம், செந்தமிழ் நாட்டில் நடக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல போலி ரேஷன் கார்டுகளைப் பற்றிச் சொல் கின்ற போது 1986-ஆம் ஆண்டு மட்டும் 1 இலட்சம் போலி ரேஷன் கார்டுகள் பிடிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். போலி ரேஷன் கார்டுகள் 3 இலட்சத்திற்கு இங்கே நாட்டில் உலவி வந்துகொண்டிருக்கின்றன என்றும் சொன்னார்கள். அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சிக்காக இப்போது 30 கிலோ கோதுமையும், 12 கிலோ அரிசியும் கொடுப் பதாகச் சொல்லி இருக்கிறார்கள். இந்தப் பழங்குடி மக்களைப் பற்றிப் பேசும்போது அவர்களுக்கு ரேஷன் கார்டுகள் வழங்கு வதில் காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ரேஷன் கார்டுகள் கொடுப்பதே கிடையாது. குடும்ப அட்டை இல்லாத காரணத்தினால், ரேஷன் கார்டுகளை அவர்களுக்குத் தக்க தருணத்திலே வழங்க முடியாத காரணத்தினால், இன்றைக்கு அவர்கள் வங்கிகளிலே கடன் வாங்க முடியாமல் சிக்கித் தவிக்கிறார்கள்.

[திரு. வி. தங்கவேலு] [1987 ஏப்ரல் 9

அதுமட்டுமல்ல, இந்த நாட்டு பழங்குடி, நாடோடி மக்களாக இருக்கும், நரிக்குறவர்கள் கடன் வசதி பெறுவதற்கு, தேசிய வங்கிகளை அணுகிக் கேட்கின்றபோது அவர்கள் முதலிலே கேட்பது குடும்பக் கார்டைதான் அல்லது அவர்கள் எங்கே யிருக்கிறார்கள், அவர்களுக்குப் பட்டா நிலம் இருக்கிறதா என்று தான் கேட்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நலிந்த நரிக் குறவர்கள் மீது அதிக பாசம் காட்டுகிற காரணத்தால் அவர்களுக்கு ஒரு விதிவிலக்கு வைத்து, உடனுக்குடன் குடும்பக் கார்டும், பட்டா நிலமும் வழங்க கருணை மனதோடு இதற்கு, முக்கியத்துவம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படு கிறேன்.

பாமாலின் ஆயிலைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். இது உணவிற்குச் சத்தான ஆயில் என்று சொல்லக் கூடிய பொருளாக இருக்கிறது. பாமாலின் என்று சொல்லக் கூடிய அந்த உணவுப் பொருளை கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக விநியோகம் செய்கிறோம். அப்படி விநியோகம் செய்கிறபோது, மொத்த பொருளை விற்பனை செய்கிறபோது, தாலுகா தலைமையகத்திலிருந்து அந்தப் பொருட்களை சில்லறைக் கடைகள் எடுத்து வருகிறபோது அங்கே சில தவறான நடவடிக்கைகள் நடக்கின்றன. அவற்றை அதிகாரிகள் கண்காணித்து, அப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாமாலின் ஆயில் பொறுத்தவரையில் வட நாட்டில் இருக்கக் கூடியவர்களுக்கு அதிகமாக செலவு செய்கிற அதே நேரத்தில், தமிழகத்தில் இருக்கக் கூடிய நமக்கும் இந்த பாமாலின் ஆயிலுடைய முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லி, ஏழை எளிய மக்கள் நல்லெண்ணெய், கடலெண்ணை இவற்றைப் பயன் படுத்துவதைத் தடுத்து நிறுத்தி, பாமாலின் ஆயில் உணவுக்குப் பாங்கான ஒரு எண்ணெய் என்று இன்றைக்கு பிரச்சாரம் செய்யக் கூடிய அளவிற்கு பாமாலின் எண்ணெயின் தன்மையை, உண்மையை எடுத்துச்சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1987 ஏப்ரல் 9] [திரு. வி. தங்கவேலு]

அதுமட்டுமல்ல. இன்றைக்கு அப்படி விநியோகம் இங்கே உணவுப் பொருளிலே நடந்தாலும், எனது தொகுதியான வால் பாறையைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுக்கும் எடுத்துச்சொல்லியிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் இப்படிப்பட்ட கூட்டுறவு அமைப்புகளோ, அல்லது நியாய விலைக் கடைகளோ இன்னமும் அதிகமாக உண்டாகாமல் இருக்கின்றன. அந்தக் குறைபாட்டை களைவதற்கு தயவு செய்து நீங்கள் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கோரி வாய்ப்பு அந்த அத்தனை பேர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, இந்த மானிய கோரிக்கையின்மீதான விவாதத்தில் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கிய உறுப்பினர்களுக் கெல்லாம் என் உளமார்ந்த நன்றி. அவர்கள் எடுத்துச்சொன்ன சிலவற்றிற்கு என்னாலே இங்கே பதில் தர இயலும். மற்றவை கள் கவனத்தில் கொள்ளவில்லை என்று அவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. தக்க நடவடிக்கைகள் துறையினரால் மேற் கொள்ளப்பட்டு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக் கின்றதோ, அவை சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவிக்கப்படும் என்பதை முதலில் கூறிக்கொள்கிறேன். பொதுவாக உணவுத் துறை என்பது எங்கும் எல்லாம் சரியாக இருக்கின்ற வரையில் யாரும் கவலைப்பட மாட்டார்கள். ஏதேனும் தட்டுப்பாடு ஏற்பட்டால் முதலில் தாக்குதலுக்கு உள்ளாவது உணவுத் துறை என்பதும், பலநேரங்களில் உணவுத்துறை பொறுப்பு ஏற்றவர் கள் பட்ட பாட்டினையும் எண்ணிப் பார்க்கின்றபோது நமக்கு நன்றாகத் தெரியும். ஆனால் கடுமையான வறட்சி தமிழகத்தில் இருக்கக்கூடிய நிலையிலே "உணவுப் பிரச்சினை இல்லை" என்ற மகத்தான புரட்சியை உருவாக்கிய பெருமை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நிச்சயமாக உண்டு. (மேசையை தட்டும் ஒலி).

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 9

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

'உணவெனப்படுவது நிலத்தொடு நீரே' என்பது பண்டைய தமிழர் வாக்கு. நிலம் இருக்கிறது. மழை வளமும் நமக்கு இல்லை. காவேரி நதிவளமும் நமக்கு இல்லை. ஆனால் அதே சங்க காலத்து புலவர்கள் சொன்னார்கள்.

'நெல்லும் உயிர் அன்றே,
நீரும் உயிர் அன்றே,
மன்னன் உயிர்த்தே, மலர்தலை உலகம்'

என்றார்கள். ஆகையினால் நிலம், நீர் இல்லாவிட்டாலும் ஆளுகின்ற அரசர் நெறிமுறையோடு ஆட்சி செய்கின்ற அரசாக இருந்தால் அந்த மக்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்பதை சங்க காலத்துப் புலவர்கள் அழகாக எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த இலக்கணத்திற்கேற்ப இன்று தமிழகத்தில் நிலம் இருந்தாலும், நீர் வளம் இல்லை என்னும் நிலையிலே கூட மக்களைக் காக்கின்ற உயிராக உணவுத் துறையிலே தன்னிறைவு எய்துகின்ற தன்மையைத் தமிழக முதல்வர் அவர்கள் உருவாக்கித் தந்திருககிறார்கள் என்று பார்க்கின்றபோது, சங்க காலத்துப் புலவர்கள் எந்த அளவிற்கு தொலைநோக்கோடு அழகாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை எண்ணி நாம் நிச்சயமாக பெருமைப்படலாம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கவேலு அவர்கள், புரட்சித் தலைவர், 'விவசாயி' என்னும் படத்தில் நடித்தபோது பாடிய பாட்டுக்களையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவருக்கு அதே முறையிலே பதில் சொல்ல வேண்டுமானால்—அவர் அந்தப் பாட்டுக்களை சொல்கின்றபோது என்னுடைய நினைவிற்கு வந்தது அதிலேயே சில வரிகள்தான்.

"இருந்திடலாம் நாட்டில் பல வண்ணக்கொடி,
எத்தனையோ கட்சிகளின் எண்ணப்படி,
பறக்க வேண்டும் எங்கும் ஒரே சின்னக்கொடி,
அது பஞ்சம் இல்லை என்னும் அன்னக்கொடி"

என்று புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இன்று வறட்சி இருந்தாலும் பஞ்சம் இல்லை என்னும் அன்னக் கொடி தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் பறந்து கொண்டிருக்கிறது என்பதைத்தான் நீங்கள் இங்கே பேசிய போது எடுத்துக் காட்டினீர்கள்.



1987 ஏப்ரல் 9] [திரு. ச. இராமச்சந்திரன்]

நான் உணவுத்துறை சார்பில் ஒரு உறுதியை அளிக்க விரும்புகிறேன். நம்மிடத்திலே இருக்கக்கூடிய அரிசியினுடைய கையிருப்பைப் பார்க்கும்போது 1987 டிசம்பர் வரையில் நாம் நிச்சயமாக அரிசியைப்பற்றி கவலைப்படவேண்டியதில்லை, நிம்மதியாக இருக்கலாம் என்ற உறுதியினை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குள்ளாவது எப்படியாவது மழை வரும் என்று நாம் நம்பலாம். ஏனென்றால் நாம் ஏப்ரல் மாதத்தில் இருக்கிறோம். இன்னும் 8, 9 மாதங்கள் இருக்கின்றன. நிச்சயமாக உணவு நிலைமையைப் பொறுத்தவரையில் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. தஞ்சையிலே நாங்கள் 7 இலட்சம் டன் கொள்முதல் செய்ய வேண்டும் என்று குறித்திருந்தோம். அவர்கள் இப்போது 8 இலட்சம் டன்களுக்கு கிட்டே வந்திருக்கிறார்கள். நான் அதைப்பார்த்து இன்னும் 10 இலட்சம் டன்னுக்கு நீங்கள் போக வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். ஆனாலும் 7 இலட்சம் என்று குறியீட்டையும் தாண்டி 8 இலட்சம் என்கின்ற அளவிற்கு வந்து அநேகமாக 9 இலட்சம் டன்கள் கொள்முதல் செய்யக் கூடிய நிலையிலே நம்முடைய கொள்முதல் அதிகாரிகளையும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும், நல்ல முறையிலே உணவுப் பொருள் களை விளைவித்த உழவர் பெருமக்களையும் மனமாரப் பாராட்டுவது என்னுடைய கடமை எனக் கருதுகிறேன். என்னுடைய பாராட்டுகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1.50)

கொள்முதல் விலையைப் பொறுத்தவரையில், இந்திய அரசு நிர்ணயிப்பதற்கு மாறாக—அந்தந்த மாநில அரசுகள் நெல்லுக்கு கொள்முதல் விலை நிர்ணயிக்கவேண்டும், சட்டத்தில் இந்திய அரசின் சம்மதத்தோடு செய்யவேண்டும் என்று இருக்கிறது, இருந்தாலும்—இந்திய அரசின் சம்மதத்தைப் பெற்று, மாநிலங் களே முக்கியமான உணவுப் பொருள், குறிப்பாக அரிசியினுடைய கொள்முதல் விலையை நிர்ணயிக்கிற உரிமையை மத்திய அரசு தரவேண்டும் என்று மாநில அரசு கட்டாயம் வற்புறுத்தும். அது வரையில் இடுபொருள் மானியமாக 35 ரூபாய் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அளித்து வருகிறார்கள். அதை இங்கே நண்பர்கள் பாராட்டிப் பேசினார்கள்.

சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், செங்கல்பட்டிலிருந்து அரிசி வருவதற்குத் தடை இருக்கிறது. ஓரளவுக்கு, சென்னையினுடைய தேவையை நிறைவு செய்கின்ற வகையில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றிலிருந்து சென்னையையும், செங்கல்பட்டையும் ஒன்றாக இணைத்து, செங்கல்பட்டு அரிசி சென்னைக்கு வந்து, சென்னையிலே இருக்கின்ற விலையும் குறைந்து, செங்கல்பட்டிற்கும் நாங்கள் கூடுதலாக அரிசி வழங்கி விலையை ஓரளவுக்குக் கட்டுப்படுத்துகிற முயற்சிக்கு நேற்றையதினம் உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு திரு. சிந்தன் அவர்கள் பேசுகிறபோது, இங்கே கொள்முதல் விலை பற்றியும், நிலச்சீர்திருத்தம் பற்றியும் எடுத்துக் கூறினார்கள். நான் அதில் ஒரே ஒரு கருத்தைத் தெளிவாக்குவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். பெரும் நிலக்கிழார்கள்தான் கொள்முதல் விலை கூடுவதனால் பெருமளவுக்கு இலாபம் அடைவார்கள். சாதாரண விவசாயிகள், அவர்கள் பயிரிடுகின்ற பெருமளவு நெல்லை அவர்களுக்கே வைத்துக் கொள்கிறார்கள். ஆகவே, கொள்முதல் விலையை அதிகப்படுத்துகிறபோது யார், Marketable surplus நிறைய நிலம் வைத்துக்கொண்டு நிறைய உற்பத்தி செய்து யார் வெளியிலே விற்கிறார்களோ, அவர்களுக்குத்தான் பெருமளவு இதனாலே ஆதாயம் கிடைக்கிறது. ஆனால், அதேநேரத்தில் கொள்முதல் விலையை உயர்த்தக்கூடாது என்பதல்ல. உயர்த்துகிற போது உண்மையாகவே பாடுபடுகின்ற உழவர் பெருமக்களுக்கு உரிய விலை கிடைக்கின்ற வகையிலேயும், அதே நேரத்தில் நிலப்பிரபுக்களுக்கு அதிகமான அளவுக்கு ஆதாயம் கிடைக்காத வகையிலேயும் பார்த்து நிர்ணயிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





விலைவாசியைப் பற்றியும் கொள்கையைப் பற்றியும் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். மத்திய அரசோடு போராட வேண்டும்; சுய மரியாதை வேண்டும்; தன்மானம் வேண்டும் என்றெல்லாம் அவர் அவருக்கே உரிய வகையிலே எடுத்துச் சொன்னார். அந்த இயக்கத்தின் வழி வந்த எங்களுக்கு அதை எல்லாம் நினைவுபடுத்தியதற்காக நான் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு.'

என்றார் வள்ளுவர். மானத்திற்குக் கூட ஒரு Qualification போடுகிறார் திருவள்ளுவர். அது என்னவென்றால் பிரெஸ்டீஜ் இருக்கவேண்டும். ஆனால் அது "ஃபால்ஸ் பிரெஸ்டீஜ்" ஆக இருக்கக் கூடாது. எதை எடுத்தாலும் எதிர்க்கவேண்டும் என்பது மானம் அல்ல. எதை எதிர்க்கவேண்டுமோ அதை எதிர்க்க வேண்டும். எதை ஆதரிக்கவேண்டுமோ, அதை ஆதரிக்க வேண்டும். அது தான் மானம் என்பது வள்ளுவன் காட்டிய நெறி என்பதனால் இந்தத் தமிழ் மண்ணிலே இருக்கக்கூடிய அவரும் இதை நிச்சயம் ஏற்றுக் கொள்வார் என்று கருதுகிறேன்.

இந்திய அரசினுடைய கொள்கைகளானாலும், நடவடிக்கைகளானாலும் நாங்கள் வள்ளுவர் காட்டிய அந்த Prestige 'மாண்பிறந்த மானம்' என்பதைத்தான் மனதிலே வைத்துக்கொண்டு ஆதரிக்க வேண்டியதை ஆதரிக்கிறோம். மாறுபட்ட கருத்தாக இருக்கிறபோது மாறுபட்ட கருத்தை எடுத்துச் சொல்கிறோம். கண்ணை மூடிக் கொண்டு எதிர்க்கவேண்டும் என்ற நிலைக்கு நிச்சயமாக நாங்கள் போகமாட்டோம். ஏனென்றால், வள்ளுவர் காட்டிய வழியிலே புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு செல்கிறது என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்வது என்னுடைய கடமை.

1,000 ரூபாய் உச்சவரம்பை அதிகப்படுத்தக்கூடாதா, எல்லோருக்கும் அரிசி வழங்கக்கூடாதா என்று மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் திரு. ஆறுமுகம் அவர்கள் கேட்டார்கள். அவர் ஆசை ரொம்ப வரவேற்கத்தக்கது. ஆனால் நிலைமை அதற்கு இடம் தராது பொதுவாக. வெளி மார்க்கெட்டிலே வாங்குகின்றவர்கள் நிறைய இருக்கிறார்கள். நாம் பலவீனமான பிரிவினருக்கு, நலிந்த பிரிவினருக்கு உதவி செய்கின்ற

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 9

வகையிலேதான் நம்முடைய பணி இருக்க வேண்டும். மாதம் 1,000 ரூபாய் என்றால் ஆண்டு வருமானம் 12,000 ரூபாய். ஒரு தாய் பெற்ற பிள்ளைகள் எத்தனையோ இருந்தாலும், முடமான பிள்ளையையோ, அல்லது கொஞ்சம் காது கேட்காத பிள்ளையையோ, அல்லது கொஞ்சம் கண் குருடாக இருக்கக் கூடிய பிள்ளையையோ தான் தனிக் கவனம் செலுத்திப் பாதுகாப்பாள். அதைப்போல, நாம் Weaker section of the society வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய மக்கள் துன்பப்படுகிறபோது, அவர்களுடைய துயரைப் போக்குகின்ற வகையிலேதான் இருக்கவேண்டும்.

அதனால்தான் 1981-ல் ஒரு கிலோ அரிசி ரூ. 1.75 என்று நாம் நிர்ணயித்தோம். அப்படி நிர்ணயித்த விலையை நாம் இதுவரை அப்படியே வைத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள்கூட சுட்டிக்காட்டினார்கள். விலைவாசி என்பது ஏறிக் கொண்டேதான் இருக்கும். அதுவும் இந்தியப் பொருளாதாரத்தில் அது தவிர்க்க முடியாத ஒன்று. அதனுடைய காரண காரியங்களுக்குள் நான் போக விரும்பவில்லை. அதையே இன்றைக்கு ரூபாய் மதிப்பில் பார்த்தால்கூட ரூ. 2.15 காசு என்று நாம் போட வேண்டும். ஆனால் அப்படிச் செய்யவில்லை. ரூ. 1.75 என்றால் இன்றைக்கு அதன் உண்மையான மதிப்பு ரூ. 1.50 அல்லது 1.60 என்று குறைந்திருக்கிறது என்பதுதான் உண்மையான பொருள். ஆனால் அரிசியை ஒரே விலையில் வைத்திருக்கிறோம். படிப்படியாக விலைவாசி ஏறினாலும் நாம் அதை ஒரே விலையில் வைத்திருப்பதன் மூலமாக நலிந்த மக்களுக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு உதவி செய்து கொண்டிருக்கிறது. அதனால் ஏற்படுகிற இழப்புதான் ரூ. 80 கோடி.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. மா. இராமச்சந்திரன் அவர்கள் பேசும்போது அந்த ரூ. 80 கோடி வீண் செலவு என்று கூட சொன்னார்கள். அவருக்கு விவரம் தெரிந்திருந்தால் நிச்சயமாக அப்படிச் சொல்ல மாட்டார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஏழை எளிய மக்களுக்குப் போடுகிற போது அதன் விலையைக் குறைத்துப் போடுகிறபோது ஏற்படுகிற இழப்புதான் ரூ. 80 கோடியே தவிர வேறு அல்ல என்று நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 ஏப்ரல் 9] [திரு. ச. இராமச்சந்திரன்]

அடுத்து பணியாளர்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதில் நான் ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். நுகர் பொருள் வாணிபக் கழகத்தில் இருக்கிற பணியாளர்கள் கூட்டுறவுத்துறைக்குப் போகிறார்கள் என்றால் அவர்களை யெல்லாம் வேண்டாம் என்று அனுப்பவில்லை. அவர்களை வைத்துக் கொள்ளக்கூடாது என்று அனுப்பவில்லை. இன்னும் சொல்லப் போனால் அவர்கள் விரும்பினால் அங்கேயே இருக்க லாம். ஆனால் நுகர் பொருள் வாணிபக் கழகத்தை ஒரு மொத்த வாணிப நிறுவனமாக நாம் ஆக்கிக் கொள்ள வேண்டும். அது நெல் கொள்முதலானாலும் சரி, பாமாயில், மண்ணெண்ணெய், பருப்பு என்று எதுவாக இருந்தாலும் அதை ஒரு மொத்த வாணிப நிறுவனமாக வைத்துக் கொள்ள வேண்டும் கூட்டுறவுத் துறையின் மூலமாக ஆங்காங்கே கடைகளை அமைத்து ஆங்காங்கே உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்மூலம் அந்தக் கடைகளைக் கண்காணித்துக் கொள்வார்கள். அவர் களுக்குத் தேவையான பொருள்களை அவர்கள் வாங்கி விநியோகித்துக் கொள்வார்கள்.

நாம் நுகர்பொருள் வாணிபக் கழகத்தை ஆரம்பித்தபோது அது ரூ. 170 கோடிதான் வரவு செலவு செய்தது. ஆனால் இன்றைக்கு அது ரூ. 470 கோடிக்கு ஆண்டுக்கு டர்ன் ஓவர் செய்கிறது. இன்னும் படிப்படியாக அதிகமாகிக் கொண்டே போகும். அந்தச் சூழ்நிலையில் சில்லறை வியாபாரத்தையும் அந்த நிறுவனமே எடுத்துச் செய்வது என்பது சரியாக இருக்காது என்பது ஒரு காரணம். இன்னொரு காரணம் அது கூட்டுறவுத் துறையாக இருக்கிறபோது அந்தக் கடைகளுக்கு உதவிகளும் பல்வேறு இனங்களில் கிடைக்கிறது. மத்திய அரசிடமிருந்து உதவி கிடைக்கிறது. அகில இந்திய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திலிருந்து உதவி கிடைக்கிறது. அதைப் போலவே நபார்டு என்கிற நிறுவனத்திலிருந்தும் உதவி கிடைக்கிறது. இப்போது அதை முழுக்க முழுக்க நம்முடைய நிதியிலிருந்து மட்டுமே நாம் செய்ய வேண்டியிருக்கிறது.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 9

ஆகவே அந்த வகையில் கூட நமக்கு ஒரு ஆதாயம் இருக்கிறது. அதுமட்டுமல்ல. கூட்டுறவுக் கடைகள் ஏற்கெனவே 15,931 இருக்கின்றன. 5,040 தான் இந்தக் கடைகள். இப்படி பெருமளவு ஏற்கனவே அவர்கள் நடத்தி வருகிறார்கள். ஆகவே அதில சேர்ப்பது தவறாகாது.

அடுத்து பகுதி நேர ஊழியர்களுக்கு ரூ. 150 மட்டும்தான் சம்பளம் தரப்படுகிறது, அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டாமா என்றும் கேட்டார்கள். கூட்டுறவுத் துறையில் இப்போது அவர்கள் சேர்ந்த பிறகு சம்பளம் உயரும். நம் பணியாளர்களாக இப்போது பணியாற்றுகிறவர்கள் கூட்டுறவுத் துறைக்குப் போனால் சம்பளம் உயரும். சென்னையில் இருப்பவர்களுக்கு உயராது. ஆனால் கிராமப்புறங்களில் நுகர் பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரிந்து இப்போது கூட்டுறவுத் துறைக்குப் போகிறவர்களுக்கு உயரும். அதுமட்டுமல்ல. அவர்கள் எல்லாம் பகுதி நேரப் பணியாளர்கள்தான். மீதி இருக்கிற நேரத்தில் அவர்கள் வேறு வேலை பார்க்கலாம். இதுவே முழுக்க முழுக்கச் செய்யக் கூடிய அளவுக்கு உள்ள வேலை அல்ல. ஆகவேதான் இந்தச் சம்பளத்தைக் கருதுகிறோமே தவிர வேறு அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் ஆந்திர மாநிலத்தில் வேலையில்லாத பட்டதாரிகளுக்கு இத்தகைய துணைக் கடைகளைக் கொடுப்பதுபற்றி கேள்வி நேரத்திலே கூட விவாதிக்கப்பட்டதே அதை எடுத்துச் சொன்னார்கள். அந்தத் திட்டத்திற்கான விவரங்களையெல்லாம் நான் பெறலாம் என்று கருதுகிறேன். ஏனென்றால் அதன் மூலம் 1,000 கார்டுகள் என்பதை 500 கார்டுகளாக ஆக்க வேண்டும் அல்லது பெரிய கிராமங்களில் தடை இருக்கிறது. சிறிய கிராமங்களுக்குப் போய்ச் சேருவதில்லை என்ற குறைபாடுகள் இருப்பதை எல்லாம் தீர்க்க முடியும். ஆங்காங்கே இருப்பவர்கள் யாராவது படித்த இளைஞர்களாக இருப்பவர்கள் இதற்கு முன்வருவார்களானால் நாம் அவர்களுக்குப் பொருளையும் கொடுத்து உதவியையும் கொடுத்தால் அந்தந்தப் பகுதி மக்களுக்கு விநியோகம் செய்ய வசதியாக இருக்கலாம். எனவே அந்த வகையில் அரசு ஆராய்ந்து பார்த்து தக்க முடிவெடுக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 9] [திரு. ச. இராமச்சந்திரன்]

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் ஒன்று அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தின்கீழ் எந்தப் பொருளை விநியோகம் செய்தாலும் அந்தப் பொருளைப் பற்றிச் சந்தேகப்படுகிறவர்கள்—அதை வாங்கியவர்கள்—அதைப் பற்றி முறையிடலாம். அந்த முறையீடுகளைத் தீர்த்து வைக்க நீதிமன்றம் போல் அமைக்க வேண்டும் என்று அந்தச் சட்டம் கூறுகிறது. அதற்காக மாநிலங்களைப் பொறுத்தவரை அமைச்சர்கள் கூட்டம் ஒன்று புது டெல்லியில் நடைபெற்றது. அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த ஆகிற செலவை மாநிலங்களுக்கு மத்திய அரசே தர வேண்டும் என்று அத்தனை மாநிலங்களையும் சேர்ந்த அமைச்சர்கள் கேட்டிருக்கிறார்கள். சட்டத்தை மட்டும் போட்டு விட்டு அதை எங்கள் தலையில் போட்டுவிட்டு நிறைவேற்று என்று சொல்லாமல் அதற்காக ஆகிற செலவை நீங்கள்தான் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். மத்திய அரசும் அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அது அனுமதிக்கப்பட்டால் எத்தகைய நிர்வாக முறையை நாம் மேற்கொள்ளலாம் என்பதைப் பற்றி நிச்சயமாக இந்த அரசு தக்க நேரத்தில் முடிவு செய்யும் என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலப்படச் சட்டத்தைப் பொறுத்தவரையில் மக்கள் நல் வாழ்வுத் துறை தான் இதுவரை நிர்வகித்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்களுடைய உணர்வுகள் அத்துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2.00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** Weights and Measures என்பது தொழிலாளர் நலத் துறையிலே வருகிறது. இருந்தாலும் அதிலே உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்கு அரசு நிச்சயமாக எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும். சாதாரண மக்களை, ஏழையெளிய மக்களைக் காப்பாற்றும் வகையில் நாடெங்கும் இந்தியாவில் உள்ள எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்குத் தமிழ்நாட்டில் ஊர்தோறும் நியாயவிலைக் கடைகளை உருவாக்கிய பெருமை இந்த அரசுக்கு உண்டு. அவற்றை மையமாக வைத்து ஏழையெளிய மக்களுக்கு ஏற்ற இன்றியமையாப் பொருள்களை விநியோகம் செய்வதன் மூலம் நிரந்தரப் பாதுகாப்பு தர முடியும். அந்த வகையிலே எல்லா நிர்வாகச் சீர்திருத்தங்களையும், நடைமுறைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே ஏற்கெனவே கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை, இந்த உணர்வுகளைப் புரிந்துகொண்டு பெரிய மனதோடு திரும்பப் பெற்று உரிய நேரத்தில் உணவுக்குச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் (சிரிப்பு).

**திரு. கே. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அரசு ஒரு முடிவை எடுத்திருக்கிறது. நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இருக்கக்கூடிய கடைகளை கூட்டுறவுத் துறைக்கு மாற்றுவதன் மூலம் அங்கே பணியாற்றுகிற, எட்டு வருடங்களாக தற்காலிகமாகப் பணியாற்றுகிற தொழிலாளர்களுடைய நிலைமை என்ன? நிரந்தரத் தொழிலாளர்களுக்குப் பணி இழப்பு ஏற்படுமா? அவர்களுக்குப் பாதுகாப்பு உண்டா? அவர்களை வேறு ஊருக்கு டிரான்ஸ்ஃபர் செய்யும் பிரச்சனை எழும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே தொழிற்சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து அரசின் நிலை என்ன என்பதைத் தெளிவுபடுத்துவதற்கு அரசுக்கு என்ன கஷ்டம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு நம்மை விட நன்கு தெரியும். அதுதான் கஷ்டம். நம்மைப் பொறுத்த வரையில், தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். இங்கே இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே இருப்பது என்றால் அப்படியே இருக்கலாம். ஏனென்றால் இங்குடைய வேலைகள்





அதிகமாக ஆகிக்கொண்டிருக்கின்றன. விருப்பப்பட்டால் கூட்டுறவுத் துறை கடைக்குப் போகலாம். இதைத்தான் சொல்லியிருக்கிறோம். ஆகவே எந்தப் பாதிப்பும் கிடையாது.

**திரு. சோ. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற நேரத்தில் நான் 80 கோடி ரூபாய் தேவையில்லை என்று சொன்னதுபோல சொன்னார்கள். நான் தேவையில்லை என்று சொல்லவில்லை. ஒதுக்குகிற பணம் பொது மக்களுக்கு போய்ச் சேர வேண்டும் என்றுதான் சொன்னேனே தவிர வேறு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் சோ. மா. இராமச்சந்திரன், கோ. வீரய்யன், சி. பழனிமுத்து, எஸ். என். இராமசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி;

"மானியக் கோரிக்கை எண். 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,54,56,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (10—4—1987) காலை 10.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.05 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

**(அ)** சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும் எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

141. கோரிக்கை எண் 35—தமிழகத்தில உணவு நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987 (தமிழ, ஆங்கிலம்).



இணைப்பு

(63-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

**உணவு தானியங்களின் உற்பத்தியும் கொள்முதல் கொள்கையும்.**

வடகிழக்குப் பருவமழை காலம் தாழ்ந்து பெய்ததாலும், மேட்டூர் நீர்த்தேக்கத்தில் போதிய தண்ணீர் இல்லாததாலும், 1986 ஆம் ஆண்டு குறுவையில் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டது. எனவே, அரசு காவிரி டெல்டா பகுதிகளில், ஏகபோக கொள் முதல் முறையைத் தொடர வேண்டி வந்தது. நெல் அதிகபட்ச மாக உற்பத்தி செய்யப்படும் பகுதிகளில் ஏகபோக கொள்முதல் முறை இருந்தும், 1986 ஆம் ஆண்டு குறுவையில், 2.18 லட்சம் டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்ய முடிந்தது.

2. ஏகபோக கொள்முதல் முறை அமலில் உள்ள இடங்களில், விவசாயிகள், தாமாகவே நேரடிக் கொள்முதல் நிலையங்களில் அளிக்கும் நெல்லுக்கு, ஊக்கத் தொகையாக, குவின்டாலுக்கு ரூ. 35 இடுபொருள் மானியம் வழங்கும் முறை தொடருகிறது. மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட கீழ்க்கண்ட விலைகளுக்கு மேல் இந்த இடுபொருள் மானியம் வழங்கப்படுகிறது.

| ரகம் | நெல்லின் விலை. 1985–86. | குவிண்டாலுக்கு. 1986–87. |
|---|---|---|
| | ரூ. | ரூ |
| சாதாரணம் .. .. | 142 | 146 |
| சன்னம் .. .. | 146 | 150 |
| மிகச்சன்னம் .. .. | 150 | 154 |

1986 ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தில், இந்த இடுபொருள் மானிய திட்டத்தின் கீழ், 1,76,038 விவசாயிகள், ரூ. 6,83,90,693.75 பெறுமானமுள்ள இடுபொருள் மானியம் பெற்று பயனடைந் துள்ளனர்.

3. நமது மாநிலத்தின் நெல் உற்பத்தி, வழக்கத்திற்கும் குறைவாக அமைந்ததால் மத்திய அரசிடமிருந்து கூடுதல் ஒதுக்கீடு பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது. மத்திய அரசும் மாநிலத்தின் உணவுத் தேவைகளை பரிவுடன் ஆராய்ந்து அவற்றை பூர்த்தி செய்ய கூடுதல் ஒதுக்கீடுகளை வழங்கி உதவியது. இதைத் தவிர மாநில அரசு தன்வசமுள்ள இருப்புகளையும் சிறந்த முறையில் விநியோகித்ததாலும் கணிசமான விலை ஏற்றம் ஏதுமின்றி நிலைமை சமாளிக்கப்பட்டது.

4. குறுவையில் நெல் உற்பத்தி மற்றும் கொள்முதல் குறைவாக இருந்ததால், 1987 ஆம் ஆண்டு சம்பாவிலும், காவிரி டெல்டா பகுதிகளில் ஏகபோக கொள்முதல் முறை தொடரப்பட்டது. இதர பகுதிகளில், 50 சதவிகிதம் வர்த்தக லெவி முறை அமலில் இருக்கிறது. ஏகபோக கொள்முதல் அமலில் உள்ள இடங்களில், குவிண்டால் நெல்லுக்கு, ரூ. 35 பெறுமானமுள்ள இடுபொருள் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

5. மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட அரிசியை, பச்சரிசியாகவே இந்திய உணவுக் கழகம் வழங்கியதால், அரசின் பச்சரிசி கையிருப்பு கூடியது. பச்சரிசியை அதிக நாட்கள் இருப்பு வைக்க முடியாதென்பதாலும், மத்திய அரசின் ஒதுக்கீடுகளை எடுக்க வேண்டியுள்ளதாலும், கூடுதலாக கைவசம் இருந்த பச்சரிசியை விநியோகிக்க வழிவகுக்க வேண்டியிருந்தது. எனவே, மாத வருமானம் ரூ. 1,000-க்கு மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கும் பச்சரிசி வழங்க முடிவெடுக்கப்பட்டது. அதைப்போலவே, ஏற்கெனவே, அரிசி வாங்க தகுதி வாய்ந்த குடும்பங்களுக்கும் அவர்களது தகுதிக்கும் மேல் 3 கிலோ பச்சரிசி வழங்கப்பட்டது. 1986-87 ஆம் ஆண்டில், மத்தியத் தொகுப்பிலிருந்து வழங்கப்படும் அரிசியின் விலையை மத்திய அரசு இருமுறை மாற்றி அமைத்தது. ஆனால், இவ்வரசு, பொது விநியோக திட்டத்தில் வழங்கப்படும் அரிசியின் விலையை உயர்த்தினால் சமூகத்தில் நலிந்த பிரிவினர் பாதிக்கப்படுவார்கள் என்பதால் அவ்விலையை மாற்றவில்லை.



## II. பொது விநியோக முறை.

6. இம்மாநிலத்தில் 21,035 நியாய விலைக் கடைகள் மூலமாக 119.66 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்படுகின்றன. கிராமப் பகுதிகளில் உள்ள 17,207 நியாய விலைக் கடைகள் மூலம், அப்பகுதிகளிலுள்ள 81.72 இலட்சம் அட்டைதாரர்களுக்கும், நகர்ப் பகுதிகளில் உள்ள 3,828 நியாய விலைக் கடைகள் மூலம், 37.94 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கும் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப் படுகின்றன.

7. நியாய விலைக் கடைகளை கூட்டுறவுச் சங்கங்களே நடத்த வேண்டுமென்பது அரசின் கொள்கையாகும். தற்போது கூட்டுறவுச் சங்கங்கள் 15,931 நியாய விலைக் கடைகளையும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், 5,049 நியாய விலைக் கடைகளையும், மலைத்தோட்ட நிர்வாகங்கள், தொழிற் சங்கங்கள் போன்ற அமைப்புகள் மீதியுள்ள 55 நியாய விலைக் கடைகளையும் நடத்தி வருகின்றன.

8. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தி வந்த அனைத்து நியாய விலைக் கடைகளையும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றி அரசு வெளியிட்ட ஆணைகளுக்கு உயர்நீதி மன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது. இது குறித்து உச்ச நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கு முடிவு செய்யப் பட்டுவிட்டது. உயர்நீதி மன்றம் விதித்துள்ள இடைக்கால தடையினை அகற்றத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன. 1983-ல் வழங்கப்பட்ட குடும்ப அட்டைகளில் டிசம்பர் 1986 வரை மக்களுக்கு வழங்கப்பட்ட அத்தியாவசியப் பண்டங்களை குறிக்கக் கொள்ளத்தான் வகை செய்யப் பட்டுள்ளது. அரசு, ஒரு ஆண்டுக்கான புதுப்பித்தல் சீட்டுகளை குடும்ப அட்டைகளில் ஒட்டலாம் என ஆணையிட்டுள்ளது. 1987-ல் விரிவான ஒரு கணக்கெடுப்பை நடத்தி, ஒவ்வொரு குடும்பத்தின் உணவுப் பழக்கங்கள், சமூக தகுதி நிலை, வருமானம் முதலியவற்றை சேகரிக்கலாமென்ற கருத்து பரிசீலனையில் உள்ளது. தேவைகளுக்கேற்ப பொருட்களை வழங்கும் வகையில் தற்போதுள்ள முறையினை மாற்றி அமைக்க இது உதவும்.

[1987 ஏப்ரல் 9

9. பெருநகர்களில் பொது விநியோகம் குறித்து ஆராய்வதற்காக மத்திய அரசு பாராளுமன்ற உறுப்பினர்களையும், அதிகாரிகளையும் கொண்டு அமைத்துள்ள குழு, சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் சென்னை வந்தது. இக்குழு, உணவு அமைச்சர் அவர்களுடனும், பொது விநியோகம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தியது. சென்னை நகரில் கூட்டுறவுச் சங்கங்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் நடத்தி வரும் நியாய விலைக் கடைகள் சிலவற்றையும் இக்குழு பார்வையிட்டது. இக்குழு தமிழ்நாட்டில் பொது விநியோகம் நடைபெறுவதைப் பாராட்டி, இந்த முறையினை முன்னேற்றுவதற்கான ஆலோசனைகளையும் கூறியுள்ளது.

(அ) அரிசி :

10. பொது விநியோகத்தில் அட்டைதாரர்களுக்கு பெரியவர்களுக்கு மாதம் 4 கிலோ மற்றும் சிறுவர்களுக்கு 2 கிலோ என்ற விதத்தில் மாதத்திற்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு 12 கிலோவுக்கு மிகாமல் அரிசி வழங்கப்படுகிறது. பொது விநியோகத்தில், அரிசி சாதாரண ரகம், கிலோ ரூ. 1.75, சன்ன ரகம், கிலோ ரூ. 2.25 மற்றும் மிகச் சன்ன ரகம், கிலோ ரூ. 2.50 என்ற மிக மலிவு விலையில் வழங்கப்படுகிறது. தற்சமயம், எல்லா அட்டைதாரர்களும் பொது விநியோகத்தில் அரிசியை பெறலாம். மாத வருமானம் ரூ. 1,000-க்கு மேற்பட்டவர்கள் கூட பொது விநியோகத்தில் பச்சரிசியை பெறலாம். இவ்வாறு அரிசி விநியோகத்தை தளர்த்தியதால், பொது விநியோகத்தில் செலவழிக்கப்பட்ட அரிசி மாதம் 72,895 டன்களிலிருந்து 90,078 டன்களாக உயர்ந்துள்ளது. 1986 ஆம் ஆண்டு, பொது விநியோகத்தில் வழங்கப்பட்ட அரிசியின் மொத்த அளவு 9,02,915 டன்களாகும். இவ்வாறு, மலிவு விலையில் அரிசி வழங்குவதால் நுகர்வோர் நலன் பொருட்டு, ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 80 கோடி செலவை அரசு ஏற்றுக்கொள்கிறது,



1987 ஏப்ரல் 9]

(ஆ) கோதுமை.

11. இந்திய அரசு, இம்மாநிலத்திற்கு ஒவ்வொரு மாதமும் 30,000 டன் கோதுமையை ஒதுக்கீடு செய்கிறது. இது, நியாய விலைக் கடைகளில் மலிவு விலையில் கிலோ ரூ. 2.05-க்கு விற்கப்படுகிறது. இருப்பினும், பொது விநியோகத்தில் வாங்கப்படும் கோதுமையின் அளவு குறைவாகவே உள்ளது. 1—1—1986 முதல் 31—12—1986 வரையிலான காலத்தில் 71,099 டன்கள் கோதுமை தான் பொது விநியோக முறையில் வாங்கப்பட்டுள்ளது.

12. தமிழ்நாட்டில் கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்கள் உண்பதை பிரபலப்படுத்தும் நோக்கத்துடன், தமிழ்நாடு உருளைமாவு ஆலைகள் சங்கம், 'யு.எஸ்.வீட் அசோஸியேட்ஸ்' ஆகியோரின் நிதியுதவியுடன் திரைப்படம் ஒன்றை அரசு தயாரித்துள்ளது. இப்படம் பொதுமக்களுக்கு காட்டப்பட்டு வருகிறது.

(இ) கோதுமைப் பொருட்கள்.

13. 1957 ஆம் ஆண்டு கோதுமை உருளை மாவு ஆலைகள் (உரிமம் மற்றும் கட்டுப்பாடு) ஆணையின்கீழ் உணவுப்பொருள் வழங்கல் துறை இணை ஆணையாளர் பிறப்பித்த ஆணையின்படி பொது விநியோகத்திற்கு தேவையான மைதா, ரவை, மாநில அரசு நிர்ணயித்த விலையில் ஆலைகளிடமிருந்து பெறப்பட்டது. 1986 செப்டம்பரில், இந்திய அரசு கோதுமைப் பொருட்கள் மீதிருந்த விலை மற்றும் விநியோகக் கட்டுப்பாட்டை நீக்கிவிட்டது. தொடர்ந்து 30—10—1986-ல், 1957 ஆம் ஆண்டு, கோதுமை உருளைமாவு ஆலைகள் (உரிமம் மற்றும் கட்டுப்பாடு) ஆணையையும் ரத்து செய்துவிட்டது. இதனால், பொது விநியோக முறைக்கு தேவையான மைதா, ரவையை ஆலைகளிடமிருந்து இம்முறையில் அரசால் பெற முடியவில்லை. இப்போது ஆலைகளிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் கோதுமைப் பொருட்களை வாங்கி, நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகிக்கப்படுகிறது. நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் மைதா, ரவையின் விலை கிலோ ரூ. 3.00.

(ஈ) சர்க்கரை.

14. 1987 சனவரி வரை, இந்திய அரசு ஒவ்வொரு மாதமும் 21,292 டன்கள் லெவி சர்க்கரை ஒதுக்கீடு செய்தது. 1987 சனவரியில் இந்திய அரசு, அதனுடைய விநியோக கொள்கையை மாற்றியது, அதன்படி, 1987 பிப்ரவரி மாதத்திற்கு 1,253.5 டன்கள் லெவி சர்க்கரையை கூடுதலாக ஒதுக்கீடு செய்தது. லெவி சர்க்கரையில் வழக்கமான ஒதுக்கீடு மாதமொன்றுக்கு 22,555.5 டன்களாக இருக்கக்கூடும்.

15. 28—2—1987 வரை லெவி சர்க்கரை, குடும்ப அட்டைதாரர்களுக்கு நபர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு 450 கிராம் வீதம் வழங்கப்பட்டது. இது 1—3—1987 முதல் நபர் ஒருவருக்கு, மாதமொன்றுக்கு 500 கிராமாக உயர்த்தப்பட்டுள்ளது.

16. 1986 சனவரி முதல், 1986 டிசம்பர் வரை, 2,62,235 டன்கள் லெவி சர்க்கரை நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளது. 1—12—1985 முதல் கிலோ ரூ. 4.80 என்றிருந்த லெவி சர்க்கரையின் விலை, 15—12—1986 முதல் கிலோ ரூ. 4.85 ஆக உயர்த்தப்பட்டது. 1986 சனவரி, ஜூன், செப்டம்பர், அக்டோபர், டிசம்பர் மாதங்களிலும், 1987 சனவரி மாதத்திலும் பண்டிகை காலத்தை ஒட்டி, குடும்ப அட்டைகளுக்குக் கூடுதலாக ஒரு கிலோ லெவி சர்க்கரை வழங்கப்பட்டது. வெளிச் சந்தை சர்க்கரையின் விலை, இயல்பு மீறிய ஏற்ற இறக்கம் இல்லாமல் நியாயமான அளவில் வைத்துக் கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(உ) மண்ணெண்ணெய்.

17. இம்மாநிலத்திற்கு மாதமொன்றுக்கு 60,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. ஆனால், மத்திய அரசு சுமார் 50,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய்தான் இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்கிறது. மத்திய அரசை அதிக மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யுமாறு மாநில அரசு கேட்டுள்ளது.

18. மண்ணெண்ணெய், பொது விநியோகம் மூலமாக குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. மண்ணெண்ணெய் வியாபாரத்தை மட்டுமே நம்பியிருக்கும் வியாபாரிகளுக்கு மண்ணெண்ணெய் விற்க அனுமதி வழங்கப்பட்டு, அவர்களுக்கு



குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதைப் போன்றே, தெருக்களில் மண்ணெண்ணெய் விற்கும் கைவண்டிக்காரர்களுக்கும், மக்களுக்கு விற்பதற்காக மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

19. தற்போது, குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதமொன்றுக்கு சென்னை நகரம் மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளுக்கும், மாநகராட்சிகள் மற்றும் மாவட்ட தலைநகரங்களுக்கும், 10 லிட்டர் மண்ணெண்ணெயும், மற்ற நகராட்சிகளிலும், நகரியங்களிலும், 6 லிட்டர் மண்ணெண்ணெயும், நகரப் பஞ்சாயத்துக்களில் 5 லிட்டர் மண்ணெண்ணெயும் மற்றும் கிராமப் பஞ்சாயத்துக்களில், 3 லிட்டர் மண்ணெண்ணெயும் வழங்கப்படுகிறது. குடும்ப அட்டைதாரர்களின் தேவை முழுவதுமாக தீர்க்கப்பட்ட பின் மிகுதியாக மண்ணெண்ணெய் இருந்தால், நகரியங்கள் மற்றும் நகராட்சிக்கு அதிக மண்ணெண்ணெய் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

20. 1986 ஆம் ஆண்டு, சனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் முடிய, மத்திய அரசு, இம்மாநிலத்திற்கு 6,53,756 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்தது. இதில், மக்கள் உபயோகித்தது, 6,44,705 கிலோ லிட்டர்கள்.

(ஊ) சமையல் எண்ணெய்.

21. நமது நாட்டின் சமையல் எண்ணெய் உற்பத்தி, மக்களின் தேவையினை பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை. உற்பத்திக்கும், தேவைக்கும் உள்ள வித்தியாசத்தை ஈடு செய்து மக்களுக்கு வழங்குவதற்காக மத்திய அரசு பாமாலின் எண்ணெயை இறக்குமதி செய்கிறது. மத்திய அரசு, இம்மாநிலத்திற்கு, ஒவ்வொரு மாதமும் 3,000 டன்கள் உதிரி பாமாலின் எண்ணெய் ஒதுக்கீடு செய்கிறது. இது தவிர, இந்துஸ்தான் தாவர எண்ணெய்க் கழகம் மூலமாக மாதமொன்றுக்கு 2,000 டன்கள் டின்னில் அடைக்கப்பட்ட பாமாலின் வழங்கப்படுகிறது. 1986 ஆம் ஆண்டு, 48,957 டன்கள் எண்ணெய் செலவாகியுள்ளது. இந்த அரசு, மத்திய அரசை கூடுதலாக பாமாலின் வழங்குமாறு வற்புறுத்தி வருகிறது.

**(எ) கட்டுப்பாட்டுத் துணி.**

22. இம்மாநிலத்தில், கட்டுப்பாட்டுத் துணி மாதமொன்றுக்கு ரூ. 1,000-க்கும் குறைவான வருமானம் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டும்தான் வழங்கப்படுகிறது. கட்டுப்பாட்டுத் துணி, நியாய விலைக் கடைகளில் விற்பனைக்கு உள்ளது என்ற விவரமும், அதன் விலையும் குறித்து விளம்பரப் படுத்த வேண்டுமென்றும், கட்டுப்பாட்டுத் துணியின் இருப்பு மற்றும் விலையினை நியாய விலைக் கடைகளில் உள்ள இருப்பு மற்றும் விலைப் பலகையில் எழுதி வைக்க வேண்டுமென்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. 1986-87 ஆம் ஆண்டுக்கு (1—4—1986-ல் இருந்து) 3,408 பேல்கட்டு பருத்தித் துணி பொது விநியோக முறையில் விநியோகிக்கப்பட்டது.

**(ஏ) விலைக் கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை.**

23. நியாய விலைக் கடைகள், கட்டுப்பாட்டுப் பொருட்கள் தவிர மற்ற பொருட்களையும் விற்கின்றன. பல நியாய விலைக் கடைகளில் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளதால், கட்டுப்பாடற்ற பொருட்களை விற்பதன் மூலம் கடைகள் நட்டமின்றி நடைபெறுகின்றன. நகர்ப்புற நியாய விலைக் கடைகளில் சுமார் 39 கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்கப்படுகின்றன. கிராமப்புற நியாய விலைக் கடைகளிலும் கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

**(ஐ) பொது விநியோகத் திட்டத்தைக் கண்காணித்தல்.**

24 இத்துறையின் அதிகாரிகள், மாதமொன்றுக்கு சோதனை செய்ய வேண்டிய கடைகள் மற்றும் குடும்ப அட்டைகளின் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளராலும் இந்த செயலாக்கம் கண்காணிக்கப் படுகிறது. போலி குடும்ப அட்டைகள் நீக்கும் முயற்சியில், 1986 ஆம் ஆண்டில் இதுவரையில் 1,03,451 போலி குடும்ப அட்டைகள் நீக்கப்பட்டுள்ளன.





**III. ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சி திட்டத்தின்கீழ் வரும் பகுதிகளில் மலிவு விலையில் உணவு தானியங்கள் விநியோகம் செய்தல்.**

25. மிகவும் மலிவு விலையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவு தானியங்கள் வழங்கும் திட்டம், சேலம், வடாற்காடு, தென்னாற்காடு, தருமபுரி, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் உள்ள ஒன்பது ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சி திட்டப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 2.10 இலட்சம் மக்கள் பயனடைகின்றனர். இப்பகுதியிலுள்ள 151 நியாய விலைக் கடைகள் மூலம் கோதுமையும், அரிசியும், குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகிறது. குடும்ப அட்டைதாரர்கள், அதிகபட்சமாக ஒரு மாதத்திற்கு 30 கிலோ கோதுமையும், 12 கிலோ அரிசியும் வாங்கிக் கொள்ளலாம். 30 கிலோவிற்கு மேல் கோதுமை தேவைப்படும் குடும்ப அட்டைதாரர்கள், பொது விநியோகத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட விலையில் வாங்கிக் கொள்ளலாம். இத்திட்டத்தின்கீழ் வழங்கப் படும் அரிசி மற்றும் கோதுமையின் விலை முறையே, கிலோ ரூ. 1.40, கிலோ ரூ. 1.50 ஆகும். 1986 மார்ச் முதல், 1986 டிசம்பர் வரை 280.23 டன்கள் கோதுமையும், 2,893.45 டன்கள் அரிசியும், இத்திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்பட்டது.

26. நீலகிரி மாவட்டம் மசினகுடியில் உள்ள பழங்குடி மக்களையும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு இந்திய அரசுக்கு இவ்வரசு எழுதியது. இத்திட்டத்தை, எல்லாப் பழங் குடி மக்களுக்கும் விரிவுபடுத்துமாறும் கருத்து தெரிவிக்கப் பட்டது. ஆனால், இச்சலுகையை ஒருங்கிணைந்த பழங்குடி யினர் வளர்ச்சி திட்டப் பகுதிகளுக்கு வெளியில் வாழும் மக்களுக்கு விரிவுபடுத்துவது இயலாது என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது.

**IV. உருளைமாவு ஆலைகளுக்கு உரிமம் ரத்து செய்தல்—இந்திய அரசின் புதிய கொள்கை.**

27. 1986 ஜூலை வரை, உருளைமாவு ஆலைகள் இயங்கத் துவங்குவதற்கு முன்பு (1) தொழில் உரிமம் மற்றும் (2) 1957 ஆம் ஆண்டு கோதுமை உருளைமாவு ஆலைகள் (உரிமம் மற்றும் கட்டுப்பாடு) ஆணையின்கீழ் உரிமம் என்று இரண்டு உரிமங்கள் மைய அரசிடமிருந்து பெற வேண்டும். 1986 ஜூலையில், இந்திய

அரசு, உருளைமாவு ஆலைகள் தொழில் உரிமம் பெறும் கொள்கையைத் தளர்த்தியது. இப்போது, 1981 மக்கள் தொகை கணக்குப்படி, பத்து லட்சம் மக்கள் தொகைக்கு மேல் உள்ள நிலையான நகர் பகுதிகளுக்குள்ளோ அல்லது ஐந்து இலட்சம் மக்கள் தொகைக்கு மேலுள்ள நகராட்சி எல்லைக்குள்ளோ அமையவிருக்கும் உருளைமாவு ஆலைகள் மட்டுமே தொழில் உரிமம் பெற வேண்டும். ஏகபோக உரிமை மற்றும் வர்த்தகக் கட்டுப்படுத்தல் சட்டத்திற்கும், அன்னிய செலாவணி முறைப் படுத்தல் சட்டத்திற்குக்கீழ் வரும் ஆலைகளும், தொழில் உரிமம் பெற வேண்டும். மற்ற ஆலைகள், தொழில் உரிமம் பெறத் தேவையில்லை. ஆனால், அவைகள் மைய அரசிடம் தாமாகவே பதிவு செய்து கொள்ள வேண்டும். சிறு தொழில் நிறுவனங்கள், தொழில் மற்றும் வர்த்தகத் துறை இயக்குனரிடம் பதிவு செய்துகொள்ள வேண்டும். 30—10—1986 முதல் மைய அரசு, 1957 ஆம் ஆண்டு கோதுமை உருளைமாவு ஆலைகள் (உரிமம் மற்றும் கட்டுப்பாடு) ஆணையை ரத்து செய்து விட்டதால், அவ்வாணையின்கீழ் ஆலைகள் உரிமம் பெறத் தேவையில்லை.

28. ஆலைகள், தங்களுக்குத் தேவையான கோதுமையை எங்கிருந்து வேண்டுமானாலும் பெறலாம். ஆலைகளுக்கு பங்கிட்டுத் தருவதற்காக, மாநில அரசுகளுக்கு, மையத் தொகுப்பிலிருந்து கோதுமை ஒதுக்கீடு செய்யும் முறை நிறுத்தப் பட்டு விட்டது. உரிமம் பெற்றுள்ள ஆலைகள் தங்களுடைய உரிமத் திறனுக்கு மேல் 50 சதவிகிதம் வரையிலும், மற்ற ஆலைகள், உச்சவரம்பு எதுவும் இன்றி அரைவை செய்ய இந்திய அரசு, 31—3—1987 வரை அனுமதி அளித்துள்ளது.

## V. விலைவாசி நிலைமை.

### (i) அரிசி :

29. 1986-87 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்கவாறு விலை உயர்வு கிடையாது. பருவகால சூழ்நிலை காரணமாக இயல்பாக ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள் மட்டுமே காணப்பட்டது. வெளி அங்காடியில் புழுங்கல் அரிசி, சாதாரண ரகம், சராசரி சில்லறை விலை ஒரு கிலோவிற்கு ரூ. 3.46 (மார்ச் 1986)-லிருந்து, ரூ. 3.63 (மார்ச் 1987) வரை நிலவியது. புழுங்கல் அரிசி, சன்னரகம், சராசரி சில்லறை விலை ஒரு கிலோவிற்கு ரூ. 3.91 (மார்ச் 1986)-



லிருந்து, ரூ. 4.05 (மார்ச் 1987) வரை நிலவியது. தமிழகத்தில், தற்போது நிலவி வரும் கடும் வறட்சியாலும், ஆந்திராவிலிருந்து அரிசி வருவதற்கு அனுமதி அளிக்கப்படாமையாலும், நமது மாநிலத்தில் அரிசியின் விலை சிறிதளவு அதிகரித்திருக்கிறது. எவ்வப்போது அவசியமோ, அவ்வப்போது, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம்/கூட்டுறவுத் துறை குறுக்கிட்டு வெளி அங்காடியில் நிலவும் விலைகளைவிட அரிசியை குறைந்த விலைகளில் விற்று வருகிறது. வெளி அங்காடியில் அரிசியின் விலை கட்டுப்பாட்டிற்குள் இருந்து வருகிறது.

### (ii) புஞ்சை தானியங்களும், கோதுமையும் :

30. 1986-87 ஆம் ஆண்டில், புஞ்சை தானியங்கள் மற்றும் கோதுமை ஆகியவற்றின் விலைகளில் குறிப்பிடத்தக்க மாற்ற மில்லாதிருந்தது.

### (iii) பருப்பு வகைகள் :

31. இந்த நிதி ஆண்டில், துவரம் பருப்பு தவிர, அனைத்து பருப்பு வகைகளின் விலைகள் பொதுவாக இறங்குமுகமாக இருந்து வந்தன. சமையல் எண்ணெய் போலவே பருப்பு வகை களையும் இறக்குமதி செய்து விநியோகம் செய்ய வேண்டும் என்று மைய அரசை வற்புறுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

### (iv) சமையல் எண்ணெய்:

32. தமிழகம், கடலை எண்ணெய் உற்பத்தியில் ஓரளவு உபரி நிலையில் உள்ளது. இருந்தபோதிலும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் வறட்சி நிலவிய காரணத்தால், 1986 ஏப்ரல் வரையில், கிலோ ஒன்றுக்கு ரூ. 15 முதல் ரூ. 17 வரை இருந்த கடலை எண்ணெய் விலை, நிலையாக அதிகரிக்க ஆரம்பித்து, 1986 செப்டம்பரில், கிலோ ஒன்றுக்கு ரூ. 26 முதல் ரூ. 28 வரை உயர்ந்தது. பாமாலின் எண்ணெய் ஒதுக்கீட்டை கூடுதலாகப் பெறவும், அதை விநியோகம் செய்யும் முறையை மாற்றி யமைக்கவும், அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டது. இது தவிர, உணவு அமைச்சர், எண்ணெய் உற்பத்தியாளர் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். இதன் பயனாக, சமையல் எண்ணெய் விலை, 1986 நவம்பரில் கிலோ ஒன்றுக்கு ரூ. 19 முதல் ரூ. 20 ஆகக் குறைந்தது. டிசம்பர் 1986

வரை இந்த விலை நீடித்தது. சமீபத்தில், சமையல் எண்ணெய் விலை உயர ஆரம்பித்துள்ளது. தமிழகம் மற்றும் இதர மாநிலங்களில் போதுமான மழையின்மையால், உற்பத்தி பாதிக்கப்பட்டதே இந்த விலை உயர்வுக்குக் காரணமாகும். கடலை எண்ணெய் விலை அதிகரித்ததன் காரணமாக, நல்லெண்ணெய் விலையும் அதிகரித்தது. எள் விளையும் மாநிலங்களில் பருவ காலம் அனுகூலமாக அமையாமல் உற்பத்தி பாதிக்கப்பட்டதால் நல்லெண்ணெய் விலை உயர்ந்தது.

33. தேங்காய் எண்ணெயைப் பொறுத்த வரையில் தமிழகத்தின் தேவை முழுவதும், கேரள மாநிலத்திலிருந்து பெறப்படுகிறது. ஆகவே, தமிழகத்தின் விலைவாசி நிலவரம் கேரள மாநிலத்தில் நிலவும் விலைவாசி நிலவரத்தின் பிரதிபலிப்பாகவே உள்ளது. 1987 மார்ச்சில், தேங்காய் எண்ணெய் விலை, கிலோ ஒன்றுக்கு ரூ. 28.05-லிருந்து ரூ. 38.00 வரை நிலவியது.

**(v) சர்க்கரை :**

34. மைய அரசு ஒவ்வொரு திங்களும் வெளிச் சந்தையில் விற்பனை செய்வதற்கு சர்க்கரை ஒதுக்கீடு செய்வதைப் பொறுத்து, வெளிச் சந்தையில் சர்க்கரையின் விலை நிலவரம் அமைகிறது. வெளிச் சந்தையில் இறக்குமதி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு ஏராளமாக கிடைக்கக் கூடிய நிலைமை மற்றும் பொது விநியோக முறையில் அட்டைதாரர்களுக்கு அரசு நிர்ணயித்த விலையில் சர்க்கரை கிடைக்கக்கூடிய நிலைமை ஆகிய இந்த இரு அம்சங்கள் சர்க்கரையின் விலையேற்றத்தைத் தடுக்கக் கூடிய காரணங்களாக அமைகின்றன. சென்ற ஆண்டு மார்ச்சில், சர்க்கரை விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 6.10 முதல் ரூ. 7.00 வரை நிலவியது. இந்த ஆண்டு மார்ச்சில், கிலோ ஒன்றுக்கு, ரூ. 6.00 முதல் ரூ. 6.40 வரை நிலவியது.

**(vi) விலைக் கட்டுப்பாடு :**

35. மாநில அரசு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளில் ஏற்படும் மாறுதல்களை உன்னிப்பாக கண்காணித்து வருகிறது. விலைகளை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைப்பதற்கான நடவடிக்கைகள் பல்வேறு சட்டங்களின் கீழும், இதர வகைகளிலும் எடுக்கப்பட்டு வருகின்றன.



## VI. நுகர்வோர் பாதுகாப்பு.

36. நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம், உற்பத்தியாளர், வர்த்தகர் ஆகிய இருவருக்கிடையில் நுகர்வோர்களின் உரிமைகளை எடுத்துக் காட்டவும், செயல்படுத்தவும், வழிவகைகளைத் தேடுகிறது. ஒரு வலிமையான நுகர்வோர் இயக்கத்தை வளர்ப்பதற்கு இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

**(i) முக்கியமான நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்களை அமல்படுத்துதல்:**

37. இன்றியமையாப் பொருட்கள் சட்டம் மற்றும் அதன்கீழ் வெளியிட்டுள்ள பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளை தமிழக அரசு சிறப்பாக அமல்படுத்தி வருகிறது. காவல் துறைத் துணைத் தலைவரின் தலைமையில் இயங்கி வந்த நுகர் பொருட்கள், சி.ஐ.டி. அலகு, 1986 எப்ரல் திங்களிலிருந்து காவல் துறைத் தலைவவரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. 1986 எப்ரல் முதல் டிசம்பர் வரையிலான காலத்தில் 4,908 திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன. இதே காலத்தில் கைப்பற்றப் பட்ட பொருட்களின் மதிப்பு ரூபாய் 241.12 இலட்சங்கள் ஆகும். இதே காலத்தில் இன்றியமையாப் பொருட்கள் சட்டம் மற்றும் அச்சட்டத்தின் கீழ் வெளியிட்டுள்ள பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளின் கீழ் மொத்தம், 3,238 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

38. உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தை அமல்படுத்தும் பொறுப்பு மக்கள் நல்வாழ்வுத் துறையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இம்மாநிலத்தில், 7 உணவு பகுப்பாய்வு சோதனைக் கூடங்கள் இயங்கி வருகின்றன. 1986, எப்ரல் முதல் டிசம்பர் வரையிலான காலத்தில் மொத்தம் 13,537 சட்டபூர்வ மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. அவற்றில், 1,547 மாதிரிகள் கலப்படம் செய்யப்பட்டுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

39. எடைகள் மற்றும் அளவைகள் சட்டம், தொழிலாளர் துறையினால் அமல் செய்யப்பட்டு வருகிறது. எடைகள் மற்றும் அளவைகள் கட்டுப்பாட்டாளருக்கு, 18 ஆய்வாளர்களும் மற்றும் களப் பணியாளர்களும் உதவி புரிகின்றனர். 1986 எப்ரல் முதல் டிசம்பர் வரையிலான காலத்தில், எடைகள் மற்றும்

அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 1977-ன் கீழ், 22 குற்ற நடவடிக்கைகள் எடுக்கவும், தமிழ்நாடு எடைகள் மற்றும் அளவைகள் (அமல்படுத்துதல்) சட்டம், 1958-ன் கீழ், 13,957 குற்ற நடவடிக்கைகள் எடுக்கவும், அனுமதி அளிக்கப் பட்டுள்ளது.

40. இந்த சட்டங்களை அமல்படுத்துவதைக் கண்காணிக்கும் பொறுப்பை, இத்துறை முறையாகச் செய்து வருகிறது.

**(ii) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986 :**

41. நுகர்வோர் தகராறுகளைத் தீர்ப்பதற்கு, மாநில/மாவட்ட அளவிலான குழுக்களை ஏற்படுத்துவதற்கு, சமீபத்தில், பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் வழி வகுக்கிறது. நுகர்வோர் குறைகள் விரைவில் களையப்பட வேண்டும் என்ற நீண்ட நாளைய எதிர்பார்ப்பின் தேவை, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தால் கருதப்படும் அமைப்புகளை ஏற்படுத்துவதால், நிறைவேற்றப் படும் என்று நம்பப்படுகிறது.

42. பொருட்கள் மற்றும் பணிச் செய்கை ( Service ) தொடர்புடைய அனைத்து நுகர்வோர் தகராறுகளையும் முடிவு செய்வதற்கு இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இச்சட்டத்தை இந்த அரசு வரவேற்கிறது. அதை விரைவில் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**(iii) நுகர்வோர் கல்வி :**

43. சமுதாயத்தில், அறியாமை மற்றும் விழிப்புணர்ச்சி யின்மை மிகுதியாக உள்ளதாலும், முறைசார்ந்த மற்றும் முறை சாரா கல்விச் சாதனங்கள் அரசின் வசம் உள்ளதாலும், அரசு நுகர்வோர் கல்விக்கு உயர் முன்னுரிமை கொடுக்க வேண்டும். நுகர்வோர் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தால்தான் சக்தி வாய்ந்த நுகர்வோர் இயக்கம் ஒன்றை உருவாக்க முடியும்.

44. நுகர்வோர், வர்த்தகர்கள் இருவருக்கிடையில் உள்ள உரிமைகள் பற்றி, பொதுமக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய ஒரு ஆரம்பப்





பாடத்தை 5-வது வகுப்பு மாணவர்களுக்கு பரிட்சார்த்த ரீதியில் 130 பள்ளிகளில் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. 9 அல்லது 10-வது வகுப்பு மாணவர்களுக்கு, இதுபோன்ற விரிவான ஒரு பாடத்தை அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இரசாயனம் போதிக்கும் கல்லூரிகள், உணவு மற்றும உணவுப் பண்டங்களில் கலப்படத்தைக் கண்டுபிடிப்பது பற்றிய சோதனைகளை கற்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளன. மேலும், இம்மாநிலத்தில் உள்ள 13,000 வயது வந்தோர் கல்வி நிலையங்களில், நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய ஒரு பாடத்தை அறிமுகப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

45. கலப்படத்தைக் கண்டுபிடிப்பதற்கான வழிகள் பற்றிய பிரசுரங்கள் அச்சடிக்கப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்களால் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற, உணவுப் பொருட் களில் கலப்படத்தை எளிதில் கண்டுபிடிப்பது பற்றி விளக்கு வதற்கு, 400 பகுப்பாய்வுப் பெட்டிகள், கூட்டுறவுத் துறையில் உள்ள சிறப்பங்காடிகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் உள்ள அமுதம் பல்பொருள் அங்காடிகள் மற்றும் வட்டம் மற்றும் மாவட்டங்களில் உள்ள நுகர்பொருள் வழங்கல் அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கருத்தரங்குகள் 46. பிராந்திய, மாநில அளவிலான நடத்துவது பற்றிய மைய அரசின் திட்டத்தை இந்த அரசு ஏற்று நடதத முடிவு செய்துள்ளது. அதற்கேற்ப 21—3—1987 மற்றும் 22—3—1987 ஆகிய இரு தினங்களில் நுகர்வோர் பாதுகாப்பு குறித்து கருத்தரங்கு மற்றும் கண்காட்சி மாநில அளவில் சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடத்தப்பட்டது. மைய அரசு, இதற்கென ரூ. 40,000 நிதியுதவி அளித்தது. மாநில அரசு இக்கருத்தரங்கிற்கென ரூ. 10,000-மும் வழங்கியது. இக்கருத்தரங்கு மற்றும் கண்காட்சியில் தன்னியல்/நுகர்வோர் நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள், வர்த்தகச் சங்கங்கள், தொடர்புடைய அரசு துறைகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். 1987-88 ஆம் ஆண்டில் மாநில அளவில் மேலும் ஒரு கருத்தரங்கு நடத்த அரசு திட்டமிட்டுள்ளது.

[1987 ஏப்ரல் 9

47. இதுபோன்று மதுரை மற்றும் கோவை நகரங்களிலும், நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய கருத்தரங்கு நடத்துவதற்கென மாநில அரசு ரூ. 20,000 வழங்கியுள்ளது. கோவையில் 15—3—1987 அன்று, இதுபோன்ற கருத்தரங்கு சிறப்பாக நடைபெற்றது. 19—4—1987 அன்று மதுரையில் இக்கருத்தரங்கு நடக்க உள்ளது.

48. நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் அரசின் ஈடு பாட்டினாலும், அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் தன்னியல் அமைப்புகள் பங்கு கொள்வதாலும், வருங்காலத்தில் நுகர்வோர் இயக்கம் மக்களிடையே அதிக அளவில் செல் வாக்கைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## VII. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்.

49. தமிழக அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழ்நாடு
நுகர்பொருள் வாணிபக் கழகம், நெல் கொள்முதல் செய்தல்,
கொள்முதல் செய்த நெல்லை அரிசியாக்குதல், அதை கிட்டங்கி
களில் சேமித்து வைத்தல் மற்றும் இன்றியமையாப் பொருட்
களை பொது விநியோகத்திற்கு வழங்குதல் ஆகிய பணிகளில்
ஈடுபட்டுள்ளது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு
மூலதனம் ரூபாய் 30 கோடியாகவும், செலுத்தப்பட்ட பங்கு
மூலதனத்தொகை ரூபாய் 20.15 கோடியாகவும் உள்ளது.

50. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், குடும்ப அட்டைதாரர்களுக்கான அரிசியை விநியோகம் செய்வதற்காக நெல், அரிசியை தமிழக அரசின் மொத்த முகவராக இருந்து நேரடிக் கொள்முதல் செய்கிறது. 1986-87 சம்பா பருவத்தில் 15—3—1987 வரை, இக்கழகம், 8.60 இலட்சம் டன்கள் நெல் கொள்முதல் செய்துள்ளது. இதற்கென இக்கழகம், 832 நேரடிக் கொள்முதல் நிலையங்களையும், 45 லெவி சேகரிப்பு நிலையங் களையும் நிறுவியுள்ளது.

51. இக்கழகம், 1985-86 ஆம் ஆண்டில் 3.20 இலட்சம் டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு வசதியுடன், மேலும் 30,400 டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு வசதியை பெருக்கியுள்ளது. அரசால் அனுமதியளிக்கப்பட்ட 15 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் கட்ட, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இக்கழகம், சேமிப்புக் கிடங்குகள், நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மற்றும்



1987 ஏப்ரல் 9]

லெவி சேகரிப்பு நிலையங்கள் ஆகியவற்றை ரூ. 73.73 கோடி
செலவில் கட்டுவதற்கான திட்டம் ஒன்றை தீட்டியுள்ளது.
1986-87 ஆம் ஆண்டில், அரசு நேரடிக் கொள்முதல் நிலையங்கள்
கட்டுவதற்காக ரூ. 10 இலட்சமும், செயல்முறை சேமிப்புக்
கிடங்குகள் கட்டுவதற்கு ரூபாய 10 இலட்சமும் வழங்கியுள்ளது.
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம இத்திட்டங்களை
நிறைவேற்றி விட்டது.

52. 1985-86 ஆம் ஆண்டில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்
கழகத்தால் நிர்வகிக்கப்பட்டுவரும், 13 நவீன அரிசி ஆலைகளின்
அரைவைத் திறனை ஆண்டுக்கு மேலும் 60,000 டன்கள்
அதிகரிக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.
இதைப் போன்று, ஆறு நவீன அரிசி ஆலைகள் கட்டுவதற்கான
திட்டத்திற்கும் அரசு அனுமதி அளித்துள்ளது. இதைத் தவிர,
ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இரண்டு நவீன அரிசி
ஆலைகளை நிறுவுவதற்கு திட்டக் குழுவினால் அனுமதிக்கப்
பட்டிருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில்
அனுமதியளிக்கப்பட்டு, தஞ்சாவூர் மாவட்டத்தில், சீர்காழி
வட்டத்தில், எருக்கூர் கிராமத்தில் கட்டப்பட்டு வரும் நவீன
அரிசி ஆலை, 1987 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் செயல்படத்
துவங்கும என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## VIII தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்.

53. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 1957 ஆம் ஆண்டு
நிறுவப்பட்டு, 1958-59 முதல் செயல்பட்டு வருகிறது. இந்
நிறுவனம், தமிழ்நாடு முழுவதும், விவசாய விளைப் பொருட்கள்,
விதைகள், உரங்கள், விவசாய சாதனங்கள் மற்றும் அறிவிப்பு
செய்யப்பட்ட பொருட்களுக்கு அறிவியல் ரீதியான சேமிப்பு
வசதியுடன் கூடிய சேமிப்பு கிடங்கு வசதியை அளிக்கிறது. இந்
நிறுவனம், விவசாய விளை பொருட்களையும் மற்றும் அறிவிப்பு
செய்யப்பட்ட பொருட்களையும் கையாளுவதுடன் அவற்றின்
போக்குவரத்துக்கும் உதவி செய்கிறது. இந்நிறுவனத்தின்
அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூபாய் 6 கோடி
யாகும். தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் பங்கு
மூலதனத் தொகை 50:50 என்ற விகிதத்தில் மாநில அரசாலும்,
மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தாலும் செலுத்தப்படுகிறது.

[1987 ஏப்ரல் 9

1986 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிய, இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ 5.41 கோடியாகும்.

54. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், 1985-86 முதல் 1989-90 வரை, ரூபாய் 12.86 கோடி செலவில் இரண்டு இலட்சம் டன்கள் கொள்ளளவு கொண்ட கூடுதல் சேமிப்பு வசதியை ஏற்படுத்த இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் இந்நிறுவனம், 11 இடங்களில் 17 கிடங்குகள் கட்டி, 46,500 டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்பு வசதியை ஏற்படுத்தியுள்ளது. இதனையும் சேர்த்து, இந்நிறுவனம், மொத்தம் 4,00.110 டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்பு வசதியை ஏற்படுத்தியுள்ளது. இவையல்லாமல், 1986-87 ஆம் ஆண்டில், மேலும் கூடுதலாக 45,400 டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்பு வசதியை ஏற்படுத்துவதற்கான வேலைகளையும், இந்நிறுவனம் எடுத்துவருகிறது. இதற்கென இந் நிறுவனத்தின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 4.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

55. இந்நிறுவனம், ஆண்டு முழுவதும் 100 விழுக்காட்டிற்கும் மேலான கொள்ளிருப்பு வரவினை நிலையாக வைத்து வந்துள்ளது.

56. சமீபத்தில், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், அதன் கிடங்கு மேலாளர்களுக்கான இரண்டு தொகுதிகள் பணியிடைப் பயிற்சி வகுப்புகளை, அதனுடைய பயிற்சி நிலையத்தில் நடத்தியுள்ளது. இப்பயிற்சி வகுப்புகள், அறுவடைக்குப் பின்னான தொழில் நுட்பத்தை (Post Harvest Technology) சிறப்பாக வலியுறுத்தும் வகையில் தீட்டப்பட்ட தாகும். இப்பயிற்சியை, இதர மாநில சேமிப்புக் கிடங்கு நிறுவன ஊழியர்களும் மேற்கொண்டனர். இந்நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்தப் பயிற்சி, புது டில்லியிலுள்ள இந்திய சேமிப்பு கிடங்கு நிறுவனமும், ஹரியானா/சோனிப்பூரி லுள்ள இந்திய தானிய சேமிப்பு நிலையமும் நடத்தும் பயிற்சி யின் அணுகுமுறைக்கு ஒத்ததாகும். இப்பயிற்சியின் [illegible]
தொகுதி 1987 [illegible]



1987 ஏப்ரல் 9]

57. கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்நிறுவனம் ஈட்டியுள்ள லாபம் பின்வருமாறு:

| | இலாபம். (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1981—82 | 69.31 |
| 1982—83 | 84.58 |
| 1983—84 | 100.10 |
| 1984—85 | 125,23 |
| 1985—86 | 183.84 |

13657 சென்னை-600

58. 1984-85 ஆம் ஆண்டுக்கான ஈவுத் தொகை 6 விழுக்காடு என்று இந்நிறுவனத்தின் இயக்குநர் குழு அறிவித்துள்ளது. அதன்படி, ரூபாய் 14.67 இலட்சம் மாநில அரசுக்கு ஈவுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

59. இந்நிறுவனம், பல ஆண்டுகளாக தொடர்ந்து இலாபத்தை ஈட்டி வருவதால், 'போனஸ்' கொடுப்பு சட்டத்தின்படி தமிழ் நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், அதனுடைய பணியாளர் களுக்கு 1985-86 ஆம் ஆண்டுக்கு 20 விழுக்காடு போனஸ் வழங்கியது.

60. பணியாளர் நலன் பேணும் திட்டங்களின்படி, சேமிப்புக் கிடங்கு மேலாளர்கள், துணை மேலாளர்கள், அடிப்படை ஊழியர்கள், காவலர்கள் போன்றோர்களுக்காக, 31 இடங்களில் சுமார் 75 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் இந்நிறுவனத்தால் குடியிருப்பு தொகுதிகள் கட்டப்பட்டுள்ளன.

61. இந்நிறுவனம், 1984-85 ஆம் ஆண்டிற்கான நிகர லாபத்தில், 2 விழுக்காடு தொகையான, ரூ. 2.38 இலட்சத்தை குடும்ப நலத்திட்ட இயக்குநரின் குடும்ப நலத்திட்ட விருப்புரிமை நிதிக்கு வழங்கியுள்ளது. இத்தொகைக்கான காசோலை, 5—1—1987 அன்று மாண்புமிகு முதலமைச்சரிடம் வழங்கப் பட்டது. இத்தொகை, அம்பத்தூர் நகரிய மருத்துவ மனையில், குடும்ப நல அறுவை சிகிச்சைகளுக்கான வசதிகளை மேம் படுத்துவதற்கு பயன்படுத்தப்படும். 1985-86 ஆம் ஆண்டிலும் இதே போன்ற தொகை வழங்குவதற்கும் இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது.